**<u>சு.ஜெ.ந.வே.தி.ந.க.எண் எஸ்1/228 & 229/2014</u>**
**<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 10.07.2014 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.367/2014 **பொருள் எண்.01**

**<u>சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வறுமையில் வாழும் முதியோர்களுக்கு ஓய்வூதியம் வழங்க வறுமைக்கோட்டு எண் வழங்க அனுமதி.</u>**

சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கடிதத்தில் பிப்ரவரி மற்றும் மார்ச்–2014 மாதங்களில் கண்டறியப்பட்ட சென்னை மாநகராட்சி எல்லைக்கு உட்பட்ட பத்து வட்டாட்சியர் அலுவலகங்களின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் 220 முதியோர்கள், 99 விதவைகள் மற்றும் 31 மாற்றுத் திறனாளிகள் ஆக மொத்தம் 350 பயனாளிகளை அடையாளம் கண்டு அவர்களின் வறுமை நிலையை கண்டறிந்து அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்க மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் பரிந்துரையின் பேரில் மத்திய அரசின் இந்திரா காந்தி தேசிய முதியோர் மற்றும் விதவை ஓய்வூதிய திட்டம் மாநில அரசின் பங்களிப்புடன் 350 பயனாளிகளுக்கு ஓய்வூதியம் வழங்க தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

**<u>பத்து வட்டாட்சியர் அவர்களால் பிப்ரவரி– 2014 மற்றும் மார்ச்–2014 மாதத்தில் கண்டறியப்பட்ட பயனாளிகளின் விவரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.</u>**

| வ. எண் | வட்டாட்சியர் அலுவலகம் | முதியோர்கள் | | விதவைகள் | | மாற்றுத் திறனாளிகள் | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | பிப்ரவரி | மார்ச் | பிப்ரவரி | மார்ச் | பிப்ரவரி | மார்ச் | |
| 1 | எழும்பூர் | 46 | 18 | 21 | – | 5 | 6 | 96 |
| 2 | அமைந்தகரை | – | 17 | – | 11 | – | 4 | 32 |
| 3 | தண்டையார்பேட்டை | – | 23 | – | 9 | – | 5 | 37 |
| 4 | புரசைவாக்கம் | – | – | – | – | – | – | – |
| 5 | மாம்பலம் | 12 | – | 4 | – | – | – | 16 |
| 6 | கிண்டி | – | – | – | – | – | – | – |
| 7 | மயிலாப்பூர் | 13 | 11 | 7 | 5 | 2 | 1 | 39 |
| 8 | வேளச்சேரி | – | 2 | – | 2 | – | 2 | 6 |
| 9 | பெரம்பூர் | – | 29 | – | 21 | – | 1 | 51 |
| 10 | அயனாவரம் | – | 49 | – | 19 | – | 5 | 73 |
| | மொத்தம் | 71 | 149 | 32 | 67 | 7 | 24 | 350 |

இந்திரா காந்தி முதியோர் ஓய்வூதிய திட்டத்தின் கீழ் இதுவரை 2,44,912 வரை பயனாளிகளுக்கு வறுமைக்கோட்டு எண் வழங்கி தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மேலும், பிப்ரவரி மற்றும் மார்ச்–2014 மாதங்களில் கண்டறியப்பட்டுள்ள இந்திரா காந்தி முதியோர் ஓய்வூதிய திட்டத்தின் கீழ் 350 பயனாளிகளுக்கு வறுமைக்கோட்டு எண் 2,44,913 முதல் 2,45,262 வரை வழங்கப்பட வேண்டும்.

மேலும், ''மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அம்மா திட்டம்'' மூலம் பயனாளிகள் விண்ணப்பித்திருப்பதால் அவசரம், அவசியம் கருதி மேற்குறிப்பிட்டுள்ள 220 முதியோர்கள், 99 விதவைகள் மற்றும் 31 மாற்றுத் திறனாளிகள் ஆக மொத்தம் 350 பயனாளிகளுக்கு வறுமைக்கோட்டு எண் 2,44,913 முதல் 2,45,262 வரை வழங்குவதற்கு நிலைக்குழு(கல்வி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''14.07.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி) கூட்டத்தின் தீர்மான எண்.18/2014, நாள்.14.07.2014–ன்படி இதற்கு நிலைக்குழு (கல்வி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**<u>தொ.நோ.ம.மனை.ந.க.எண்.அ2 /479/2014</u>**
**<u>முதன்மை செயலர்/ஆணையர் அவர்களின் 17/7/2014நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.368/2014 **பொருள் எண்.02**

**<u>பொது சுகாதாரத்துறை – பயிற்சி – தொற்று நோய் மருத்துவமனையில் இரண்டாண்டு உதவிச் செவிலியர் பட்டய படிப்பு பயிற்சி தொடங்குவதற்கு மன்றத்தின் அனுமதி</u>**

சென்னை மாநகராட்சி துணை ஆணையர் (சுகாதாரம்) அவர்கள் அரசு சிறப்பு செயலர் சுகாதாரத்துறை அவர்களுக்கு அனுப்பியுள்ள **19.04.2014** நாளிட்ட கடிதத்தில் சென்னை மாநகராட்சி தொற்று நோய் மருத்துவமனையில் ஏற்கனவே இரண்டாண்டு மருத்துவ ஆய்வக பட்டய படிப்பு மற்றும் ஓராண்டுக்கான செவிலியர் உதவிப் பயிற்சி படிப்பு ஆகிய இரண்டு படிப்புகள் நடைமுறையில் உள்ளதாகவும், தற்போது இவ்விரண்டு பயிற்சி வகுப்புகளிலும் ஆண்டிற்கு மொத்தம் **110** மாணவ மாணவியர்கள் பயிற்சி பெற்று வருவதாகவும் தெரிவித்துள்ளார். அரசாணை எண். GO.Ms. No.161 . நாள். 16 மார்ச் 1995 மற்றும் சென்னை மாநகராட்சி சிறப்பு அலுவலர் மற்றும் மன்றச் செயலர் (பொ) அவர்களின் 05.08.1993 நாளிட்ட செயல்முறை ஆணை எண். தொ.நோ.ம.மனை.ந.க.எண்.அ**1/191/93** மற்றும் மன்றத் தீர்மான எண்.**3558/93**ன்படி ஏற்கனவே தொடங்கி நடத்தப்பட்டு வந்த பல்நோக்கு சுகாதாரப் பயிற்சியாளர்கள் ( MPHW) பயிற்சியானது ஓராண்டு கால பயிற்சி வகுப்பு என்பதாலும் மற்றும் பல்வேறு நிர்வாக காரணங்களாலும் தமிழ்நாடு நர்சிங் கவுன்சிலிருந்து இப்பயிற்சிக்கு உரிய அங்கீகாரம் வழங்கப்படாததால் இப்பயிற்சியை தொடர்ந்து நடத்த முடியவில்லை. தமிழ்நாடு நர்சிங் கவுன்சிலிருந்து உரிய அனுமதி கிடைக்காமல் இடையில் நிறுத்தப்பட்ட ஓராண்டு கால பயிற்சியானது தற்போது ஒவ்வொரு வருடமும் பன்னிரெண்டாம் வகுப்பில் அறிவியல் பாடத்தில் தேர்ச்சி பெற்ற 20 மாணவியர்களுக்கு மட்டுமான இரண்டாண்டு கால A.N.M பயிற்சியாக நடத்துவதற்கும், மாணவியர்கள் சேர்க்கை சென்னை மாநகராட்சி பள்ளிகளில் படித்த மாணவியர்களுக்கு 80 சதவீதமும், 20 சதவீதம் சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் பணியாளர்களின் வாரிசுகளுக்கும் ஒதுக்கீடு செய்யப்படும். இந்த ஒதுக்கீட்டின் படி காலி இடம் ஏதேனும் ஏற்பட்டால் அந்த இடங்கள் அரசு பள்ளிகளில் படிக்கும் மாணவிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படும். இந்த இரண்டாண்டு கால A.N.M பயிற்சிக்கான அனுமதியை தமிழ்நாடு நர்சிங் கவுன்சில் மற்றும் இயக்குநரகம் பொது சுகாதாரத்துறை மற்றும் நோய்த்தடுப்பு இயக்கமிடமிருந்து பெறுவதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

'' ஏற்கனவே நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் கூட்டம் **16.07.2014** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **21.07.2014** அன்று தீர்மான எண். **22/2014**–ன்படி நிலைக்குழு (பொது சுகாதாரம்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**<u>க.து.ந.க.எண்.உ.க.அ–6/11939/2014</u>**
**<u>முதன்மை செயலர்/ஆணையர் அவர்களின் 27.06.2014 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.369/2014 **பொருள் எண்.03**

**<u>கல்வித்துறை – சென்னை உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பயின்ற பழைய மாணவ/மாணவியர்களின் குழு ஒன்றை அமைக்க அனுமதி.</u>**

சென்னை மாநகராட்சி கல்வித்துறையின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வரும் சென்னை உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் படித்து முடித்த பழைய மாணவ/மாணவியர் பலருக்கு தக்க வழிகாட்டுதல் இன்றி வாழ்க்கையில் பொருளாதார நிலையில் மிகவும் தடுமாறி வருகின்றார்கள். அவர்களால் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சிக்குரிய கல்வியை தேர்ந்தெடுத்து படிக்க இயலவில்லை.

ஏனெனில், அவ் மாணவ/மாணவியர்களின் குடும்பத்தினரிடம் கல்வி விழிப்புணர்வு இன்மையும் உடனடியாக குடும்ப சூழ்நிலைக் கருதி பணிக்கு செல்ல வேண்டிய நிர்பந்தத்தாலும் அவர்கள் கூலி வேலைக்கு செல்வதை காணமுடிகிறது. இந்நிலையை மாற்றி பொருளாதாரத்தில் அக்குடும்பத்தினருக்கு வளர்ச்சியை ஏற்படுத்திட ஆலோசனைகளும், வழிகாட்டுதலும் அவசியமாகிறது.

சென்னை மாநகரில் செயல்பட்டு வரும் பல்வேறு நிறுவனங்களில் வேலை வாய்ப்புகள் உள்ளதாகவும், சென்னை மாநகராட்சி பள்ளிகளில் படித்த மாணவ/மாணவியர்களின் பட்டியலையும் தரும்படியும் பல நிறுவனங்கள் வேண்டுகோள் விடுத்துள்ளன. இதற்காக சென்னை உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் படித்து முடித்த பழைய மாணவர்களின் குழுவினை ஏற்படுத்தி அவர்களின் தகுதிக்கு ஏற்ப நல்ல வருவாயை ஈட்டித் தரக்கூடிய மேற்கல்வி மற்றும் வேலை வாய்ப்புக்கு உதவ வழிகாட்டுதல் தரவேண்டி உள்ளது. வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி தொடர்பான தகவல்களும், ஆலோசனைகளும் முறையாக வழங்க ஏதுவாக இருக்கும். மேலும், பழைய மாணவ/மாணவியர் தாங்கள் படித்த பள்ளியுடன் தொடர்பில் இருக்க வழிவகை ஏற்படுத்த ஏதுவாக இருக்கும்.

எனவே,

1. படித்து முடித்த சென்னை மாநகராட்சியின் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பழைய மாணவ/மாணவியர்களின் குழு ஒன்றை ஏற்படுத்துவதற்கு அனுமதி வழங்கவும்,
2. முன்னாள் மாணவ/மாணவியர் குழுவில் உறுப்பினர் ஆவதற்கு செய்தித் தாள்கள் மூலம் (ஆங்கிலம் மற்றும் தமிழ்) விளம்பரம் செய்யவும்,
3. முன்னாள் மாணவ/மாணவியர் குழுவில் உறுப்பினர் ஆவதற்கு மாநகராட்சி இணையதளத்தின் மூலம் செய்திகள் வெளியிடவும், இணைய தளம் மூலம் விண்ணப்பத்தினைப் பெறவும்,
4. இதற்கான செலவினத்தை கல்வித்தர மேம்பாடு நிதி கணக்கு குறியீட்டு எண் **80–82–01, 230–11–01–01** கல்வித்தர மேம்பாடு நிதி என்ற தலைப்பின் கீழ் **2014–2015**ஆம் நிதி ஆண்டில் மேற்கொள்வதற்கும்,

மேற்கண்ட **1** முதல் **4** வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (கல்வி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“14.07.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி) கூட்டத்தின் தீர்மான எண்.17/2014, நாள்.14.07.2014–ன்படி இதற்கு நிலைக்குழு (கல்வி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**<u>ம.நீ.வ.து.ந.க.எண்.பி4/1665/2014</u>**
**<u>முதன்மைச் செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 17.07.2014 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.370/2014 **பொருள் எண்.04**

**<u>மதிப்பீடு</u>**

மண்டலம்–15, வார்டு–194ல் 1வது பிரதான சாலை எழில் நகர் ஈஸ்வரன் கோயில் பிரதான சாலை முதல் திறந்த கால்வாய் எழில் நகர் வரை 2000x2000மி.மீ. அளவுள்ள ஆர்.சி.சி. பெட்டக வடிவ மற்றும் Precast மழைநீர் வடிகால்வாய் புதியதாக கட்டும் பணிக்கு 2013-2014ஆம் ஆண்டின் விலைப் பட்டியல்களின்படி தயாரிக்கப்பட்ட ரூ.2,98,48,000/–க்கான திட்ட மதிப்பீட்டிற்கு சென்னை மாநகராட்சி சட்டம் 1919ன் விதி 78ன்படி நிலைக்குழுக்கள் (பணிகள்) மற்றும் (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> ‘‘18.07.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டத்தின் தீர்மான எண்.319/2014 நாள் 18.07.2014–ன் படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

> ‘‘18.07.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண்.329/2014, நாள்18.07.2014–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**<u>ம.நீ.வ.து.ந.க.எண்.பி4/1668/2014</u>**
**<u>முதன்மைச் செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 17.07.2014 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.371/2014 **பொருள் எண்.05**

**<u>மதிப்பீடு</u>**

மண்டலம்–15, வார்டு–196ல் திருவள்ளுவர் தெரு திருவள்ளுவர் 1வது தெரு முதல் தெற்கு பக்கிங்காம் கால்வாய் வரை 1500x1500மி.மீ. அளவுள்ள ஆர்.சி.சி. பெட்டக வடிவ மற்றும் Precast மழைநீர் வடிகால்வாய் புதியதாக கட்டும் பணிக்கு 2013-2014ஆம் ஆண்டின் விலைப் பட்டியல்களின்படி தயாரிக்கப்பட்ட ரூ.2,06,08,000/–க்கான திட்ட மதிப்பீட்டிற்கு சென்னை மாநகராட்சி சட்டம் 1919ன் விதி 78ன்படி நிலைக்குழுக்கள் (பணிகள்) மற்றும் (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> ''18.07.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டத்தின் தீர்மான எண்.321/2014 நாள் 18.07.2014–ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

> ''18.07.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண்.330/2014, நாள்18.07.2014–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**ம.அ.9.ம.ந.அ.எச்1/ 135 /2014**
**முதன்மை செயலர்/ஆணையர் அவர்களின் 17/7/2014நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.372/2014 **பொருள் எண்.06**

**மண்டலம்–9 – பகுதி–26 வார்டு–117 –இராமகாமாத்புரத்தில் பயன்பாடின்றி உள்ள சமூக நலக்கூடத்தை பொதுமக்கள் தினந்தோறும் பயன்படுத்தும் வகையில் தேசிய நகர்புற சுகாதாரத்திட்டத்தின் கீழ் மருத்துவமனையாக பயன்பாடு மாற்றம்செய்ய அனுமதி**

மண்டலம்–9, பகுதி–26, வார்டு–117, இராமகாமாத்புரத்தில் உள்ள சமூக நலக்கூடம் கடந்த 1999ம் ஆண்டு கட்டப்பட்டு 2000ம் ஆண்டு முதல் பொதுமக்கள் பயன்பாட்டில் இருந்து வந்தது. கடந்த இரண்டு ஆண்டுகளாக அந்த சமூகநலக்கூடம் பொதுமக்கள் பயன்பாடற்ற நிலையில் உள்ளது.

தற்போதைய பொது சுகாதாரத்துறையின் கீழ் செய்யப்படும் தேசிய நகர்புற சுகாதாரத்திட்டத்தின் கீழ் அனைத்து வித வசதிகளை உள்ளடக்கிய பெரிய மருத்துவமனை ஒன்று வார்டு –113 மற்றும் வார்டு –117ஐ சார்ந்த பொது மக்கள் பயன்பெறும் வண்ணம் அமைக்கப்பட வேண்டியுள்ளது.

9–வது மண்டல வார்டு குழு தீர்மான எண்–393/2014, நாள்.18.06.2014ன் மூலம் வார்டு–117ல், தற்போது பயன்பாடு இல்லாமல் உள்ள சமூகநலக்கூடத்தை மாற்றி தேசிய நகர்புற சுகாதாரத்திட்டத்தின் கீழ் ஒருங்கிணைக்கப்பட்ட மருத்துவமனையாக பயன்பாடு மாற்றம் செய்து, பொது மக்கள் பயன்பெறும் வகையில் மாற்றம் செய்திட, பயன்பாடு மாற்ற தீர்மானம் பெறப்பட்டுள்ளது.

எனவே, மண்டலம்–9, பகுதி–26, வார்டு–117ல் இராமகாமாத்புரத்தில் பயன்பாடின்றி உள்ள சமூகநலக்கூடத்தை பொதுமக்கள் தினந்தோறும் பயன்படுத்தும் வகையில் தேசிய நகர்புற சுகாதாரத்திட்டத்தின் கீழ் மருத்துவமனையாக பயன்பாடு மாற்றம் செய்திட நிலைக்குழு (பொது சுகாதாரம்), நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''ஏற்கனவே நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் கூட்டம் 16.07.2014 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 18.07.2014 அன்று தீர்மான எண்.23/2014–ன்படி நிலைக்குழு (பொது சுகாதாரம்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''18.07.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டத்தின் தீர்மான எண்.325/2014, நாள்.18.07.2014–ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''18.07.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண்.324/2014, நாள்.18.07.2014–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**ம.அ.9.ம.ந.அ.எச்1/136 /2014**
**முதன்மை செயலர்/ஆணையர் அவர்களின் 17/7/2014நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.373/2014 **பொருள் எண்.07**

**மண்டலம் –9– பகுதி – 27 வார்டு – 115– R.O.B 6-வது தெருவில் பயன்பாடின்றி உள்ள சமூக நலக்கூடத்தை பொதுமக்கள் தினந்தோறும் பயன்படுத்தும் வகையில் தேசிய நகர்புற சுகாதாரத்திட்டத்தின் கீழ் சுகாதாரமையமாக பயன்பாடு மாற்றம் செய்ய அனுமதி**

சென்னை மாநகராட்சி மண்டலம்–9 பகுதி–27, வார்டு–115, R.O.B 6-வது தெருவில் உள்ள சமூக நலக்கூடம் கடந்த 1997–ஆம் ஆண்டு முதல் பொதுமக்கள் பயன்பாட்டில் இருந்து வந்தது. கடந்த இரண்டு ஆண்டுகளாக அந்த சமூகநலக்கூடம் பொதுமக்கள் பயன்பாடற்ற நிலையில் உள்ளது.

தற்போதைய பொது சுகாதாரத்துறையின் கீழ் செய்யப்படும் தேசிய நகர்புற சுகாதாரத்திட்டத்தின் கீழ் அனைத்து வித வசதிகளை உள்ளடக்கிய பெரிய மருத்துவமனை ஒன்று வார்டு –115ஐ சார்ந்த பொது மக்கள் பயன்பெறும் வண்ணம் அமைக்கப்பட வேண்டியுள்ளது.

9–வது மண்டல வார்டு குழு தீர்மான எண்–420/2014, நாள்.18.06.2014ன் மூலம் வார்டு–115ல், தற்போது பயன்பாடு இல்லாமல் உள்ள சமூகநலக்கூடத்தை மாற்றி தேசிய நகர்புற சுகாதாரத்திட்டத்தின் கீழ் ஒருங்கிணைக்கப்பட்ட சுகாதார மருத்துவமனையாக பயன்பாடு மாற்றம் செய்து, பொது மக்கள் பயன்பெறும் வகையில் மாற்றம் செய்திட, பயன்பாடு மாற்ற தீர்மானம் பெறப்பட்டுள்ளது.

எனவே, மண்டலம்–9, பகுதி–27, வார்டு–115ல் R.O.B 6-வது தெருவில் பயன்பாடின்றி உள்ள சமூகநலக்கூடத்தை பொதுமக்கள் தினந்தோறும் பயன்படுத்தும் வகையில் தேசிய நகர்புற சுகாதாரத்திட்டத்தின் கீழ் மருத்துவமனையாக பயன்பாடு மாற்றம் செய்திட நிலைக்குழு (பொது சுகாதாரம்), நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு வரிவிதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

''ஏற்கனவே நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் கூட்டம் 16.07.2014 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 18.07.2014 அன்று தீர்மான எண். 24/2014–ன்படி நிலைக்குழு (பொது சுகாதாரம்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''18.07.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டத்தின் தீர்மான எண். 326/2014 நாள் 18.07.2014–ன் படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''18.07.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண்.325/2014, நாள்.18.07.2014–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**ம.அ.12.ந.க.எண்.ஆர்.3/6153/2013**
**முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் 17.07.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.374/2014 **பொருள் எண்.08**

**வருவாய்த்துறை –மண்டலம்–12 –வார்டு–156 –செல்வலட்சுமி கார்டன் பகுதியில் அமைந்துள்ள – சென்னை மாநகராட்சி சமுதாய நலக்கூடம் – பொது மக்கள் பயன்பாட்டிற்கு அனுமதிப்பது – வாடகை நிர்ணயம் செய்ய அனுமதி**

சென்னை மாநகராட்சி, விரிவாக்கத்தின்படி, சென்னை மாநகராட்சி மண்டலம்–12ல் இணைக்கப்பட்டுள்ள காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் வட்டம் எண்.77, முகலிவாக்கம் கிராமம், பட்டா எண்.431–ல் சர்வே எண்.25/2A1ல் ஏக்கர் 0.50 செண்ட் நிலம் திருமதி. பொன்னம்மாள் மற்றும் அவர்களது வாரிசுகளுக்கு கூட்டுப் பட்டாவாக தாக்கலாகி, இந்த நிலம் கிராம பொது நலத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த நிலத்தில் 0.22 ½ செண்ட் (அதாவது 9828 ச.அடி காலிமனை) நிலத்தில் மட்டும் அரசு சமுதாய நல கூடம் கட்டிடம் கட்டி பொது மக்களுக்காக முகலிவாக்கம் ஊராட்சி மன்றத்திற்கு ஒப்படைக்க வேண்டி பட்டா எண்.431–ல் அடங்கிய பட்டாதாரர்களின் பெரும்பாலான வாரிசுகள் தானபத்திரம் மூலம் எழுதி ஒப்படைக்கப்பட்டுள்ளது. இவ்விடத்தில் ஸ்ரீபெரும்புதூர் பாராளுமன்ற உறுப்பினர் அவர்களின் தொகுதி மேம்பாட்டு நிதி திட்டம் 2009–2010ல் சமுதாய நலக்கூடம் ரூ.20 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளது. தற்போது மேற்கண்ட இடம் 25.10.2011 முதல் சென்னை மாநகராட்சி, மண்டலம்–12ல் கோட்டம்–156ல் சேர்க்கப்பட்டு முகலிவாக்கம் செல்வலட்சுமி கார்டன் பகுதியில் உள்ள இச் சமுதாய நலக்கூடத்தை பொது மக்கள் பயன்படுத்தும் பொருட்டு குன்றத்தூர் ஒன்றியம் வட்டார வளர்ச்சி நிர்வாகத்திடம் இருந்து மண்டலம்–12 பொறியியல் துறையிடம் ஒப்படைக்கப்பட்டு அதில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு தற்போது வருவாய் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட இடத்தில் 2976 சதுர அடி பரப்பளவில் அமைந்துள்ள சமுதாய நலக்கூடத்திற்கு உரிய வாடகை நிர்ணயம் செய்யப்படாத காரணத்தினால் இதுவரை பொது மக்கள் பயன்பாட்டிற்கு அனுமதிக்க இயலாமல் உள்ளது.

மேற்கண்ட சமுதாய நலக்கூடத்தினை பொருளாதாரத்தில் பின் தங்கிய மக்களுக்கு பயன்படும் வகையில், 12வது மண்டல வார்டு குழுவின் தீர்மான எண்.293, நாள்.16.12.2013ன்படி, ஒரு சதுர அடிக்கு ரூ.0.85 பைசா என முழு நாள் (24 மணி நேரம்) வாடகை ரூ.2530/–ம் மற்றும் அரை நாள் (12 மணி நேரம்) வாடகையாக ரூ.1265/–என நிர்ணயம் செய்ய தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

எனவே, மண்டலம்–12, வார்டு–156ல் செல்வலட்சுமி கார்டன் பகுதியில் அமைந்துள்ள 2976 சதுரடி பரப்பளவு கொண்ட சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான சமுதாய நலக்கூடத்தினை பொது மக்களின் பயன்பாட்டிற்கு அனுமதிப்பதற்கும், மேற்கண்ட வாடகை தொகையை வாடகையாக நிர்ணயம் செய்வதற்கும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"18.07.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண்.321/2014, நாள்.18.07.2014–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**ம.அ.1.ந.க.எண்.சி1/ 0907–1 /2014**
**முதன்மை செயலர்/ஆணையர் அவர்களின் 17/7/2014நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.375/2014 **பொருள் எண்.09**

**மண்டலம்–1, பகுதி–1, வார்டுகள்–1 முதல் 4 வரை, 262 துப்புரவு தொழிலாளர்களை சுவர்ண ஜெயந்தி நேரு வேலை வாய்ப்பு திட்டத்தில் உள்ள குழுக்கள் மூலமாக தினக்கூலி பணியாளர்கள் அமர்த்த அனுமதி**

சுவர்ண ஜெயந்தி நேரு வேலை வாய்ப்பு திட்ட அலுவலர் அவர்களின் 03/06/2014 நாளிட்ட குறிப்பில் மண்டலம் 1 முதல் 15 வரை உள்ள மண்டல அலுவலர்கள் சுவர்ண ஜெயந்தி நேரு வேலை வாய்ப்பு திட்டத்தின் மூலம் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வசித்து வரும், குறைந்தது 5 நபர்கள், அதிகபட்சம் 20 நபர்கள் வீதம், ஒரு குழுவாக அமைத்து, அக்குழுவினை, வார்டு அளவில், தேவைக்கேற்ப ஈடுபடுத்தி துப்புரவு பணி – பணிபுரியும் அண்டை வீட்டுக்குழுக்கள் / மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்கள், ஊக்குநர், பிரதிநிதி ஆகியோரை, சம்மந்தப்பட்ட துப்புரவு ஆய்வாளர், துப்புரவு மேற்பார்வையாளர், பகுதி– உதவி செயற்பொறியாளர் மற்றும் செயற்பொறியாளர் ஆகியோர், மேற்பார்வையில் பணி மேற்கொள்ள வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அனைத்து மண்டலங்களிலும், அனைத்து வார்டுகளுக்கும் தேவையான துப்புரவு பணியாளர் முழுவதுமாக நியமித்து துப்புரவு பணியை நூறு சதவீதம் மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பாக சமர்ப்பிக்கப்படுவது, மண்டலம்–1ல் வார்டு 1 முதல் 14 வரையில் உள்ள 14 வார்டுகளில் 1338 உட்புற சாலைகளும், 11 பேருந்து சாலைகளும் (நெடுஞ்சாலை உட்பட) உள்ளது. இப்பகுதிகளில் 289187 மக்கள் சுமார் 70,300 குடியிருப்புகளில் வசிக்கின்றனர். இப்பகுதிகளில் தூய்மை பணிகள் தொய்வில்லாமல் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமாகிறது. மேலும் பிரதான பேருந்து சாலைகள், அங்காடி அமைந்துள்ள சாலைகள் போன்றவற்றில் இரவு நேர தூய்மை பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியம் எழுந்துள்ளது.

மண்டலம்–1 (திருவொற்றியூர்)ல் வார்டு–1 முதல் 14 வார்டுகளுக்குட்பட்ட பகுதிகளில் துப்புரவு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வார்டு 1 முதல் 14 வரை உள்ள வார்டுகளில் தற்போது தனியார் ஏஜென்சி மூலம் துப்புரவு தினக்கூலி பணியாளர்கள் நாள் ஒன்றுக்கு ரூ.295/– என்ற அடிப்படையில் நியமிக்கப்பட்டு துப்புரவு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி ஒப்பந்தம் மூன்று மாதத்தில் முடிவடைகிறது. அதனை தொடாந்து இந்த 14 கோட்டங்களிலும் துப்புரவு பணி மேற்கொள்ள தனியார் அளிக்கும் தினக்கூலி பணியாளர்கள் தேவைப்படுகிறார்கள்.

எனவே, இக்கருத்துகளின் அடிப்படையில் 375 துப்புரவு பணியாளர்கள் தேவை என்றாலும் தற்பொழுதுள்ள 113 நிரந்தர துப்புரவு பணியாளர்களை தவிர்த்து கூடுதலாக பணி மேற்கொள்ள 262 எண்ணிக்கை துப்புரவு பணியாளர்கள் தேவை என கணக்கிட்டு பணி அமர்த்த வேண்டியுள்ளது.

எதிர்வரும் காலங்களில் பொது சுகாதாரம் சீர்கெடாத வகையில் துப்புரவு பணிகளை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டி உள்ளதாலும் கூட்ட நடவடிக்கையில் குறிப்பில் அறிவித்தப்படி எந்த ஒரு தெருவும் விடுப்படாமல் ஆய்வு மற்றும் அளவீடு செய்து அதன் பின்னர் ஒருங்கிணைத்து அதன் அடிப்படையில் ஏற்கெனவே நடைமுறையில் உள்ள வழி காட்டுதல்களின் அடிப்படையில் மண்டலம்–1ல் மேற்படி பணியினை திறம்பட செயல்படுத்த தலைமை பொறியாளர் அவர்களின் சுற்றறிக்கையில் அங்கீகரிக்கப்பட்ட விலைப்படி நாள் ஒன்றுக்கு ருபாய் 295 வீதம் 262 பணியாளர்களுக்கு ஆகும் தோராய செலவு ரூபாய் 295x262x365 என ஓராண்டிற்கு ரூபாய் 2,82,10,850/– தொகை தேவைப்படுகிறது.

| வ.எண் | பகுதி எண் | துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை | தோராய செலவினம் |
|---|---|---|---|
| 1 | பகுதி –1 வார்டு –1 முதல் 4 வரை | 262 | 2,82,10,850 |

மன்றத்தீர்மான எண் 760/2013 நாள் 22.11.2013ன் படி சென்னை மாநகராட்சியில் இயங்கும் அம்மா உணவகங்களில் பணிபுரிய அண்டை வீட்டு/ மகளிர் சுய உதவிக்குழுக்கள் மூலம் பணியாளர்களை பயன்படுத்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அதேபோல் சுவர்ண ஜெயந்தி

நேரு வேலை வாய்ப்பு திட்டத்தில் உள்ள குழுக்களின் நபர்களை (262 எண்ணிக்கை) துப்புரவு பணிக்கு பயன்படுத்தலாம்.

எனவே மண்டலம்–1ல் பகுதி–1, வார்டு–1 முதல் 4 வரை துப்புரவு பணிகள் தங்கு தடையின்றி நடைபெற வேண்டி

1. மண்டலம்–1 ற்கு துப்புரவு பணிக்கு தேவையான 262 நபர்களை, சென்னை மாநகராட்சியில் இயங்கும் அம்மா உணவகங்களுக்கு பணிபுரிய அண்டை வீட்டு / மகளிர்சுய உதவி குழுக்கள் மூலம் பணியாளர்களை பயன்படுத்துவதுபோல் சுவர்ண ஜெயந்தி நகர் புற வேலை வாய்ப்பு திட்டத்தின் மூலம் அண்டை வீட்டு குழுக்களாக பதிவு செய்யப்பட்ட ஆண் / பெண் உறுப்பினர்களைக் கொண்ட குழுக்களை கொண்டு துப்புரவு பணி மேற்கொள்ளவும்.
2. மேற்படி குழுவிற்கு வேலை செய்த நாட்களுக்கான ஊதியம் குழு பெயரில் பதிவு செய்யப்பட்ட வங்கி கணக்கில் செலுத்தவும்.
3. மேற்சொன்ன துப்புரவு பணியாளர்களுக்கு துப்புரவு பணிக்கு தேவையான நலப்பொருட்களான முக கவசம், கையுறை மற்றும் ஒளிரும் மேல்சட்டை போன்றவற்றிற்கும் சேர்த்து குறைந்தபட்ச ஊதிமாக நாள் ஒன்றிற்கு ரூ295/– வீதம் ஒராண்டிற்கு ரூ.2,82,10,850 க்கு நிர்வாக அனுமதி மற்றும் துப்புரவு பணியாளர்கள் நல பொருட்களான கையுறை, முககவசம் மற்றும் ஒளிரும் மேல்சட்டை அணியாத பட்சத்தில் குழுவின் மூலமாக ஊதியத்திலிருந்து ஒரு நபருக்கு நாளொன்றிற்கு ரூ.32.00 வீதம் பிடித்தம் செய்யப்படவும்.
4. இப்பணிக்கான தொகைக்கு கணக்கு குறியீட்டு எண். 40–41–03 கணக்கு தலைப்பு எண். 230–150–100 மேற்கொள்ளவும்.

மேற்காணும் 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (சுகதாரம்) மற்றும் நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் கூட்டம் 16.07.2014 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 18.07.2014 அன்று தீர்மான எண்.25/2014–ன்படி நிலைக்குழு (பொது சுகாதாரம்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"18.07.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டத்தின் தீர்மான எண்.327/2014 நாள் 18.07.2014–ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"18.07.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண்.326/2014, நாள்.18.07.2014–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**ம.அ.1.ந.க.எண்.சி1/ 0907–2 /2014**
**முதன்மை செயலர்/ஆணையர் அவர்களின் 17/7/2014நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.376/2014 **பொருள் எண்.10**

**மண்டலம்–1, பகுதி–2, வார்டுகள்–5 முதல் 9 வரை, 353 துப்புரவு தொழிலாளர்களை சுவர்ண ஜெயந்தி நேரு வேலை வாய்ப்பு திட்டத்தில் உள்ள குழுக்கள் மூலமாக தினக்கூலி பணியாளர்கள் பணி அமர்த்த அனுமதி**

சுவர்ண ஜெயந்தி நேரு வேலை வாய்ப்பு திட்ட அலுவலர் அவர்களின் 03/06/2014 நாளிட்ட குறிப்பில் மண்டலம் 1 முதல் 15 வரை உள்ள மண்டல அலுவலர்கள் சுவர்ண ஜெயந்தி நேரு வேலை வாய்ப்பு திட்டத்தின் மூலம் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வசித்து வரும், குறைந்தது 5 நபர்கள், அதிகபட்சம் 20 நபர்கள் வீதம், ஒரு குழுவாக அமைத்து, அக்குழுவினை, வார்டு அளவில், தேவைக்கேற்ப ஈடுபடுத்தி துப்புரவு பணி – பணிபுரியும் அண்டை வீட்டுக்குழுக்கள் / மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்கள், ஊக்குநர், பிரதிநிதி ஆகியோரை, சம்மந்தப்பட்ட துப்புரவு ஆய்வாளர், துப்புரவு மேற்பார்வையாளர், பகுதி– உதவி செயற்பொறியாளர் மற்றும் செயற்பொறியாளர் ஆகியோர், மேற்பார்வையில் பணி மேற்கொள்ள வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அனைத்து மண்டலங்களிலும், அனைத்து வார்டுகளுக்கும் தேவையான துப்புரவு பணியாளர் முழுவதுமாக நியமித்து துப்புரவு பணியை நூறு சதவீதம் மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பாக சமர்ப்பிக்கப்படுவது, மண்டலம்–1ல் வார்டு 1 முதல் 14 வரையில் உள்ள 14 வார்டுகளில் 1338 உட்புற சாலைகளும், 11 பேருந்து சாலைகளும் (நெடுஞ்சாலை உட்பட) உள்ளது. இப்பகுதிகளில் 289187 மக்கள் சுமார் 70,300 குடியிருப்புகளில் வசிக்கின்றனர். இப்பகுதிகளில் தூய்மை பணிகள் தொய்வில்லாமல் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமாகிறது. மேலும் பிரதான பேருந்து சாலைகள், அங்காடி அமைந்துள்ள சாலைகள் போன்றவற்றில் இரவு நேர தூய்மை பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியம் எழுந்துள்ளது.

மண்டலம்–1 (திருவொற்றியூர்)ல் வார்டு–1 முதல் 14 வார்டுகளுக்குட்பட்ட பகுதிகளில் துப்புரவு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வார்டு 1 முதல் 14 வரை உள்ள வார்டுகளில் தற்போது தனியார் ஏஜென்சி மூலம் துப்புரவு தினக்கூலி பணியாளர்கள் நாள் ஒன்றுக்கு ரூ.295/– என்ற அடிப்படையில் நியமிக்கப்பட்டு துப்புரவு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி ஒப்பந்தம் மூன்று மாதத்தில் முடிவடைகிறது. அதனை தொடாந்து இந்த 14 கோட்டங்களிலும் துப்புரவு பணி மேற்கொள்ள தனியார் அளிக்கும் தினக்கூலி பணியாளர்கள் தேவைப்படுகிறார்கள்.

எனவே, இக்கருத்துகளின் அடிப்படையில் 496 துப்புரவு பணியாளர்கள் தேவை என்றாலும் தற்பொழுதுள்ள 143 நிரந்தர துப்புரவு பணியாளர்களை தவிர்த்து கூடுதலாக பணி மேற்கொள்ள 353 எண்ணிக்கை துப்புரவு பணியாளர்கள் தேவை என கணக்கிட்டு பணி அமர்த்த வேண்டியுள்ளது.

எதிர்வரும் காலங்களில் பொது சுகாதாரம் சீர்கெடாத வகையில் துப்புரவு பணிகளை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டி உள்ளதாலும் கூட்ட நடவடிக்கையில் குறிப்பில் அறிவித்தப்படி எந்த ஒரு தெருவும் விடுப்படாமல் ஆய்வு மற்றும் அளவீடு செய்து அதன் பின்னர் ஒருங்கிணைத்து அதன் அடிப்படையில் ஏற்கெனவே நடைமுறையில் உள்ள வழி காட்டுதல்களின் அடிப்படையில் மண்டலம்–1ல் மேற்படி பணியினை திறம்பட செயல்படுத்த தலைமை பொறியாளர் அவர்களின் சுற்றறிக்கையில் அங்கீகரிக்கப்பட்ட விலைப்படி நாள் ஒன்றுக்கு ருபாய் 295 வீதம் 353 பணியாளர்களுக்கு ஆகும் தோராய செலவு ரூபாய் 295x353x365 என ஒராண்டிற்கு ரூபாய் 3,80,09,275/– தொகை தேவைப்படுகிறது.

| வ.எண் | பகுதி எண் | துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை | தோராய செலவினம் |
|---|---|---|---|
| 1 | பகுதி –2<br>வார்டு –5 முதல் 9 வரை | 353 | 3,80,09,275 |

மன்றத்தீர்மான எண் 760/2013 நாள் 22.11.2013ன் படி சென்னை மாநகராட்சியில் இயங்கும் அம்மா உணவகங்களில் பணிபுரிய அண்டை வீட்டு/ மகளிர் சுய உதவிக்குழுக்கள் மூலம் பணியாளர்களை பயன்படுத்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அதேபோல் சுவர்ண ஜெயந்தி நேரு வேலை வாய்ப்பு திட்டத்தில் உள்ள குழுக்களின் நபர்களை (353 எண்ணிக்கை) துப்புரவு பணிக்கு பயன்படுத்தலாம்.

எனவே மண்டலம்–1ல் பகுதி–2, வார்டு–5 முதல் 9 வரை துப்புரவு பணிகள் தங்கு தடையின்றி நடைபெற வேண்டி

1 மண்டலம்–1ற்கு துப்புரவு பணிக்கு தேவையான 353 நபர்களை, சென்னை மாநகராட்சியில் இயங்கும் அம்மா உணவகங்களுக்கு பணிபுரிய அண்டை வீட்டு / மகளிர்சுய உதவி குழுக்கள் மூலம் பணியாளர்களை பயன்படுத்துவதுபோல் சுவர்ண ஜெயந்தி நகர் புற வேலை வாய்ப்பு திட்டத்தின் மூலம் அண்டை வீட்டு குழுக்களாக பதிவு செய்யப்பட்ட ஆண் / பெண் உறுப்பினர்களைக் கொண்ட குழுக்களை கொண்டு துப்புரவு பணி மேற்கொள்ளவும்.

2 மேற்படி குழுவிற்கு வேலை செய்த நாட்களுக்கான ஊதியம் குழு பெயரில் பதிவு செய்யப்பட்ட வங்கி கணக்கில் செலுத்தவும்

3 மேற்சொன்ன துப்புரவு பணியாளர்களுக்கு துப்புரவு பணிக்கு தேவையான நலப்பொருட்களான முக கவசம், கையுறை மற்றும் ஒளிரும் மேல்சட்டை போன்றவற்றிற்கும் சேர்த்து குறைந்தபட்ச ஊதிமாக நாள் ஒன்றிற்கு ரூ295/– வீதம் ஒராண்டிற்கு ரூ.3,80,09,275/–க்கு நிர்வாக அனுமதி மற்றும் துப்புரவு பணியாளர்கள் நல பொருட்களான கையுறை, முககவசம் மற்றும் ஒளிரும் மேல்சட்டை அணியாத பட்சத்தில் குழுவின் மூலமாக ஊதியத்திலிருந்து ஒரு நபருக்கு நாளொன்றிற்கு ரூ.32.00 வீதம் பிடித்தம் செய்யப்படவும்

4 இப்பணிக்கான தொகைக்கு கணக்கு குறியீட்டு எண். 40–41–03 கணக்கு தலைப்பு எண். 230–150–100 மேற்கொள்ளவும்.

மேற்காணும் 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (சுகதாரம்), நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் கூட்டம் 16.07.2014 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 18.07.2014 அன்று தீர்மான எண். 26/2014–ன்படி நிலைக்குழு (பொது சுகாதாரம்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"18.07.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டத்தின் தீர்மான எண்.328/2014 நாள்.18.07.2014–ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"18.07.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண்.327/2014, நாள்.18.07.2014–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**ம.அ.1ந.க.எண்.சி1/ 0907–3 /2014**

**முதன்மை செயலர்/ஆணையர் அவர்களின் 17/7/2014நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.377/2014 **பொருள் எண்.11**

**மண்டலம்–1, பகுதி–1, வார்டுகள்–10 முதல் 14 வரை, 303 துப்புரவு தொழிலாளர்களை சுவர்ண ஜெயந்தி நேரு வேலை வாய்ப்பு திட்டத்தின் மூலமாக பணி அமர்த்த அனுமதி**

சுவர்ண ஜெயந்தி நேரு வேலை வாய்ப்பு திட்ட அலுவலர் அவர்களின் 03/06/2014 நாளிட்ட குறிப்பில் மண்டலம் 1 முதல் 15 வரை உள்ள மண்டல அலுவலர்கள் சுவர்ண ஜெயந்தி நேரு வேலை வாய்ப்பு திட்டத்தின் மூலம் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வசித்து வரும், குறைந்தது 5 நபர்கள், அதிகபட்சம் 20 நபர்கள் வீதம், ஒரு குழுவாக அமைத்து, அக்குழுவினை, வார்டு அளவில், தேவைக்கேற்ப ஈடுபடுத்தி துப்புரவு பணி – பணிபுரியும் அண்டை வீட்டுக்குழுக்கள் / மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்கள், ஊக்குநர், பிரதிநிதி ஆகியோரை, சம்மந்தப்பட்ட துப்புரவு ஆய்வாளர், துப்புரவு மேற்பார்வையாளர், பகுதி– உதவி செயற்பொறியாளர் மற்றும் செயற்பொறியாளர் ஆகியோர், மேற்பார்வையில் பணி மேற்கொள்ள வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அனைத்து மண்டலங்களிலும், அனைத்து வார்டுகளுக்கும் தேவையான துப்புரவு பணியாளர் முழுவதுமாக நியமித்து துப்புரவு பணியை நூறு சதவீதம் மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டு ள் ளது. இது தொடர்பாக சமர்ப்பிக்கப்படுவது, மண்டலம்–1 ல் வார்டு 1 முதல் 14 வரையில் உள்ள 14 வார்டுகளில் 1338 உட்புற சாலைகளும், 11 பேருந்து சாலைகளும் (நெடுஞ்சாலை உட்பட) உள்ளது. இப்பகுதிகளில் 289187 மக்கள் சுமார் 70,300 குடியிருப்புகளில் வசிக்கின்றனர். இப்பகுதிகளில் தூய்மை பணிகள் தொய்வில்லாமல் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமாகிறது. மேலும் பிரதான பேருந்து சாலைகள், அங்காடி அமைந்துள்ள சாலைகள் போன்றவற்றில் இரவு நேர தூய்மை பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியம் எழுந்துள்ளது.

மண்டலம்–1 (திருவொற்றியூர்)ல் வார்டு–1 முதல் 14 வார்டுகளுக்குட்பட்ட பகுதிகளில் துப்புரவு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வார்டு 1 முதல் 14 வரை உள்ள வார்டுகளில் தற்போது தனியார் ஏஜென்சி மூலம் துப்புரவு தினக்கூலி பணியாளர்கள் நாள் ஒன்றுக்கு ரூ.295/– என்ற அடிப்படையில் நியமிக்கப்பட்டு துப்புரவு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி ஒப்பந்தம் மூன்று மாதத்தில் முடிவடைகிறது. அதனை தொடாந்து இந்த 14 கோட்டங்களிலும் துப்புரவு பணி மேற்கொள்ள தனியார் அளிக்கும் தினக்கூலி பணியாளர்கள் தேவைப்படுகிறார்கள்.

எனவே, இக்கருத்துகளின் அடிப்படையில் 303 துப்புரவு பணியாளர்கள் தேவை என கணக்கிட்டு பணி அமர்த்த வேண்டியுள்ளது.

1 ஆய்வின்படி பகுதி 3 தேவைப்படும் பணியாளர்களின் எண்ணிக்கை – 370
2 தற்போது பகுதி 3ல் உள்ள பணியாளர்களின் எண்ணிக்கை – 0
3 மறு ஆய்வின்படி பகுதி–3க்கு தேவைப்படும் பணியாளர்களின் எண்ணிக்கை – 303

| வ.எண் | பகுதி எண் | துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை | தோராய செலவினம் |
|---|---|---|---|
| 1 | பகுதி –3<br>வார்டு –10 முதல் 14 வரை | 303 | 3,26,25,525 |

எதிர்வரும் காலங்களில் பொது சுகாதாரம் சீர்கெடாத வகையில் துப்புரவு பணிகளை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டி உள்ளதாலும் கூட்ட நடவடிக்கையில் குறிப்பில் அறிவித்தப்படி எந்த ஒரு தெருவும் விடுப்படாமல் ஆய்வு மற்றும் அளவீடு செய்து அதன் பின்னர் ஒருங்கிணைத்து அதன் அடிப்படையில் ஏற்கெனவே நடைமுறையில் உள்ள வழி காட்டுதல்களின் அடிப்படையில் மண்டலம்–1ல் மேற்படி பணியினை திறம்பட செயல்படுத்த தலைமை பொறியாளர் அவர்களின் சுற்றறிக்கையில் அங்கீகரிக்கப்பட்ட விலைப்படி நாள் ஒன்றுக்கு ருபாய் 295/– வீதம் 303 பணியாளர்களுக்கு ஆகும் தோராய செலவு ரூபாய் 295x303 x365 என ஓராண்டிற்கு ரூபாய் 3,26,25,525/– தொகை தேவைப்படுகிறது.

மன்றத்தீர்மான எண் 760/2013 நாள் 22.11.2013ன் படி சென்னை மாநகராட்சியில் இயங்கும் அம்மா உணவகங்களில் பணிபுரிய அண்டை வீட்டு/ மகளிர் சுய உதவிக்குழுக்கள் மூலம் பணியாளர்களை பயன்படுத்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அதேபோல் சுவர்ண ஜெயந்தி நேரு வேலை வாய்ப்பு திட்டத்தில் உள்ள குழுக்களின் நபர்களை (303 எண்ணிக்கை) துப்புரவு பணிக்கு பயன்படுத்தலாம்.

எனவே மண்டலம்–1ல் பகுதி–3, வார்டு–10 முதல் 14 வரை துப்புரவு பணிகள் தங்கு தடையின்றி நடைபெற வேண்டி

1 மண்டலம்–1 ற்கு துப்புரவு பணிக்கு தேவையான 303 நபர்களை, சென்னை மாநகராட்சியில் இயங்கும் அம்மா உணவகங்களுக்கு பணிபுரிய அண்டை வீட்டு / மகளிர்சுய உதவி குழுக்கள் மூலம் பணியாளர்களை பயன்படுத்துவதுபோல் சுவர்ண ஜெயந்தி நகர் புற வேலை வாய்ப்பு திட்டத்தின் மூலம் அண்டை வீட்டு குழுக்களாக பதிவு செய் யப்பட்ட ஆண் / பெண் உறுப்பினர்களைக் கொண்ட குழுக்களை கொண்டு துப்புரவு பணி மேற்கொள்ளவும்.

2 மேற்படி குழுவிற்கு வேலை செய்த நாட்களுக்கான ஊதியம் குழு பெயரில் பதிவு செய்யப்பட்ட வங்கி கணக்கில் செலுத்தவும்.

3 மேற்சொன்ன துப்புரவு பணியாளர்களுக்கு துப்புரவு பணிக்கு தேவையான நலப்பொருட்களான முககவசம், கையுறை மற்றும் ஒளிரும் மேல்சட்டை போன்றவற்றிற்கும் சேர்த்து குறைந்தபட்ச ஊதிமாக நாள் ஒன்றிற்கு ரூ295/– வீதம் ஒராண்டிற்கு ரூ.3,26,25,525 க்கு நிர்வாக அனுமதி மற்றும் துப்புரவு பணியாளர்கள் நல பொருட்களான கையுறை, முககவசம் மற்றும் ஒளிரும் மேல்சட்டை அணியாத பட்சத்தில் குழுவின் மூலமாக ஊதியத்திலிருந்து ஒரு நபருக்கு நாளொன்றிற்கு ரூ.32.00 வீதம் பிடித்தம் செய்யப்படவும்.

4 இப்பணிக்கான தொகைக்கு கணக்கு குறியீட்டு எண். 40–41–03 கணக்கு தலைப்பு எண். 230–150–100 மேற்கொள்ளவும்.

மேற்காணும் 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (சுகதாரம்) நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘ஏற்கனவே நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் கூட்டம் 16.07.2014 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 18.07.2014 அன்று தீர்மான எண். 27/2014–ன்படி நிலைக்குழு (பொது சுகாதாரம்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘18.07.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டத்தின் தீர்மான எண். 329/2014 நாள் 18.07.2014–ன் படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘18.07.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண்.328/2014, நாள்.18.07.2014–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**ம.அ.3.ந.க.எண்.இ1/2239/2014**

**முதன்மை செயலர்/ஆணையர் அவர்களின் 21.06.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.378/2014 **பொருள் எண்.12**

**மண்டலம்–3, பகுதி–6, 7 மற்றும் 8, வார்டுகள்–22 முதல் 33 வரை, 460 துப்புரவு தொழிலாளர்களை சுவர்ண ஜெயந்தி நேரு வேலை வாய்ப்பு திட்டத்தின் மூலமாக பணி அமர்த்த மன்றத்தின் அனுமதி**

சுவர்ண ஜெயந்தி நேரு வேலை வாய்ப்பு திட்ட அலுவலர் அவர்களின் 03/06/2014 நாளிட்ட குறிப்பில் மண்டலம் 1 முதல் 15 வரை உள்ள மண்டல அலுவலர்கள் சுவர்ண ஜெயந்தி நேரு வேலை வாய்ப்பு திட்டத்தின் மூலம் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வசித்து வரும், குறைந்தது 5 நபர்கள், அதிகபட்சம் 20 நபர்கள் வீதம், ஒரு குழுவாக அமைத்து, அக்குழுவினை, வார்டு அளவில், தேவைக்கேற்ப ஈடுபடுத்தி துப்புரவு பணி – பணிபுரியும் அண்டை வீட்டுக்குழுக்கள் / மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்கள், ஊக்குநர், பிரதிநிதி ஆகியோரை, சம்மந்தப்பட்ட துப்புரவு ஆய்வாளர், துப்புரவு மேற்பார்வையாளர், பகுதி உதவி செயற்பொறியாளர் மற்றும் செயற்பொறியாளர் ஆகியோர், மேற்பார்வையில் பணி மேற்கொள்ள வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மாதவரம் மண்டலம் (மண்டலம்–3) 46.63 சதுர.கி.மீ. பரப்பளவுள்ள 12 வார்டுகளை உள்ளடக்கிய பகுதியாகும். இந்த மண்டலத்தில் 15 எண்ணிக்கையிலான பேருந்து சாலைகளும் மற்றும் 2523 எண்ணிக்கையில் உட்புற சாலைகளும் சென்னை மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது. எனவே இம் மண்டலத்தின் மக்கள் தொகை 2011ம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 196027 இருப்பினும் நகர மயமாக்குதலின் முக்கிய பகுதியாக இம்மண்டலம் விளங்குவதால் நாளுக்கு நாள் இம்மண்டலத்தின் மக்கள் தொகை வளர்ச்சியடைந்து வருகிறது.

மண்டலம்–3 ( மாதவரம் ) பகுதிகளில் 110 மெ.டன் குப்பைகள் தினமும் சேகரிக்கப்படுகிறது. சென்னை மாநகராட்சி மூலம் 12 வார்டுகள் (வார்டு 22 முதல் 33 வரை) துப்புரவு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் இப்பணியினை திறம்பட செய்ய வேண்டி ஒரே நாளில் அனைத்து வார்டுகளிலும் சென்னை மாநகராட்சியால் இப்பணியினை செய்துவிட முடியாது என்ற நிலையில் படிப்படியாக சென்னை மாநகராட்சி ஒவ்வொரு வார்டாக துப்புரவு பணியினை மேற்கொள்ளவேண்டியுள்ளது. எனவே தற்போது பகுதி 6,7 மற்றும் 8 ( வார்டுகள் 22 முதல் 33 வரை) கீழ்கண்ட விவரங்களின் அடிப்படையில் பணிகளை மேற்கொள்ள பின்வருமாறு கணக்கிடப்பட்டுள்ளது.

தற்போது உள்ள பணியாளர்களின் எண்ணிக்கை வாகனங்களின் எண்ணிக்கை போதுமானதாக இல்லாத காரணத்தால் இன்றைய நிலைகளுக்கேற்ப, தேவைகளை கண்டறிய நடைபெற்ற ஆய்வு கூட்டத்தின்படி படிவம்–1ல் குறிப்பிட்டுள்ளவாறு

1) மறு ஆய்வின்படி பகுதி 6,7 மற்றும் 8 தேவைப்படும் பணியாளர்களின் எண்ணிக்கை – 1237
2) தற்போது பகுதி 6,7 மற்றும் 8ல் உள்ள பணியாளர்களின் எண்ணிக்கை – 175
3) மறு ஆய்வின்படி பகுதி 6,7 மற்றும் 8க்கு தேவைப்படும் பணியாளர்களின் எண்ணிக்கை – 1062
4) மேலும் இப்பகுதி வளர்ந்து வரும் பகுதியாவதால் அனைத்துத் தெருக்களிலும் பெருக்கும் பணிக்கு தற்போது அவசியம் ஏற்படவில்லை. மேலும் சாலை வசதிகள் முழுமை அடைந்த பின்பு தான் ஆராய்ந்து அதற்கேற்ப பணியாளர்கள் நியமிக்கப்படவேண்டியுள்ளது.
5) இதனை தொடர்ந்து ஆய்வுக்கூட்ட நடவடிக்கையை தொடர்ந்து இப்பணிக்கு திருவாளர்கள் ஜே.கே.டிரான்ஸ் நிறுவனம் மூலம் 12.06.2013 முதல் 11.05.2014 வரை பணி மேற்கொள்ளப்பட்டது. மேலும் பணியின் அவசியம் கருதி 12.05.2014 முதல் 11.07.2014 வரை பணி மேற்கொள்ள அனுமதி பெறப்பட்டுள்ளது. எனவே இப்பணி முடியும் தருவாயில் உள்ள காரணத்தினால் 12.07.2014 முதல் மேற்படி பணியினை மேற்கொள்வதற்கு பின்வருமாறு கணக்கிடப்பட்டுள்ளது.

எனவே, இக்கருத்துகளின் அடிப்படையில் 1062 துப்புரவு பணியாளர்கள் தேவை என்றாலும் தற்பொழுதுள்ள 175 துப்புரவு பணியாளர்களை தவிர்த்து தற்போது பணி மேற்கொள்ள 460 எண்ணிக்கை துப்புரவு பணியாளர்கள் தேவை என கணக்கிட்டு பணி அமர்த்த வேண்டியுள்ளது.

| வ. எண் | பகுதி எண் | துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை | தோராய செலவினம் |
|---|---|---|---|
| 1 | பகுதி 6,7 மற்றும் 8 | 460 | 4,95,30,500 |

எதிர்வரும் காலங்களில் பொது சுகாதாரம் சீர்கெடாத வகையில் துப்புரவு பணிகளை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டி உள்ளதாலும் பார்வையில் கண்ட கூட்ட நடவடிக்கையில் குறிப்பில் அறிவித்தப்படி எந்த ஒரு தெருவும் விடப்படாமல் ஆய்வு மற்றும் அளவீடு செய்து அதன் பின்னர் ஒருங்கிணைத்து அதன் அடிப்படையில் ஏற்கெனவே நடைமுறையில் உள்ள வழி காட்டுதல்களின் அடிப்படையில் மண்டலம்–3ல் மேற்படி பணியினை திறம்பட செயல்படுத்த தலைமை பொறியாளர் அவர்களின் சுற்றறிக்கையின் அங்கீகரிக்கப்பட்ட விலைப்படி நாள் ஒன்றுக்கு ருபாய் **295** வீதம் **460** பணியாளர்களுக்கு ஆகும் தோராய செலவு ரூபாய் **295**x460 x365 என ஓராண்டிற்கு ரூபாய் **4,95,30,500/–** தொகை தேவைப்படுகிறது.

மன்றத்தீர்மான எண் **760/2013** நாள் **22.11.2013**ன் படி சென்னை மாநகராட்சியில் இயங்கும் அம்மா உணவகங்களுக்கு பணிபுரிய அண்டை வீட்டு/ மகளீர் சுய உதவிக்குழுக்கள் மூலம் பணியாளர்களை பயன்படுத்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அதேபோல் சுவர்ண ஜெயந்தி நேரு வேலை வாய்ப்பு திட்டத்தில் உள்ள குழுக்களின் நபர்களை **(460 எண்ணிக்கை)** துப்புரவு பணிக்கு பயன்படுத்தலாம்.

எனவே மண்டலம்–3ல் வார்டு–22 முதல் **33** வரை துப்புரவு பணிகள் தங்கு தடையின்றி நடைபெற வேண்டி

1. மண்டலம்–3ற்கு துப்புரவு பணிக்கு தேவையான **460** நபர்களை, சென்னை மாநகராட்சியில் இயங்கும் அம்மா உணவகங்களுக்கு பணிபுரிய அண்டை வீட்டு / மகளீர்சுய உதவி குழுக்கள் மூலம் பணியாளர்களை பயன்படுத்துவதுபோல் சுவர்ண ஜெயந்தி நகர் புற வேலை வாய்ப்பு திட்டத்தின் மூலம் அண்டை வீட்டு குழுக்களாக பதிவு செய்யப்பட்ட ஆண் /பெண் உறுப்பினர்களைக் கொண்ட குழுக்களை கொண்டு துப்புரவு பணி மேற்கொள்ளவும்.
2. மேற்படி குழுவிற்கு வேலை செய்த நாட்களுக்கான ஊதியம் குழு பெயரில் பதிவு செய்யப்பட்ட வங்கி கணக்கில் செலுத்தவும்.
3. மேற்சொன்ன துப்புரவு பணியாளர்களுக்கு துப்புரவு பணிக்கு தேவையான நலப்பொருட்களான முக கவசம், கையுறை மற்றும் ஒளிரும் மேல்சட்டை போன்றவற்றிற்கும் சேர்த்து குறைந்தபட்ச ஊதிமாக நாள் ஒன்றிற்கு ரூ**295/–** வீதம் ஒராண்டிற்கு ரூ.**4,95,30,500**க்கு நிர்வாக அனுமதிக்கும். துப்புரவு பணியாளர்கள் நல பொருட்களான கையுறை, முககவசம் மற்றும் ஒளிரும் மேல்சட்டை அணியாத பட்சத்தில் குழுவின் மூலமாக ஊதியத்திலிருந்து ஒரு நபருக்கு நாளொன்றிற்கு ரூ.**32.00** வீதம் பிடித்தம் செய்யப்படவும் பின்னர் நலப்பொருட்கள் உபயோகப்படுத்தும் போது பிடித்தம் செய்த தொகையை விடுவிப்பு செய்யவதற்கும்.
4. இப்பணிக்கான தொகைக்கு கணக்கு குறியீட்டு எண். **40–41–03** கணக்கு தலைப்பு எண். **230–05–01–000** மேற்கொள்ளவும்.

மேற்காணும் **1** முதல் **4** வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (சுகதாரம்), நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"**16.07.2014** அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தின் தீர்மான எண்.**21/2014**, நாள்.**16.07.2014**–ன்படி இதற்கு நிலைக்குழு (பொதுசுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"**18.07.2014** அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.**313/2014**, நாள்.**18.07.2014**–ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"**18.07.2014** அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண்.**323/2014**, நாள்.**18.07.2014**–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**ம.அ.11.ந.க.எண்.பி1/3929/2014**
**முதன்மைச் செயலாளர் மற்றும் ஆணையர் அவர்களின் 17.07.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.379/2014 **பொருள் எண்.13**

**பொதுக்கழிப்பிடம் இடிக்க அனுமதி**

| வ. எண் | வார்டு.155 | மண்டலம்–11 |
|---|---|---|
| 1. | இடிக்கப்படவேண்டிய கட்டிடத்தின் விவரம் | மண்டலம்–11, வார்டு–155ல் திருமலை நகர் வ.ஊ.சி. தெருவில் பழுதடைந்து உபயோகிக்க இயலாத நிலையில் உள்ள பொதுக்கழிப்பிடம். |
| 2. | கட்டிடம் கட்டப்பட்ட துறை மற்றும் வருடம் | 2002ம் ஆண்டு கட்டப்பட்டது |
| 3. | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு | ரூ. 36,000/– |
| 4. | கட்டிடம் இடிப்பதற்கான காரணம் | பழுதடைந்து உபயோகிக்க இயலாததால் |
| 5. | கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக | தரைதளம் 80 சதுர மீ |
| 6. | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் பரப்பளவு | 80 சதுர மீ |
| 7. | அந்த கட்டிடம் இடித்ததற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது | அம்மா உணவகம் |
| 8. | திட்ட முன் மொழிதல் | மிகவும் பழுதடைந்து உபயோகிக்க இயலாத நிலையில் உள்ள பொதுக்கழிப்பிடத்தை இடித்து விட்டு அவ்விடத்தில் புதியதாக அம்மா உணவகம் கட்டும் பணி. |
| 9. | கட்டிடத்தை இடிக்க பரிந்துரை செய்தது | 155 வது வார்டு மன்ற உறுப்பினர் |
| 10. | வார்டு குழு தீர்மான எண் மற்றும் நாள் | 11வது மண்டல வார்டு குழு தீர்மான எண். 820/2014, நாள்.14.07.2014 |

எனவே, மண்டலம்–11, வார்டு–155ல் திருமலை நகர் வ.ஊ.சி. தெருவில் பழுதடைந்து உபயோகிக்க இயலாத நிலையில் உள்ள பொதுக்கழிப்பிடத்தை இடிப்பதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“ஏற்கனவே நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் கூட்டம் 16.07.2014 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 18.07.2014 அன்று தீர்மான எண்.28/2014–ன்படி நிலைக்குழு(பொதுசுகாதாரம்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (பணிகள்)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“18.07.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டத்தின் தீர்மான எண்.330/2014 நாள்.18.07.2014–ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**<u>ம.அ.9.ந.பி.ந.க.எண்.967/2013</u>**
**<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் 23.07.2014 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.380/2014 **பொருள் எண்.14**

**<u>தானபத்திரம்</u>**

திரு. சீனிவாசராவ் முரளிதரன், புதிய கதவு எண்.41, பழைய க.எண்.24, டாக்டர் இராதாகிருஷ்ணன் சாலை, மைலாப்பூர், சென்னை–600 004 பிளாக் எண்.37, R.S. No. 1731/50, என்ற இடத்திற்கு கட்டட அனுமதி வேண்டி சென்னை மாநகராட்சி, மண்டலம்–9ல் விண்ணப்பித்துள்ளார். அவர் கட்ட அனுமதி வேண்டி விண்ணப்பித்த இடத்தினை ஒட்டிய சாலை “சென்னை முழுமை வளர்ச்சித் திட்டம் II” ன் மூலம் 30.50 மீ அகல சாலையாக விரிவாக்கம் செய்யப்பட வேண்டும். இதில் மனையின் உரிமையாளர் சாலை விரிவாக்கத்திற்காக 6.10மீ நீளம் X 3.25மீ அகலம் = 19.825 ச.மீ பரப்பளவு நிலத்தினை தானபத்திரம் மூலம் சென்னை மாநகராட்சிக்கு தானமாக கொடுக்க இசைவு தெரிவித்துள்ளார். மேலும், அவர் வழங்கிய தான பத்திரத்தின் வரைவை 9வது மண்டல வார்டு குழு பரிந்துரை செய்து (தீர்மானம் எண்.698 நாள்.10.10.2013) தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

எனவே, மேற்கூறிய நிலத்தினை தானமாக பெற

1. கட்டட உரிமையாளர் திரு. சீனிவாசராவ் முரளிதரன் மூலம் இசைவு பெற்ற தானபத்திரம் மூலம் 19.825 ச.மீ நிலத்தினை சென்னை மாநகராட்சிக்கு தானமாக பெறவும்,
2. தானமாக வழங்கப்பட்ட பகுதியில் சாலை விரிவாக்கப் பணிகளை மேற்கொள்ள செலவாகும் செலவீனம் ரூ.25,000/–ஐ கட்டட உரிமையாளரிடம் “ஆணையர் சென்னை மாநகராட்சி” என்ற பெயரில் காசோலையாக பெறவும்,
3. கட்டட உரிமையாளருக்கு தானமாக பெறப்படும் இடத்திற்கு “வளர்ச்சி உரிமை சான்றிதழை” சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தின் மூலம் வழங்க பரிந்துரை செய்யவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> “ஏற்கனவே நிலைக்குழு (நகரமைப்பு) வின் கூட்டம் 10.07.2014 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 25.07.2014 அன்று தீர்மான எண்.07/2014–ன்படி நிலைக்குழு (நகரமைப்பு) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*****

**ம.அ.12 ந.க.எண்.இ2/2986/2014**

**முதன்மைச் செயலாளர் மற்றும் ஆணையர் அவர்களின் 21.07.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.381/2014 **பொருள் எண்.15**

**பொதுக்கழிப்பிடம் இடிக்க அனுமதி**

| வ. எண் | வார்டு–162 | மண்டலம்–12 |
|---|---|---|
| 1. | இடிக்கப்படவேண்டிய கட்டிடத்தின் விவரம் | மண்டலம்–12, வார்டு–162ல் MKN சாலை மற்றும் தில்லை கங்கா நகர் சந்திப்பில் பழுதடைந்து உபயோகிக்க இயலாத நிலையில் உள்ள பொதுக்கழிப்பிடம். |
| 2. | கட்டிடம் கட்டப்பட்ட துறை மற்றும் வருடம் | 1992 ம் ஆண்டு கட்டப்பட்டது |
| 3. | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு | ரூ. 96,000/– |
| 4. | கட்டிடம் இடிப்பதற்கான காரணம் | பழுதடைந்து உபயோகிக்க இயலாததால் |
| 5. | கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக | தரைதளம் 530 சதுர அ |
| 6. | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் பரப்பளவு | 530 சதுர அ |
| 7. | அந்த கட்டிடம் இடித்ததற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது | அம்மா உணவகம் |
| 8. | திட்ட முன் மொழிதல் | மிகவும் பழுதடைந்து உபயோகிக்க இயலாத நிலையில் உள்ள பொதுக்கழிப்பிடத்தை இடித்து விட்டு அவ்விடத்தில் புதியதாக அம்மா உணவகம் கட்டும் பணி. |
| 9. | கட்டிடத்தை இடிக்க பரிந்துரை செய்தது | 162 வது வார்டு மன்ற உறுப்பினர் |
| 10. | வார்டு குழு தீர்மான எண் மற்றும் நாள் | 12வது மண்டல வார்டு குழு தீர்மான எண். 70/2014, நாள்.12.06.2014 |

எனவே, மண்டலம்–12, வார்டு–162ல் MKN சாலை மற்றும் தில்லை கங்கா நகர் சந்திப்பில் பழுதடைந்து உபயோகிக்க இயலாத நிலையில் உள்ள பொதுக்கழிப்பிடத்தை இடிப்பதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“ஏற்கனவே நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் கூட்டம் 16.07.2014 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 21.07.2014 அன்று தீர்மான எண். 29/2014–ன்படி நிலைக்குழு (பொது சுகாதாரம்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு(பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 18.07.2014 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு தீர்மான எண்.343/2014, நாள்.28.07.2014–ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**<u>ம.க.கு.ந.க.எண்.அ8/1955/2013</u>**

**<u>முதன்மை செயலர்/ஆணையர் அவர்களின் 22.07.2014 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.382/2014 **பொருள் எண்.16**

**<u>அரசாணை அமலாக்கம்</u>**

அரசாணை எண். **186**, நிதித் (கடன்கள் மற்றும் முன்பணங்கள் குழுமம்) துறை, நாள்.**08.07.2014**ல் பல்வேறுவிதமான கடன்கள் மற்றும் முன்பணங்களுக்கான வட்டிவிகிதம் **2014–2015**ஆம் ஆண்டிற்கு நிர்ணயித்து உத்தரவிடப்பட்டுள்ளது. அரசாணையின் விபரம் பின்வருமாறு:

Government direct that the rate of interest on various kinds of loans and advances by the State Government during the year 2014-15 shall be as shown below:-

| Sl No. | | Class of Loan / Advance | Percent per annum for the year 2014 -2015 |
|---|---|---|---|
| **1.** | **Loans to State owned Industrial / Commercial Undertakings / Corporations, etc. including Financial Corporations and all other Local Bodies and Municipal Corporations.** | | |
| | (a) | Plan Schemes for development purposes | **11.50** |
| | (b) | Other Schemes | **11.50** |
| | (c) | For capital formation and development purposes | **11.50** |
| | (d) | For Working Capital Support | **13.50** |
| | (e) | For Ways & Means , advances including loans to cover cash deficits | **13.50** |
| | (f) | For Ways & Means advance to Tamil Nadu Civil Supplies Corporation Limited for Public Distribution System | **10.00** |

| Sl No. | | Class of Loan / Advance | Percent per annum for the year 2014 -2015 |
|---|---|---|---|
| **2** | **Loans to Co-operative Institutions and Co-perative Banks like Land Development Bank** | | **10.00** |
| **3** | **Loans to Government Servants** | | |
| | **(i)** | **House Building Advance:** | |
| | | (a) For loans upto Rs.50,000/- | **5.50** |
| | | (b) For loans from Rs.50,001/- to 1,50,000/- | **7.00** |
| | | (c) For loans from Rs.1,50,001/- to 5,00,000/- | **9.00** |
| | | (d) Above Rs.5,00,000/- | **10.00** |
| | **(ii)** | **Conveyance Advance:** | |
| | | (a) For purchase of Motor car | **11.50** |
| | | (b) For purchase of Motor Cycle / Scooter | **9.00** |
| | | (c) For purchase of Bi - cycle | **5.50** |
| | **(iii)** | **Other personal Loans to Government Servants:** | |
| | | (a) For purchase of Computer | **10.00** |
| | | (b) Others | **10.00** |

| | | |
|---|---|---|
| **4.** | **Other items:** | |
| | Loans which are not covered in any specific category mentioned above | **12.50** |
| **5.** | **Value of seized stock under Essential Commodities Act, 1955** | **6.50** |
| **6.** | **Penal Interest** | **2.50** |

2. The above rates will be applicable for all loans and advances being sanctioned during the year 2014-2015 and will have validity till the next revision is done

3. The rates of interest are general and will not apply to cases where reduced rates of interest have been sanctioned specially by the Government or where loans have been sanctioned by the Government free of interest. The Government may also sanction Ways and Means advances at special rates or interest taking into account, the cost of borrowing of the government.

4. The mobilization advances to Contractors for World Bank assisted projects wherein the standard bidding documents provide for exemption from paying of interest are however excepted from payment of interest.

5. The penal Interest on all overdue instalments of principal and interest will be at 2.50 per cent more than the normal rates of interest per annum.

6. Except in the case of loans to Government Servants, interest ion all cases unless specifically indicated otherwise should be paid every Calendar quarter on the outstanding balance.

7. Even at the stage of sanction of loan, in the sanction order, the period of repayment, rate of interest and schedule of repayment with dates shall be indicated. In case, it is a permanent loan, a specific mention of this fact should be made in the sanction order itself.

எனவே, அரசாணை எண். 186, நிதித் (கடன்கள் மற்றும் முன்பணங்கள் குழுமம்) துறை, நாள்.08.07.2014னை சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்த நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 18.07.2014 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 28.07.2014 அன்று தீர்மான எண்.353/2014ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலமாக பெருபான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்.இ4/520/2014**
**முதன்மை செயலர்/ஆணையர் அவர்களின் 23.07.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.383/2014 **பொருள் எண்.17**

**பெரம்பூர் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியில் கட்டப்பட்டுள்ள பல்நோக்கு கட்டிடம் – தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழக நியாய விலைகடைக்கு ஒதுக்கீடு செய்வது மற்றும் மாத வாடகை நிர்ணயம் செய்ய அனுமதி**

**05.09.2013**–ஆம் நாளிட்ட பெரம்பூர் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் வணக்கத்திற்குரிய மேயரிடம் அளித்துள்ள கடிதத்தில் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து பி.வி. காலனி **45**–வது வட்டம் பி.வி. காலனி மக்களுக்கு பயன்படும் வகையில் நியாயவிலை கடை கட்டி முடிக்கப்பட்டுள்ளதாகவும், பி.வி. காலனி மக்களுக்கு பயன்படும் வகையில் (சிஏ**011** மற்றும் சிஏ**012**) நியாயவிலை கடைகள் இயங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் மேற்குறிப்பிட்ட இடத்தில் நியாயவிலை கடைகள் இயங்க ஆவணம் செய்யுமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

**05.12.2014**–ஆம் நாளிட்ட **4**–வது மண்டல அலுவலரின் குறிப்பில் பி.வி. காலனி **27**–வது தெரு, கிளினிக் ரோடு சந்திப்பில் பெரம்பூர் சட்டமன்ற தொகுதி உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டப்பட்டுள்ள பல்நோக்கு கட்டிடத்தினை மக்களுக்கு பயன்படும் வகையில், உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை கீழ் இயங்கும் நியாயவிலை கடைகளுக்கு ஒதுக்கீடு செய்ய **4**–வது மண்டல வார்டுக்குழு தீர்மானம் எண்.**288/2014**, நாள்.**20.01.2014**–ன்படி நிறைவேற்றப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

மேற்படி இடத்தில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டப்பட்டுள்ள பல்நோக்கு கட்டிடத்தில் உணவு பொருள் மற்றும் நுகர்வோர் பாதுக்காப்புத்துறை கீழ் இயங்கும் நியாயவிலை கடைகள் நடத்த கோரிக்கை மனு ஏதும் இல்லை என்பதால், உணவு பொருள் மற்றும் நுகர்வோர் பாதுக்காப்புத்துறையிடமிருந்து கோரிக்கை மனு பெற்று அனுப்பிவைக்குமாறு இவ்வலுவலக குறிப்பு மூலம் கோரப்பட்டது.

**25.06.2014**–ஆம் நாளிட்ட உணவு பொருள் மற்றும் நுகர்வோர் பாதுக்காப்புத்துறையின் கடிதத்தில் மேற்படி கட்டிடத்தில் நுகர்வோர் வாணிபக்கழகத்திற்கு நியாயவிலை கடை நடத்துவதற்கு இக்கட்டிடத்தின் வாடகை நிர்ணயம் செய்து உத்தரவு அளித்த பின்னர் கடைகள் மாற்ற இயலும் என தெரிவித்துள்ளார்.

மண்டலம்–**4**, வார்டு–**45** ல் மாநகராட்சிக்கு சொந்தமான சுமார் **933** ச. அடி கொண்ட பல்நோக்கு கட்டிடத்தினை நியாயவிலை கடைகளுக்கு ஒதுக்கீடு செய்ய மன்றத்தீர்மான எண்.**312/2013** பொதுமக்கள் நலன் கருதி வியாபாரம் நோக்கமின்றி செயல்படும் அரசு நிறுவனமான தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழக நியாய விலைகடைகளுக்கு இத்தீர்மானத்தின் அடிப்படையில் சதுர அடிக்கு ரூ.**5**/– என (**933** × 5) ரூ.**4665**/– மாத வாடகையாகவும், **12** மாத வாடகை முன்பணம் (**4665** × 12) ரூ.**55,980**/– தொகையினை செலுத்தவும் மற்றும் கட்டிடத்தில் ஏதேனும் மாற்றம் செய்ய இருப்பின் மாநகராட்சியின் முன் அனுமதி பெற்றுதான் செய்ய வேண்டும் ஆகிய நிபந்தனைகளுடன் உணவுப்பொருள் வழங்கல் துறைக்கு ஒதுக்கீடு செய்ய நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் **18.07.2014** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **28.07.2014** அன்று தீர்மான எண்.**356/2014**ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலமாக பெருபான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**ம.அ.8/நக. எண்/6272/2014**
**முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் 21.07.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.384/2014 **பொருள் எண்.18**

**மண்டலம்–8, பகுதி–21, கோட்டம்–94 உட்பட்ட சிட்கோ நகர் 33வது தெருவில் அமைந்துள்ள சென்னை மாநகராட்சி மின்துறை உதவி பொறியாளர் வளாகத்தில் உள்ள ஒரு பகுதியில் கட்டிடம் மற்றும் காலி இடம் பொது மக்கள் மின்பகிர்மான கட்டணத்தை கட்ட – தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு மாத வாடகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்ய அனுமதி வேண்டி**

மாமன்ற உறுப்பினர் திருமதி. வசந்தா வெங்கடேசன் அவர்கள் மண்டலம்–8, பகுதி–21, கோட்டம்–94 உள்ள சிட்கோ நகர், 33வது தெருவில் அமைந்துள்ள சென்னை மாநகராட்சி மின்துறை உதவி பொறியாளர் வளாகத்தில் உள்ள கட்டிடமும், காலியிடமும், வில்லிவாக்கம் மற்றும் சிட்கோ நகர் பொது மக்கள், தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு மின்பகிர்மான கட்டணத்தை கட்ட வசதியாக மாத வாடகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்து தரும்படி மாமன்ற உறுப்பினர் அவர்கள் கடிதத்தின் மூலம் கேட்டுக்கொண்டார். மேலும் தமிழ்நாடு மின்சார வாரியமும் கடிதம் Lr.No.AEE /O&M/VKM/F.CORP/D.NO.75/2014/ நாள்.10.02.2014 மூலம் கேட்டுக்கொண்டதன் பேரில் மண்டலம்–8 வார்டு குழுவின் 09.06.2014 அன்று நடந்த கூட்டத்தில் பொருள் எண். 69 நாள் 09.06.2014 மேற்கண்டவாறு தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு மாத வாடகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்யவும், வாடகையை பின்னர் நிர்ணயம் செய்யவும் ஒப்புதல் அளித்துள்ளது.

எனவே மண்டலம்–8, பகுதி–21, கோட்டம்–94 உள்ள சிட்கோ நகர், 33வது தெருவில் அமைந்துள்ள சென்னை மாநகராட்சி மின்துறை உதவி பொறியாளர் வளாகத்தில் உள்ள 18.5 ச.மீ கட்டிடமும், 82 ச.மீ காலி இடமும், வில்லிவாக்கம் மற்றும் சிட்கோ நகர் பொது மக்கள் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு மின்பகிர்மான கட்டணத்தை கட்ட வசதியாக வளாகத்தில் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு மாத வாடகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்ய நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

> ‘‘ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 18.07.2014 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 28.07.2014 அன்று தீர்மான எண்.346/2014ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலமாக பெருபான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.’’

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**ம.வ..அ.ந.க..எண்.இ3/00876/2013**
**முதன்மை செயலாளர் மற்றும் ஆணையாளர் அவர்களின் 22.7.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.385/2014 **பொருள் எண்.19**

**மதிப்பீடு – 2014–2015– கட்டடத்துறை – மண்டலம்–6 – பகுதி–17 வார்டு– 73-ல், ஸ்ட்ரஹான்ஸ் சாலையில் உள்ள உபயோகமற்ற பழுதடைந்த நிலையில் உள்ள மாநகராட்சி துவக்கப்பள்ளி கட்டிடங்ககளை இடித்துவிட்டு புதிய மண்டல அலுவலகம் கட்டும் பணிக்கு – 2013–14 ஆம் ஆண்டு அலுவலக விலைப்பட்டியலின் அடிப்படையில் ரூ. 7,95,00,000/– க்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு அனுமதி**

| | | |
|---|---|---|
| 1. பணியின் பெயர் | : | மண்டலம்–6 – பகுதி–17 வார்டு– 73-ல், ஸ்ட்ரஹான்ஸ் சாலையில் உள்ள உபயோகமற்ற பழுதடைந்த நிலையில் உள்ள மாநகராட்சி துவக்கப்பள்ளி கட்டிடங்ககளை இடித்துவிட்டு புதிய மண்டல அலுவலகம் கட்டும் பணி |
| 2. எந்த துறைக்காக இப்பணி செயலாக்கம் | : | மண்டலம்–6 |
| 3. சம்பந்தப்பட்ட துறையால் அனுமதி | : | மண்டலம்–6 |
| 4. தொழில் நுட்ப ஒப்புதல் அளித்த அதிகாரி<br>செயல்முறை ஆணை எண். மற்றும் தேதி | : | தலைமை பொறியாளர் (க(ம)பா.)C.E(B & Br.)<br>T.S.No. / 2013-14 நாள்: |
| 5. மதிப்பீடு எந்த வருடத்தின் அட்டவணை | : | 2013–14 ஆண்டின் திருத்திய அலுவலக விலைப்பட்டியலின் படி தயாரிக்கப்பட்டது. |
| 6. மதிப்பீட்டின் தொகை | : | ரூ.7,95,00,000.00 |
| அ) கட்டுமானபணி செலவினம் | : | ரூ.6,65,02,022.55 |
| ஆ) மேலான மேல்பார்வை செலவு | : | ரூ.66,50,202.26 |
| இ) சிறு மேற்பார்வை செலவு | : | ரூ.16,62,550.56 |
| ஈ) மற்றைய எதிர்பாரா செலவு | | ரூ.16,92,633.61 |
| உ) மின்சாரம் / குடிநீர் கழிவுநீர் போன்ற இணைப்புகளுக்கு மற்றபிற இனங்கள் | : | ரூ.50,000.00 |
| ஊ) தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் | : | ரூ.6,65,020.23 |
| பொது வைப்பு நிதி -1% | : | ரூ.6,65,020.23 |
| எ) தரக்கட்டுபாடு | : | ரூ.16,62,550.56 |
| ஏ) வரைப்படம் மற்றும் மதிப்பீடு தயாரித்தல் | : | ரூ.7,95,50,000.00 |
| மொத்தம் | | |
| 7. அ. மழைநீர் வடிகால் கட்டுவது நடைபாதை பகுதியா / சாலை பகுதியா<br>ஆ. அதன் அளவு குறிப்பிடவும் | : | இல்லை |
| 8. ஒரு சதுர மீட்ருக்கு அல்லது ஒரு மீட்டருக்கு ஆகும் செலவு | : | ரூ.14,880.74 சதுர மீட்டர் |
| 9. வரைபடம் வைக்கப்பட்டுள்ளதா | : | ஆம் |
| 10. மதிப்பீட்டிற்கு ஒப்புதல் அளித்த குழுவின் பெயர் தீர்மான எண். மற்றும் தேதி | : | வார்டு குழு–6 தீர்மானம் எண். 102, நாள்: 13.11.2013 |
| 11. ஏற்கனவே எப்போது செய்யப்பட்டது | : | புதிய பணி |
| 12. நிதியின் மூலத் தன்மை | : | மூலதன பணி |
| 13. இக்கோப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பணிக்கு தேவைப்படும் நிதி | | |

மேற்கண்ட பணிக்கு **2013–14** ஆம் ஆண்டின் திருத்திய அலுவலக விலை விவரப்படி ரூ.**7,95,50,000/–** (ரூபாய் ஏழு கோடியே தொண்ணூற்று ஐந்து லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்)க்கு தயாரிக்கப்பட்டுள்ள திட்ட மதிப்பீட்டிற்கு தற்பொழுது தமிழ்நாடு அரசு சிறப்பிதழ் எண்.**6/2008** நாள்.**26.08.2008**–ல் வெளியிடப்பட்டுள்ள கூடுதல் அதிகாரங்களின் படி சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டம் விதி **1919**ன் கீழ் திருத்தப்பட்ட **78**ன் (பி)ன்படி, நிலைக்குழு (பணிகள்) நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) யின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் **18.07.2014** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **28.07.2014** அன்று தீர்மான எண்.**346/2014**–ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் **18.07.2014** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **28.07.2014** அன்று தீர்மான எண்.**351/2014**ன் படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலமாக பெருபான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.''

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**<u>க.து.ந.க.எண்.பி2/117/2014</u>**

**<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 21.07.2014 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.386/2014 **பொருள் எண்.20**

**<u>ஒப்பந்தப்புள்ளி ஏற்பு</u>**

| | | | |
|---|---|---|---|
| 1. | பணியின் பெயர் | : | மண்டலம்–2, வார்டு–20, காமராஜர் சாலையில் மண்டல அலுவலகம் –II கட்டும் பணி |
| 2. | மதிப்பீட்டின் எண் குழுவின் மன்றத்தின் தீர்மான எண்/நாள் | : | 2013-14<br>மன்றத் தீர்மான எண்.90/2014<br>நாள்.24.01.2014 |
| 3. | திட்ட குறியீட்டு எண் | : | |
| 4. | kjpg;gPl;od; bjhif | | ரூ. 8,96,00,000.00 |
| | m) கட்டுமான gzp brytpdk; | : | **U}. 7,73,28,693.80** |
| | M) Bkyhd Bkw;ghh;it bryt[ | : | **U}. 77,32,869.38** |
| | n) rpW Bkw;ghh;it bryt[ | : | **U. 19,33,217.35** |
| | N) தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் பொது நல வாரிய நிதி 0.3% | : | **U}. 2,31,986.08** |
| | c) மின்சாரம் | : | **U}. 30,000.00** |
| | C) எதிர்பாரா செலவு | : | **U}. 11,83,303.00** |
| | v) கலந்தறிதர் கட்டணம் | : | **U}. 11,59,930.39** |
| | **bkhj;jk;** | : | ரூ. 8,96,00,000.00 |
| 5. | எந்தெந்த பத்திரிக்கையில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டது / நாள் | : | 1. சென்னை மாநகராட்சி செய்தி மலர் நாள் . 15.05.2014.<br>2. தினமணி தமிழ் நாளிதழ் நாள். 15.05.2014.<br>**3.** நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் ஆங்கில நாளிதழ் நாள். 15.05.2014. |
| 6. | ஒப்பப்படிவம் பெற குறிக்கப்பட்ட இறுதி நாள் | : | 13.06.2014 |
| 7. | ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்வதற்கான கடைசி நாள் | : | 13.06.2014 |
| 8. | ஒப்பம் செய்தித்தாள்களில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து ஒப்பம் பெறுவதற்கு குறைந்தது 15 நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதா**?** இல்லை எனில் உரிய அலுவலரின் ஒப்புதல் பெற்ற விவரம் குறிப்பிடவும் | : | ஆம் ஒதுக்கப்பட்டுள்ளது |
| 09. | எத்தனை ஒப்பங்கள் பெறப்பட்டன? | : | மூன்று (e.Tender) இணையத்தளத்தின் மூலம் ஒப்பப்படிவம் பெறப்பட்டுள்ளது). |

10. ஒப்பத்தில் பங்கேற்றவர் விவரம்

| வ. எண். | ஒப்பத்தில் பங்கேற்றவர் பெயர்கள் திரு / திருவாளர்கள் | பணியின் அலுவலக மதிப்பு (ரூ.) | ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை (ரூ.) | 2013-2014 ஆம் ஆண்டின் விலைவிகிதம் விழுக்காடு அதிகம்/குறைவு |
|---|---|---|---|---|
| 1 | P.திருமூர்த்தி | 7,73,28,694.00 | 7,92,39,600.00 | (+) 2.47% அதிகம் |
| 2 | தாமஸ் ஐயாதுரை | 7,73,28,694.00 | 8,34,83,982.00 | (+) 7.96% அதிகம் |
| 3 | S.M.R.கன்ஷ்ட்ரக்ஷன் | 7,73,28,694.00 | 8,41,90,885.00 | (+) 8.87% அதிகம் |

11. குறைந்த ஒப்பம் அளித்தவருடன் பேச்சுவார்த்தை தேவையா? ஆம் எனில் நடத்தப்பட்ட நாள் : ஆம். நாள். 26.06.2014 மற்றும் 30.06.2014

12. பேச்சு வார்த்தைக்குப்பின் /ஒப்பத் தொகை/ ஒப்ப சரவீதம் . : ரூ.7,91,43,600.00 (+) 2.35 % அதிகம் 2013-2014 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி

13. குறைந்த ஒப்ப சதவீதம் அளித்த ஒப்பந்ததாரரின் பதவியின் பதிவு நாள் . : வகுப்பு –1 நாள்; .

14. கூடுதல் பிணை வைப்புத்தொகை செலுத்தப்பட்ட விவரம் : இல்லை

15. பணிக்கான நிதி ஆதாரம் அ) வரவு செலவு திட்ட தலைப்பு : மூலதன நிதி–கட்டடத்துறை 2013-2014

16. ஒப்பந்தப்புள்ளி செல்லத்தக்க காலம் . : 12.09.2014

மேற்கண்ட பணிக்காக ஒப்பங்கள் கோரப்பட்டு ஒப்ப இறுதி நாளான 13.06.2014 அன்று (e-tender) மூலம் மூன்று ஒப்பங்கள்பெறப்பட்டன. ஒப்பந்ததில் கலந்து கொண்ட ஒப்பந்ததாரர்களின் தொழில்நுட்ப ஆவணங்கள் (Technical Bid) 13.06.2014 அன்று திறக்கப்பட்டு, மூன்று ஒப்பந்ததாரர்களின் ஒப்ப முன்தகுதி நிபந்தனைகள் பூர்த்தி செய்துள்ளமையால் இவர்களின் விலைப்புள்ளி ஒப்பங்கள் (Price Bid) 23.06.2014 அன்று திறக்கப்பட்டன. இதில் குறைந்த ஒப்பந்ததாரராக திரு. P.திருமூர்த்தி அவர்களின் ஒப்பத் தொகை 2013-2014ஆம் ஆண்டின் இவ்வலுவலக பணி மதிப்பீட்டுத் தொகையான ரூ.7,73,28,694.60 யைவிட (+)2.47% அதிகமாகும். இதன்படி ஒப்பந்ததாரர் அளித்துள்ள ஒப்பத்தொகை ரூ.7,92,39,600/- ஆகும். எனவே, 26.06.2014 அன்று நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைக்குபின் ஒப்பந்ததாரர் தன்னுடைய ஒப்ப விழுக்காட்டை (+)2.45% ஆக குறைக்க சம்மதம் தெரிவித்துள்ளார். மேலும் 30.06.2014 அன்று நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைக்குபின் ஒப்பந்ததாரர் தன்னுடைய ஒப்ப விழுக்காட்டை (+)2.35% ஆக குறைக்க சம்மதம் தெரிவித்து இதற்கு மேல் ஒப்ப விழுக்காட்டை குறைக்க இயலாது என கூறியுள்ளார். இதன்படி ஒப்பந்ததாரர் அளித்துள்ள இறுதி ஒப்பத்தொகை ரூ.7,91,43,600/- ஆகும்.

| | |
|---|---|
| ஒப்பந்தாரரின் இறுதி ஒப்பத்தொகை | ரூ.7,91,43,600.00 |
| ஒப்பந்ததாரரின் இறுதி ஒப்ப சதவீதம் 2013-2014 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி | (+) 2.35% அதிகம் |
| The Hindu (Habitat) dated.31.05.2014 ஒப்பிடுகையில் ஒப்பந்ததாரர் ஒப்ப சதவீதம் | (-) 13.96% குறைவு |

மேலும், மேலே குறிப்பிட்டுள்ளவாறு ஒப்ப கூர்ந்தாய்வுக் குழுவில் (TENDER SCRUTINY COMMITTEE) மேற்கண்ட பணிக்காக ரூ.7,91,43,600/-க்கான ஒப்பத்தை ஏற்று

இவ்வொப்பப்பணியை திரு. P.திருமூர்த்தி அவர்களுக்கு வழங்கலாம் என பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

எனவே, குறைந்த ஒப்பந்ததாரரான திரு. P.திருமூர்த்தி அவர்களின் ரூ.7,91,43,600/- (ரூபாய் ஏழு கோடியே தொன்னூற்று ஒரு இலட்சத்து நாற்பத்து மூன்றாயிரத்து அறுநூறு மட்டும்)க்கான ஒப்பத்தை ஏற்று இவ்வொப்பப்பணியை திரு. P.திருமூர்த்தி அவர்களுக்கு அளிக்க சென்னை மாநகர முனிசிபல் சட்டம் விதி 1919 ல் விதி 80(2) ன்படி நிலைக்குழுக்கள் (பணிகள்) மற்றும் (வரிவிதிப்பு (ம) நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் **18.07.2014** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **28.07.2014** அன்று தீர்மான எண்.**341/2014**–ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் **18.07.2014** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **28.07.2014** அன்று தீர்மான எண்.**349/2014**–ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலமாக பெருபான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.''

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**<u>க.து.ந.க.எண். பி4/0599/2014</u>**

**<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 21.07.2014 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.387/2014 **பொருள் எண்.21**

**<u>ஒப்பந்தப்புள்ளி ஏற்பு</u>**

| | | | |
|---|---|---|---|
| 1. | பணியின் பெயர் | : | மண்டலம்–4, வார்டு–42, பழைய வண்ணாரப் பேட்டை,எண்.266,திருவொற்றியூர் நெடுஞ்சாலையில் ஏற்கனவே உள்ள கட்டடத்தை இடித்துவிட்டு மணட்ல அலுவலகம்–4 (தரைதளம் +3 தளங்கள்) கட்டும் பணி |
| 2. | மதிப்பீட்டின் எண் குழுவின் மன்றத்தின் தீர்மான எண்/நாள் | : | 2013-14<br>மன்றத் தீர்மான எண்.207/2014<br>நாள்.25.02.2014 |
| 3. | திட்ட குறியீட்டு எண் | : | |
| 4. | kjpg;gPl;od; bjhif | | ரூ. 7,19,00,000.00 |
| | m) கட்டுமான gzp brytpdk; | : | U}. **6,15,40,142.30** |
| | M) Bkyhd Bkw;ghh;it bryt[ | : | U}. **61,54,014.23** |
| | n) rpW Bkw;ghh;it bryt[ | : | U. **15,38,503.56** |
| | N) தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் பொது நல வாரிய நிதி 0.3% | : | U}. **1,84,620.43** |
| | c) மின்சாரம் | : | U}. **30,000.00** |
| | C) எதிர்பாரா செலவு | : | U}. **15,29,617.34** |
| | v) கலந்தறிதர் கட்டணம் | : | U}. **9,23,102.13** |
| | **bkhj;jk;** | : | **ரூ.** 7,19,00,000.00 |
| 5. | எந்தெந்த பத்திரிக்கையில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டது / நாள் | : | 1. சென்னை மாநகராட்சி செய்தி மலர் நாள் . 15.05.2014.<br>2. தினமணி தமிழ் நாளிதழ் நாள். 15.05.2014.<br>**3.** நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் ஆங்கில நாளிதழ் நாள். 15.05.2014. |
| 6. | ஒப்பப்படிவம் பெற குறிக்கப்பட்ட இறுதி நாள் | : | 13.06.2014 |
| 7. | ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்வதற்கான கடைசி நாள் | : | 13.06.2014 |
| 8. | ஒப்பம் செய்தித்தாள்களில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து ஒப்பம் பெறுவதற்கு குறைந்தது 15 நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதா**?** இல்லை எனில் உரிய அலுவலரின் ஒப்புதல் பெற்ற விவரம் குறிப்பிடவும் | : | ஆம் ஒதுக்கப்பட்டுள்ளது |
| 09. | எத்தனை ஒப்பங்கள் பெறப்பட்டன? | : | ஒன்று (e.Tender) இணையத்தளத்தின் மூலம் ஒப்பப்படிவம் பெறப்பட்டுள்ளது). |

10. ஒப்பத்தில் பங்கேற்றவர் விவரம்

| வ. எண். | ஒப்பத்தில் பங்கேற்றவர் பெயர்கள் திரு / திருவாளர்கள் | பணியின் அலுவலக மதிப்பு (ரூ.) | ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை (ரூ.) | 2013-2014 ஆம் ஆண்டின் விலைவிகிதம் விழுக்காடு அதிகம்/குறைவு |
|---|---|---|---|---|
| 1 | P.திருமூர்த்தி | 6,15,40,142.00 | 6,46,05,302 | (+) 4.98% அதிகம் |

11. குறைந்த ஒப்பம் அளித்தவருடன் : பேச்சுவார்த்தை தேவையா? ஆம் எனில் நடத்தப்பட்ட நாள் — ஆம். நாள். 26.06.2014 மற்றும் 30.06.2014

12. பேச்சு வார்த்தைக்குப்பின் /ஒப்பத் தொகை/ ஒப்ப சரவீதம் . : ரூ.6,45,42,862 (+) 4.88 % அதிகம் 2013-2014 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி

13. குறைந்த ஒப்ப சதவீதம் அளித்த ஒப்பந்ததாரரின் பதவியின் பதிவு நாள் . : வகுப்பு –1 நாள்; .

14. கூடுதல் பிணை வைப்புத்தொகை செலுத்தப்பட்ட விவரம் : இல்லை

15. பணிக்கான நிதி ஆதாரம் : மூலதன நிதி–கட்டடத்துறை
அ) வரவு செலவு திட்ட தலைப்பு 2013-2014

16. ஒப்பந்தப்புள்ளி செல்லத்தக்க காலம் . : 12.09.2014

மேற்கண்ட பணிக்காக ஒப்பங்கள் கோரப்பட்டு ஒப்ப இறுதி நாளான 13.06.2014 அன்று ஒற்றை ஒப்பம் (e-tender) மூலமாக பெறப்பட்டன. ஒற்றை ஒப்பந்ததாரின் தொழில்நுட்ப ஆவணங்கள் (Technical Bid) 13.06.2014 அன்று திறக்கப்பட்டு, ஒப்ப முன்தகுதி நிபந்தனைகள் பூர்த்தி செய்துள்ளமையால் இவரின் விலைப்புள்ளி ஒப்பங்கள் (Price Bid) 23.06.2014 அன்று திறக்கப்பட்டன. இதில் குறைந்த ஒப்பந்ததாரராக திரு. P.திருமூர்த்தி அவர்களின் ஒப்பத் தொகை 2013-2014ஆம் ஆண்டின் இவ்வலுவலக பணி மதிப்பீட்டுத் தொகையான ரூ.6,15,40,142.00 யைவிட (+)4.98% அதிகமாகும். இதன்படி ஒப்பந்ததாரர் அளித்துள்ள ஒப்பத்தொகை ரூ.6,46,05,302/- ஆகும். எனவே, 26.06.2014 அன்று நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைக்குபின் ஒப்பந்ததாரர் தன்னுடைய ஒப்ப விழுக்காட்டை (+)4.95% ஆக குறைக்க சம்மதம் தெரிவித்துள்ளார். மேலும் 30.06.2014 அன்று நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைக்குபின் ஒப்பந்ததாரர் தன்னுடைய ஒப்ப விழுக்காட்டை (+)4.88% ஆக குறைக்க சம்மதம் தெரிவித்து இதற்கு மேல் ஒப்ப விழுக்காட்டை குறைக்க இயலாது என கூறியுள்ளார். இதன்படி ஒப்பந்ததாரர் அளித்துள்ள இறுதி ஒப்பத்தொகை ரூ.6,45,42,862/- ஆகும்.

| | |
|---|---|
| ஒப்பந்தாரரின் இறுதி ஒப்பத்தொகை | ரூ.6,45,42,862.00 |
| ஒப்பந்ததாரரின் இறுதி ஒப்ப சதவீதம் 2013-2014 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி | (+) 4.88% அதிகம் |
| The Hindu (Habitat) dated.31.05.2014 ஒப்பிடுகையில் ஒப்பந்ததாரர் ஒப்ப சதவீதம் | (-) 10.36% குறைவு |

மேலும், மேலே குறிப்பிட்டுள்ளவாறு .07.2014 அன்று ஒப்ப கூர்ந்தாய்வுக் குழுவில் (TENDER SCRUTINY COMMITTEE) மேற்கண்ட பணிக்காக ரூ.6,45,42,862/-க்கான ஒப்பத்தை ஏற்று இவ்வொப்பப்பணியை திரு. P.திருமூர்த்தி அவர்களுக்கு வழங்கலாம் என பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

எனவே, ஒற்றை ஒப்பந்ததாரரான திரு. P.திருமூர்த்தி அவர்களின் ரூ.6,45,42,862/- (ரூபாய் ஆறு கோடியே நாற்பத்தைந்து இலட்சத்து நாற்பத்து இரண்டாயிரத்து என்னூற்று அறுபத்து இரண்டு மட்டும்)க்கான ஒப்பத்தை ஏற்று இவ்வொப்பப்பணியை திரு. P.திருமூர்த்தி அவர்களுக்கு அளிக்க சென்னை மாநகர முனிசிபல் சட்டம் விதி 1919 ல் விதி 80(2) ன்படி நிலைக்குழுக்கள் (பணிகள்) மற்றும் (வரிவிதிப்பு (ம) நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் **18.07.2014** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **28.07.2014** அன்று தீர்மான எண்.**342/2014**–ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் **18.07.2014** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **28.07.2014** அன்று தீர்மான எண்.**350/2014**–ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலமாக பெருபான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.''

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**ம.வ.து.ந.க.எண்.இ3/1582/2014**

**முதன்மை செயலாளர் மற்றும் ஆணையாளர் அவர்களின் 23–7–2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.388/2014 **பொருள் எண்.22**

**மதிப்பீடு 2013–14 – கட்டடத்துறை – மண்டலம்–7,வார்டு–87, பாடி எம்.டி.எச். சாலையில் மீன் அங்காடி கட்டும் பணிக்காக – திருவாளர்.தாமஸ் ஜயாதுரை இன்ப்ராஸ்ட்ரக்சர் பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு ஒப்பம் வழங்க அனுமதி வேண்டி.**

| | | | |
|---|---|---|---|
| 1. | பணியின் பெயர் | : | மண்டலம்–7, வார்டு–87, பாடி எம்.டி.எச். சாலையில் மீன் அங்காடி கட்டும் பணி. |
| 2. | மதிப்பீட்டின் எண் குழுவின் மன்றத்தின் தீர்மான எண்/நாள் | : | 2013-14<br>மன்றத் தீர்மான எண்.803/2013 நாள்.27.12.2013 |
| 3. | திட்ட குறியீட்டு எண் | : | gpd;dh; bgwg;gLk;. |
| 4. | மதிப்பீட்டின் தொகை | | ரூ. 1,32,50,000.00 |
| | m) கட்டுமான gzp brytpdk; | : | U. **1,15,16,256.82** |
| | M) Bkyhd Bkw;ghh;it bryt[ | : | U. **11,51,625.68** |
| | n) rpW Bkw;ghh;it bryt[ | : | U. **2,87,906.42** |
| | ஈ) vjph;ghuh bryt[ | : | U}. **2,09,662.31** |
| | உ) தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் பொது நல வாரிய நிதி 0.3% | : | U}. **34,548.77** |
| | C) kpd;rhuk; / kw;wgpw ndA;fs; | : | U}. **50,000.00** |
| | **bkhj;jk;** | : | ரூ. 1,32,50,000.00 |
| 5. | எந்தெந்த பத்திரிக்கையில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டது / நாள் | : | 1. சென்னை மாநகராட்சி செய்தி மலர் நாள்.02.01.2014.<br>**2.** இந்தியன் எக்ஸ்பிரஸ் ஆங்கில நாளிதழ் நாள். **03**.01.2014 |
| 6. | ஒப்பப்படிவம் பெற குறிக்கப்பட்ட இறுதி நாள் | : | 22.01.2014 |
| 7. | ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்வதற்கான கடைசி நாள் | : | 24.01.2014 |
| 8. | ஒப்பம் செய்தித்தாள்களில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து ஒப்பம் பெறுவதற்கு குறைந்தது 15 நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதா? இல்லை எனில் உரிய அலுவலரின் ஒப்புதல் பெற்ற விவரம் குறிப்பிடவும் | : | ஆம் ஒதுக்கப்பட்டுள்ளது |
| 9. | எத்தனை ஒப்பங்கள் விற்பனை செய்யப்பட்டன? | : | |
| 10. | எத்தனை ஒப்பங்கள் பெறப்பட்டன? | : | இரண்டு (இணையத்தளத்தின் மூலம் ஒப்பப்படிவம் பெறப்பட்டுள்ளது). |

11. ஒப்பத்தில் பங்கேற்றவர் விவரம்

| வ. எண். | ஒப்பத்தில் பங்கேற்றவர் பெயர்கள் திரு / திருவாளர்கள் | பணியின் அலுவலக மதிப்பு (ரூ.) | ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை (ரூ.) | 2013-2014 ஆம் ஆண்டின் விலைவிகிதம் விழுக்காடு அதிகம்/குறைவு |
|---|---|---|---|---|
| 1 | திரு.T.ராமசாமி | 1,15,16,256.82 | 1,20,90,918.06 | (+) 4.99 % அதிகம் |
| 2 | திருவாளர்.தாமஸ் ஐயாதுரை இன்ப்ராஸ்ட்ரக்சர் பிரைவேட் லிமிடெட் | 1,15,16,256.82 | 1,11,63,859.36 | (-) 3.06 % குறைவு |

12. குறைந்த ஒப்பம் அளித்தவருடன் பேச்சுவார்த்தை தேவையா? ஆம் எனில் நடத்தப்பட்ட நாள் : இல்லை

13. பேச்சு வார்த்தைக்குப்பின் /ஒப்பத் தொகை/ ஒப்ப சரவீதம் . : ரூ.1,11,63,859.36 (-)3.60 % குறைவு 2013-2014 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி

14. குறைந்த ஒப்ப சதவீதம் அளித்த ஒப்பந்ததாரரின் பதவியின் பதிவு நாள் . : வகுப்பு –1 நாள்;.25.10.2013

15. கூடுதல் பிணை வைப்புத்தொகை செலுத்தப்பட்ட விவரம் : இல்லை

16. பணிக்கான நிதி ஆதாரம் அ) வரவு செலவு திட்ட தலைப்பு : மூலதன நிதி–கட்டடத்துறை 2013-2014

17. ஒப்பந்தப்புள்ளி செல்லத்தக்க காலம் . : 21.10.2014

மேற்கண்ட பணிக்காக ஒப்பங்கள் கோரப்பட்டு ஒப்ப இறுதி நாளான 24.01.2014 அன்று இரண்டு ஒப்பங்கள் பெறப்பட்டன. இவற்றில் குறைந்த ஒப்ந்ததாரரான திருவாளர்.தாமஸ் ஐயாதுரை இன்ப்ராஸ்ட்ரக்சர் பிரைவேட் லிமிடெட் அவர்களின் ஒப்பத்தொகை 2013-2014ஆம் ஆண்டின் இவ்வலுவலக பணி மதிப்பீட்டுத் தொகையான ரூ.1,15,16,256.82யைவிட (-) 3.60% குறைவு ஆகும். இதன்படி இவரது ஒப்பத்தொகை ரூ.1,11,63,859.36ஆகும்.

| | |
|---|---|
| ஒப்பந்தாரரின் இறுதி ஒப்பத்தொகை | ரூ.1,11,63,859.36 |
| ஒப்பந்ததாரரின் இறுதி ஒப்ப சதவீதம் 2013-2014 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி | (-) 3.60 % குறைவு |

மேலும், மேலே குறிப்பிட்டுள்ளவாறு 12.06.2014அன்று ஒப்ப கூர்ந்தாய்வுக் குழுவில் (TENDER SCRUTINY COMMITTEE) மேற்கண்ட பணிக்காக ரூ.1,11,63,859.36க்கான ஒப்பத்தை ஏற்று இவ்வொப்பப்பணியை திருவாளர்.தாமஸ் ஐயாதுரை இன்ப்ராஸ்ட்ரக்சர் பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு வழங்கலாம் என பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

எனவே, குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர்.தாமஸ் ஐயாதுரை இன்ப்ராஸ்ட்ரக்சர் பிரைவேட் லிமிடெட் அவர்களின் ரூ.1,11,63,859.36 (ரூபாய் ஒரு கோடியே பதினொறு இலட்சத்து அறுபத்தி மூன்றாயிரத்து எண்ணூற்று ஐம்பத்தொன்பது மற்றும் மூப்பத்தாறு பைசா மட்டும்)க்கான ஒப்பத்தை ஏற்று இவ்வொப்பப்பணியை திருவாளர்.தாமஸ் ஐயாதுரை இன்ப்ராஸ்ட்ரக்சர் பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு அளிக்க சென்னை மாநகர முனிசிபல் சட்டம் விதி 1919 ல் விதி 80(2) ன்படி நிலைக்குழுக்கள் (பணிகள்) மற்றும் (வரிவிதிப்பு (ம) நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் **18.07.2014** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **28.07.2014** அன்று தீர்மான எண்.**348/2014**–ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் **18.07.2014** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **28.07.2014** அன்று தீர்மான எண்.**355/2014**ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலமாக பெருபான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**மி.து. உ.கோ.பொ/ம.9/ந.க.எண்.150/2014**
**முதன்மை செயலாளர் மற்றும் ஆணையாளர் அவர்களின் 22.7.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.389/2014 **பொருள் எண்.23**

**மதிப்பீடு–2013-14 மண்டலம்–9 கோட்டம்–125 மற்றும் 126 - நவீன உலக தரம் வாயந்த சாலை பணிகளுக்கான சாலையில் 87 எண்ணிக்கையில் 8 மீ உயரமுள்ள மின் கம்பம் மற்றும் 150 – 165 வாட்எல்.இ.டி விளக்குகள் மற்றும் 115 எண்ணிக்கையில் 3 மீ உயரமுள்ள மின்கம்பம் மற்றும் 30வாட் வட்ட மாதிரியான எல்.இ.டி விளக்குகள் அமைக்கும் பணிக்கு 2013 - 2014 - ஆம் ஆண்டிற்கான விலைப்பட்டியலின்படி ரூ. 15800500/-,– நிர்வாக அனுமதி**

1. பணியின் பெயர் : 87 எண்ணிக்கையில் 8 மீ உயரமுள்ள மின்கம்பம் மற்றும் 150 – 165 வாட் எல்.இ.டி மற்றும் 115 எண்ணிக்கையில் 3 மீ உயரமுள்ள மின் கம்பம் மற்றும் 30 வாட் வட்ட மாதிரியான எல்.இ.டி விளக்குகள் அமைக்கும் பணி
2. பணியின் இடம் : லுப்பு சாலை, கோட்டம்–125 & 126.
3. மதிப்பீட்டு தொகை: : ரூ. 15800500/-
4. பரிந்தரை செய்தவரின் விவரம் :
5. எந்த துறைக்காக இப்பணி செயலாக்கம் : மின் துறை
6. தொழில் நுட்ப ஒப்புதல் அதிகாரி செயல்முறை ஆணை எண். மற்றும் நாள் : தலைமை பொறியாளர் (பொது), / .3.2014
7. மதிப்பீட்டு எண் : ட/2013–14/35158
8. மதீப்பீடு எந்த வருடத்தின் அட்டவணை விலைப் பட்டியல் முன் வைத்து தயாரிக்கப்பட்டது : 2013 - 2014
9. மதிப்பீட்டு தொகை : ரூ. 15800500/-
   - (அ) பணி செலவீனம் மட்டும் : ரூ. 13391927.90
   - (ஆ) மேலாண மேற்பார்வை செலவு : ரூ. 1339192.79
   - (இ) சிறு மேற்பார்வை செலவு : ரூ. 334798.20
   - (ஈ) இதர செலவு : ரூ. 334405.33
   - (உ) தரகட்டுப்பாடு : ––––
   - (ஊ) மற்றவை : ரூ. 40175.78
   - (எ) மின்சார இணைப்புகளுக்கு : 360000.00
   - மதீப்பீட்டின் மொத்த தொகை : ரூ. 15800500/-
10. கம்பங்களின் எண்ணிக்கை மற்றும் அளவு : 87 எண்ணிக்கையில் 8 மீ உயரமுள்ள மின்கம்பம்
11. எல்.இ.டி விளக்குகளின் எண்ணிக்கை மற்றும் வாட் : - 87 எண்ணிக்கையில் புதிய 150 வாட்–165 வாட் மற்றும் 115 எண்ணிக்கையில் புதிய 30 வாட் வட்ட மாதிரியான எல்.இ.டி விளக்குகள்
12. பில்லர் பாக்ஸ் எண்ணிக்கை : 4 எண்ணிக்கை
13. மின் கம்பியின் அளவு மற்றும் நீளம் : 4x25 ச.மி.மீ, 4948மீ
    31/2x120 ச.மி.மீ, 128 மீ
    2x10 ச.மி.மீ, 2158மீ

14. திரும்ப பெறப்படும் பொருட்கள்

அ) கம்பங்களின் எண்ணிக்கை மற்றும் அளவு : **112** எண்ணிக்கையில் **9.5**மீ உயரமுள்ளமின்கம்பங்கள்

ஆ) விளக்குகளின் எண்ணிக்கை ( சோடியம்/ குழல் விளக்கு ) : **250** வாட் சோடியம் விளக்கு **20** எண்ணிக்கை

இ) மின் கம்பியின் அளவு மற்றும் நீளம் : 4x25 ச.மி.மீ, **152** மீ

ஈ) இதர பொருட்களின் விவரம் :

15. மதிப்பீட்டிற்கு ஒப்புதல் அளித்த குழுவின் பெயர் :

16. நிதியின் மூலத்தன்மை மூலதனநிதி, மின்துறை

அ) வரவு செலவு ஒதுக்கீடு :

ஆ) மதீப்பீடுகளுக்கு இதுவரை ஒதுக்கப்பட்ட நிதி :

இ) மீதமுள்ள நிதி :

ஈ) இக்கோப்பில் குறிப்பிட்ட பணிக்கு தேவைப்படும் நிதி : **15800500/–**

மேற்குறிப்பிட்டுள்ள பணிக்கு தயாரிக்கப்பட்டுள்ள ரூ. **15800500**/- (ரூபாய். ஒரு கோடியே ஐம்பத்தி எட்டு இலட்சத்து ஐநூறு மட்டும்) க்கான மதிப்பீட்டிற்கு சென்னை மாநகராட்சி சட்ட **1919** விதி- 78ன்படி மாமன்றத்தின் நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் **18.07.2014** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **28.07.2014** அன்று தீர்மான எண்.**347/2014–**ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் **18.07.2014** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **28.07.2014** அன்று தீர்மான எண்.**354/2014–**ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலமாக பெருபான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**செ.மா.வ.வ.அ.ந.க.எண். அ1/444/2014**
**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 17.07.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.390/2014 **பொருள் எண்.24**

**வயது முதிர்வு ஓய்வு பின்னேற்பு அனுமதி**

திரு.எஸ்.மனோகரன், செயற் பொறியாளர், வடக்கு துணை ஆணையர் (வடக்கு) அலுவலகம், அவர்கள் வயது முதிர்வு காரணமாக 31.03.2014 அன்று ஓய்வு பெற்றார்.

திரு. எஸ். மனோகரன் அவர்கள் சென்னை மாநகராட்சியில் ஓவர்சியராக 21.09.1978 அன்று பணியில் சேர்ந்துள்ளார். தற்போது செயற் பொறியாளராக பதவி உயர்வு பெற்று 28.06.2013 முதல் வட்டார துணை ஆணையர் (வடக்கு) அலுவலகத்தில் பணிபுரிந்து வருகிறார்.

மேலும் தனியர் சென்னை மாநகராட்சியில் பணிபுரிந்த கீழ்க்குறிப்பிட்ட அனைத்து துறை மண்டலங்களிலிருந்து தனியரை பொறுப்பாக்கும் தணிக்கைத் தடை மற்றும் முன்பணங்கள் / அலுவலக முன்பணங்கள் நேர்செய்யப்படாத விவரங்கள் மற்றும் ஒழுங்கு நடவடிக்கைகள் ஏதும் நிலுவையில் இல்லை என சான்றுகள் பெறப்பட்டுள்ளது.

| வ.எண் | பதவி | மண்டலம் / துறை | பணியாற்றிய காலம் | |
|---|---|---|---|---|
| | | | முதல் | வரை |
| 01 | ஓவர்சீயர் | மாவட்ட அலுவலகம் (தெற்கு) | 21.09.1978 | 31.12.1978 |
| | | Ousted from Service | 01.01.1979 | 1503.1979 |
| 02 | வரைவாளர் | மழைநீர் வடிகால் | 16.03.1979 | 17.01.1985 |
| 03 | இளநிலை பொறியாளர் | மாவட்ட அலுவலகம் (தெற்கு) | 17.01.1985 | 14.12.1985 |
| 04 | வரைவாளர் | மழைநீர் வடிகால் | 14.12.1985 | 18.12.1987 |
| 05 | வரைவாளர் | மாவட்ட அலுவலகம் (வடக்கு) | 18.12.1987 | 14.10.1988 |
| 06 | வரைவாளர் | பழைய மண்டலம் 2 (அயனாவரம்) | 14.10.1988 | 31.07.1989 |
| 07 | இளநிலை பொறியாளர் | கட்டடத்துறை | 31.07.1989 | 18.07.1994 |
| 08 | உதவி பொறியாளர் | பழைய மண்டலம் 4 (அயனாவரம்) | 18.07.1994 | 06.01.2003 |
| 09 | உதவி பொறியாளர் | இயந்திரம் துறை | 06.01.2003 | 08.08.2003 |
| 10 | உதவி பொறியாளர் | பழைய மண்டலம் 4 (அயனாவரம்) | 08.08.2003 | 05.11.2003 |
| 11 | உதவி செயற் பொறியாளர் | பழைய மண்டலம் 7 (நுங்கம்பாக்கம்) | 05.11.2003 | 04.10.2006 |
| 12 | உதவி செயற் பொறியாளர் | பழைய மண்டலம் 5 (கீழ்பாக்கம்) | 04.10.2006 | 03.08.2007 |
| 13 | உதவி செயற் பொறியளர் | பழைய மண்டலம் 4 (அயனாவரம்) | 03.08.2007 | 25.03.2008 |
| 14 | உதவி செயற் பொறியளர் | மழைநீர் வடிகால் துறை | 25.03.2008 | 11.01.2013 |
| 15 | செயற் பொறியாளர் | புதிய மண்டலம் 9 | 11.01.2013 | 28.06.2013 |
| 16 | செயற் பொறியாளர் | வடக்கு வட்டார அலுவலகம் | 28.06.2013 | இன்று வரை |

திரு. எஸ். மனோகரன், செயற் பொறியாளர், அவர்கள் மீது இன்றைய தேதியில் சென்னை மாநகராட்சி விழிப்பு குழுமத்தில் விசாரணைகள் ஏதும் நிலுவையில் இல்லை என அறிக்கை பெறப்பட்டுள்ளது. தனியர் மீது துறை சார்ந்த ஒழுங்கு நடவடிக்கைகளோ அல்லது விசாரணைகளோ நிலுவை ஏதும் இல்லை எனத் தெரிவித்து கொள்ளப்படுகிறது. தனியர் சென்னை மாநகராட்சி அலுவலர் கூட்டுறவு சங்கத்திற்கு செலுத்த வேண்டிய நிலுவை தொகை ஏதும் இல்லை என அறிக்கை பெறப்பட்டுள்ளது.

மேலும், நிதி ஆலோசகர் அவர்களின் குறிப்பில் திரு. எஸ். மனோகரன், செயற் பொறியாளர், வட்டார துணை ஆணையர் (வடக்கு) அவர்கள் உதவி பொறியாளர், உதவி செயற்பொறியாளர் மற்றும் செயற் பொறியாளராக பணியாற்றிய அனைத்து துறைகள் மற்றும் மண்டலங்களின் தணிக்கை குறிப்பு, தணிக்கை அறிக்கை குறித்த பத்திகள் கூட்டுப் பொறுப்பானவை அல்லது தனிப் பொறுப்பானவை தனியரையே சாரும். இவ்வலுவலகத்தில் உள்ள உள்ளாட்சி நிதித் தணிக்கை அறிக்கையின்படி மொத்தம் ரூ.**11,66,949/–** உள்ளாட்சி **4** தணிக்கைத் தடைகள் கூட்டுப்பொறுப்பு உள்ளதாக தெரிய வருகிறது எனவும், மேலும், **2011–12, 2012–13** மற்றும் **2013–14** ஆண்டுகளில் தணிக்கை அறிக்கைகள் வெளியிடப்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது

தனியர் வகித்துவரும் செயற்பொறியாளர் பதவி வகுப்பு **–2**ன் கீழ்வருவதால் இப்பதவியில் உள்ளவர்களை வயது முதிர்வு ஒய்வுல் செல்ல அனுமதிக்கும் அதிகாரம் மாமன்றத்திற்கு உள்ளது. தற்போது **2014**ஆம் ஆண்டிற்கான நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ளதை முன்னிட்டு மன்ற கூட்டம் நடைபெற வாய்ப்பில்லாததால் மன்றத்தின் பின்னேற்பு ஆணைக்குட்பட்டு தனியரை **31.03.2014** பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்கப்பட வேண்டும்.

**28.03.2014** நாளிட்ட முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணையின்படி திரு. எஸ். மனோகரன், செயற் பொறியாளர் வட்டார துணை ஆணையர் (வடக்கு) அலுவலகம் அவர்களை மன்றத்தின் பின்னேற்புக்குட்பட்டு **31.03.2014** பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதித்து ஆணைபிறப்பிக்கப்பட்டது.

எனவே, மன்றத்தின் பின்னேற்புக்குட்பட்டு **31.03.2014** நாளிட்ட செயல்முறை ஆணை மூலமாக தனியரை **31.03.2014** அன்று பிற்பகல் முதல் சென்னை மாநகராட்சி பணியிலிருந்து வயது முதிர்வு ஓய்வு பெற அனுமதித்ததற்கு நியமனக்குழு மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“ இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”

“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது”

*******

**ம.அ.8.ந.க.எண்.அ1/1605/2014**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 24.06.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.391/2014 **பொருள் எண்.25**

**வயது முதிர்வு ஓய்வு பின்னேற்பு அனுமதி**

12.12.2012 நாளிட்ட சுற்றறிக்கையின்படி, திரு.ஜி.செல்வரங்கன், உதவி செயற்பொறியாளர், மண்டலம்–8 அவர்கள் 31/03/2014 அன்று வயது முதிர்வு ஓய்வு பெற்றார். இவர் சென்னை மாநகராட்சியில் 29.03.1977 அன்று உதவி மேற்பார்வையாளராக பணியில் சேர்ந்தார். 15.05.2013 முதல் உதவி செயற்பொறியாளராக பதவி உயர்வு பெற்று பணிபுரிந்து வந்தார். இவரின் மொத்தப்பணிகாலம் 37வருடம் 3 நாட்கள் ஆகும்.

தனியரின் பிறந்ததேதி 31.03.1956 ஆகையால் 31/03/2014 அன்று பிற்பகல் 58 வயது நிறைவு பெற்றதையொட்டி 31/03/2014 முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

சென்னை மாநகராட்சி விழிப்பு குழுமத்தில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என சான்று அளிக்கப்பட்டுள்ளது. தனியர் மீது துறைசார்ந்த ஒழுங்கு நடவடிக்கைகளோ அல்லது விசாரணைகளோ ஏதுமில்லையென தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. தனியர் மீது சென்னை மாநகராட்சி அலுவலர் கூட்டுறவு சங்கத்தில் கடன் தொகை நிலுவை இல்லையென அறிக்கை பெறப்பட்டுள்ளது. தனியர் பணிபுரிந்த துறை/மண்டலங்கள் விவரம் பின்வருமாறு:

| வ. எண். | பதவி | மண்டலம் / துறை | பணியாற்றிய காலம் | |
|---|---|---|---|---|
| | | | முதல் | வரை |
| 01 | உதவிமேற்பார்வையாளர் | இயந்திர பொறியியல்துறை | 29.03.1977 | 30.06.1979 |
| 02 | இளநிலைபொறியாளர் | இயந்திர பொறியியல்துறை | 01.07.1979 | 16.08.1993 |
| 03 | இளநிலை பொறியாளர் | கட்டடத்துறை | 17.08.1993 | 09.05.1994 |
| 04 | இளநிலை பொறியாளர் | மண்டலம்–4 (பழைய மண்டலம்–1) | 10.05.1994 | 30.09.2009 |
| 05 | இளநிலை பொறியாளர் | கட்டடத்துறை | 01.10.2009 | 16.02.2012 |
| 06 | இளநிலை பொறியாளர் | மண்டலம்–8 | 17.02.2012 | 14.05.2013 |
| 07 | உதவி செயற்பொறியாளர் | மண்டலம்–8 | 15.05.2013 | 31.03.2014 |

இவற்றில் தனியர் சென்னை மாநகராட்சியில் பணிபுரிந்த அனைத்து துறைகளிலும் தனியரை பொறுப்பாக்கும் தணிக்கைத் தடை மற்றும் முன்பணங்கள்/அலுவலக முன்பணங்கள் நேர்செய்யப்படாத விவரங்கள் ஆகியவை குறித்து தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டதில், மண்டலம்–4ல் (பழைய மண்டலம்–1) பணிபுரிந்த காலங்களில் கூட்டுப் பொறுப்பில் தணிக்கைத் தடைகள் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி தனியரை தனிபொறுப்பு/கூட்டுப் பொறுப்பில் பொறுப்பாக்கும் தணிக்கைத் தடை எண் மற்றும் அதன் விவரம் கீழ்க்கண்டவாறு அட்டவணைப்படுத்தப்படுகிறது.

| **வ. எண்** | **தணிக்கைக் காலம்** | **தணிக்கைத் தடை எண்** | **சுட்டிக் காட்டப்பட்டுள்ள இழப்பீடு தொகை ரூ.** | **பொறுப்பு அலுவலர்களின் எண்ணிக்கை** | **தனியரை பொறுப்பாக்கும் தொகை ரூ.** |
|---|---|---|---|---|---|
| 01 | 2004–05 | 22 | 5687 | 2 நபர்கள் | 2844 |
| 02 | 2008–09 | 33 | 9626 | 3 நபர்கள் | 3209 |
| 03 | 2008–09 | 34 | 49805 | 4 நபர்கள் | 12451 |
| 04 | 2008–09 | 36 | 14388 | 2 நபர்கள் | 7194 |
| 05 | 2008–09 | 41 | 20184 | 1 நபர் | 20184 |
| மொத்தம் | | | | | 45,882 |

மேற்குறிப்பிட்ட அட்டவணையின்படி தனியரை தனிபொறுப்பு/கூட்டுப் பொறுப்பில் பொறுப்பாக்கியுள்ள தணிக்கைத் தடைகளின் அடிப்படையில் தனியரை பொறுப்பாக்கும் தொகை ரூ.45,882/—(நாற்பத்தைந்தாயிரத்து எண்ணூற்றி எண்பத்தி இரண்டு மட்டும்)என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

தனியர் மீது துறை சார்ந்த ஒழுங்கு நடவடிக்கைகளோ அல்லது விசாரணைகளோ நிலுவை எதுவும் இல்லையெனவும் தனியரை பொறுப்பாக்கும் மேற்கண்ட தணிக்கைத் தடைகளை தவிர வேறு ஏதும் நிலுவையில் இல்லையென தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

திரு. ஜி. செல்வரங்கன், உதவி செயற்பொறியாளர், அவர்கள் வகிக்கும் பதவியானது சென்னை மாநகராட்சியில் வகுப்பு 2ன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளதால் தனியரை வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்கும் அதிகாரம் மன்றத்திற்கு உள்ளது. மேலும் 2014ஆம் ஆண்டிற்கான நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்றதை முன்னிட்டு மன்ற கூட்டம் ஒத்திவைக்கப்பட்டதால் மன்றத்தின் பின்னேற்பு ஆணைக்குட்பட்டு தனியரை 31.03.2014 பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

திரு. ஜி. செல்வரங்கன், உதவி செயற்பொறியாளர், மண்டலம்—8 அவர்கள்மீது உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையினரால் தெரிவிக்கப்பட்ட தணிக்கைத் தடைகளில் தனியரை பொறுப்பாக்கும் பங்கு ரூ.45,882/—மற்றும் தனியரை பொறுப்பாக்கும் தணிக்கைத் தடைகள் மூலம் ஏற்படும் நிதி இழப்பீடு ஆகியவைகளுக்கு தனியர் பொறுப்பாகிறார் என்பது பின்னர் தெரியவரின், அத்தொகைகளை தனியரின் பணிக்கொடை மற்றும் ஓய்வூதிய அகவிலைபடியிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்படுத்தியும், மன்றத்தின் பின்னேற்பிற்கு உட்பட்டும் 31.03.2014 பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்க ஆணை பெற கோப்பு சமர்ப்பிக்கப்பட்டதில் 28.03.2014 நாளிட்ட நிதி ஆலோசகர் அவர்களின் குறிப்பில் பொதுத்துறை சுற்றறிக்கை ந.க.எண்.பி13/46684/2012 நாள் 28.02.2013 (ம) 09.10.2013ன்படி வகுப்பு 1எ முதல் 2ம் நிலை அலுவலர்கள் (ம) 3ம் நிலையில் பணப்பொறுப்புள்ள பணியில் உள்ள அலுவலர்கள் ஓய்வு பெறுவதை அனுமதிக்க வேண்டுமெனில், அவர்களை பொறுப்பாக்கும் நிதி இழப்பீடு பணிக்கொடைத் தொகையைவிட அதிகமாக இருப்பின் தொகையை தனியருக்கு தெரிவித்து அத்தொகையை கருவூலகத்தில் செலுத்த நடவடிக்கை எடுக்க கோரலாம், அவ்வாறு இல்லாத நிலையில் சம்மந்தப்பட்ட அலுவலரை ஓய்வு பெறும் விதிகளின்படி அனுமதிக்க கூடாது. இந்த நடவடிக்கை எடுப்பது அந்தந்த துறைத் தலைவரையே சாரும் எனக்குறிப்பிடப்பட்டுள்ளது.

தனியர் இளநிலை பொறியாளர் மற்றும் உதவி செயற் பொறியாளராக பணியாற்றிய அனைத்து துறைகள் மற்றும் மண்டலங்களின் தணிக்கை குறிப்பு, தணிக்கை அறிக்கை குறித்த பத்திகள் கூட்டுப் பொறுப்பானவை அல்லது தனிப் பொறுப்பானவை தனியரையே சாரும். இவ்வலுவலகத்தில் உள்ள உள்ளாட்சி நிதித் தணிக்கை அறிக்கைகளின்படி கீழ்கண்ட விவரப்படி மொத்தம் ரூ.2,97,995/— உள்ளடங்க்கிய 8 தணிக்கைத் தடைகள் கூட்டுப்பொறுப்பு உள்ளதாக தெரிய வருகிறது மேலும் 2011—12,2012—13 மற்றும் 2013—14 தணிக்கை அறிக்கைகள் வெளியிடப்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வ. எண். | மண்டலம்/துறை | ஆண்டு | பத்திகள் | இழப்புத் தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | மண்டலம்-1 | 2004-2005 | 22<br>29<br>30 | 5687<br>15308<br>8140 |
| 2 | மண்டலம்-1 | 2008-2009 | 34<br>35<br>36<br>41 | 49805<br>5014<br>14388<br>20184 |
| 3 | மண்டலம்-1 | 2009-2010 | 45 | 179469 |
| மொத்தம் | | | | 2,97,995/- |

திரு. ஜி. செல்வரங்கன், உதவி செயற்பொறியாளர், மண்டலம்–8 அவர்கள் மீது கூட்டு பொறுப்பில் உள்ள தணிக்கை தடைகள், ரூ.2,97,995/– மற்றும் தனிபொறுப்பில் உள்ள ரூ.45,882/– மற்றும் நேர்செய்யப்படாத முன்பணங்கள் மற்றும் மாநகராட்சிக்கு நிதி இழப்பீடு ஏதேனும் இருப்பது பின்னர் தெரியவரும் பட்சத்தில் தணிக்கை தடைகள் நீக்கம் செய்யப்படாத நிலையில் அவற்றிற்கு தனியரை முழுபொறுப்பாக்கி தனியருக்கு வழங்கப்படும் பணிக்கொடை மற்றும் ஓய்வூதிய அகவிலைபடியிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்படுத்தியும் மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டும் திரு. ஜி.செல்வரங்கன், உதவி செயற்பொறியாளர், மண்டலம்–8 அவர்களை 31.03.2014 பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல 28.03.2014 நாளிட்ட முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் செயல் முறை ஆணையின்படி பணியிலிருந்து விடுவிக்கப்பட்டார்.

எனவே திரு. ஜி. செல்வரங்கன், உதவி செயற்பொறியாளர், மண்டலம்–8 அவர்களை 31.03.2014 பிற்பகல் முதல் மன்றத்தின் பின்னேற்புக்குட்பட்டு வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்கப்பட்டதற்கு நியமனக்குழு மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டப்படுகிறது.

“ இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”

“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது”

*******

**<u>ம.க.கு.ந.க.எண்.அ2/ 2475/2013</u>**

**<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 15.07.2014 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.392/2014 **பொருள் எண்.26**

**<u>பணியமைப்பு</u>**

15.07.2013 அரசாணையின்படி திருமதி. ஏ.ஆர்.ராஜலட்சுமி, இணை இயக்குநர், கருவூலம் மற்றும் கணக்கு துறை அவர்கள் நகராட்சி நிதி அலுவலராக சென்னை மாநகராட்சியில் 01.08.2013ல் பணி பொறுப்பேற்றார். இவர் தனது பணிகளுடன் தலைமை கணக்கு அலுவலர் (வரவு மற்றும் செலவு) பணிகளையும் கவனித்து வருகிறார்.

சென்னை மாநகராட்சியைப் பொறுத்தமட்டில் நகராட்சி நிதி அலுவலர் பதவி இல்லை என்ற போதிலும், அரசாணையில் நகராட்சி நிதி அலுவலர் எனக்குறிப்பிட்டு பணி நியமனம் செய்யப்பட்டிருப்பதாலும், JNNURM திட்டத்தில் இப்பணியிடம் இடம் பெற்றிருப்பதினாலும் திருமதி.A.R.இராஜலட்சுமி, இணை இயக்குநர், கருவூலம் மற்றும் கணக்கு துறை அவர்கள் அயற்பணியில் சென்னை மாநகராட்சியில் நகராட்சி நிதி அலுவலராக பணியேற்க அனுமதிக்கப்பட்டுள்ளார். சென்னை மாநகராட்சியில் JNNURM திட்டம் 31.03.2014 உடன் முடிவடையும் என 09.12.2013 மற்றும் 03.05.2013 ஆகிய கடிதங்களின் வாயிலாக அறியவருகிறது.

சென்னை மாநராட்சியில் தலைமை கணக்கு அலுவலர்களுக்கு அடுத்த நிலையில் நிதி ஆலோசகர் (இணை செயலாளர் நிலையில்) என்ற ஒரு பதவி மட்டுமே அனைத்து மாநகராட்சி நிதி தொடர்பான பணிகளை கண்காணிக்க இருந்துவருவதால், தலைமை கணக்கு அலுவலர் பதவிக்கு அடுத்த நிலையிலும் நிதி ஆலோசகர் பதவிக்கு முந்தையை நிலையிலும் இப்பதவியினை கணக்கு கருவூலத் துறையிலிருந்து பட்டய கணக்காளர் (Charted Accountant Professional) பெற்ற நபர்களால் இணை இயக்குநர் நிலையில் நகராட்சி நிதி அலுவலர் என்ற பதவி ஏற்படுத்தினால் பதினைந்து மண்டலங்களாக விரிவாக்கம் செய்யப்பட்ட சென்னை மாநகராட்சியின் நிதி நிர்வாக கண்காணிப்பிற்கு ஏற்றதாகவும், ஏனைய கணக்குகள், வரவு செலவு திட்ட மதிப்பீடுகள், கடன்கள் திரட்டுவதற்கும் மற்றும் நிதிநிலைகளை சீராய்வு செய்வதற்கும் உகந்ததாக அமையும் என கருதப்படுகிறது. மேலும் நிதி ஆலோசகரின் விடுப்பு காலங்களில் நிதி நிர்வாகத்தை மேற்கொள்வதற்கு இணை இயக்குநர் நிலையில் பதவியினை உருவாக்குவது சென்னை மாநகராட்சியின் நிர்வாகத்திற்கு இன்றியமையாத ஒன்றாக கருதப்படுகின்றது.

இப்பணியினை JNNURM திட்டத்தின் கீழ் மார்ச் 2014க்கு பின்பு தொடரும் பட்சத்தில் அத்திட்டத்தின் கீழ் இப்பணியினை நீட்டிப்பு வழங்க கருதப்பட்டு மன்றத் தீர்மான எண்.87/2014 ,நாள்:24.01.2014 மூலம் தொடர அனுமதிக்கப்பட்டு அரசுக்கு பிரேரணை 21.02.2014 நாளில் அனுப்பப்பட்டது. ஆனால் JNNURM திட்டத்தில் தொடருவதற்கு BSUP மூலக்கூறு தவிர ஏனைய திட்டங்கள் எதுவும் தொடரப்படவில்லை என கருதப்படுகின்றது. 14.03.2014 நாளிட்ட குறிப்பில் மழைநீர் வடிகால் துறையில் JNNURM திட்டம் 31.03,2014க்கு பிறகு குறைந்தபட்சம் ஆறு மாதத்திற்கு தொடரலாம் என கண்காணிப்பு பொறியாளர் அவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் JNNURM திட்டத்தின் கீழ் இப்பதவியினை நீட்டிப்பு வழங்குவதற்கு வாய்ப்புகள் இல்லை.

எனவே, சென்னை மாநகராட்சியில் தலைமை கணக்கு அலுவலர்களுக்கு என ஒப்பளிக்கப்பட்ட 6 பணியிடங்களில், 1 பதவியினை நகராட்சி நிதி அலுவலர் பதவியாக பணிநிலை (Up Grade) உயர்த்தி, இணை இயக்குநர் நிலையில் ரூ.15,600–39100 என்ற ஊதியக்கட்டில் ரூ,7,600/– தர ஊதியம் அடிப்படையில் நகராட்சி நிதி அலுவலர் (Municipal Finance Officer) என்ற பதவியினை சென்னை மாநகராட்சியில் உருவாக்கலாம். இந்த பணியிடத்தினை பணிநிலை உயர்த்தப்படுவதால் கூடுதலாக தர ஊதியமாக மாதம் ரூ.1000 மற்றும் அதற்கான அகவிலைப்படி மட்டும் (Grade Pay Difference -7600-6600=ரூ.1000/-) இப்பதவிக்கு பணப்பயன் ஏற்படும். இதனால் ஆண்டொன்றுக்கு ரூ.22800/–(ரூபாய் இருபத்தி ரெண்டாயிரத்து எண்ணூறு மட்டும்) கூடுதலாக மாநகராட்சிக்கு செலவாகும். இதனை மாநகராட்சி நிதியிலிருந்து செலவு செய்யப்படலாம்.

மேலும் **28.02.2013** நாளிட்ட நேர்முக கடிதத்தில் குறிப்பிட்டவாறு **14**வது நிதிக்குழுவின் பரிந்துரை எண்.**78**ன்கீழ் நகர்ப்புற உள்ளாட்சி நிறுவனங்களில் அகில இந்திய நகராட்சி கணக்கு முறை (All India Municipal Accounting) நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதால் தகுதிவாய்ந்த பட்டய கணக்காளர்களால் (Charted Accountant) கணக்கு பிரிவு பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட வேண்டும் என்றும் மேலும் கணக்கு பணிகளில் நியமனம் செய்யும் விதிகளையும் பணிகளுக்கு ஏற்றவாறு அமையப்பெற நடவடிக்கை எடுக்க பரிந்துரைச் செய்யப்பட்டுள்ளது. மேற்காணும் **14**வது நிதிக்குழுவின் பரிந்துரைக்கு ஏற்றவாறு சென்னை மாநகராட்சியில் அகில இந்திய நகராட்சி கணக்கு முறை (All India Municipal Accounting) நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. சென்னை மாநகராட்சியின் விரிவாக்கத்திற்கு முன்பாக கணக்கு அலுவலர் நிலையில் மூன்று பட்டய கணக்காளர்கள் (Professional Accountant) பணிபுரிந்து வந்துள்ளனர். தற்போது பட்டய கணக்காளர் ஒருவர் மட்டுமே நகராட்சி நிதி அலுவலர் (Municipal Financial Officer) பணியில் கடந்த ஐந்து ஆண்டுகளாக JNNURM திட்டத்தில் கீழ் தொடர்ந்து பணிபுரிந்து வருகின்றார். தற்போது இந்த திட்டம் தொடர்வது நிறுத்தப்படுவதால், சென்னை மாநகராட்சி விரிவடைந்த நிலையில் நிர்வாக வசதிகளை கருத்தில் கொண்டு நகராட்சி நிதி அலுவலர் பணி தொடர்வதற்கு புதிய பணி இடம் தோற்றுவிப்பது மிகவும் இன்றியமையாததாகிறது.

மேற்கண்ட சூழ்நிலையில் கீழ்கண்ட இனங்களின் மேல் மன்றத்தின் பின்னேற்பு ஆணைக்குட்பட்டு முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் ஆணை பெறப்பட்டது.

எனவே கீழ்கண்டுள்ள **1** முதல் **3** வரை உள்ள இனங்களுக்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டப்படுகிறது.

1. ஏற்கனவே JNNURM திட்டத்தின் கீழ் நகராட்சி நிதி அலுவலர் பதவியினை (Municipal Financial Officer) மார்ச் **2014**க்கு பின்பு தொடர்வதற்கு மன்றத்தின் அனுமதி பெற்று அரசுக்கு அனுப்பப்பட்ட கருத்துருவினை திரும்ப பெறவும்,
2. ஏற்கனவே சென்னை மாநகராட்சிக்கு ஒப்பளிப்பு செய்யப்பட்ட **6** தலைமை கணக்கு அலுவலர் பதவி ஒன்றினை மாநகராட்சி நிதி அலுவலராக (இணை இயக்குநர் நிலையில்) உயர்த்துவதற்கு (upgrade) மன்றத்தின் பின்னேற்பு அனுமதி பெற்று அரசுக்கு தக்க கருத்துரு வேண்டி அனுப்பப்பட்டுள்ள கடிதத்திற்கும்,
3. நிர்வாக நலன்கருதி திருமதி. A.R. இராஜலட்சுமி, இணை இயக்குநர் / நகராட்சி நிதி அலுவலர் அவர்களை **31.03.2014**–க்கு பிறகு நகராட்சி நிதி அலுவலராக, தலைமை கணக்கு அலுவலர் பணியிடத்தில் ஊதியம் பெற்று அரசின் அனுமதி எதிர்நோக்கி பணிபுரிய அனுமதிக்கவும்.

“ இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”

“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது”

*******

**<u>ச.கு.ந.க.எண்.சி1/5899/2013</u>**

**<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 17.07.2014 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.393/2014 **பொருள் எண்.27**

**<u>பணியமைப்பு</u>**

திரு.நா.நாகசுந்தரம், வழக்குரைஞர் அவர்களின் **06.01.2014** நாளிட்ட வணக்கத்திற்குரிய மேயர் அவர்களுக்கு சமர்ப்பித்த மனுவில் தற்சமயம் திருவொற்றியூர், மணலி மற்றும் மாதவரம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்களில் சென்னை மாநகராட்சி எதிராக தாக்கல் செய்யும் வழக்குகளை இரண்டு ஆண்டுகளாக மாநகராட்சி சார்பாக தற்காலிகமாக ஆஜராகி வருவதாகவும் தன்னை நிரந்தர நிலை வழக்குரைஞராக நியமனம் செய்ய பரிந்துரை செய்யுமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

தற்போதுள்ள நிலைவழக்குரைஞர்கள் யாரும் மேற்கண்ட மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்களில் ஆஜராக விருப்பம் தெரிவிக்காததால் ஏற்கனவே பணியாற்றி வரும் திரு.நா,நாகசுந்தரம் அவர்களை நியமனம் செய்யலாம்.

எனவே, கீழ்கண்ட இனங்களுக்கு நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

06.01.2014 நாளிட்ட கடிதத்தில் கேட்டுள்ளபடி திரு.நா.நாகசுந்தரம், வழக்குரைஞர் அவர்களை சென்னை மாநகராட்சி நிலை வழக்குரைஞராக அவர்கள் பணி ஏற்கும் நாளிலிருந்து ஓராண்டு காலத்திற்கு விதிமுறைகள் மற்றும் வரையரைகளுக்குட்பட்டு நியமனம் செய்ய நியமனக்குழுவின் மூலம் மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

'' இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது''

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**<u>ச.கு.ந.க.எண்.சி1/3000/2014</u>**
**<u>முதன்மை செயலர்/ஆணையர் அவர்களின் 23.07.2014 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.394/2014 **பொருள் எண்.28**

**<u>சட்டக்குழுமம்– திரு.கே.சௌந்தரராஜன் மற்றும் திரு.ஆர். சூர்யபிரகாஷ், நிலை வழக்குரைஞர்கள் – தொடர் கட்டணம் வழங்க அனுமதி</u>**

திரு.கே.சௌந்தரராஜன் மற்றும் திரு.ஆர்.சூர்யபிரகாஷ், வழக்குரைஞர்களை சென்னை மாநகராட்சி நிலை வழக்குரைஞர்களாக மாதாந்திர தொடர் கட்டணமின்றி தேவைப்படும் போது வழக்குகளுக்கு பயன்படுத்தி கொள்ளவும் நியமனம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து முதன்மை செயலர்/ அவர்களின் செயல்முறை ஆணையின்படி நிலைவழக்குரைஞர்களுக்கு பணியாணை மற்றும் நீதிமன்றங்கள் ஒதுக்கியும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேற்காணும் கடிதங்களில் நிலை வழக்குரைஞர்கள், வணக்கத்திற்குரிய மேயர் அவர்களுக்கு அளித்த மனுவில் மாதாந்திர தொடர் கட்டணம் இல்லாமல் பணிபுரிவதாகவும், மாதாந்திர தொடர் கட்டணம் கிடைக்க வழிவகை செய்யுமாறும், கோரிக்கை வைத்துள்ளார்கள்.

வணக்கத்திற்குரிய மேயர் அவர்களுக்கு திரு.கே.சௌந்தரராஜன் மற்றும் திரு.ஆர்.சூர்யபிரகாஷ், நிலை வழக்குரைஞர்கள் சமர்ப்பித்த மனுவில், கோரியுள்ளவாறு மாதாந்திர தொடர் கட்டணம் வழங்க, நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> ‘‘ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 18.07.2014 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 28.07.2014 அன்று தீர்மான எண்.357/2014ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலமாக பெருபான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.’’

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**பொ.து.ந.க.எண்.ஜி4/9592/2014**
**ஆணையர் (பொறுப்பு )அவர்களின்14.06.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.395/2014 **பொருள் எண்.29**

**பணியமைப்பு**

அரசாணை எண். 55, பணியாளர்கள் (ம) நிர்வாக சீர்திருத்தத்துறை, நாள்.06.06.2002ல் தமிழ்நாடு குடிமைப் பணியாளர்கள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளில் விதி 8, கூறு (3)ல் தமிழ்நாடு அரசு திருத்தம் வெளியிட்டதைத் தொடர்ந்து சென்னை மாநகராட்சிப் பணிகள் (வகைப்பாடு, கட்டுப்பாடு மற்றும் முறையீடு) விதிகள் 1970 மற்றும் சென்னை மாநகராட்சி மூன்றாம் மற்றும் நான்காம் நிலைப் பணியாளர்கள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) துணை விதிகள் 1983ன் ஆகிய விதிகளில் மேற்கண்ட அரசாணையில் தெரிவித்த திருத்தத்தை மேற்கொள்ளவும் அரசுக்கு பிரேரணைகள் அனுப்பவும் 06.03.2007 நாளிட்ட மாமன்ற தீர்மானம் எண். 204/05ல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, உரிய விதி திருத்தம் வேண்டி அரசுக்கு முன்மொழிவுகள் அனுப்பப்பட்டது.

அரசு தன்னுடைய 30.05.2007 நாளிட்ட கடிதத்தில் ஏற்கனவே வெளியிடப்பட்ட அரசாணை நிலை எண்.55, பணியாளர்கள் மற்றும் நிர்வாக சீர்த்திருத்தத் துறை, நாள்.06.06.2002க்கு மீண்டும் விதி திருத்தம் அரசாணை நிலை எண். 113, பணியாளர்கள் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை, நாள்.02.08.2006ல் வெளியிடப்பட்டுள்ளதால், இத்திருத்தத்தை சென்னை மாநகராட்சிப் பணிகள் (வகைப்பாடு, கட்டுப்பாடு மற்றும் முறையீடு) விதிகள் 1970 மற்றும் சென்னை மாநகராட்சி மூன்றாம் மற்றும் நான்காம் நிலைப் பணியாளர்கள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) துணை விதிகள் 1983 ஆகியவற்றில் திருத்தங்கள் மேற்கொள்ள உரிய திருத்திய செயற்குறிப்பு அனுப்புமாறு அரசு 30.05.2007 மற்றும் 18.06.2008 நாளிட்ட கடிதங்களில் கேட்டுக் கொண்டுள்ளது.

09.01.2009 நாளிட்ட அரசு கடிதத்தில் அரசாணை நிலை எண். 113, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை, நாள். 02.08.2006ல் வெளியிடப்பட்டுள்ள விதித் திருத்தத்தினை சென்னை மாநகராட்சி விதிகளில் மேற்கொள்ள மாமன்றத் தீர்மானம் எண்.453/2008, நாள்.27.08.2008ல் பெறப்பட்டு அரசின் ஆணைகள் வேண்டி உரிய பிரேரணைகள் அனுப்பப்படுவதாக மட்டுமே தெரிவிக்கப்பட்டுள்ளது. திருத்தம் உள்ளடக்கிய செயற்குறிப்பு வரவில்லை எனவும், எனவே, அரசாணை நிலை எண். 113, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத்துறை, நாள்.02.08.2006ன் திருத்தத்தோடு உரிய செயற்குறிப்பினை அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொண்டுள்ளது.

அரசு கேட்டுக் கொண்டதற்கிணங்க அரசாணை நிலை எண்.113, பணியாளர்கள் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை, நாள்.02.08.2006 அன்று வெளியிடப்பட்டுள்ள விதி திருத்தத்தினை சென்னை மாநகராட்சி விதிகளில் மேற்கொள்ள மாமன்றத் தீர்மானம் எண். 453/08, நாள்.27.08.2008ல் கீழ்கண்டவாறு பெறப்பட்டு அரசுக்கு ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது.

**AMENDMENT made in Council Resolution 453-08 dt. 27.08.2008.**

In the said Rules, in rule 8, to clause (iii) for the provisos, the following provisos shall be substituted, namely:-

"Provided that the penalty of withholding of increment shall not be imposed on a Government servant if the said penalty cannot be given effect to full while in service.

Provided further that in cases where the penalty of withholding of increment cannot be give effect to fully for any contingency that arose after the penalty of withholding of increment is imposed, the monetary value equivalent to the amount of such increments that cannot be given effect to shall be recovered from the person.

Provided also that in cases of withholding of increment with cumulative effect, the monetary value equivalent to three times the amount of increments ordered to be withheld shall be recovered."

1) சென்னை மாநகராட்சி வகுப்பு 1 மற்றம் 2 பிரிவு அலுவலர்களின் 1970ம் ஆண்டு சென்னை மாநகராட்சிப் பணி (வகைப்பாடு, கட்டுப்பாடு மற்றும் மேல்முறையீடு) விதிகளில் பிரிவு 6 (IV) (b) னையும் அதற்கான விளக்கத்தினையும் நீக்கவும் இவ்விதியில் அரசாணை நிலை எண். 113ல் குறிப்பிட்டுள்ள மேற்கண்ட திருத்தத்தினை சேர்க்கவும்.

2) சென்னை மாநகராட்சி 3 மற்றும் 4ம் நிலை பணியாளர்களின் 1983ம் ஆண்டு (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) துணை விதி 5—ல் உபவிதி (VI)னையும் அதற்கான விளக்கத்தினையும் நீக்கவும், இவ்விதியில் அரசாணை நிலை எண். 113ல் குறிப்பிட்டுள்ள மேற்கண்ட திருத்தத்தினை சேர்க்கவும் , மற்றும்
3) இது குறித்து அரசுக்கு உரிய முன்மொழிவுகள் அனுப்பவும்

இனம்1, 2, 3க்கு மன்றத்தின் அனுமதி நியமனக்குழு மூலமாக ஒப்புதல் பெறப்பட்டது. (தீர்மான எண்.453/2008, பொருள் எண்.47, நாள்.27.08.2008)

இதற்கு 03.12.2013 நாளிட்ட அரசு கடிதத்தில் " Provided that the penalty of withholding of increment shall not be imposed on a Government Servant if the said penalty cannot be given effect to fully while in service." என உள்ள வாக்கியத்தில் Government Servant என்பதை திருத்தி Corporation Servant என மாற்றம் செய்து திருத்தி குறிப்பு அனுப்புமாறு தெரிவிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து ஏற்கனவே பெறப்பட்ட மன்றத்தீர்மானம் எண்.453/2008, பொருள் எண்.47 நாள். 27.08.2008க்கு அரசு கடிதத்தின்படி திருத்திய மன்றத்தீர்மானம் கீழ்கண்ட இனங்களுக்கு வேண்டப்படுகிறது.

1) " Provided that the penalty of withholding of increment shall not be imposed on a Corporation Servant if the said penalty cannot be given effect to fully while in service."
2) இது குறித்து அரசுக்கு திருத்திய முன்மொழிவு அனுப்புவும்,

மேற்கண்ட இனம் 1 மற்றும் 2க்கு நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**<u>மா.கு.ந.(ம).ம.கு.ந.எண்.எப்4/1632/2014</u>**
**<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 21.07.2014 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.396/2014 **பொருள் எண்.30**

**<u>மாவட்ட குடும்ப நலத்துறையின் மண்டல அலுவலர் தெரிவு பட்டியலுக்கு அனுமதி</u>**

சென்னை மாநகராட்சி, மாவட்ட குடும்ப நலத்துறையில் 15 மண்டலங்களுக்கு ஒப்பளிக்கப்பட்ட மண்டல அலுவலர் பணியிடங்கள் மொத்தம் 15 ஆகும்.

இந்த 15 மண்டல அலுவலர் பணியிடங்களில் 2 நபர்களுக்கு மாவட்ட குடும்ப நல மருத்துவ அலுவலர், பதவி உயர்வு அளிக்கப்பட்டதைத் தொடர்ந்தும், 1 நபர் வயது முதிர்வு பணி ஓய்வில் 30.06.2014 அன்று மூன்று மண்டல அலுவலர் காலிப்பணியிடங்களை நிரப்புவதற்கு 01.04.2014 ஐ மைய நாளாக கொண்டு தெரிவுப்பட்டியல் கீழ்கண்டவாறு தயாரிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | பதவி உயர்வுக்கான பதவியின் பெயர் | மண்டல அலுவலர் |
|---|---|---|
| 2 | மைய நாள் | 01.04.2014 |
| 3 | ஊதிய விதிகம் | 15600–39100 தர ஊதியம் 5700 |
| 4 | காலிப்பணியிட மதிப்பீடு Estimate & Vacanies | 1. மொத்த பணியிடம் – 15<br>அ) தற்காலிக பணியிடம் – 0<br>ஆ) நிரந்தர பணியிடம் – 15<br>2. பட்டியல் ஆண்டில் பணியிலிருந்து ஓய்வு பெறுவதால் ஏற்படும் காலிப் பணியிடம் – 1<br>3. மைய நாளன்று உள்ள காலிப்பணியிடம் – 0<br>4. 5 சதவிதம் விடுப்பு காலிப்பணியிடம் – 0<br>5. பட்டியல் ஆண்டில் பதவி உயர்வினால் ஏற்படும் காலிப்பணியிடங்கள் – 2<br>6. பட்டியல் ஆண்டில் புதியதாக தோற்றுவிக்கப்படும் பணியிடங்கள் – 0<br>––––<br>3<br>–––– |
| 5 | ஊட்டப் பதவியின் பெயர் மற்றும் தகுதிகள் | அ) மாவட்ட குடும்ப நலத்துறையில் மருத்துவ அலுவலராக 5 ஆண்டுகளுக்கு குறையாது பணியாற்றி இருத்தல் அவசியம்.<br>ஆ) தமிழ்நாடு அரசு தேர்வாணையம் நடத்தும் செயல் அலுவலர்களுக்கான கணக்கு தேர்வு மற்றும் மருத்துவ தொகுப்பு தேர்வில் தேர்ச்சி பெற்று இருக்க வேண்டும். |
| 6 | கடந்த ஆண்டுக்கான தெரிவுப்பட்டியல் முழுமையாக பயன்படுத்தப்பட்டதா ?<br>இல்லையெனில் காரணம் | கடந்த ஆண்டுக்கான தெரிவுப்பட்டியல் முழுமையாக பயன்படுத்தப்பட்டுள்ளது. |

மண்டல அலுவலர் பதவியினை வரையறுக்கப்பட்ட பணி விதிகளின்படி பதவி உயர்வு மூலம் நிரப்ப வளர் நிலை பதவியில் உள்ள தகுதி வாய்ந்த மூத்த மருத்துவ அலுவலர்களின் பெயர்கள் பணி மூப்பின்படி பின்வருமாறு.

| வ.எண் | மருத்துவ அலுவலரின் பெயர் | பணிபுரியும் மண்டலம் | மருத்துவ அலுவலராக பணியில் சேர்ந்த நாள் | பணியிலிருந்து ஓய்வு பெறும் நாள் |
|---|---|---|---|---|
| 1. | டாக்டர்.பூங்கோதை | கோடம்பாக்கம் மண்டலம் – 10 | 16.05.1986 | 31.01.2018 |
| 2. | டாக்டர்.டி.விஜயா | கோடம்பாக்கம் மண்டலம் – 10 | 26.05.1986 | 28.02.2016 |
| 3. | டாக்டர்.எம்.பங்கஜம் | அம்பத்தூர் மண்டலம்– 7 | 21.05.1986 | 30.03.2015 |
| 4. | டாக்டர்.எஸ்.மணியம்மை | ஆலந்தூர் மண்டலம் – 12 | 17.10.1988 | 30.06.2015 |
| 5. | டாக்டர்.நஸ்ரின் அகமத் | அம்பத்தூர் மண்டலம் – 7 | 21.10.1988 | 28.02.2017 |
| 6. | டாக்டர்.கார்மல் தேவகுமார் | திருவொற்றியூர் மண்டலம் – 1 | 21.10.1988 | 31.08.2018 |
| 7. | டாக்டர்.என்.உமையாள் | ஆலந்தூர் மண்டலம் – 12 | 21.10.1988 | 31.05.2019 |
| 8. | டாக்டர்.வி.அமிர்தசெல்வி | மாதவரம் மண்டலம் – 3 | 26.10.1988 | 31.05.2019 |
| 9. | டாக்டர்.ஆ.சுமதிதேவி | திருவொற்றியூர் மண்டலம் – 1 | 01.11.1988 | 30.11.2018 |
| 10. | டாக்டர்.எஸ்.ஜலஜா | அண்ணாநகர் மண்டலம் – 8 | 27.01.1989 | 30.10.2018 |
| 11. | டாக்டர்.நிர்மலா முருகவேல் | அண்ணாநகர் மண்டலம் – 8 | 30.01.1989 | 30.11.2017 |
| 12. | டாக்டர்.வி.கே.ஆண்டாள் | இராயபுரம் மண்டலம் – 5 | 19.07.1989 | 28.02.2019 |
| 13. | டாக்டர்.என்.சசிகலா | கோடம்பாக்கம் மண்டலம் – 10 | 19.07.1989 | 31.08.2014 |
| 14. | டாக்டர்.என்.ராணி | கோடம்பாக்கம் மண்டலம் – 10 | 29.07.1989 | 30.04.2015 |
| 15. | டாக்டர்.அவ்வையார் | தண்டையார்பேட்டை மண்டலம் – 4 | 31.07.1989 | 31.10.2014 |

மேற்கூறிய மருத்துவ அலுவலர்களில் வரிசை எண் 1இல் உள்ள டாக்டர்..பூங்கோதை, மருத்துவ அலுவலர், மண்டல அலுவலர் பதவிக்கு தற்காலிகமாக விருப்பமின்மை கடிதம் 19.06.2012 அன்றும் வரிசை எண்.2ல் உள்ள டாக்டர்..டி.விஜயா மருத்துவ அலுவலர் 14.08.2012 அன்றும் தனக்கு மண்டல மருத்துவ அலுவலர் பதவி உயர்வுக்கு தற்காலிகமாக விருப்பமின்மை கடிதம் அளித்துள்ளனர். இதன்படி இணை ஆணையர் (சுகாதாரம்) அவர்களின் செயல்முறை ஆணை எண். மா.கு.ந.(ம).ம.கு.ந.எண்.எப்4/1980/2012 நாள் 20.09.2012ன்படி இவர்களுக்கு 3 ஆண்டுகள் பதவி உயர்வு அளிப்பது நிறுத்தம் செய்து ஆணை பிறப்பித்ததை தொடர்ந்து மூன்று ஆண்டுகளுக்கு பதவி உயர்வு வழங்க இயலாது என்பதால் இவர்களின் பெயரினை பரிசீலிக்கப்படவில்லை. வ.எண்.3இல் உள்ள டாக்டர்.திருமதி.எம்.பங்கஜம் மருத்துவ அலுவலர் துறை சம்பந்தமான E.O. TEST தேர்ச்சி பெறவில்லை என்பதால் இவரது பெயரினை பரிசீலிக்க இயலவில்லை. வ.எண்.4, 5, மற்றும் 6 இல் உள்ள 3 மருத்துவ அலுவலர்கள் அனைத்து தகுதிகளும் பெற்றுள்ளதால் இவர்களது பெயர்களை பதவி உயர்வுக்கு பரிசீலிக்கலாம் இவர்கள்

மீது துறை சம்பந்தமான ஒழுங்கு நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லை. இவர்கள் பணி திருப்திகரமாக உள்ளது. என மந்தன அறிக்கை கடந்த 5 ஆண்டுகளுக்கு பெறப்பட்டுள்ளது.

மேற்படி மண்டல அலுவலர் பதவி சென்னை மாநகராட்சி பணியமைப்பில் வகுப்பு 2இன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளதால் இப்பதவியை நிரப்பும் அதிகார பங்களிப்பு சென்னை மாநகராட்சி மன்றத்திற்கு அளிக்கப்பட்டுள்ளது.

1. எனவே, மண்டல அலுவலர் பதவிக்கான பின்வரும் மருத்துவ அலுவலர்களின் பெயர்களை கொண்ட 01.04.2014ஐ மைய நாளாக கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள தெரிவுபட்டியலுக்கு ஒப்புதல் வேண்டியும்,

| வ.எண் | மூப்புப்பட்டியல் வ.எண் | பெயர் |
|---|---|---|
| 1. | 4 | டாக்டர்.எஸ்.மணியம்மை |
| 2. | 5 | டாக்டர்.நஸ்லின் அகமத் |
| 3. | 6 | டாக்டர்.கார்மல் தேவகுமார் |

2. மேற்படி, தெரிவுப்பட்டியலில் இடம் பெற்றுள்ள நபர்களை கொண்டு அடுத்து வரும் மைய நாளுக்கு முன்பு ஏற்பட்டுள்ள / ஏற்படவுள்ள காலிப்பணியிடங்களில் தேர்ந்த பெயர் பட்டியலிருந்து ரூ.15600–39100+ தர ஊதியம் ரூ.5700/–என்ற ஊதிய விகிதத்தில் மண்டல அலுவலராக பதவி உயர்வு வழங்கவும் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“ இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**பொ.து.ந.க.எண்.ஈ2/23127/2013**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 17.07.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.397/2014 **பொருள் எண்.31**

**உதவி வருவாய் அலுவலர் இன்மை பட்டியலுக்கு அனுமதி**

சென்னை மாநகராட்சி பொதுப்பணி விதிகளில் உதவி வருவாய் அலுவலர் பதவி வகுப்பு 2 என வகைப்படுத்தப்பட்டுள்ளது. இப்பணி விதிகளின் படி உதவி வருவாய் அலுவலர் பதவிக்கான நியமனமுறை மற்றும் தகுதிகள் பின்வருமாறு.

| Name of the post/Scale of Pay | Method of Appointment | Qualification |
|---|---|---|
| **Assistant Revenue Officer (Scale of Pay Rs.15600-39100+Grade pay Rs.5400) (Class-II)** | By promotion from the post of Assessor. | 1. A Graduate of a Recognized University.<br>2. Must be an approved probationer in the category of Superintendent of Taxes or must have served as Assessor for a period of not less than five years;<br>3. A pass in the Account Test for subordinate Officers Parts I and II or any other Accounts Test prescribed by the Government or equivalent thereto;<br>4. A pass in the Revenue Test Parts I to III prescribed for the Tamil Nadu Revenue Subordinate Service or any other Revenue Test prescribed by the Government or equivalent thereto. |
| | By appointment on deputation. | 1. A Graduate of a Recognized University; and<br>2. Must have served as Municipal Commissioner, Second Grade or Third Grade for a period of not less than five years. |

உதவி வருவாய் அலுவலர் பதவிக்கு 15.05.2013 அன்றைய நிலையில் தெரிவுப்பட்டியல் தயாரிக்க தகுதியான வரிமதிப்பீட்டாளர்களின் விவரங்களையும் காலிப்பணியிட விவரங்களையும் அளிக்குமாறும் மேலும், சம்பந்தப்பட்ட பணியாளர்களின் பணிப்பதிவேடு மற்றும் பரிந்துரைப்பட்டி ஆகியவைகளை உரிய மேல் நடவடிக்கைக்காக பொதுத்துறைக்கு அனுப்பி வைக்குமாறும் 22.05.2013 நாளிட்ட சுற்றறிக்கையின் மூலமாக கோரப்பட்டது.

இதன்தொடர்ச்சியாக வருவாய்துறையிலிருந்து வரப்பெற்றுள்ள விவரங்களின்படி, உதவி வருவாய் அலுவலர் பதவிக்கு வரையறுக்கப்பட்டுள்ள பணிவிதிகளின்படி கல்வி தகுதி மற்றும் துறை தேர்வுகளில் தேர்ச்சிபெற்று உதவி வருவாய் அலவலர் பதவிக்கு தகுதி பெற்றுள்ள வரிமதிப்பீட்டாளர்கள் எவரும் ஐந்தாண்டு பணித்தகுதி நிறைவு செய்யவில்லை .

எனவே, உதவி வருவாய் அலுவலர் பதவிக்கு தகதிவாய்ந்த நபர்கள் எவரும் இல்லை என்பதால், 2013–2014ஆம் ஆண்டிற்கு "இன்மை பட்டியல்"(NIL PANEL) வெளியிட நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

## பொ.து.ந.க.எண்.இ6/25777/2013
## முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 22.07.2014 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.398/2014 பொருள் எண்.32

### வரிவசூலிப்பவர் நியமனமுறைக்கான துணை விதிகள்–2009ல் சில திருத்தம் மேற்கொள்ள அனுமதி

சென்னை மாநகராட்சி வகுப்பு 3 மற்றும் 4ம் நிலைப் பணியாளர்களுக்கான திருத்தப்பட்ட சார்நிலைப்பணி துணை விதிகள்–2009ல், வரி வசூலிப்பாளர் பதவிக்கான நியமனமுறைகள் மற்றும் கல்வித் தகுதிகள் கீழ்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

| வ எண் | பதவி | நியமன முறை | கல்வித் தகுதி | ஊதிய விகிதம் | குறிப்புரை |
|---|---|---|---|---|---|
| 1 | வரி வசூலிப்பவர் | 1. அனைத்து கீழ் வகை பதவியிடங்களிலிருந்து பதவி உயர்வு தகுதி காண் பருவம் முடித்திருக்க வேண்டும்<br>2. கீழ் நிலைப்பதவியில் 5 ஆண்டுகள்பணிபுரிந்து இருக்க வேண்டும்<br>3. நேரடி நியமனம் மூலம் | குறைந்தபட்ச பொது கல்வி தகுதி | ரூ.5200–20200+ தகுதி உள்ள தர ஊதியம்<br>நிர்ணய நாள் ஒவ்வொரு ஆண்டும் ஜூலை 1ம் நாள் | ஒரு குறிப்பிட்ட ஆண்டில், ஊட்டப் பதவியில் இருந்து தகுதியான பணியாளர்கள் அனைவரையும் பதவி உயர்வு செய்த பின்னர், அதே ஆண்டில் எஞ்சிய காலிப் பணியிடங்கள் நேரடி நியமனம் மூலம் நிரப்பப்படும். |

2013–2014ஆம் ஆண்டிற்கான வரி வசூலிப்பாளர் காலிப்பணியிடங்களை ரூ. 5200–20200+2400 என்ற ஊதிய விதிம் மற்றும் இதர அனுமதிக்கப்பட்ட படிகளுடன் நிரப்புவதற்காக 01.07.2013ஐ மைய நாளாகக் கொண்டு தற்காலிக தெரிவுப்பட்டியல் தயாரிக்கப்பட்டு, அனைத்து துறைகள் மற்றும் மண்டலங்களுக்கு சுற்றுக்கு விட்டு ஆட்சேபனை பெறப்பட்டு, இறுதி தெரிவுப்பட்டியல் வெளியிடும் பொருட்டு நியமனக்குழுவின் அனுமதி வேண்டி குறிப்பு சமர்ப்பிக்கப்பட்டது.

23.12.2013 தேதியிட்ட நியமனக்குழு தீர்மானத்தில் வரி வசூலிப்பாளர் பதவி நியமன முறையில் தற்போதுள்ள துணை விதிகளில் கீழ்கண்டவாறு திருத்தம் செய்திட உத்தேசிக்கப்பட்டது.

‘‘வரி வசூலர் பதவிக்கான நியமன முறையில் 1:1 விகிதாசாரத்தில் பதவியினை நிரப்ப துணை விதிகளில் உரிய திருத்தம் மேற்கொண்டு மன்றத்தின் ஒப்புதல் பெற்ற பின்னர் அதன் அடிப்படையில் நியமனத்தினை மேற்கொள்ளலாம் என நியமனக்குழு கருதி இப்பொருளினை ஒத்தி வைக்கின்றது’’

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 14.06.2014 தேதியிட்ட குறிப்பில் 01.07.2013ஐ மைய நாளாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட வரி வசூலிப்பாளர் பதவி உயர்வு பட்டியலுக்கான காலம் 30.06.2014 அன்று முடிவடைய உள்ள நிலையில் குறுகிய அவகாசம் உள்ளதாலும், நடைமுறையிலுள்ள பணிநியமன விதிகளின்படி உரிய நடவடிக்கை மேற்கொண்டு இறுதி தெரிவுப்பட்டியலுக்கு அனுமதி கோரும் கடைசி நிலையில், மேற்கண்ட நியமனக்குழு தீர்மானத்தின்படி நியமன முறையில் மாற்றம் கொண்டு வரும் பட்சத்தில், அப்பட்டியலில் இடம் பெற்றுள்ளோர் நீதிமன்றத்தை நாடும் வாய்ப்பு உள்ளதாலும் மற்றும் 2013–2014ஆம் பட்டியலாண்டு முடிவு பெற குறுகிய கால அவகாசமே உள்ளதாலும் மேற்கண்ட காலிப்பணியிடங்களை இப்பட்டியலாண்டில் நிரப்ப இயலாத நிலை ஏற்படும் என்பதனை கருத்திற்கொண்டு, இந்த ஒரு முறை மட்டும் பழைய துணை விதிகளின் அடிப்படையில் வரி

வசூலிப்பாளர் பதவி உயர்வுக்கான இறுதி தெரிவுபட்டியலுக்கு மறு பரிசீலனை செய்து நியமனக்குழுவின் ஒப்புதல் வேண்டி குறிப்பு சமர்ப்பிக்கப்பட்டது. ஆனால் 2013–2014ஆம் ஆண்டிற்கான வரி வசூலிப்பாளர் பதவிக்கான இறுதி தெரிவுப்பட்டியலுக்கு ஒப்புதல் வழங்காமல் மேற்படி வரைவு துணை விதிகளில் நியமனக்குழு தீர்மான எண்.102/2014 நாள் 24.06.2014ன்படி கீழ்கண்டவாறு திருத்தம் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

''வரி வசூலிப்பாளர்கள் பதவி உயர்வுக்கு தற்போதுள்ள துணை விதியை திருத்தம் செய்ய கடந்த பிப்ரவரி மாதத்தில் நடைபெற்ற நியமனக்குழு கூட்டத்தில் பதவி உயர்வு நேரடி நியமனம் 1:1 என்ற விகிதாச்சாரம் கடைபிடிக்கலாம் என முடிவெடுக்கப்பட்டது. ஆனால் 1:1 என்ற நடைமுறை பின்பற்றப்படுமேயானால், தகுதி வாய்ந்த திறமையான அலுவலர்கள் மாநகராட்சிக்கு கிடைப்பது அரிதாகிவிடும். எனவே 1:1 என்ற விகிதாச்சாரத்திற்கு பதிலாக 1:2 என்ற விதிதாச்சாரத்தை பின்பற்றலாம் என நியமனக்குழு முடிவெடுக்கிறது. மேலும் இதற்கேற்றவாறு துணை விதிகளில் திருத்தம் செய்யலாம் என கருதி இதனை ஒத்திவைக்கின்றது''

மேற்படி 24.06.2014 தேதியிட்ட நியமனக்குழு தீர்மானத்தின் அடிப்படையில் வரி வசூலிப்பாளர் பதவிக்கு வரைவு துணைவிதிகளில் கீழ்கண்டவாறு திருத்தம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

| வ. எ ண். | பதவி | நியமன முறை | கல்வித் தகுதி | ஊதிய விகிதம் | குறிப்புரை |
|---|---|---|---|---|---|
| 1 | வரி வசூலிப்பவர் | 1. அனைத்து கீழ் வகை பதவியிடங்களிலிருந்து பதவி உயர்வு தகுதி காண் பருவம் முடித்திருக்க வேண்டும்<br><br>2. கீழ் நிலைப்பதவியில் 5 ஆண்டுகள்பணிபுரிந்து இருக்க வேண்டும்<br><br>3. பட்டியலாண்டில் ஏற்பட்டுள்ள / ஏற்படவுள்ள காலிப்பணியிடங்களை 1:2 என்கிற விகிதாச்சாரத்தில் அதாவது பதவி உயர்வு மூலம் 1 நபர் மற்றும் நேரடி நியமனம் மூலம் 2 நபர்களை கொண்டும் நிரப்பப்பட வேண்டும். ஊட்டப்பதவியில் தகுதியான பணியாளர்கள் இல்லாத பட்சத்தில் பதவி உயர்வுக்கான ஒதுக்கீட்டினை நேரடி நியமனம் மூலம் நிரப்பலாம். | குறைந்தபட்ச பொது கல்வி தகுதி | ரூ.5200–20200 + தகுதி உள்ள தர ஊதியம்<br><br><u>நிர்ணய நாள்</u><br>ஒவ்வொரு ஆண்டும் ஜூலை 1ம் நாள் | வரி வசூலிப்பாளர் காலிப்பணியிடங் களை 1:2 விகிதாச்சாரம் மூலம் நிரப்பப்பட வேண்டும். |

எனவே, வரி வசூலிப்பாளர் பதவி நியமன முறையில் மேற்படி வரைவு துணை விதிகளில் திருத்தம் மேற்கொள்ள நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

'' இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது''

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**க.து.ந.களண்:தொ.பநி/ 036 /2014**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 28.06.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.399/2014 **பொருள் எண்.33**

**கல்வித்துறை – தொழிற் பயிற்சி நிலையத்தில் மேலும் இரண்டு புதிய பாடப் பிரிவுகள் கூடுதலாக துவங்க அரசின் ஆணை பெறுவதற்கு அனுமதி.**

அரசாணை நிலை எண் 55 மற்றும் 88 தொழிலாளர் (ம) வேலை வாய்ப்பு எஸ் : 2 துறை நாள் : 26.04.1999 மற்றும் 06.05.2010 –ன்படி சென்னை மாநகராட்சி கல்வித்துறையில் தொழிற் பயிற்சி நிலையம் மத்திய அரசின் தேசிய வாழ்வியல் முறை (NCVT) அங்கீகாரத்துடன் ஆகஸ்ட் 2007 கல்வி ஆண்டு முதல் மண்டலம்–9, கோட்டம்–120, நடிப்பிசை புலவர் கே.ஆர்.இராமசாமி நகர், ஸ்கொயர் பிளாக், லாயிட்ஸ் காலனி, சென்னை – 600 014 என்ற முகவரியில் தொழிற் பயிற்சி வகுப்புகள் நடைபெற்று வருகின்றன.

அரசாணை நிலை எண் 55 மற்றும் 88 தொழிலாளர் (ம) வேலை வாய்ப்பு எஸ் : 2 துறை நாள்:26.04.1999 மற்றும் 06.05.2010–ன்படி சென்னை மாநகராட்சி பள்ளியில் பயின்ற மாணவர்களுக்கும் மற்றும் மாநகராட்சி ஊழியர்களின் குழந்தைகளுக்கும், மாணவர்கள் சேர்க்கையில் முன்னுரிமை அளித்தும், மீதம் காலியாக உள்ள இடங்களுக்கு சென்னை மாவட்டத்தில் பிற பள்ளிகளில் படித்த, சமுதாயத்தில் பின்தங்கிய ஏழை எளிய மாணவர்களை அவ்வப்போது அரசால் வெளியிடப்படும் இன இட ஒதுக்கீட்டு ஆணைகளைப் பின்பற்றி பயிற்சியில் மாணவர்கள் சேர்க்கை செய்து பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது.

மத்திய அரசின் கடிதத்தின்படி (NCVT Affiliation Orders obtained for Trade of Computer, Plumber, Fitter, MMV, Electrician,and Electronic Mechanics are No:DGE&T-6/22/6/2006-TCdated 20.03.2007, 28.03.2008, 24.06.2009 and 26.08.2010) ஆறு வகையான பாடப் பிரிவுகளுக்கும் NCVT அங்கீகாரம் பெறப்பட்டு ஒவ்வொரு பாட பிரிவிலும் கீழ்காணும் எண்ணிக்கையில் மாணவர்கள் சேர்க்கப்பட்டு பயிற்சி பெற்று வருகிறார்கள்.

| வ.எண் | பாடப் பிரிவு | கல்வித்தகுதி | அங்கீகாரம்படி சேர்க்கை எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | கணினி இயக்குபவர் மற்றும் நிகழ்ச்சி தொகுப்பாளர் | 10ம் வகுப்பு தேர்ச்சி | 22+22=44 |
| 2. | குழாய் பொருத்துநர் | 8ம் வகுப்பு தேர்ச்சி | 21+21=42 |
| 3. | பிட்டர் | 10ம் வகுப்பு தேர்ச்சி | 21+21=42 |
| 4. | கம்மியர் மோட்டார் வாகனம் | 10ம் வகுப்பு தேர்ச்சி | 21+21=42 |
| 5. | மின் பணியாளர் | 10ம் வகுப்பு தேர்ச்சி | 21+21=42 |
| 6. | கம்மியர் மின்னணுவியல் | 10ம் வகுப்பு தேர்ச்சி | 21+21=42 |
| | | மொத்தம் | **254** |

சென்னைமாநகராட்சி தொழிற்பயிற்சி நிலையத்தில் ஒவ்வொரு ஆண்டும் பயிற்சி முடித்து செல்லும் மாணவர்களுக்கு பல முன்னணி தனியார் நிறுவனங்களில் வேலை வாய்ப்பு ஏற்படுத்தி தரப்படுகின்றது. இன்றைய சூழ்நிலையில் பெரும்பாலான தொழிற்சாலைகளில் இருந்து கீழ் காணும் இரண்டு பயிற்சி பாடப் பிரிவுகளில் பயிற்சி முடித்த மாணவர்கள் தேவை என கேட்கின்றனர்.

மேலும் வளர்ச்சி அடைந்து வரும் இன்றைய நவீன உலகில் புதிய தொழிற்சாலைகளை உருவாக்கும் கட்டுமான தொழிலிலும், மற்றும் தொழிற்சாலைகளுக்கு தேவையான பல யுக்திகளுக்கு காற்றை பதனிடும் தொழிலிலும் ஆண்டுக்கு பல இலட்சம் கைவினைஞர் தொழில் நுட்ப பயிற்சி முடித்த பணியாளர்கள் தேவை என மத்திய அரசின் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை புதுடெல்லி தெரிவித்துள்ளது.

மத்திய, மாநில அரசுகள் வேலைவாய்ப்பு உள்ள பல தொழில்நுட்ப பயிற்சிகளை ஏழை எளிய மாணவர்களுக்கு அளிக்க பல எண்ணற்ற திட்டங்களை தொடங்க உள்ளதாக தெரிவித்துள்ளது.

புதிதாக தொடங்க உள்ள இரண்டு பாடப்பிரிவுகளில் அரசு தொழிற் பயிற்சி நிலையம் கிண்டியில் மட்டும் உள்ளது. மிக குறைந்த எண்ணிக்கையில் ஆண்டுக்கு **16+16 = 32** மாணவர்கள் மட்டும் சேர்க்கைக்கு அனுமதி உள்ளது. தனியார் தொழிற் பயிற்சி நிலையத்தில் சேர்க்கைக்கு மிக அதிக கட்டண தொகை செலுத்த வேண்டி உள்ளதால் சென்னைமாநகராட்சி பள்ளிகளில் படித்த சமுதாயத்தில் மிகவும் நலிவடைந்த ஏழை எளிய மாணவர்கள் கட்டணம் செலுத்தி வேலைவாய்ப்புள்ள இந்த இரண்டு பயிற்சி பாடப் பிரிவுகளில் பயிற்சி பெறுவது இயலாத ஒன்று ஆகும்.

சென்னை மாநகராட்சி தொழிற் பயிற்சி நிலையம் தொடங்கிய நோக்கமே சென்னை மாநகராட்சி பள்ளிகளில் படித்து மேல் படிப்பை தொடராத சமுதாயத்தில் மிகவும் நலிவடைந்த ஏழை எளிய மாணவர்களுக்கு நல்ல வேலைவாய்ப்புள்ள தொழிற்பயிற்சி பிரிவில் பயிற்சி அளித்து வேலைவாய்ப்பு ஏற்படுத்தி தருவதே நமது நோக்கம்.

சென்னை மாநகராட்சி தொழிற் பயிற்சி நிலையத்தினை விரிவுபடுத்திடும் நோக்கிலும் மற்றும் சென்னை பள்ளிகளில் படித்த ஏழை எளிய மாணவர்கள் எதிர்கால நலன் கருதி நல்ல வேலை வாய்ப்பு உள்ள கீழ்க்காணும் இந்த இரண்டு பாடப் பிரிவுகளை துவங்க அரசின் அனுமதி பெற வேண்டியுள்ளது.

| வ எண் | பாடப்பிரிவு பெயர் | கல்வித்தகுதி | பயிற்சிகாலம் | சேர்க்கை எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | Mechanic Refrigeration and Air conditioning | 10ம் வகுப்பு தேர்ச்சி | 2வருடம் | முதலாம் ஆண்டு –21<br>இரண்டாம்ஆண்டு–21 |
| 2 | Welder (Gasand Electric ) | 8ம் வகுப்பு தேர்ச்சி | ஒரு வருடம் | 2 அலகுக்கு 16+16=32 |

**புதிய இரண்டு பாடப் பிரிவுகள் துவங்க முதலில் மாநில அரசின் தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு துறையின் அனுமதி பெற வேண்டும். அரசின் அனுமதி பெற்ற பின்னரே இரண்டு புதிய பாடப்பிரிவுகள் துவங்க அங்கீகாரம் பெறுவதற்கான பணிகளை மேற் கொள்ள இயலும்.**

அங்கீகாரம் பெற முக்கியமானவை தேசிய வாழ்வியல் (NCVT) பாடத்திட்டத்தின் முறையில் உள்ளவாறு ஒவ்வொரு பாடப் பிரிவுக்கும் தேவையான கட்டிட வசதிகள் தேவையான மும்முனை இணைப்பு மற்றும் உபகரணங்கள் கொள் முதல் செய்யப்பட்டு தொழிற்பயிற்சி நிலையத்தில் நிறுவப்பட்டு இருத்தல் வேண்டும். மேலும் புதிய பாடப் பிரிவுகளுக்கான பயிற்சி ஆசிரியர்கள் பணியிடமும் நிரப்பப்படவேண்டும்.

புதிய பாடப் பிரிவுகளுக்கான பயிற்சி ஆசிரியர்கள் NCVT பாடத்திட்டத்தின்படி நியமிக்க அரசின் ஆணை பெறப்பட வேண்டும். ஓர் அலகுக்கு ஓர் இளநிலை பயிற்சி அலுவலர் வீதம் இரண்டாண்டு பயிற்சி பாடப் பிரிவுக்கு 2 ஆசிரியர்களும் ஓர் ஆண்டு பயிற்சி பாடப் பிரிவு 2 அலகுக்கு 2 ஆசிரியர்கள் பணியிடம் தேவைப்படுகின்றது.

இந்நிலையை கருத்தில் கொண்டு புதிய பாடப்பிரிவுகள் துவங்க மொத்தம் = 2 + 2 = 4 இளநிலை பயிற்சி அலுவலர் (Junior Training Officer) பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட வேண்டும்.

<u>இரண்டு கூடுதல் பாடப்பிரிவுகள் துவங்க **ஆரம்ப செலவீனம்** குறித்து கீழ்காணும் விபரம் சமர்பிக்கப்படுகிறது.</u>

(அ) பாடத்திட்டம் படி செய்முறை கருவிகள்
மற்றும் உபகரணங்கள் நிறுவுதல் – ரூ. **30,00,000/–**

(ஆ) வகுப்பறை மற்றும் செய்முறைகூட கட்டிடவசதி
உத்தேசம் **2000**சதுரஅடி – ரூ. **40,00,000/–**

------------

ஆரம்பச் செலவு ( அ+ ஆ ) உத்தேசமாக தேவை மொத்தம் ரூபாய். **70,00,000/–**

------------

வகுப்பறை மற்றும் செய்முறைகூட கட்டிடங்கள் தொழிற்பயிற்சி நிலைய ஆ– பிளாக் மாடி கட்டிடத்தில் கட்டலாம் என்ற கருத்து தெரிவிக்கப்படுகின்றது.

இரண்டு கூடுதல் பாடப்பிரிவுகள் துவங்க **இயக்க செலவீனம்** குறித்து கீழ்காணும் விபரம் சமர்பிக்கப்படுகிறது.

கூடுதல் பாடப்பிரிவுக்கு இளநிலை பயிற்சி அலுவலர்கள் பணியிடத்திற்கான ஊதிய விகிதம் **9300+34800+4200GP** ஆகும். உத்தேசமாக நான்கு இளநிலை பயிற்சி அலுவலர்களுக்கு ஓர் ஆண்டுக்கு ஊதியம் வழங்க செலவு ரூ.**14,50,000/–** ஆகும்.

Salary = Basic pay + 100%DA + HRA + CCA + MA

Rs.9300+4200GP+13500+1600+400+100 Tota l= Rs.29,100/-

Approximately Rs.30,000/JTO/month. One Year = Rs.30,000 X !2=Rs.3,60,000/-

For Four JTO = Rs.3,60,000/- X 4 = Rs.14,40,000 /–Rounded To = Rs.14,50,000/-

For Contributionery Pension Scheme

Basic pay + 100%DA = Total x 10%

13500 + 13500 = Rs.27000 x 10% = Rs.2700/- per JTO per month

Total = Rs.2700 x 4 x 12 = Rs.1,29,600/Four JTO per Year

On 8.5% Interest for the amount of Rs.1,29,600/- = Rs.11,016/- Rounded To Rs.11,100/- Total = Rs.1,29,600/- + Rs.11,100/- = Rs.1,40,700/- Rounded To = Rs.1,50,000/-

Fifteen Days Leave Surrender For One JTO.

Rs.9300+4200GP+13500+1600+400 = 28000 Divide By 2 =Rs.14000/-

Rs.14000/- X 4 JTO = Rs.56,000/- For One Year.

**Operational Expenditure Approximately For One Year**

Salary + CPS + E.LSurrender + Practical Consumables

Rs.14,50,000 + Rs.1,50,000 + Rs.56,000 + Rs.3,**00,000.** = Total Rs. 19,56,000/-

Rounded To Total = **Rs. 20,00,000/- ( Twenty Lakhs )**

சென்னை மாநகராட்சி தொழிற் பயிற்சி நிலையம் செயல்பட அரசு வழங்கிய அரசாணை எண் : **292** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MC-3)துறை நாள்: **06.08.2004**க்கு பெறப்பட்ட அரசின் திருத்திய கடித எண் : **36789**/MC-3/**2007–1** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்: **06.11.2008**–ன் படி சென்னை மாநகராட்சி தொழிற் பயிற்சி நிலையத்திற்கான நிதி நிலை அனைத்தும் மாநகராட்சி வருவாய் நிதியில் இருந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

ஆகவே, சென்னை மாநகராட்சி தொழிற்பயிற்சி நிலையத்தில்

1) கீழ்காணும் இரண்டு புதிய பாடப்பிரிவுகள் துவங்க தொழிலாளர் (ம) வேலை வாய்ப்பு பயிற்சி துறையிடம் அரசாணை வழங்க கோரவும்,

| வ. எண் | பாடப் பிரிவு | பயிற்சி காலம் / கல்வி தகுதி | அலகுகள் (units) |
|---|---|---|---|
| 1. | Mechanic Refrigeration and Air conditioning (கம்மியர் குளிர்பதனம் மற்றும் தட்ப வெப்ப நிலை கட்டுப்படுத்துதல் ) | 2 ஆண்டுகள் 10th pass | 1+1 (Senior -1 Junior – 1) |
| 2. | Welder (Gas and Electric ) ( பற்ற வைப்பவர் ) | 1 ஆண்டு 8 th pass | 1 +1 = 2 |

2) சென்னை மாநகராட்சி தொழிற் பயிற்சி நிலையத்தில் இரண்டு புதிய பாடப்பிரிவுகள் துவங்க தேவையான நான்கு இளநிலை பயிற்சி அலுவலர் பணியிடம் தோற்றுவிக்க நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையிடம் அரசாணை வழங்க கோரவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு நிலைக்குழு (கல்வி), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"14.07.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி) கூட்டத்தின் தீர்மான எண்.16/2014, நாள்14.07.2014–ன்படி இதற்கு நிலைக்குழு (கல்வி) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு (ம) நிதி) மற்றும் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"18.07.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண்.322/2014, நாள்18.07.2014–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து நியமனக்ழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**மா.கு.ந(ம)ம.கு.ந.எண்.எப்4/0016/2014.**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 21.06.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.400/2014 **பொருள் எண்.34**

**வகுப்பு 1பி மற்றும் வகுப்பு 2–இல் உள்ள 5 வகை பதவிகளுக்குரிய பணி விதிகள் மற்றும் பதவி பெயர்களை மாற்றி அமைத்து சென்னை மாநகராட்சி, குடும்ப நலம் மகப்பேறு மற்றும் குழந்தை நலத்துறைக்கு பணி விதிகள் வெளியிடப்பட்டுள்ள அரசாணை (பல்வகை) எண்.161, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.3) துறை நாள் 28.8.98–ற்கு திருத்தம் பெறவும் அரசுக்கு குறிப்பு அனுப்ப அனுமதி**

சென்னை மாநகராட்சி, மாவட்ட குடும்ப நலத்துறையில் பல்வேறு பதவிகளுக்கு அரசாணை எண்.161, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.3) துறை, நாள் 28.08.1998–ல் பணி விதிகள் உருவாக்கப்பட்டு ஆணையிடப்பட்டுள்ளது.

தற்போது, சென்னை மாநகராட்சி எல்லை விரிவாக்கம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து, மாவட்ட குடும்ப நலத்துறையில், வகுப்பு 1 பி மற்றும் வகுப்பு–2–இன் கீழ் வரும் 5 வகைப் பதவிகளில் பதவி உயர்வு வழங்குவதற்கு பணி விதிகளை கீழ்கண்டவாறு மாற்றி அமைத்து மன்றத்தின் அனுமதி பெற்று அரசாணை பெறப்பட வேண்டும்.

அரசாணை 161, நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் (மா.ந.3) துறை, நாள் 28.08.1998–ன்படி வரையறுக்கப்பட்டுள்ள பணி விதிகள் மற்றும் மாற்றம் செய்ய வேண்டிய பணிவிதிகள் மற்றும் பதவி பெயர்கள் பின்வருமாறு.

| **பதவி** | | **பணிநியமன முறை** | | **நிர்ணயிக்கப்படும் தகுதி** | | **ஊதிய விகிதம் (ம) மைய நாள்** | |
|---|---|---|---|---|---|---|---|
| **நடை முறையில் உள்ளது** | **மாற்றம் செய்ய வேண்டியது** | **நடைமுறையில் உள்ளது** | **மாற்றம் செய்யப்பட வேண்டியது** | **நடைமுறையில் உள்ளது** | **மாற்றம் செய்ய வேண்டியது** | **நடைமுறையில் உள்ளது** | **மாற்றம் செய்ய வேண்டியது** |
| **துணை திட்ட ஒருங்கிணைப்பாளர்**<br><br>(Deputy Project Co-ordinator) | **நகர குடும்ப நல அலுவலர்**<br><br>City Family Welfare Officer. | 1) மாவட்ட குடும்ப நல மருத்துவ அலுவலர் பதவியில் இருந்து பதவி உயர்வின் மூலம் | மாவட்ட குடும்ப நல மருத்துவ அலுவலர் பதவியில் இருந்து பதவி உயர்வின் மூலம் | மாவட்ட குடும்ப நலத்துறையில் மாவட்ட குடும்ப நல மருத்துவ அலுவலராக 2 ஆண்டுகள் தொடர்ந்து பணி புரிந்திருக்க வேண்டும். | மாவட்ட குடும்ப நலத்துறையில் மாவட்ட குடும்ப நல மருத்துவ அலுவலராக 2 ஆண்டுகள் தொடர்ந்து பணி புரிந்திருக்க வேண்டும். | 37400–67000 + தர ஊதியம் 8700<br><br>மைய நாள் ஒவ்வோராண்டும் பிப்ரவரி முதல் நாள் | 37400–67000 + தர ஊதியம் 8700<br><br>மைய நாள் ஒவ்வோராண்டும் **ஜனவரி முதல் நாள்** |
| | | 2) மாநில அரசு கட்டுப்பாட்டில் இயங்கும் எந்த ஒரு துறை அல்லது நிறுவனத்திடம் இருந்து அயற்பணி அடிப்படையில் நியமித்தல் | மாநில அரசு கட்டுப்பாட்டில் இயங்கும் எந்த ஒரு துறை அல்லது நிறுவனத் திடம் இருந்து அயற்பணி அடிப்படையில் நியமித்தல் | தமிழ்நாடு அரசு கட்டுப்பாட்டில் உள்ள துறையிலோ (அ) ஒரு நிறுவனத்திலோ மாவட்ட சுகாதார அலுவலர்,குடும்ப நலத்துறை, அலுவலருக்கு இணையான பதவியில் பொறுப்பில் 2 ஆண்டுகள் குறையாது பணி புரிந்திருத்தல் வேண்டும் | தமிழ்நாடு அரசு கட்டுப்பாட்டில் உள்ள துறையிலோ (அ) ஒரு நிறுவனத்திலோ மாவட்ட சுகாதார அலுவலர், குடும்ப நலத்துறை, அலுவலருக்கு இணையான பதவியில் பொறுப்பில் 2 ஆண்டுகள் குறையாது பணி புரிந்திருத்தல் வேண்டும் | | |

| பதவி | | பணிநியமன முறை | | நிர்ணயிக்கப்படும் தகுதி | | ஊதிய விகிதம் (ம) மைய நாள் | |
|---|---|---|---|---|---|---|---|
| **நடைமுறையில் உள்ளது** | **மாற்றம் செய்ய வேண்டியது** | **நடைமுறையில் உள்ளது** | **மாற்றம் செய்ய வேண்டியது** | **நடைமுறையில் உள்ளது** | **மாற்றம் செய்ய வேண்டியது** | **நடைமுறையில் உள்ளது** | **மாற்றம் செய்ய வேண்டியது** |
| **மாவட்ட குடும்ப நல மருத்துவ அலுவலர்** (District Family Welfare Medical Officer) | | 1) மாவட்ட குடும்ப நலத்துறையில் மண்டல அலுவலராக பணி புரிபவர்கள், பதவி உயர்வின் மூலம் Transfer from the holders of the post of Addl/ DFWMO | 1) கூடுதல் மாவட்ட குடும்ப நல மருத்துவ அலுவலர் பதவியிலிருந்து பணி மாற்றம் மூலம் | **அ)** மாவட்ட குடும்ப நலத் துறையில் மண்டல அலுவலராக 2 ஆண்டுகளுக்கு குறையாது பணியாற்றி இருப்பவர்கள்<br><br>**ஆ)** தமிழ்நாடு அரசு தேர்வாணயம் நடத்தும் செயல் அலுவலருக்கான கணக்கு தேர்வு மற்றும் மருத்துவ தொகுப்பு தேர்வில் தேர்ச்சி | **அ)** மாவட்ட நலத் துறையில் கூடுதல் மாவட்ட குடும்ப மருத்துவ அலுவலராக வருடங்களுக்கு குறையாமல்பணி ஆற்றுபவர்கள்<br><br>**ஆ)** தமிழ்நாடு அரசு தேர்வாணயம் நடத்தும் செயல் அலுவலருக்கான கணக்கு தேர்வு மற்றும் மருத்துவ தொகுப்பு தேர்வில் தேர்ச்சி | **15600–39100 + தர ஊதியம் 6600**<br><br>மைய நாள் ஒவ்வோராண்டும் **மார்ச் முதல் நாள்** | **15600–39100 + தர ஊதியம் 6600**<br><br>மைய நாள் ஒவ்வோராண்டும் **பிப்ரவரி முதல் நாள்** |
| | | 2) மாநில அரசு கட்டுப்பாட்டில் இயங்கும் எந்த ஒரு துறை அல்லது நிறுவனத்திடம் இருந்து அயற்பணி அடிப்படையில் நியமித்தல் | 2) மாநில அரசு கட்டுப்பாட்டில் இயங்கும் எந்த ஒரு துறை அல்லது நிறுவனத்திடம் இருந்து அயற்பணி அடிப்படையில் நியமித்தல் | **அ)** தமிழ்நாடு அரசு கட்டுப்பாட்டில் உள்ள துறையிலோ (அ) ஒரு நிறுவனத்திலோ மாவட்ட குடும்பநல மருத்துவ அலுவலர் பதவிக்கு இணையான பொறுப்பில் 2 ஆண்டுகளுக்கு குறையாது பணி புரிந்திருத்தல் வேண்டும். | **அ)** தமிழ்நாடு அரசு கட்டுப்பாட்டில் உள்ள துறையிலோ (அ) ஒரு நிறுவனத்திலோ மாவட்ட குடும்பநல மருத்துவ அலுவலர் பதவிக்கு இணையான பொறுப்பில் 1 ஆண்டுக்கு குறையாது பணி புரிந்திருத்தல் வேண்டும். | | |

| பதவி | | பணிநியமன முறை | | நிர்ணயிக்கப்படும் தகுதி | | ஊதிய விகிதம் (ம) மைய நாள் | |
|---|---|---|---|---|---|---|---|
| **நடைமுறையில் உள்ளது** | **மாற்றம் செய்ய வேண்டியது** | **நடைமுறையில் உள்ளது** | **மாற்றம் செய்ய வேண்டியது** | **நடைமுறையில் உள்ளது** | **மாற்றம் செய்ய வேண்டியது** | **நடைமுறையில் உள்ளது** | **மாற்றம் செய்ய வேண்டியது** |
| **மண்டல அலுவலர்** **(Zonal Officer)** | **மண்டல மருத்துவ அலுவலர் (Zonal Medical Officer)** | 1) மாவட்ட குடும்ப நலத்துறையில் மருத்துவ அலுவலராக / மயக்க மருந்து மருத்துவ அலுவலராக / அறுவை மருத்துவராக பணிபுரிபவர் களை **பதவி உயர்வின் மூலம்**<br><br>**2).அயற்பணி**<br>**அ)** மாநில அரசின் கட்டுபாட்டில் உள்ள துறை மற்றும் நிறுவனங் களில் பணி புரிபவர்கள் அயற்பணி மூலம் | மாவட்ட குடும்ப நலத்துறையில் மருத்துவ அலுவலராக /மயக்க மருந்து மருத்துவ அலுவலராக /அறுவை மருத்துவராக பணிபுரிபவர் களை **பதவி உயர்வின் மூலம்**<br><br>**அ)** மாநில அரசின் கட்டுபாட்டில் உள்ள துறை மற்றும் நிறுவனங் களில் பணி புரிபவர்கள் அயற்பணி மூலம் | **அ)** மாவட்ட குடும்ப நலத்துறையில் மருத்துவ அலுவலராக / மயக்க மருந்து அலுவலராக / உதவி மருத்துவ அலுவலராக 5வருடங்களுக் கு குறையாது பணியாற்றி இருப்பவர்கள்<br>**ஆ)தமிழ்நாடு அரசு தேர்வாணையத் தால் நடத்தப்படும் (E.O. Test & Medical Code) தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.**<br><br>**அ)** தமிழ்நாடு அரசு கட்டுப்பாட்டில் உள்ள துறையிலோ (அ) ஒரு நிறுவனத்திலோ மண்டல அலுவலர் பதவிக்கு இணையான பொறுப்பில் 2 ஆண்டுகளுக்கு குறையாது பணி புரிந்திருத்தல் வேண்டும். | **அ)** மாவட்ட குடும்ப நலத்துறையில் மருத்துவ அலுவலராக / மயக்க மருந்து அலுவலராக / உதவி மருத்துவ அலுவலராக 5வருடங் களுக்கு குறையாது பணியாற்றி இருப்பவர்கள்<br>**ஆ)தமிழ்நாடு அரசு தேர்வாணையத்த ால் நடத்தப்படும் (E.O. Test & Medical Code) தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்**<br><br>**அ)** தமிழ்நாடு அரசு கட்டுப்பாட்டில் உள்ள துறையிலோ (அ) ஒரு நிறுவனத்திலோ மண்டல அலுவலர் பதவிக்கு இணையான பொறுப்பில் 2 ஆண்டுகளுக்கு குறையாது பணி புரிந்திருத்தல் வேண்டும். | **15600–39100 + தர ஊதியம் 5700**<br><br>மைய நாள் ஒவ்வோ ராண்டும் **ஏப்ரல் முதல் நாள்** | **15600–39100 + தர ஊதியம் 5700**<br><br>மைய நாள் ஒவ்வோ ராண்டும் **மார்ச் முதல் நாள்** |
| | | 3)நேரடி நியமனம் 35 வயதுக் குட்பட்டவராக இருக்க வேண்டும். | நேரடி நியமனம் 35 வயதுக்குட்பட் டவராக இருக்க வேண்டும். | **அ) அங்கீகரிக்கப் பட்ட நிறுவனம் (அல்லது) பல்கலைக் கழகத்தால் வழங்கப்பட்ட MBBS பட்டம் அல்லது MBBS பட்டத்துடன் மகப்பேறு படிப்பில் பட்டயம்** | **அ) M.B.B.S. பட்டம், (அல்லது) (M.B.B.S-வுடன்கூடிய DGO, DCH, D.A. போன்ற மருத்துவம் சார்ந்த பட்டயப் படிப்பு அரசு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் அல்லது பல்கலைக்** | | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | அல்லது அதற்கு இணையான பட்டயம் பெற்றவர் களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.<br><br>ஆ) அனைத்திந் திய சுகாதார நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப் பட்ட நிறுவனத்தின் குடும்பநல நிர்வாகம் பற்றிய சான்று பெற்று இருத்தல் வேண்டும்,<br><br>இ) 5 வருடங்களுக்கு குறையாமல் குடும்பநலம் மற்றும் தாய்சேய் நலம் பற்றிய அனுபவம் பெற்று இருத்தல் அவசியம். | கழகத்தால் வழங்கப்பட்டு இருக்க வேண்டும்.<br><br>ஆ) அனைத்திந்திய சுகாதார நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தின் குடும்பநல நிர்வாகம் பற்றிய சான்று பெற்று இருத்தல் வேண்டும்,<br><br>இ) 5 வருடங்களுக்கு குறையாமல் குடும்பநலம் மற்றும் தாய்சேய் நலம் பற்றிய அனுபவம் பெற்று இருத்தல் அவசியம். | | |

| பதவி | | பணிநியமன முறை | | நிர்ணயிக்கப்படும் தகுதி | | ஊதிய விகிதம் (ம) மைய நாள் | |
|---|---|---|---|---|---|---|---|
| | மாற்றம் செய்ய வேண்டியது | நடைமுறையில் உள்ளது | மாற்றம் செய்ய வேண்டியது | நடைமுறையில் உள்ளது | மாற்றம் செய்ய வேண்டியது | நடைமுறையில் உள்ளது | மாற்றம் செய்ய வேண்டியது |
| மருத்துவ அலுவலர்/ உதவி அறுவை மருத்துவர்<br><br>(Medical Officer) | | 1)நேரடி நியமனம்<br><br>(35 வயதிற்குட்பட் டவராக இருக்க வேண்டும்) | -- | அங்கீகரிக்கப் பட்ட பல்கலைக் கழகத்தால் வழங்கப்பட்ட எம்.பி.பி.எஸ். பட்டம் (அ) எம்.பி.பி.எஸ் பட்டத்துடன் மகப்பேறு படிப்பில் பட்டயம் அல்லது அதற்கு இணையான பட்டயம் பெற்றவர் களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். தமிழ்நாடு மருத்துவ குழுமத்தில் பதிவு செய்திருக்க வேண்டும். | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்தால் வழங்கப்பட்ட எம்.பி.பி.எஸ். பட்டம் (அ) எம்.பி.பி.எஸ் பட்டத்துடன் மகப்பேறு படிப்பில் பட்டயம் அல்லது அதற்கு இணையான பட்டயம் DCH., D.A.பெற்றவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். தமிழ்நாடு மருத்துவ குழுமத்தில் பதிவு செய்திருக்க வேண்டும். | 15600–39100 + தர ஊதியம் 5400 மைய நாள் ஒவ்வோராண்டும் மே முதல் நாள் | 15600–39100 + தர ஊதியம் 5400 மைய நாள் ஒவ்வோ ராண்டும் ஏப்ரல் முதல் நாள் |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | **2)** தமிழ்நாடு அரசு கட்டுப்பாட்டில் உள்ள மற்ற மாநகராட்சிகள் அல்லது நகராட்சிகளில் பணிபுரியும் மருத்துவ அலுவலர்கள் பணி மாற்றம் மூலம் | **2)** தமிழ்நாடு அரசு கட்டுப் பாட்டில் உள்ள மற்ற மாநகராட்சி கள் அல்லது நகராட்சி களில் பணிபுரியும் மருத்துவ அலுவலர்கள் பணி மாற்றம் மூலம் | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்தால் வழங்கப்பட்ட எம்.பி.பி.எஸ். பட்டம் (அ) எம்.பி.பி.எஸ் பட்டத்துடன் மகப்பேறு படிப்பில் பட்டயம் அல்லது அதற்கு இணையான பட்டயம் பெற்றவர் களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். தமிழ்நாடு மருத்துவ குழுமத்தில் பதிவு செய்திருக்க வேண்டும். | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்தால் வழங்கப்பட்ட எம்.பி.பி.எஸ். பட்டம் (அ) எம்.பி.பி.எஸ் பட்டத்துடன் மகப்பேறு படிப்பில் பட்டயம் அல்லது அதற்கு இணையான பட்டயம் DCH., D.A.பெற்றவர் களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். தமிழ்நாடு மருத்துவ குழுமத்தில் பதிவு செய்திருக்க வேண்டும். | | |
| | | **3)** மாநில அரசின் கட்டுபாட்டில் உள்ள துறை மற்றும் நிறுவனங் களில் பணி புரிபவர்கள் அயற்பணி மூலம் | **3)** மாநில அரசின் கட்டுபாட்டில் உள்ள துறை மற்றும் நிறுவனங் களில் பணி புரிபவர்கள் அயற்பணி மூலம் | தமிழ்நாடு அரசு கட்டுப்பாட்டில் உள்ள துறையிலோ (அ) ஒரு நிறுவனத்திலோ **மருத்துவ அலுவலர்/ உதவி அறுவை மருத்துவ** அலுவலருக்கு இணையான பதவியில் பொறுப்பில் 2 ஆண்டுகளுக்கு குறையாது பணி புரிந்திருத்தல் வேண்டும். | தமிழ்நாடு அரசு கட்டுப்பாட்டில் உள்ள துறையிலோ (அ) ஒரு நிறுவனத்திலோ **மருத்துவ அலுவலர்/ உதவி அறுவை மருத்துவ** அலுவலருக்கு இணையான பதவியில் பொறுப்பில் 2 ஆண்டுகளுக்கு குறையாது பணி புரிந்திருத்தல் வேண்டும். | | |

| பதவி | | பணி நியமன முறை | | நிர்ணயிக்கப்படும் தகுதி | | ஊதிய விகிதம் (ம) மைய நாள் | |
|---|---|---|---|---|---|---|---|
| **நடைமுறையில் உள்ளது** | **மாற்றம் செய்ய வேண்டியது** | **நடைமுறையில் உள்ளது** | **மாற்றம் செய்ய வேண்டியது** | **நடைமுறையில் உள்ளது** | **மாற்றம் செய்ய வேண்டியது** | **நடைமுறையில் உள்ளது** | **மாற்றம் செய்ய வேண்டியது** |
| **மயக்க மருந்து அலுவலர் (Anaesthetist)** | **மயக்க மருந்து அலுவலர் (Anaesthetist)** | 1)மருத்துவ அலுவலர்/ உதவி அறுவை மருத்துவர் பதவியில் இருந்து **பணி மாற்றம் மூலம்** | 1)மருத்துவ அலுவலர்/ உதவி அறுவை மருத்துவர் பதவியில் இருந்து **பணி மாற்றம் மூலம்** | அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் அல்லது பல்கலைக் கழகத்தால் வழங்கப்பட்ட எம்.பி.பி.எஸ். பட்டம். அல்லது MBBS பட்டத்துடன் மயக்க மருந்தில் D.A படிப்பில் பட்டயம் அல்லது அதற்கு இணையான பட்டயம் பெற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.<br>மற்றும் D.A. Diploma in Anaesthesia படிப்பு தமிழ்நாடு மருத்துவ குழுமத்தில் பதிவு செய்திருக்க வேண்டும். | அங்கிகரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்தால் வழங்கப்பட்ட எம்.பி.பி.எஸ். பட்டம் மற்றும் D.A. Diploma in Anaesthesia<br>படிப்பு தமிழ்நாடு மருத்துவ குழுமத்தில் பதிவு செய்திருக்க வேண்டும். | **15600–39100 + தர ஊதியம் 5400**<br>மைய நாள் ஒவ்வோராண்டும் **ஜூலை முதல் நாள்** | **15600–39100 + தர ஊதியம் 5400**<br>மைய நாள் ஒவ்வோராண்டும் **ஜூலை முதல் நாள்** |
| | | **2) நேரடி நியமனம்**<br>**(35** வயதிற்குட்பட்டவராக இருக்க வேண்டும்) | **2) நேரடி நியமனம்**<br>**(35** வயதிற்குட்பட்டவராக இருக்க வேண்டும்) | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்தால் வழங்கப்பட்ட எம்.பி.பி.எஸ். பட்டம், மற்றும் மயக்க மருந்து நிபுணர் (Diploma in Anaesthesia) படிப்பில் பட்டயம் பயின்றிருக்க வேண்டும். தமிழ்நாடு மருத்துவ அவையில் பதிவு செய்திருக்க வேண்டும். | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்தால் வழங்கப்பட்ட எம்.பி.பி.எஸ். பட்டம், மற்றும் மயக்க மருந்து நிபுணர் (Diploma in Anaesthesia) படிப்பில் பட்டயம் பயின்றிருக்க வேண்டும். தமிழ்நாடு மருத்துவ அவையில் பதிவு செய்திருக்க வேண்டும். | | |
| | | 3) ) மாநில அரசின் கட்டுபாட்டில் உள்ள துறை மற்றும் நிறுவனங்களில் பணி புரிபவர்கள் அயற்பணி மூலம் | 3) ) மாநில அரசின் கட்டுபாட்டில் உள்ள துறை மற்றும் நிறுவனங்களில் பணி புரிபவர்கள் அயற்பணி மூலம் | தமிழ்நாடு அரசு கட்டுப்பாட்டில் உள்ள துறையிலோ அல்லது ஒரு நிறுவனத்திலோ **மயக்க மருந்து நிபுணருக்கு** இணையான பதவியில் பொறுப்பில் 2 ஆண்டுகளுக்கு குறையாது பணி புரிந்திருத்தல் வேண்டும். | தமிழ்நாடு அரசு கட்டுப்பாட்டில் உள்ள துறையிலோ அல்லது ஒரு நிறுவனத்திலோ **மயக்க மருந்து நிபுணருக்கு** இணையான பதவியில் பொறுப்பில் 2 ஆண்டுகளுக்கு குறையாது பணி புரிந்திருத்தல் வேண்டும். | | |

எனவே, வகுப்பு 1பி மற்றும் வகுப்பு 2–இல் உள்ள 5 வகை பதவிகளுக்குரிய பணி விதிகளை மற்றும் பதவி பெயர்களை மேற்கூறியவாறு மாற்றி அமைத்து சென்னை மாநகராட்சி, குடும்ப நலம் மகப்பேறு மற்றும் குழந்தை நலத்துறைக்கு பணி விதிகள் வெளியிடப்பட்டுள்ள அரசாணை (பல்வகை) எண்.161, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.3) துறை நாள் 28.8.98–ற்கு திருத்தம் பெறவும் ஆணை வேண்டி அரசுக்கு செயற்குறிப்பு அனுப்ப நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**பொ.து.ந.க.எண்.ஈ1 /20622/ 2014**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 23.07.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.401/2014 **பொருள் எண்.35**

**கண்காணிப்பு பொறியாளர் பதவிக்கான தெரிவு பட்டியலுக்கு அனுமதி**

சென்னை மாநகராட்சியில் கண்காணிப்பு பொறியாளர் பதவியில் ஏற்பட்டுள்ள/ஏற்படவுள்ள காலிப்பணியிடங்களை பதவி உயர்வின் மூலம் நிரப்ப 2014–2015 ஆம் ஆண்டிற்கான தெரிவுப்பட்டியல் 30.05.2014 நாளிட்ட மன்றத்தின் ஒப்புதல் பெற்று, 17.07.2014 நாளிட்ட 3 நபர்கள் கொண்ட தெரிவுப்பட்டியலுக்கு ஒப்புதல் வேண்டி அரசுக்கு செயற்குறிப்பு அனுப்பப்பட்டது.

சென்னை மாநகராட்சியில் கண்காணிப்பு பொறியாளர் பதவிக்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட 9 பணியிடங்களில் ( கண்காணிப்பு பொறியாளர் (மின்சாரம்) நீங்கலாக), தற்போது 6 நபர்கள் பணிபுரிந்து வருகிறார்கள்; தற்போது 3 காலிப்பணியிடங்கள் உள்ளன. கண்காணிப்பு பொறியாளர் பதவிக்கு ஊட்டப்பதவியான செயற் பொறியாளர் பதவியில் 6 ஆண்டு காலம் பணிபுரிந்திருக்க வேண்டும் என்று நிர்ணயிக்கப்பட்ட விதியை தளர்வு செய்து 2 ஆண்டுகள் பணி முடித்தவர்களை கொண்டு கண்காணிப்பு பொறியாளர் பதவிக்கு கடந்த பட்டியலாண்டில் தெரிவுப்பட்டியல் தயாரிக்கப்பட்டு, அரசின் ஒப்புதல் பெறப்பட்டது. இம்முறையும், 2 ஆண்டுகள் பணி முடித்த 3 நபர்களை கொண்டு கண்காணிப்பு பொறியாளர் பதவிக்கு தெரிவுப்பட்டியல் தயாரிக்கப்பட்டு, மன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்டு, அரசுக்கு செயற்குறிப்பு அனுப்பப்பட்டது.

சென்னை மாநகராட்சியில், கண்காணிப்பு பொறியாளர் பதவி மிகவும் பொறுப்பு வாய்ந்த பதவி என்பதாலும், கண்காணிப்பு பொறியாளர்கள் மிகவும் அத்தியாவசியமான பணிகளை மேற்கொள்வதாலும், இப்பட்டியலாண்டில் எழக்கூடிய 2 காலிப்பணியிடங்களையும், விதி தளர்வு செய்து, ஊட்டப்பதவியில் இரண்டாண்டு பணி நிறைவு செய்யாதவர்களைக் கொண்டு பதவி உயர்வு மூலம் நிரப்ப அவசியம் எழுந்துள்ளது.

எனவே, 2014–2015 ஆம் ஆண்டிற்கு, கண்காணிப்பு பொறியாளர் பதவிக்கு 01.02.2014ஐ மைய நாளாகக் கொண்டு தயாரிக்கப்படவேண்டிய திருத்திய தெரிவுப்பட்டியல் பின்வருமாறு அமைகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | பதவி உயர்வுக்கான பதவியின் பெயர் | கண்காணிப்புப் பொறியாளர் | | |
| 2 | மைய நாள் | 01.02.2014 | | |
| 3 | ஊதிய விகிதம் | ரூ.37400 – 67000 + தர ஊதியம் ரூ.8700 | | |
| 4 | ஊட்ட பதவியில் பெயர் மற்றும் தகுதிகள் | **அ) செயற் பொறியாளர் பதவியிலிருந்து பதவி உயர்வு மூலம்,**<br>**ஆ) செயற் பொறியாளர் பதவியில் 6 ஆண்டு காலம் பணி தகுதி பெற்றிருக்க வேண்டும்.**<br>**இ) அயற்பணியில் நியமனம்** | | |
| 5 | காலிப்பணியிட விவரம் | 1. அனுமதிக்கப்பட்ட பணியிடம் | – | 09 |
| | | (அ) தற்காலிக பணியிடம் | – | 00 |
| | | (ஆ) நிரந்தர பணியிடம் | – | 09 |
| | | 2. அனுமதிக்கப்பட்ட மொத்த பணியிடம் | – | 09 |
| | | 3. தற்பொது கண்காணிப்புப் பொறியாளராக பணிபுரிபவர்கள் | – | 07 |
| | | 4. அயற்பணி அடிப்படையில் நிரப்பப்பட்ட பணியிடம் | – | 01 |
| | | 5. மைய நாளில் ஏற்பட்ட காலிப்பணியிடம் | – | 00 |
| | | 6. 01.02.2014 முதல் 31.01.2015 வரை பட்டியல் ஆண்டில் பணியிலிருந்து ஓய்வு பெறுவதால் ஏற்படும் காலிப்பணியிடம் | – | 04 |
| | | 7. பதவி உயர்வு வழங்குவதால் ஏற்படும் காலிப்பணியிடம் | – | 01 |
| | | 8. 5 சதவீதம் விடுப்பு காலிப்பணியிடம் | – | 00 |
| | **மொத்த காலிப்பணியிடம்** | | **–** | **05** |
| 6 | கடந்த ஆண்டுக்கான தெரிவுப்பட்டியல் முழுமையாக பயன்படுத்தப்பட்டதா ? இல்லையெனில் காரணம். | | –ஆம்– | |

சென்னை மாநகராட்சியில் கண்காணிப்புப் பொறியாளர் பதவிக்கான தெரிவுப்பட்டியலுக்கு ஒப்புதல் அளிக்கும் அதிகாரம் மற்றும் பதவி உயர்வு அளித்து ஆணை வழங்கும் அதிகாரம் அரசின் வசம் உள்ளது.

சென்னை மாநகராட்சியில் செயற்பொறியாளர்/மண்டல அலுவலர் பதவியில் பணிபுரியும் அலுவலர்களின் முதுநிலை பட்டியல் பின்வருமாறு.

| வ. எண் | பெயர் திருவாளர்கள் மற்றும் பணிபுரியும் இடம் | செயற் பொறியாளர் பதவியில் சேர்ந்த நாள் | இரண்டு ஆண்டு பணி முடிக்கும் காலம் | ஓய்வு பெறும் நாள் | மைய நாளில் செயற் பொறியாளர் பதவியில் தற்போது வரை பணிபுரிந்துள்ள காலம் | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|
| 01 | எல்.ரட்சகர், செயற்பொறியாளர், பேருந்து சாலைகள், வட்டார துணை ஆணையர்(மத்தியம்) அலுவலகம். | 19.11.2010 | 19.11.2012 | | 3 வருடம் 3 மாதங்கள் | தனியர் மீது சென்னை மாநகராட்சி பணியமைப்பு (வகைப்பாடு, கட்டுப்பாடு மற்றும் மேல்முறையீடு) விதிகள் 1970 பிரிவு 10(b)வில் இன்றைய தேதியில் ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் உள்ளது. |
| 02 | எஸ்.இளஞ்செழியன், செயற்பொறியாளர், கட்டடம், பூங்கா மற்றும் அரங்கம் துறை, வட்டார துணை ஆணையர்(தெற்கு). | 01.03.2011 | 01.03.2013 | | 2 வருடம் 11 மாதங்கள் | தனியர் மீது சென்னை மாநகராட்சி பணியமைப்பு (வகைப்பாடு, கட்டுப்பாடு மற்றும் மேல்முறையீடு) விதிகள் 1970 பிரிவு 10(a)ன் கீழ் ஒழுங்கு நடவடிக்கையில் வழங்கப்பட்ட தண்டனை நிலுவையில் உள்ளது. மேலும் தண்டனையை எதிர்த்து அரசிடம் மேல்முறையீடு செய்து அம்மேல்முறையீடு அரசின் பரிசீலனையில் உள்ளது. இன்றைய தேதியில் ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் உள்ளது. |
| 03 | கே.முனியப்பன், செயற்பொறியளார், மண்டலம்–08. | 07.07.2011 | 07.07.2013 | 31.03.2014 | 2 வருடம் 6 மாதங்கள் | தனியர் 31.03.2014 அன்று வயது முதிர்வு ஒய்வில் சென்றுள்ளார். |
| 04 | ஆர்.வரதராஜன், மண்டல அலுவலர், மண்டலம்–15. | 07.07.2011 | 07.07.2013 | 30.04.2015 | 2 வருடம் 6 மாதங்கள் | தனியர் மீது சென்னை மாநகராட்சி பணியமைப்பு (வகைப்பாடு, கட்டுப்பாடு (ம) மேல்முறையீடு) விதிகள் 1970 பிரிவு10(a)ன் கீழ் தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கை கைவிடப்பட்டு, இன்றைய தேதியில் நிலுவை இல்லை. |
| 05 | பிரிஸ்சில்லா திலகராணி, செயற்பொறியாளர். | 18.01.2012 | 18.01.2014 | 30.04.2016 | 2 வருடம் | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 06 | எல்.கண்ணன், மண்டல அலுவலர், மண்டலம்–14. | 19.01.2012 | 19.01.2014 | 31.08.2015 | 2 வருடம் | |
| 07 | பி.டி.ராமன், செயற் பொறியாளர், நகரமைப்பு அமலாக்கம், வட்டார இணை ஆணையர் (தெற்கு) அலுவலகம் | 09.04.2012 | 09.04.2014 | | 1 வருடம் 9 மாதங்கள் | தனியர் மீது சென்னை மாநகராட்சி பணியமைப்பு (வகைப்பாடு, கட்டுபாடு மற்றும் மேல்முறையீடு) விதிகள் 1970 பிரிவு 10(பி)யில் இன்றைய தேதியில் ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் உள்ளதால், **தனியரின் பெயரை பட்டியலில் சேர்ப்பதை தவிர்க்கலாம்.** |
| 08. | ஆர்.சீனிவாசன், மண்டல அலுவலர், மண்டலம்–05. | 02.04.2012 | 02.04.2014 | **31.05.2023** | 1 வருடம் 9 மாதங்கள் | |
| 09. | எஸ். ராஜேந்திரன், மண்டல அலுவலர், மண்டலம்–07. | 02.04.2012 | 03.04.2014 | **28.02.2023** | 1 வருடம் 9 மாதங்கள் | |

மேற்கண்ட மண்டல அலுவலர்/செயற்பொறியாளர்களில் வரிசை எண்.1, 2, 4, 5 மற்றும் 6ல் உள்ளவர்கள் செயற்பொறியாளர் பதவியில் 2 ஆண்டு காலம் பணிமுடித்துள்ளனர். இதில் வரிசை எண்.1 மற்றும் 2ல் உள்ளவர்கள் மீது தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் உள்ளதால், அவர்களின் பெயர்களை இத்தெரிவுப்பட்டியலில் தவிர்க்கலாம், மேலும் வரிசை எண்.7ல் உள்ள நபர் பணிநிறைவு செய்யவில்லை என்ற போதிலும், தனியர் மீது கடும் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் உள்ளதால், இத்தனியரின் பெயரையும் தெரிவுப்பட்டியலில் தவிர்க்கலாம். அதில் வரிசை எண்.3ல் உள்ள திரு.கே.முனியப்பன், செயற்பொறியாளர் அவர்கள் 31.03.2014ல் வயது முதிர்வு அடிப்படையில் பணியிலிருந்து ஒய்வு பெற்றுள்ளார். வரிசை எண்.8 மற்றும் 9ல் உள்ள நபர்கள் செயற்பொறியாளர் பதவியில் 1 ஆண்டு 9 மாத காலம் பணிமுடித்துள்ளனர்.

மேற்கண்ட விவரங்களின் அடிப்படையில் கண்காணிப்புப் பொறியாளர் பதவிக்கு ஊட்டப்பதவியான செயற் பொறியாளர் பதவியில் உள்ளவர்களைக் கொண்டு பதவி உயர்வின் மூலம் நிரப்பப்படின், இப்பதவிக்கான தெரிவுப்பட்டியல் பின்வருமாறு அமைகிறது.

| வ. எண் | பெயர் திருவாளர்கள் மற்றும் பணிபுரியும் இடம் | செயற்பொறியாளர் பதவியில் சேர்ந்த நாள் | தெரிவுப்பட்டியலில் சேர்க்கலாமா | தெரிவுப்பட்டியலில் சேர்ப்பது மற்றும் தவிர்ப்பதற்கான காரணம்(ஆட்சேபணை ஏதேனும் இருப்பின்) |
|---|---|---|---|---|
| 01 | எல்.ரட்சகர், செயற்பொறியாளர், பேருந்து சாலைகள், வட்டார துணை ஆணையர்(மத்தியம்) அலுவலகம். | 19.11.2010 | இல்லை | தனியர் மீது சென்னை மாநகராட்சி பணியமைப்பு (வகைப்பாடு, கட்டுப்பாடு மற்றும் மேல்முறையீடு) விதிகள் 1970 பிரிவு 10(b)வில் இன்றைய தேதியில் ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் உள்ளதால் **தனியரின் பெயரை பட்டியலில் சேர்ப்பதை தவிர்க்கலாம்.** |
| 02 | எஸ்.இளஞ்செழியன், செயற்பொறியாளர், கட்டடம், பூங்கா மற்றும் அரங்கம் துறை, வட்டார துணை ஆணையர்(தெற்கு). | 01.03.2011 | இல்லை | தனியர் மீது சென்னை மாநகராட்சி பணியமைப்பு (வகைப்பாடு, கட்டுப்பாடு மற்றும் மேல்முறையீடு) விதிகள் 1970 பிரிவு 10(a)ன் கீழ் ஒழுங்கு நடவடிக்கையில் வழங்கப்பட்ட தண்டனை நிலுவையில் உள்ளது. மேலும் தண்டனையை எதிர்த்து அரசிடம் மேல்முறையீடு செய்து அம்மேல்முறையீடு அரசின் பரிசீலனையில் உள்ளது. இன்றைய |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | தேதியில் ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் உள்ளதால் **தனியரின் பெயரை பட்டியலில் சேர்ப்பதை தவிர்க்கலாம்.** |
| 03 | கே.முனியப்பன், செயற்பொறியாளா், மண்டலம்–08. | 07.07.2011 | இல்லை | தனியர் 31.03.2014 அன்று வயது முதிர்வு ஒய்வில் சென்றதால் **தனியரின் பெயரை தெரிவுப்பட்டியலில் சேர்ப்பதை தவிர்க்கலாம்.** |
| 04 | ஆர்.வரதராஜன், மண்டல அலுவலர், மண்டலம்–15. | 07.07.2011 | ஆம் | இவர் வரையறுக்கப்பட்டுள்ள பணி விதிகளின்படி வளர் நிலை பதவியில் பணிக்கால தகுதியினை தவிர பிற தகுதிகள் பெற்றுள்ளதாலும், தனியர் மீது 10(a)ன் கீழ் தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கை 12.06.2014 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி கைவிடப்பட்டது என்பதாலும், தனியர் மீது இன்றைய தேதியில் எவ்வித ஒழுங்கு நடவடிக்கைகள் நிலுவையில் இல்லை என்பதாலும், நிர்வாக நலன் கருதி ஊட்டப்பதவியில் ஆறு ஆண்டு காலம் பணித்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற விதியிலிருந்து தளர்வு வழங்கி **இவரது பெயரினை தெரிவுப்பட்டியலில் சேர்ப்பது குறித்து பரிசீலிக்கலாம்.** |
| 05 | பிரிஸ்சில்லா திலகராணி, செயற்பொறியாளர் பேருந்து சாலைகள் துறை. | 18.01.2012 | ஆம் | இவர் வரையறுக்கப்பட்டுள்ள பணி விதிகளின்படி வளர் நிலை பதவியில் பணிக்கால தகுதியினை தவிர பிற தகுதிகள் பெற்றுள்ளதாலும், தனியர் மீது இன்றைய தேதியில் எவ்வித ஒழுங்கு நடவடிக்கைகள் நிலுவையில் இல்லை என்பதாலும் நிர்வாக நலன் கருதி ஊட்டப்பதவியில் ஆறு ஆண்டு காலம் பணித்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற விதியிலிருந்து தளர்வு வழங்கி **இவரது பெயரினை தெரிவுப்பட்டியலில் சேர்ப்பது குறித்து பரிசீலிக்கலாம்.** |
| 06 | எல்.கண்ணன், மண்டல அலுவலர், மண்டலம்–14. | 19.01.2012 | ஆம் | இவர் வரையறுக்கப்பட்டுள்ள பணி விதிகளின்படி வளர் நிலை பதவியில் பணிக்கால தகுதியினை தவிர பிற தகுதிகள் பெற்றுள்ளதாலும், தனியர் மீது இன்றைய தேதியில் எவ்வித ஒழுங்கு நடவடிக்கைகள் நிலுவையில் இல்லை என்பதாலும் நிர்வாக நலன் கருதி ஊட்டப்பதவியில் ஆறு ஆண்டு காலம் பணித்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற விதியிலிருந்து தளர்வு வழங்கி **இவரது பெயரினை தெரிவுப்பட்டியலில் சேர்ப்பது குறித்து பரிசீலிக்கலாம்.** |
| 07 | பி.டி.ராமன், செயற் பொறியாளர், நகரமைப்பு அமலாக்கம், | 09.04.2012 | இல்லை | தனியர் மீது சென்னை மாநகராட்சி பணியமைப்பு (வகைப்பாடு, கட்டுபாடு மற்றும் மேல்முறையீடு) விதிகள் 1970 |

| | | | | |
|---|---|---|---|---|
| | வட்டார இணை ஆணையர் (தெற்கு) அலுவலகம் | | | பிரிவு 10(பி)யில் இன்றைய தேதியில் ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் உள்ளதால், **தனியரின் பெயரை பட்டியலில் சேர்ப்பதை தவிர்க்கலாம்.** |
| **08.** | ஆர்.சீனிவாசன், மண்டல அலுவலர், மண்டலம்–05. | 02.04.2012 | இல்லை | இவர் வரையறுக்கப்பட்டுள்ள பணி விதிகளின்படி வளர் நிலை பதவியில் பணிக்கால தகுதியினை தவிர பிற தகுதிகள் பெற்றுள்ளதாலும், தனியர் மீது இன்றைய தேதியில் எவ்வித ஒழுங்கு நடவடிக்கைகள் நிலுவையில் இல்லை என்பதாலும் நிர்வாக நலன் கருதி ஊட்டப்பதவியில் ஆறு ஆண்டு காலம் பணித்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற விதியிலிருந்து தளர்வு வழங்கி **இவரது பெயரினை தெரிவுப்பட்டியலில் சேர்ப்பது குறித்து பரிசீலிக்கலாம்.** |
| **09.** | எஸ். ராஜேந்திரன், மண்டல அலுவலர், மண்டலம்–07. | 02.04.2012 | இல்லை | இவர் வரையறுக்கப்பட்டுள்ள பணி விதிகளின்படி வளர் நிலை பதவியில் பணிக்கால தகுதியினை தவிர பிற தகுதிகள் பெற்றுள்ளதாலும், தனியர் மீது இன்றைய தேதியில் எவ்வித ஒழுங்கு நடவடிக்கைகள் நிலுவையில் இல்லை என்பதாலும் நிர்வாக நலன் கருதி ஊட்டப்பதவியில் ஆறு ஆண்டு காலம் பணித்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற விதியிலிருந்து தளர்வு வழங்கி **இவரது பெயரினை தெரிவுப்பட்டியலில் சேர்ப்பது குறித்து பரிசீலிக்கலாம்.** |

கடந்த 2013–2014ஆம் ஆண்டிற்கான கண்காணிப்புப் பொறியாளர் பதவிக்கான தெரிவுப்பட்டியல் தயாரித்து மன்றத்தின் ஒப்புதல் பெற்று அரசுக்கு செயற்குறிப்பு அனுப்பி அரசாணை (ப) எண்.11, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(மா.ந.3) துறை, நாள்:13.01.2014ல் 2013–2014 கண்காணிப்புப் பொறியாளர் தேர்ந்தப்பட்டியலில், ஊட்டப்பதவியான செயற்பொறியாளர் பதவியில் 6 ஆண்டுகள் பணிபுரிந்திருக்க வேண்டும் என்ற விதியை 2 ஆண்டுகளாக தளர்வு செய்து, 2013–2014ஆம் ஆண்டிற்கான கண்காணிப்புப் பொறியாளர் பதவிக்கான தேர்ந்த பெயர்ப்பட்டியலுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சியில் கண்காணிப்புப் பொறியாளர் பதவி மிகவும் பொறுப்புமிக்க பதவி என்பதாலும், இப்பதவியில் ஏற்கனவே பணிபுரிந்துவரும் 5 கண்காணிப்பு பொறியாளர்கள் இப்பட்டியலாண்டில் ஒய்வு பெறுகின்ற படியாலும், இப்பதவியை நிரப்ப வேண்டிய அவசியம் கருதி கண்காணிப்புப் பொறியாளர் பணி விதிகளில் நிர்ணயிக்கப்பட்டுள்ள ஊட்டப்பதவியில் ஆறு ஆண்டு காலம் பணிபுரிந்திருக்க வேண்டும் என்ற நிபந்தனையை, மேலே சொல்லப்பட்ட காரணங்களின் அடிப்படையில், இவ்வாண்டும் விதிதளர்வு செய்து 2 ஆண்டுகள் பணிநிறைவு செய்தவர்களையும், 2 ஆண்டுகள் பணிநிறைவு செய்யாதவர்களையும் கொண்டு தயாரிக்கப்பட்ட தெரிவுப்பட்டியலுக்கு அனுமதி வேண்டப்படுகிறது.

எனவே, கீழ்காணும் இனங்களுக்கு நியமனக்குழு மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு அரசின் ஆணை வேண்டி 17.07.2014 நாளிட்ட செயற்குறிப்பு அரசுக்கு அனுப்பப்பட்டது.

1. 2014–2015 ஆம் ஆண்டிற்கு கண்காணிப்பு பொறியாளர் பதவிக்கு 3 நபர்கள் கொண்டு தயாரிக்கப்பட்ட தெரிவுப்பட்டியலுக்கு ஒப்புதல் பெறும் பொருட்டு அரசுக்கு அனுப்பப்பட்ட பிரேரணையை திரும்பபெறுவது குறித்தும்,

2 கண்காணிப்பு பொறியாளர் பதவி உயர்வுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள ஊட்டப்பதவியில் 6 ஆண்டுகாலம் பணிபுரிந்திருக்க வேண்டும் என்ற விதியிணை தளர்வு செய்து கீழ்கண்ட 5 நபர்களை கொண்ட கண்காணிப்புப் பொறியாளர் பதவிக்கான திருத்திய தெரிவுப்பட்டியலுக்கு மன்றத்தின் பின்னேற்புக்குட்பட்டு, அரசின் ஒப்புதல் வேண்டியும்,

| வ. எண் | பெயர் திருவாளர்கள் மற்றும் பணிபுரியும் இடம் | செயற்பொறியாளர் பதவியில் சேர்ந்த நாள் |
|---|---|---|
| 01 | ஆர்.வரதராஜன்,<br>மண்டல அலுவலர்,<br>மண்டலம்–15. | 07.07.2011 |
| 02 | பிரிஸ்சில்லா திலகராணி,<br>செயற்பொறியாளர்<br>(தற்போது மண்டல அலுவலர்),<br>பேருந்து சாலைகள் துறை. | 18.01.2012 |
| 03 | எல்.கண்ணன்,<br>மண்டல அலுவலர்,<br>மண்டலம்–14. | 19.01.2012 |
| 04 | ஆர்.சீனிவாசன்,<br>மண்டல அலுவலர்,<br>மண்டலம்–05 | 02.04.2012 |
| 05. | எஸ்.ராஜேந்திரன்,<br>மண்டல அலுவலர்,<br>மண்டலம்–07 | 03.04.2012 |

3. மேற்படி தெரிவுப்பட்டியலின் ஒப்புதலுக்குட்பட்டு அடுத்து வரும் மைய நாளுக்கு முன்பு ஏற்படவுள்ள காலிப்பணியிடங்களை தேர்ந்த இப்பெயர் பட்டியலில் உள்ளவர்களுக்கு ரூ.37400 – 67000 + தர ஊதியம் ரூ.8700 என்ற ஊதிய விகிதத்தில் கண்காணிப்புப் பொறியாளர்களாக பதவி உயர்வு வழங்கவும்;

எனவே, மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு, 2014–15 ஆம் ஆண்டிற்கான கண்காணிப்பு பொறியாளர் பதவிக்கு திருத்திய தெரிவுப்பட்டியலை அரசுக்கு அனுப்பியதற்கு, நியமனக்குழு மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டப்படுகிறது.

‘‘ இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது’’

‘‘ஏற்கனவே 30.05.2014 அன்று நிறைவேற்றப்பட்ட மன்றத் தீர்மானத்தின்படி அரசாணை பெறப்பட்டுள்ளதால் தற்போது அவ்வரசாணைபடி கோப்பினை மீள சமர்ப்பிக்கப்படுவதற்காக இப்பொருள் ஒத்தி வைக்கப்படுகிறது.’’

**<u>சு.து.ந.க.எண். சி1/ 4423/2011</u>**

**<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 23.07.2014 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.402/2014 **பொருள் எண்.36**

**<u>சென்னை மாநகராட்சியில் காலியாக உள்ள மண்டல சுகாதார அலுவலர் 6 பணியிடங்களை மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்திலிருந்து தகுதி உள்ள நபர்களை கொண்டு நேரடி நியமனம் செய்ய அனுமதி</u>**

சென்னை மாநகராட்சி பொது சுகாதாரத்துறையில் ஒப்பளிக்கப்பட்ட மண்டல சுகாதார அலுவலர் பணியிடங்கள் 17 ஆகும். இதில் 6 சுகாதார அலுவலர்கள் பணியிடங்கள் காலியாக உள்ளது. அரசாணை எண்: 91 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 28.05.98 மண்டல சுகாதார அலுவலர் பணிநியமனம் மற்றும் கல்வித்தகுதிகள் பின்வருமாறு வரையறுக்கப்பட்டுள்ளது.

| பதவியின் பெயர் மற்றும் ஊதிய விகிதம் | நியமனமுறை | கல்வித்தகுதி |
|---|---|---|
| மண்டல சுகாதார அலுவலர் 15,600–39100 + 5,700 தர ஊதியம் | நேரடி நியமனம் | 1. M.B.B.S Degree with Diploma in Public Health<br>2. A Pass in Account test for executive officer (Only after the joining the service) |

மேற்கண்ட பணிவிதிகளின் படி 6 மண்டல சுகாதார அலுவலர்களின் பணியிடங்களை நிரப்பிட இன சுழற்சியினை பின்பற்றி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திலிருந்து நபர்கள் பட்டியல் கோரப்பட்டு 16 பதிவுதாரர்கள் அடங்கிய பட்டியல் பெறப்பட்டது. பட்டியலில் கண்டுள்ள பதிவுதாரர்கள் 01.07.2014 அன்று காலை 10.00 மணிக்கு நேர்காணல் மற்றும் சான்றிதழ் சரிபார்ப்பிற்கு வரும்படி பதிவு அஞ்சல் மூலம் அழைப்பு விடப்பட்டது. அவ்வாறு அழைப்பு விடப்பட்டதில் நேர்காணல் மற்றும் சான்றிதழ் சரிபார்ப்பிற்கு 01.07.2014 அன்று பின்வரும் 6 நபர்கள் கலந்துக் கொண்டனர்.

| வ. எண் | பெயர் மற்றும் முகவரி | மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலக பதவு எண் மற்றும் தேதி | கல்வித்தகுதி | பிறந்த தேதி மற்றும் இனம் |
|---|---|---|---|---|
| 1. | எஸ். பிரியதர்ஷினி,<br>சங்கீதா அப்பார்ட்மெண்ட்ஸ்,<br>நெ.13, கார்ட் டிராக் ரோடு,<br>வேளச்சேரி,<br>சென்னை–600 042 | CHD2010F00050376<br>Date:18.07.2013 | MBBS, MD Community Medicine | 24.05.1986<br>SC W.N.P |
| 2. | கே. மார்கரெட் புனிதா,<br>2H, 5th பிளாக் ,<br>ராணி மெய்யம்மைடார்ஸ், MRC நகர், ஆர். ஏ. புரம்,<br>சென்னை 600 028. | CHP2014F00003905<br>Date:06.09.2013 | MBBS, MD Community Medicine | 28.11.72<br>BC (OC W.N.P) |
| 3. | எஸ். கதிர்வேல்,<br>G1/100–1, சன்னா சிட்டி,<br>சதுமுகை போஸ்ட்,<br>சத்தி – ஈரோடுமாவட்டம்,<br>பின்கோடு–638 503. | MDP2009M00005727<br>Date: 29.01.2014 | MBBS, MD Community Medicine | 28.03.1985<br>BC (OC G.N.P) |
| 4. | மு. சந்தோஷ் குமார்,<br>கூடக்குத் தெரு,<br>வி. மாமமந்தூர், திட்டக்குடி தாலுக்கா, கடலூர் மாவட்டம்<br>பின்கோடு – 606301 | CHP2014M00002842<br>Date:01.02.2014 | MBBS, MPH | 12.05.1985<br>BC G.N.P. |
| 5. | லீனா சார்லெட்,<br>12/95 கிரீன் ஹவுஸ்,<br>குப்பியறை போஸ்ட்,<br>கல்குளம், கன்னியாகுமரி,<br>பின்கோடு – 629 156. | MDP2010F0018856<br>Date:21.02.2014 | MBBS, MD Community Medicine | 31.03.1986<br>BC (OC W.N.P) |

| | | | | |
|---|---|---|---|---|
| 6. | ஆர். ரமா,<br>பிளாட் நெ. 204, I பிளாக் ,<br>42வது தெரு,<br>6வது அவன்வியூ,<br>அண்ணா நகர் மேற்கு<br>சென்னை 600 040. | CHP2014F00004522<br>Date:21.02.2014 | MBBS, MD<br>Community<br>Medicine | 26.08.1986<br>GT W.N.P. |

துணை இயக்குநர், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் கிண்டி அவர்களின் கடிதத்தில் மண்டல சுகாதார அலுவலர் பதவிக்கு அனுப்பப்பட்ட பெயர் பட்டியலில் இனசுழற்சியில் முன்னுரிமையுள்ளவர் இல்லாத பட்சத்தில் முன்னுரிமையற்ற நபர்களை சேர்த்து கொள்ளலாம் என தெரிவித்துள்ளார். மேலும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு (பொது) இனப்பிரிவில் எவரும் இல்லாத பட்சத்தில் பொது போட்டி (பெண்கள்) (முன்னுரிமை அற்றவர்) இனச்சுழற்சிக்கு வழங்கப்பட்ட பட்டியலிருந்து முதுநிலையில் உள்ளவரை தேர்ந்தெடுத்து நியமனம் செய்யலாம் என மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ளபடி 01.07.2014 அன்று நேர்க்காணல் மற்றும் சான்றிதழ் சரிபார்ப்பிற்கு கலந்துக்கொண்ட நபர்களில் பின்வரும் இன சுழற்சியை பின்பற்றி மண்டல சுகாதார அலுவலர்களாக பணி நியமனம் செய்யப்பட வேண்டும்.

| வ. எண் | இனம் | கோரப்பட்ட இன சுழற்சி எண்ணிக்கை | பெறப்பட்ட இன சுழற்சி எண்ணிக்கை | நேர்காணல் கலந்து கொண்டவர்கள் இன சுழற்சி எண்ணிக்கை | தேர்வு செய்யப்பட வேண்டிய இன சுழற்சி |
|---|---|---|---|---|---|
| 1 | பொதுப் போட்டி முன்னுரிமை பெற்றவர் | 1 | NP- 1 | 1 | பொதுப் போட்டி முன்னுரிமையற்றவர் |
| 2 | ஆதி திராவிடர் (முன்னுரிமை அடிப்படையில் அருந்ததியினர்) பெண் / ஆதரவற்ற விதவை (முன்னுரிமை பெற்றவர்) | 1 | இல்லை | இல்லை | இல்லை |
| 3 | மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் (முன்னுரிமை பெற்றவர்) | 1 | NP- 3 | இல்லை | இல்லை |
| 4 | பிற்படுத்தப்பட்டோர் (முஸ்ஸிம்கள் தவிர) முன்னுரிமை பெற்றவர் | 1 | NP- 6 | 1 | பிற்படுத்தப்பட்ட முஸ்ஸிம்கள் தவிர முன்னுரிமையற்றவர் |
| 5 | பொது போட்டி முன்னுரிமை அற்றவர் பெண்கள் / ஆதரவற்ற விதவை | 1 | NP (W)-4 | 3 | பொதுப் போட்டி முன்னுரிமையற்றவர் (பெண்கள்) |
| 6 | ஆதி திராவிடர் (முன்னுரிமை பெற்றவர்) | 1 | NP- 2 | 1 | ஆதி திராவிடர் முன்னுரிமையற்றவர் |

மேற்கண்ட பட்டியலில் கண்டுள்ளவாறு இனச்சுழற்சி முறையில் மண்டல சுகாதார அலுவலர்களாக தேர்வு செய்யப்பட வேண்டிய நபர்களுக்கு இப்பதவிக்கான காலமுறை ஊதிய விகிதம் ரூ.15600 – 39100 – 5700 தர ஊதியத்தில் மற்றும் இதர படிகளுடன் வழங்கப்பட வேண்டும்.

இன சுழற்சி முறையை பின்பற்றி மண்டல சுகாதார அலுவலர்களாக பணி நியமனம் செய்யப்பட வேண்டிய நபர்களின் பட்டியல்

| வ. எண் | இன சுழற்சி எண் | பெயர் மற்றும் முகவரி | மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலக பதிவு எண் மற்றும் தேதி | கல்வித் தகுதி | பிறந்த தேதி வயது மற்றும் இனம் |
|---|---|---|---|---|---|
| 1. | 4 | லீனா சார்லெட்,<br>12/95 கிரீன் ஹவுஸ்,<br>குப்பியறை போஸ்ட்,கல்குளம்,<br>கன்னியாகுமரி– 629 156. | MDP2010F0018856<br>Date:21.02.2014 | MBBS, MD<br>Community<br>Medicine | 31.03.1986<br>27<br>BC<br>(GT W.N.P) |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2. | 6 | எஸ். பிரியதர்ஷினி,<br>சங்கீதா அப்பார்ட்மெண்ட்ஸ்,<br>நெ.13, கார்ட் டிராக் ரோடு,<br>வேளச்சேரி,<br>சென்னை–600 042 | CHD2010F00050376<br>Date:18.07.2013 | MBBS, MD<br>Community<br>Medicine | 24.05.1986<br>27<br>SC W.N.P |
| 3. | 1 | எஸ். கதிர்வேல்,<br>G1/100–1, சன்னா சிட்டி,<br>சதுமுகை போஸ்ட்,<br>சத்தி – ஈரோடு மாவட்டம்,<br>பின்கோடு–638 503. | MDP2009M00005727<br>Date: 29.01.2014 | MBBS, MD<br>Community<br>Medicine | 28.03.1985<br>29<br>G.T.G.(N.P) |
| 4. | 5 | கே. மார்கரெட் புனிதா,<br>2H, 5th பிளாக் ,<br>ராணி மெய்யம்மை டார்ஸ்,<br>MRC நகர், ஆர். ஏ. புரம்,<br>சென்னை–600 028. | CHP2014F00003905<br>Date:06.09.2013 | MBBS, MD<br>Community<br>Medicine | 28.11.72<br>41<br>(GT Women<br>N.P) |

பின்வரும் பட்டியலில் இடம் பெற்றுள்ள நேர்காணல் மற்றும் சான்றிதழ் சரிப்பார்ப்பில் கலந்து கொண்ட கீழ்கண்ட நபரை பொது சுகாதாரத்துறையில் அவசரம் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டு மண்டல சுகாதார அலுவலராக பணி நியமனம் செய்திட காத்திருப்போர் பட்டியலில் வைக்கலாம். .

| வ. எண் | பெயர் மற்றும் முகவரி | மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலக பதவு எண் மற்றும் தேதி | கல்வித்தகுதி | பிறந்த தேதி மற்றும் இனம் |
|---|---|---|---|---|
| 1. | ஆர். ரமா,<br>பிளாட் நெ. 204, I பிளாக்<br>42வது தெரு,<br>6வது அவன்வியூ,<br>அண்ணா நகர் மேற்கு<br>சென்னை 600 040. | CHP2014F00004522<br>Date:21.02.2014 | MBBS, MD<br>Community<br>Medicine | 26.08.1986<br>27<br>GT W.N.P. |

மேற்கண்ட பட்டியலில் மண்டல சுகாதார அலுவலர்களாக தேர்வு செய்யப்பட்ட நபர்களின் கல்வி தகுதி DPH இல்லாத பட்சத்தில் அதற்கு இணையான கல்வித்தகுதியான MD Community Medicine தேர்ச்சி பெற்றுள்ளதால் மண்டல சுகாதார அலுவலர் பதவிக்கு தேர்வு செய்திடலாம்,

எனவே,

1. மேலே பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள நான்கு நபர்களை காலமுறை ஊதிய விகிதம் ரூ.15600 – 39100 – 5700 தர ஊதியத்தில் மற்றும் இதர படிகளுடன் மண்டல சுகாதார அலுவலர்களாக பணி நியமனம் செய்யவும்.
2. மேற்கண்ட தேர்வு பட்டியலில் வ. எண். 4ல் இடம் பெற்றுள்ள டாக்டர் கே. மார்கரெட் புனிதா அவர்கள் அரசு பணிக்களுக்கான வயது வரம்பை கடந்துள்ளதால் இதன் பொருட்டு வயது தளர்வாணைக்குட்பட்டு, பணிநியமனம் செய்யவும்.
3. டாக்டர். ஆர். ரமா, அவர்களை காத்திருப்போர் பட்டியலில் வைக்கவும் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

“ இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**சு.து.ந.க.எண்.சி1/3651/2014**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 23.07.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.403/2014 **பொருள் எண்.37**

**முதுநிலை பகுப்பாய்வாளர் பதவிக்கான தெரிவு பட்டியலுக்கு அனுமதி**

சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரத்துறையின் கீழ் இயங்கும் பொது பகுப்பாய்வுக் கூடத்தில் ஒப்பளிக்கப்பட்ட முதுநிலை பகுப்பாய்வாளர் பணியிடங்கள் இரண்டாகும். அதில் திருமதி வீமாரியம்மாள், முதுநிலை பகுப்பாய்வாளர் என்பவர் 30.04.2011 அன்று ஓய்வு பெற்றதாலும், திருமதி ஏ. ஷகிதா பேகம், முதுநிலை பகுப்பாய்வாளர் என்பவர் 31.12.2013 அன்று ஓய்வு பெற்றதாலும் ஏற்பட்ட காலிப் பணியிடங்கள் நிரப்பப்பட வேண்டும்.

முதுநிலை பகுப்பாய்வாளர் பதவியில் ஊதிய விகிதம் ரூ.15600–39100+5400 தர ஊதியமாகும். இவ்வூதிய விகிதத்தின்படி, இப்பதவி சென்னை மாநகராட்சியில் வகுப்பு–2ம் நிலையில் வகைப்படுத்தப்பட வேண்டும். இதனால் இப்பதவியினை சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரம் மற்றும் மருத்துவ பணிவிதிகளில் (அரசாணை எண்.91, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 28.05.1998ல்) சேர்க்க மன்ற தீர்மான எண்.577/2012 நாள்.27.12.2012–ன் வாயிலாக அனுமதி பெற்று அரசாணை வேண்டி அரசுக்கு 15.01.2013 தேதியிட்டு செயற்குறிப்பு அனுப்பப்பட்டு அரசாணை எதிர் நோக்கப்பட்டு வருகிறது.

இப்பதவியினை பதவி உயர்வின் மூலம் நிரப்பிட மைய நாள் ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி முதல் நாளாகும். இப்பதவிக்கான நியமன முறை மற்றும் கல்வித் தகுதிகள் பின்வருமாறு வரையறுக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | பதவியின் பெயர் (ம) ஊதிய விகிதம் | நியமன முறை | நிர்ணயிக்கப்பட்டுள்ள கல்வித் தகுதிகள் |
|---|---|---|---|
| 1 | முதுநிலை பகுப்பாய்வாளர் ரூ.15600–39100+5400 தர ஊதியம் (வகுப்பு–2) | 1) இளநிலை பகுப்பாய்வாளர் பணியிடத்திலிருந்து பதவி உயர்வின் மூலம்.<br>2) மாநில அரசிலிருந்து அயற்பணி மூலம்.<br>3) நேரடி நியமனம் | அரசால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலை கழகத்திலிருந்து பெற்றதொரு முதுகலை பட்டம் (வேதியியல்) அல்லது உயிர் வேதியியல் அல்லது பால்பண்ணை (வேதியியல்) உணவுத் தொழில் நுட்பம்(நுண்ணுயிரியல்) அல்லது உணவு மற்றும் மருந்துகள் தொழில்நுட்பம், செயல் அலுவலர்களுக்கான கணக்கு தேர்வில் தேர்ச்சி |

சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரத்துறை பொது பகுப்பாய்வு கூடத்தில் இளநிலை பகுப்பாய்வாளர்களாக பணிபுரிந்து வருபவர்களின் விவரம். பின் வருமாறு:

| வ. எண் | பெயர் மற்றும் பதவி | தற்போதைய பதவியில் பணியில் சேர்ந்த நாள் | கல்வி தகுதி |
|---|---|---|---|
| 1. | திரு. ஷேக் சுல்தான் அகமது | 26.07.2000 | B.Sc., (Chemistry)<br>M.Sc., (Chemistry) |
| 2. | திருமதி. என். டி. கவிதா | 28.07.2000 | B.Sc., (Chemistry) |

மேற்கண்ட வரிசை எண். 1ல் உள்ள திரு. ஷேக் சுல்தான் அகமது இளநிலை பகுப்பாய்வாளர் அவர்கள் வரைவு துணை விதிகளின்படி முதுநிலை பகுப்பாய்வாளருக்கான கல்வித் தகுதியான M.Sc., (Chemistry) பெற்றிருக்கிறார். இவர் மீது துறை சார்ந்த ஒழுங்கு நடவடிக்கை ஏதுமில்லை என்பதால் இவரது பெயரை முதுநிலை பகுப்பாய்வாளருக்கான தெரிவுப்பட்டியலில் சேர்க்கலாம். வரிசை–2ல் உள்ள திருமதி. என்டி.கவிதா இளநிலை பகுப்பாய்வாளர் அவர்கள் முதுநிலை பகுப்பாய்வாளருக்கான பணி நியமன விதி முறைகளின் படி கல்வி தகுதி பெற்றிருக்கவில்லை என்பதால் இவரது பெயரை பரிசீலிக்க இயலாது.

எனவே திரு. ஷேக் சுல்தான் அகமது அவர்களின் பெயரைக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள பகுப்பாய்வாளர் பதவிக்கான தெரிவுப்பட்டியலுக்கு ஒப்புதல் அளிக்கவும், தெரிவுப்பட்டியலில் கண்டுள்ள இவருக்கு பதவி உயர்வு வழங்கவும் நியமனக்குழு மூலம் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**சு.து(ம)ந.க.எண்.எம்.2/2160/2013**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 23.07.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.404/2014 **பொருள் எண்.38**

**வயது முதிர்வு ஓய்வு அனுமதி**

சென்னை மாநகராட்சி சுகாதாரத்துறை (மலேரியா) பிரிவில் தலைமை பூச்சி தடுப்பு அலுவலர் வகுப்பு 1 –B ஆக பணி புரியும் திருமதி. C.கலை அமுதா, அவர்கள் 03.12.2013 நாளிட்ட பொதுத் துறை சுற்றறிக்கையின்படி 31.7.2014 பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வு பெறவுள்ளார்.

திருமதி C.கலை அமுதா, தலைமை பூச்சி தடுப்பு அலுவலர் அவர்களது பிறந்த தேதி 12.07.1956 என்பதால், இவருடைய வயது முதிர்வு ஓய்வு 31.07.2014 அன்று பிற்பகல் ஆகும்.

திருமதி.C.கலைஅமுதா அவர்கள் சென்னை மாநகராட்சி சுகாதாரத்துறை (மலேரியா) பிரிவில் 22.12.1982 முதல் பூச்சியியல் உதவியாளராக பணி நியமனம் செய்யப்பட்டார். இவருக்கு பூச்சியியல் உதவியாளர் பதவியில் 22.12.1982 முதல் பணிவரன் முறைப்படுத்தப்பட்டு உள்ளது. 22.12.1984முதல் தகுதி காண் பருவம் முடித்தவராக அறிவிக்கப்பட்டுள்ளார்.

மேலும் தனியர் 23.10.2007 முதல் முதுநிலை பூச்சியியலராக பதவி உயர்வு பெற்றார். இவருக்கு முதுநிலை பூச்சியியலர் பதவியில் 23.10.2007 முதல் பணிவரன் முறைப்படுத்தப்பட்டுள்ளது. பின்னர் தனியர் தலைமை பூச்சி தடுப்பு அலுவலராக பதவி உயர்வு பெற்று 3.3.2014 பிற்பகல் பணியில் சேர்ந்துள்ளார்.

திருமதி.C.கலைஅமுதா, தலைமை பூச்சி தடுப்பு அலுவலர் அவர்கள் பணிக்காலத்தில் புதிய மண்டலம்–10, 11, 13 சுகாதாரத்துறை (மலேரியா) தலைமையிடம் ஆகியவற்றில் பணி செய்துள்ளார்.

மண்டலம்–10, 13ல் தனியர் மீது தணிக்கை தடை நேர் செய்யப்படாத முன் பணம் மற்றும் ஒழுங்கு நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லை எனவும் மேலும் பின்னர் தெரியவரின், ஓய்வூதிய பயன்களில் பிடித்தம் செய்யலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மண்டலம்–11ல் பணியாற்றிய காலத்திற்கான தணிக்கை தடை இன்னும் முடிவு பெறாமல் உள்ள நிலையில் பின்னர் தணிக்கை தடை, நிதி இழப்பீடு இருப்பது தெரியவரின் அவற்றிற்கு தனியரை பொறுப்பாக்கி நிதி இழப்பு தொகையை பணிக்கொடை மற்றும் ஓய்வூதிய அகவிலைப்படியிலிருந்து பிடித்தம் செய்து கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளலாம் என்ற நிபந்தனையுடன் தடையின்மை சான்று அளிக்கப்பட்டுள்ளது. மேலும் இவ்வறிக்கையையும், நேர் செய்யப்படாத முன்பணம் மற்றும் ஒழுங்கு நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லை என சான்றளிக்கப்பட்டுள்ளது.

இவர் தலைமையிடத்தில் இளநிலை பூச்சியியலர் ஆகவும் தலைமை பூச்சி தடுப்பு அலுவலராகவும் பணிபுரிந்த காலத்தில் இவர்மீது ஒழுங்கு நடவடிக்கை, தணிக்கை தடை மற்றும் நேர்செய்யப்படாத முன்பணம் எதுவும் நிலுவையில் இல்லை என சான்றளிக்கப்படுகிறது.

சென்னை மாநகராட்சி, விழிப்பு அலுவலர் அவர்களின் 8.7.14 நாளிட்ட கடிதத்தில் தனியர் மீது விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என தெரிவித்துள்ளார்.

தனியர் வகிக்கும் பதவி வகுப்பு –1Bன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளதால் தனியரை 31.07.2014 அன்று பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி பெறப்பட வேண்டும்.

எனவே, திருமதி. C. கலைஅமுதா, தலைமை பூச்சி தடுப்பு அலுவலர் சுகாதாரத்துறை (மலேரியா) பிரிவு அவர்களை சென்னை மாநகராட்சிக்கு நிதி இழப்பீடு தொடர்பான தணிக்கை தடைகள் மற்றும் நீண்ட கால முன்பணத் தொகை சரி செய்யப்படாமல் இருப்பது பின்னர் தெரியவரின் அத்தொகைக்கு தனியரை பொறுப்பாக்கி அவரது ஓய்வூதிய பணப்பயன்களில் பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டு 31.07.2014 பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**செ.மா.வ.வ.அ.ந.க.எண்/அ1/ 2611/ 2014**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 25.07.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.405/2014 **பொருள் எண்.39**

**வயது முதிர்வு ஓய்வு பின்னேற்பு அனுமதி**

திரு. பிட்டி ஓம்காரம், உதவி செயற்பொறியாளர், வட்டார துணை ஆணையர் (வடக்கு) அலுவலகம், அவர்கள் வயது முதிர்வு காரணமாக 30.04.2014 பிற்பகல் முதல் ஓய்வு பெற்றார்.

திரு.பிட்டி ஓம்காரம், அவர்கள் சென்னை மாநகராட்சியில் தலைமை வரைவாளராக 26.11.1980 அன்று பணியில் சேர்ந்துள்ளார். பின்னர் உதவி செயற்பொறியாளராக பதவி உயர்வு பெற்று 16.05.2013 முதல் வட்டார துணை ஆணையர் (வடக்கு) அலுவலகத்தில் பணிபுரிந்து வந்தார்.

மேலும் தனியர் சென்னை மாநகராட்சியில் பணிபுரிந்த அனைத்து துறை மண்டலங்களிலிருந்து தனியரை பொறுப்பாக்கும் தணிக்கைத்தடை மற்றும் முன்பணங்கள் / அலுவலக முன்பணங்கள் நேர் செய்யப்படாத விவரங்கள் மற்றும் ஒழுங்கு நடவடிக்கைகள் ஏதும் நிலுவையில் இல்லை என சான்றுகள் பெறப்பட்டுள்ளது.

**அட்டவணை**

| வ.எண் | பதவி | துறை/மண்டலம் | பணிபுரிந்த காலம் |
|---|---|---|---|
| 01 | தலைமை வரைவாளர் | கட்டிடத்துறை | 26.11.1980–26.06.1989 |
| 02 | இளநிலை பொறியாளர் | பணித்துறை (TEAMC) | 27.06.1989–05.11.1991 |
| 03 | இளநிலை பொறியாளர் | பழைய மண்டலம்–8<br>புதியமண்டலம்–10 | 06.11.1991.–05.05.1993 |
| 04 | இளநிலை பொறியாளர் | பழைய மண்டலம்–6<br>புதியமண்டலம்–9 | 06.05.1993.–09.02.1996 |
| 05 | இளநிலை பொறியாளர் | பழைய மண்டலம்–2<br>புதியமண்டலம்–5 | 09.02.1996.–15.12.2009 |
| 06 | இளநிலை பொறியாளர் | பேருந்துசாலைகள் துறை | 16.12.2009–15.05.2013 |
| 07 | உதவி செயற்பொறியாளர் | வடக்குவட்டார<br>அலுவலகம் | 16.05.2013–30.04.2014 |

திரு.பிட்டி ஓம்காரம், உதவி செயற்பொறியாளர், அவர்கள் மீது இன்றைய தேதியில் சென்னை மாநகராட்சி விழிப்பு குழுமத்தில் விசாரணைகள் ஏதும் நிலுவையில் இல்லை என அறிக்கை பெறப்பட்டுள்ளது. தனியர் மீது துறை சார்ந்த ஒழுங்கு நடவடிக்கைகளோ அல்லது விசாரணைகளோ நிலுவை ஏதும் இல்லை எனவும், தனியரை பொறுப்பாக்கும் தணிக்கை தடை ஏதும் நிலுவையில் இல்லை என தெரிவித்து கொள்ளப்படுகிறது. தனியர் சென்னை மாநகராட்சி அலுவலர் கூட்டுறவு சங்கத்திற்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை ஏதும் இல்லை என அறிக்கை பெறப்பட்டுள்ளது.

மேலும், நிதி ஆலோசகர் அவர்களின் குறிப்பில் தனியர், இளநிலை பொறியாளர் மற்றும் உதவி செயற் பொறியாளராக பணியாற்றிய அனைத்து துறைகள் மற்றும் மண்டலங்களின் தணிக்கை அறிக்கை, தணிக்கை குறிப்பு குறித்த பத்திகள் இவ்வலுவலகத்தில் உள்ள உள்ளாட்சி நிதித் தணிக்கை அறிக்கைகளின்படி, மொத்தம் ரூ.43,937/– உள்ளடக்கிய 2 தணிக்கைத் தடைகள் கூட்டுப் பொறுப்பில் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. தணிக்கை தடை கூட்டு பொறுப்பில் தனியருக்கு மட்டும் ரூ.18,145/– உள்ளடக்கிய 2 தணிக்கைத் தடைகள் நிலுவையில் உள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனியர் வகித்துவரும் உதவி செயற்பொறியாளர் பதவி வகுப்பு – 2ன் கீழ் வருவதால் இப்பதவியில் உள்ளவர்களை வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்கும் அதிகாரம் மன்றத்திற்கு உள்ளது. தற்போது 2014 ஆம் ஆண்டிற்கான நாடாளுமன்ற பொதுத்தேர்தல் நடைபெற்றதை முன்னிட்டு மன்ற கூட்டம் ஒத்திவைக்கப்பட்டதால் மன்றத்தின் பின்னேற்பு ஆணைக்குட்பட்டு தனியரை 30.04.2014 பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்கபட வேண்டும்.

**28.04.2014** நாளிட்ட செயல்முறை ஆணையின்படி திரு.பிட்டி, ஓம்காரம், உதவி செயற்பொறியாளர், வட்டார துணை ஆணையர் (வடக்கு) அலுவலகம் அவர்களை **30.04.2014** பிற்பகல் முதல் மன்றத்தின் பின்னேற்புக்குட்பட்டு வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

மேலும் திரு. பிட்டி ஓம்காரம், உதவி செயற்பொறியாளர், வட்டார துணை ஆணையர் (வடக்கு) அலுவலகம் அவர்கள் மீது தணிக்கைத் தடைகள், நேர் செய்யப்படாத முன்பணம் மற்றும் மாநகராட்சிக்கு நிதி இழப்பீடு ஏதேனும் இருப்பின் அவை பின்னர் தெரியவரும் பட்சத்தில் அவற்றிற்கு தனியரை முழுப்பொறுப்பாக்கி தனியருக்கு வழங்கப்படும் பணிக்கொடை மற்றும் ஓய்வூதிய அகவிலைப்படியிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்படுத்தியும், நியமனக்குழு மூலமாக மன்றத்தின் பின்னேற்பு ஆணைக்குட்பட்டும், திரு. பிட்டி. ஓம்காரம், உதவி செயற்பொறியாளர், வட்டார துணை ஆணையர் (வடக்கு) அலுவலகம் அவர்களை **30.04.2014** பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்க முதன்மைச் செயலர்/ஆணையர் அவர்களின் ஆணை பெறப்பட்டது.

எனவே, மன்றத்தின் பின்னேற்புக்குட்பட்டு **30.04.2014** நாளிட்ட செயல்முறை ஆணையின்படி தனியரை **30.04.2014** அன்று பிற்பகல் முதல் சென்னை மாநகராட்சி பணியிலிருந்து வயது முதிர்வு ஓய்வு பெற அனுமதித்ததற்கு, நியமனக்குழு மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘இம்மாத நியமனக்குழு கூட்டம் முடிவுற்ற நிலையில் இப்பொருளின் அவரசம் மற்றும் அவசியத்தை கருதி இதனை நியமனக்குழு சுற்றின் மூலம் பரிந்துரைத்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது’’

‘‘இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது’’

*******

**மா.கு.ந.(ம).ம.கு.ந.எண்.எப்1/2384/2014**
**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 25.07.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.406/2014 **பொருள் எண்.40**

**வயது முதிர்வு ஓய்வு அனுமதி**

டாக்டர். B. தரணி, மாவட்ட குடும்ப நல மருத்துவ அலுவலர் அவர்கள் மாவட்ட குடும்ப நலத்துறையில் மருத்துவ அலுவலராக **03.06.1986**ல் பணியில் சேர்ந்து மாவட்ட குடும்ப நல மருத்துவ அலுவலராக **27.03.2013** முதல் பணிபுரிந்து வருகிறார். இவருடைய பிறந்த தேதி **12.08.1956** அதன்படி வயது முதிர்வு ஓய்வு நாள் **31.08.2014.**

இவர் கீழ்கண்டுள்ளபடி பணியில் சேர்ந்து பணிவரன்முறை (ம) தகுதிக்காண் பருவம் முடித்துள்ளார்.

| | | |
|---|---|---|
| **1.** மருத்துவ அலுவலர் | மன்ற தீர்மான எண் **1251** நாள் **17.07.1992**ன் படி **3.6.1986** முதல் பணிவரண்முறைபடுத்தப்பட்டுள்ளது. | மன்ற தீர்மான எண் **1251** நாள் **17.07.1992**ன் படி **3.6.1988** முதல் தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிக்கப்பட்டுள்ளது. |
| **2.** மண்டல அலுவலர் | மன்ற தீர்மான எண் **369/09** நாள் **29.10.09** ன் படி **8.2.2010** முதல் பணிவரண்முறைபடுத்தப்பட்டுள்ளது | |
| **3.** மாவட்ட குடும்ப நல மருத்துவ அலுவலர் | மன்ற தீர்மான எண் **155/2013** நாள் **11.3.2013**ன்படி பதவி உயர்வு பெற்றார் | |

டாக்டர் . B. தரணி, மாவட்ட குடும்ப நல மருத்துவ அலுவலர் அவர்கள் மீது இன்றைய தேதி வரையில் சென்னை மாநகராட்சி விழிப்பு குழுமத்தில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என்று விழிப்புத்துறையின் **15.07.2014** நாளிட்ட குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் துறையில் கடந்த **5** ஆண்டுகளில் குற்றவியல்/ஒழுங்கு நடவடிக்கை ஏதுமில்லை என சான்றளிக்கப்படுகிறது.

தனியரது சம்பள சான்றின்படி எவ்வித நீண்ட கால முன்பணம் ஏதும் பிடித்தம் செய்ய வேண்டியது இல்லை. சென்னை மாநகராட்சி, உள்ளிருப்பு குடியிருப்பு ஏதும் ஒதுக்கி தரப்படவில்லை. கூட்டுறவு சங்கக் கடன் நிலுவை ஏதும் இல்லை என சான்று பெறப்பட்டுள்ளது.

தனியர் மீது **31.08.2014** வரை தனிப்பட்ட முறையிலோ கூட்டு பொறுப்பிலோ பொறுப்பாக்கி நிதி இழப்பீடு குறித்து தெரியவரின் தனியருக்கு வழங்கப்படவுள்ள ஓய்வூதிய பயன்/ஓய்வூதிய அகவிலைப்படியில் பிடித்தம் செய்து கொள்ள துறைதலைவர் முன்னிலையில் ரூ **20** முத்திரை தாளில் சம்மதித்து ஒப்புதல் அளித்துள்ளார்.

தனியர் பணிபுரிந்த துறை/மண்டலங்களில் இருந்து தனியர் மீது தணிக்கை தடை, ஒழுங்கு நடவடிக்கை மற்றும் இழப்பீடுகள் ஏதும் நிலுவையில் இல்லை என சான்றுகள் பெறப்பட்டுள்ளது.

பெருமாள்பேட்டை மண்டலத்தில் தனியர் பணிபுரிந்த **2008–2009**ஆம் ஆண்டு காலத்தில் தனியர் மீது தணிக்கை தடைகள் பத்திகள் **27,28** மற்றும் **29** நிலுவை இருப்பதாக சம்மந்தப்பட்ட மண்டல அலுவலர் அறிக்கை அளித்துள்ளார்.

அதில் பத்தி **27,28** மற்றும் **29**க்கு பொறுப்பான திருமதி.கே.நிர்மலா செவிலியர் அவர்களை சென்னை மாநகராட்சி விழிப்பு ஆய்வாளர் அவர்களால் அறிவுறுத்தப்பட்ட தொகையான ரூபாய் ரூ **1,50,400/–**லிருந்து ரூ **10,000/–** கடந்த **10.07.2010**ம் ரூ **10,000/–** கடந்த **12.07.2010** அன்றும் வங்கியில் செலுத்தப்பட்டுள்ளது.

மேற்கண்ட பத்திகளை நீக்கம் செய்ய துறை வாயிலாக நடவடிக்கை எடுக்கப்பட்டு இணை இயக்குநர் உள்ளாட்சி நிதி தணிக்கை துறை குறிப்பு வைக்கப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சியில் இவருடைய பதவி வகுப்பு **1**பி என்பதால் இவரை பணியிலிருந்து விடுவிக்க மன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளது.

எனவே டாக்டர் B. தரணி, மாவட்ட குடும்ப நல மருத்துவ அலுவலர் அவர்களை தணிக்கை தடைகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகளை செலுத்த வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டும் மேலும், சென்னை மாநகராட்சி நிதி இழப்பீடு நேர்வு செய்யப்படாத முன்பணம் ஏதேனும் இருப்பது பின்னர் தெரியவரின் அதற்கு தனியரை பொறுப்பாக்கி தனியரின் ஓய்வூதிய பயன்கள் மற்றும் அகவிலைப்படியிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்கு உட்படுத்தி தனியரை **31.08.2014** அன்று பிற்பகல் வயது முதிர்வு ஓய்வளித்து பணியிலிருந்து விடுவிக்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''இம்மாத நியமனக்குழு கூட்டம் முடிவுற்ற நிலையில் இப்பொருளின் அவரசம் மற்றும் அவசியத்தை கருதி இதனை நியமனக்குழு சுற்றின் மூலம் பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது''

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**<u>ம.அ.10.ந.பி.ந.க.எண்.12125/2013</u>**
**<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் 25.07.2014 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.407/2014 **பொருள் எண்.41**

**<u>தானபத்திரம்</u>**

திரு. கே. மலைராஜன், கதவு எண்.98,99 மற்றும் 100, ஆற்காடு ரோடு, விருகம்பாக்கம், சென்னை–600 092 பிளாக் எண்.20, சர்வே எண்.169/2, 169/2பி1 மற்றும் 169/5 என்ற இடத்திற்கு கட்டட அனுமதி வேண்டி சென்னை மாநகராட்சி, மண்டலம்–10ல் விண்ணப்பித்துள்ளார். அவர் கட்டட அனுமதி வேண்டி விண்ணப்பித்த இடத்தினை ஒட்டிய சாலை ''சென்னை முழுமை வளர்ச்சித் திட்டம் II'' ன் மூலம் 30.50 மீ அகலம் உள்ள சாலையாக விரிவாக்கம் செய்யப்பட வேண்டும். இதில் மனையின் உரிமையாளர் சாலை விரிவாக்கத்திற்காக 6.05மீ நீளம் X 10.21மீ அகலம் = 61.77ச.மீ பரப்பளவு நிலத்தினை தானபத்திரம் மூலம் சென்னை மாநகராட்சிக்கு தானமாக கொடுக்க இசைவு தெரிவித்துள்ளார். மேலும், அவர் வழங்கிய தான பத்திரத்தின் வரைவை 10வது மண்டல வார்டு குழு பரிந்துரை செய்து (தீர்மானம் எண்.992 நாள்.18.10.2013) தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

எனவே, மேற்கூறிய நிலத்தினை தானமாக பெற

1. கட்டட உரிமையாளர் திரு. கே. மலைராஜன் மூலம் இசைவு பெற்ற தானபத்திரம் மூலம் 61.77 ச.மீ நிலத்தினை சென்னை மாநகராட்சிக்கு தானமாக பெறவும்,
2. தானமாக வழங்கப்பட்ட பகுதியில் சாலை விரிவாக்கப் பணிகளை மேற்கொள்ள செலவாகும் செலவீனம் ரூ.1,55,000/–ஐ கட்டட உரிமையாளரிடம் ''ஆணையர் சென்னை மாநகராட்சி'' என்ற பெயரில் காசோலையாக பெறவும்,
3. கட்டட உரிமையாளருக்கு தானமாக பெறப்படும் இடத்திற்கு ''வளர்ச்சி உரிமை சான்றிதழை'' சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தின் மூலம் வழங்க பரிந்துரை செய்யவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''ஏற்கனவே நிலைக்குழு (நகரமைப்பு) வின் கூட்டம் 10.07.2014 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 25.07.2014 அன்று தீர்மான எண்.07/2014–ன்படி நிலைக்குழு (நகரமைப்பு) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்.இ4/4304/2013**
**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் 25.07.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.408/2014 **பொருள் எண்.42**

**நிலம் மற்றும் உடைமைத்துறை – புதிய வட்டாட்சியர் அலுவலகம் – சென்னை மாவட்டம் – கோட்டை தண்டடையார்பேட்டை வட்ட அலுவலகம் இரண்டாக பிரித்து புதியதாக தண்டையார்பேட்டை வட்டாட்சியர் அலுவலகத்திற்கு ஒதுக்கீடு செய்ய மன்ற அனுமதி பெறப்பட்டது – 12 மாத முண்பணம் செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கு மன்றம் அனுமதி**

மன்றத்தீர்மானம் எண்.660/2013, நாள்.31.10.2013–ல் மேற்படி சமுதாய நலக் கூடம் அமைந்துள்ள மனையின் பரப்பு 4920 சதுர அடி என்றும் அதில் கட்டடப்பகுதியின் பரப்பளவு (தரைதளம் 2560 ச. அடி, முதல் தளம் 2560 ச.அடி) ஆக மொத்தம் 5120 ச. அடி கட்டிட பரப்பளவு கொண்ட கட்டிடத்தை மண்டல குழுவால் வணிக வளாக கடைகளுக்கு நிர்ணயிக்கப்பட்ட ஆரம்ப வாடகையான சதுர அடிக்கு ரூ.20/– என்ற அளவில் மாத வாடகையும், 12 மாத வாடகை முன்பணமும் செலுத்த வேண்டும், கட்டிடத்தில் ஏதேனும் மாற்றம் செய்யவிருப்பின் சென்னை மாநகராட்சி முன் அனுமதி பெற்றுத்தான் செய்ய வேண்டும் ஆகிய நிபந்தனைகளுடன், வருவாய் துறை, தண்டடையார்பேட்டை வட்டாட்சியர் அலுவலகத்திற்கு காலியிடத்துடன் கூடிய மேற்படி சமுதாய நலக் கூடத்தை ஒதுக்கீடு செய்ய மன்றம் அனுமதி அளித்துள்ளதை தொடர்ந்து இம்மன்றத்தீர்மானத்தில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்கு இசைவு அளிக்குமாறு 22.11.2013 நாளிட்ட கடிதம் மூலம் கோரப்பட்டது .

வட்டாட்சியரின் கடிதத்தில் மேற்படி மாநகராட்சி சமூக நலக்கூடத்தில் தண்டையார்பேட்டை வட்டாட்சியர் அலுவலகம் இயங்குவதற்கு மாத வாடகையாக நிர்ணயிக்கப்பட்ட தொகை ரூ.1,02,400/– வழங்குவதற்கு வழிமுறையாக அரசிடம் அனுமதி பெற்ற பின்னர் இசைவினை தெரிவிப்பதாகவும் இவ்வலுவலகம் அரசு அலுவலகமாக இருப்பதால் 12 மாத வாடகை முன்பணமாக செலுத்துவதற்கு விலக்கு அளிக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

மண்டலம்– 8, வார்டு –103 ல் எண்.183 பெரியார் ஈ.வெ.ரா சாலையில் அமைந்துள்ள பழைய 5–வது மண்டல அலுவலக சென்னை மாநகராட்சி கட்டிடத்தினை ஒதுக்கீடு செய்து வழங்கிய போது மன்ற தீர்மான எண்:423/2013, நாள் 25.06.2013 படி 12 மாத வாடகை முன்பணம் செலுத்துவதிலிருந்து தமிழ்நாடு குழந்தைகள் உரிமை பாதுகாப்பு ஆணையத்திற்கு விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

மண்டலம்–12, வார்டு–1, ஆலந்துார் சூப்பர் பஜார் வணிக வளாகத்திற்கு சென்னை மாநகராட்சி கட்டிடத்தினை ஒதுக்கீடு செய்து வழங்கிய போது மன்ற தீர்மான எண்.1507/1996, நாள்.01.06.1996–இன்ப 12 மாத முன்பணம் செலுத்துவதிலிருந்து கூடுதல் இயக்குநர், காவல் துறை, குற்றப்பிரிவு அலுவலகத்திற்கு விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

எனவே, மேற்படி சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான சமுதாய நலக் கூடத்தினை தண்டையார்பேட்டை வட்டாட்சியர் அலுவலகத்திற்கு 12 மாத வாடகை முன்பணம் செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்க முடிவு எடுக்கும் பொருட்டு நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

> ‘‘ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 18.07.2014 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 28.07.2014 அன்று தீர்மான எண். 361/2014ன் படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலமாக பெருபான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.’’

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**<u>பே.சா.து.ந.க.எண். பி1/4292 /2014</u>**
**<u>முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் 25.07.2014 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.409/2014 **பொருள் எண்.43**

**<u>சென்னை மாநகராட்சி திரு. L.நந்தகுமார், செயற்பொறியாளர், பேருந்து சாலை துறை அவர்கள் பார்சிலோனா (ஸ்பெயின்) நகரில் 17.11.2013 முதல் 21.11.2013 வரை உலக வங்கி மூலம் நடைபெற்ற 3வது ஸ்மார்ட் சிட்டி எக்ஸ்போ மற்றும் சிட்டி சென்ஸ் அண்டு எனர்ஜி எபிஷீயண்ட் டிரான்ஸ்ஃபார்மேஷன் இனிஷியேட்டிவ் என்ற கருத்தரங்கம் மற்றும் பயிற்சி பயணத்தில் அரசு முறையில் கலந்து கொள்ள தமிழக அரசு அனுமதி அளித்ததற்கு பின்னேற்பு அனுமதி</u>**

ஸ்பெயின் நாட்டின் தூதரகம் மூலம் அனுப்பப்பட்டு புதுடெல்லியில் உள்ள ஸ்பெயின் நாட்டு தூதரக அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட 28.10.2013 (ம) 30.10.2013 அழைப்பிதழில் ஸ்பெயின் நாட்டின் பார்சிலோனா நகரில் உலக வங்கி மூலமாக 17.11.2013 முதல் 21.11.2013 வரை நடைபெற்ற 3வது ஸ்மார்ட் சிட்டி எக்ஸ்போ மற்றும் சிட்டி சென்ஸ் அண்ட் எனர்ஜி சிட்டி எபிஷீயண்ட் டிரான்ஸ்பார்மேஷன் இனிஷியேட்டிவ் என்ற கருத்தரங்கம் மற்றும் பயிற்சி பயணம் நடத்தப்பட்டது. இது உலகத்தின் சிறந்த, நவீன நகரங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டங்கள் மற்றும நவீன மாற்றங்களை பட்டியலிட்டு காண்பிக்கும் கருத்தரங்கம் மற்றும் பார்சிலோனா நகரின் சிறப்பு அம்சங்களை காண்பிக்கும் ஒரு பயிற்சிப் பயணம் ஆகும். இக்கருத்தரங்கம் மற்றும் பயிற்சி பயணத்தில் கலந்துக் கொள்ளுமாறு முதன்மை செயலர் /ஆணையர் அவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. மேலும் இந்த நிகழ்ச்சிகளில் பல இந்திய பிரதிநிதிகள் மற்றும் நகர்புற மேம்பாட்டுத் துறை அரசு அதிகாரிகளும் கலந்து கொள்ள இருப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சி முதன்மைச் செயலர் /ஆணையர் அவர்களின் 06/11/2013 நாளிட்ட ஆணையில் மேற்குறிப்பிட்ட கருத்தரங்கு மற்றும் பயிற்சிப் பயணத்தில் கலந்து கொள்வதற்கு இருந்த குறுகிய கால அவகாசத்தை கருத்தில் கொண்டு மாமன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு திரு.L.நந்தகுமார், செயற்பொறியாளர், பேருந்து சாலை துறை, அவர்களை தேர்ந்தெடுத்து இக்கருத்தரங்கம் மற்றும் பயிற்சிப் பயணத்தில் கலந்து கொள்ள அனுமதிப்பதற்கு அரசாணை வேண்டி பரிந்துரைத்துள்ளார்.

அரசுக்கு அனுப்பப்பட்ட 09/11/2013 நாளிட்ட கடிதத்தில் , ஸ்பெயின் நாட்டின் உள்ள பார்சிலோனா நகரத்தில் 17.11.2013 முதல் 21.11.2013 வரை நடைபெற்ற ஸ்மார்ட் சிட்டி எக்ஸ்போ மற்றும் சிட்டி சென்ஸ் அண்ட் எனர்ஜி சிட்டி எபிஷீயண்ட் டிரான்ஸ்பார்மேஷன் இனிஷியேட்டிவ் என்ற கருத்தரங்கம் மற்றும் பயிற்சி பயணத்திற்கு ஆகும் செலவு ரூ.3.5 லட்சம் ஆகும் என்றும் இவற்றில் பயணக்கட்டணம் மற்றும் தங்கும் வசதி ஆகியவற்றுக்கான செலவினம் ரூ.2.5 லட்சத்தை உலக வங்கி மற்றும் ஃபிரா பார்சிலோனா நிறுவனம் ஏற்றுக் கொண்டதால் இந்த கருத்தரங்கில் கலந்து கொள்ள வேண்டிய பதிவுக்கட்டணமாக ரூ.1 லட்சம் (வரிகள் உட்பட) ஆகியவற்றை மட்டும் சென்னை மாநகராட்சி ஏற்றுக் கொள்ளவேண்டி உள்ளது என தெரிவித்து இக்கருத்தரங்கம் மற்றும் பயிற்சிப்பயணத்தில் கலந்து கொள்ள சென்னை மாநகராட்சி மாமன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்கு உட்பட்டு திரு. L.நந்தகுமார், செயற்பொறியாளர், பேருந்து சாலை துறை, அவர்கள் பெயர் பரிந்துரைக்கப்பட்டு அரசின் ஆணை வேண்டப்பட்டது.

அரசு ஆணை எண்.G.O.(D) No.566.M.. W.S(MC 3) Department, நாள்.14/11/13–ல் திரு. L.நந்தகுமார், செயற்பொறியாளர், பேருந்து சாலை துறை, அவர்கள் ஸ்பெயின் நாட்டின் பார்சிலோனா நகரத்தில் 17.11. 2013 முதல் 21.11.2013 வரை நடைபெற்ற ஸ்மார்ட் சிட்டி எக்ஸ்போ வேர்ல்ட் காங்கிரஸில் சிட்டி சென்ஸ் அண்ட் எனர்ஜி சிட்டி எபிஷீயண்ட் டிரான்ஸ்பார்மேஷன் இனிஷியேட்டிவ் என்ற கருத்தரங்கம் மற்றும் பயிற்சிப்பயணத்தில் கலந்துக் கொள்ள அனுமதி வழங்கப்பட்டு அரசானை வழங்கப்பட்டது.

திரு. L.நந்தகுமார், செயற்பொறியாளர், பேருந்து சாலை துறை, அவர்கள், ஸ்பெயின் நாட்டின் பார்சிலோனா நகரில் நடைபெற்ற மேற்குறிப்பிட்ட கருத்தரங்கம் மற்றும் பயிற்சிப்பயணத்தில் **17.11.2013** முதல் **21.11.2013** வரை கலந்துக்கொண்டு **22.11.2013** அன்று ஸ்பெயின் நாட்டிலிருந்து புறப்பட்டு சென்னை வந்தடைந்துள்ளார். **23.11.2013** மற்றும் **24.11.2013** சனி மற்றும் ஞாயிறு விடுமுறை ஆதலால் **25.11.2013** அன்று தலைமையிடத்தில் பணியில் சேர்ந்துள்ளார். மேலும், மேற்படி கருத்தரங்கம் மற்றும் பயிற்சிப் பயணத்திற்கான பதிவுக்கட்டணமாக ரூ.**1,12,360/–** (வரிகள் உட்பட) வழங்கப்பட்டு அதற்கான ரசீது பெறப்பட்டு வழங்கப்பட்ட தொகை நேர் செய்யப்பட்டுள்ளது.

எனவே திரு. L.நந்தகுமார், செயற்பொறியாளர், பேருந்து சாலை துறை, அவர்கள், அரசு அனுமதியுடன் ஸ்பெயின் நாட்டின் பார்சிலேனா நகரத்தில் நடைபெற்ற சிட்டி சென்ஸ் அண்ட் எனர்ஜி சிட்டி எபிஷியண்ட் டிரான்ஸ்பார்மேஷன் இனிஷியேட்டிவ் மற்றும்ஸ்மார்ட் சிட்டி எக்ஸ்போ வேர்ல்ட் காங்கிரஸ் (CitiSENSE and City Energy Efficiency Transformation Initiative and Indian Urban Sector Study Tour to the SMART CITY EXPO WORLD CONGRESS) என்ற கருத்தரங்கம் மற்றும் பயிற்சி பயணத்தில் **17.11.2013** முதல் **21.11.2013** வரை **5** நாட்கள் அரசு முறையில் கலந்து கொண்டதற்கு, மாமன்றத்தின் பின்னேற்பு அனுமதியும், இக்கருத்தரங்கம் மற்றும் பயிற்சி பயணத்தில் **17.11.2013** முதல் **21.11.2013** வரை கலந்து கொண்ட காலம் மற்றும் பயணம் மேற்கொண்ட நாளான **22.11.2013** ஆகிய காலத்தை பணிக்காலமாக கருதவும், நிலைக்குழு (பணிகள்) மற்றும் (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகின்றது.

> ''ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் **18.07.2014** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **28.07.2014** அன்று தீர்மான எண். **354/2014–**ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

> ''ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் **18.07.2014** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **28.07.2014** அன்று தீர்மான எண்.**362/2014**ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலமாக பெருபான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.''

''இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது''

*******

**ம.அ.9.ந.க.எண்.இ1/17537/7/2014**
**முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் 25.07.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.410/2014 **பொருள் எண்.44**

**2013–14 –பணி ஒப்பம் – மண்டலம்–9, பகுதி–26, வார்டு–122, சிப்பம் 7 – (32 சாலைகள்) பி.சி.சி.எம்.பி. 40 மிமீ கனம் கொண்டு பேவர் இயந்திரம் மூலம் தார்சாலை அமைக்கும் பணி – ஒப்பம் பெறப்பட்டது– ஒப்பம் திருவாளர். டி.எம். சுப்ரமணியம் அண்டு கோ, அவர்களுக்கு பணியினை வழங்க அனுமதி**

01. பணியின் பெயர் – பி.சி.சி.எம்.பி. 40 மிமீ கனம் கொண்டு பேவர் இயந்திரம் மூலம் தார்சாலை அமைக்கும் பணி. (சிப்பம்–7, 32 சாலைப்பணிகள்)

| வ. எண் | வார்டு எண் | பணி/ சாலையின் பெயர் | பணியின் விவரம் | நீளம் (மீ) | பரப்பளவு ச.மீ. | மதிப்பீட்டுத் தொகை ரூ. |
|---|---|---|---|---|---|---|
| 1 | 122 | டி.டி.கே. முதல் தெரு | பி.சி.சி.எம்.பி. 40 மிமீ கனம் கொண்டு பேவர் இயந்திரம் மூலம் தார்சாலை அமைக்கும் பணி. | 300 | 720 | 19,50,000/– |
| 2 | 122 | சீத்தம்மாள் விரிவு முதல் குறுக்குத் தெரு | | 125 | 750 | 9,00,000/– |
| 3 | 122 | சீத்தம்மாள் விரிவு 3 வது குறுக்குத் தெரு | | 146 | 876 | 9,50,000/– |
| 4 | 122 | சீத்தம்மாள் விரிவு 3 வது பிரதான சாலை | | 155 | 1873 | 9,30,000/– |
| 5 | 122 | சீத்தம்மாள் விரிவு 2 வது பிரதான சாலை | | 145 | 870 | 8,80,000/– |
| 6 | 122 | செனடாப் 2 வது சந்து | | 465 | 1742 | 25,48,000/– |
| 7 | 122 | போட் கிளப் ரோடு | | 600 | 2880 | 29,95,000/– |
| 8 | 122 | காமாட்சி நகர் | | 100 | 600 | 8,41,000/– |
| 9 | 122 | கணபதி காலனி பிரதான சாலை | | 180 | 2430 | 8,95,000/– |
| 10 | 122 | நந்தனம் விரிவு 4 வது தெரு | | 135 | 810 | 8,80,000/– |
| 11 | 122 | நந்தனம் விரிவு 5 வது தெரு | | 120 | 720 | 8,31,000/– |
| 12 | 122 | நந்தனம் விரிவு 2 வது தெரு | | 145 | 1261 | 6,24,000/– |
| 13 | 122 | ஆலயம்மன் கோவில் தெர | | 60 | 360 | 2,99,000/– |
| 14 | 122 | சத்தியமூர்த்தி நகர் பிரதான சாலை | | 155 | 1201 | 5,68,000/– |
| 15 | 122 | கனபதி காலனி முதல் மற்றம் 2 வது தெரு | | 100 | 570 | 7,25,000/– |
| 16 | 122 | செனடாப் முதல் சந்து | | 245 | 360 | 9,95,000/– |
| 17 | 122 | லோட்டஸ் காலனி 3 வது தெரு | | 180 | 1080 | 7,51,000/– |
| 18 | 122 | ஆழ்வார்பேட்டை 3 வது தெரு | | 75 | 340 | 1,99,000/– |
| 19 | 122 | ஓல்டு டவர் பிளாக் | | 85 | 505 | 3,70,000/– |
| 20 | 122 | நந்தனம் விரிவு 3 வது தெரு | | 110 | 726 | 4,08,000/– |
| 21 | 122 | ஏஸ்.எம். நகர் குடிசைப்பகுதி சாலை | | 180 | 1080 | 7,83,000/– |
| 22 | 122 | விளையாட்டு மைதானம் தெரு | | 180 | 900 | 4,50,000/– |
| 23 | 122 | நந்தனம் விரிவு 12 வது தெரு | | 125 | 690 | 3,20,000/– |
| 24 | 122 | நந்தனம் விரிவு 8 வது தெரு | | 50 | 300 | 1,31,000/– |
| 25 | 122 | நந்தனம் விரிவு 9 வது தெரு | | 100 | 550 | 2,40,000/– |
| 26 | 122 | நந்தனம் விரிவு 6 வது தெரு | | 165 | 908 | 3,99,000/– |
| 27 | 122 | நந்தனம் விரிவு 14 வது தெரு | | 140 | 980 | 3,06,000/– |
| 28 | 122 | நந்தனம் விரிவு 13 வது தெரு | | 140 | 560 | 2,45,000/– |
| 29 | 122 | சேமியர்ஸ் 4 வது சந்து | | 95 | 380 | 1,66,000/– |
| 30 | 122 | ஆலயம்மன் கோவில் தெரு (புதியது) | | 440 | 1760 | 7,71,000/– |
| 31 | 122 | டாக்டர்.இராதாகிருஷ்ணபுரம் | | 380 | 5776 | 6,78,000/– |
| 32 | 122 | நந்தனம் விரிவு 11 வது தெரு | | 140 | 770 | 3,37,000/– |
| | | மொத்தம் | | 5761 | | 2,43,65,000/– |

02. மதிப்பீட்டின் எண். குழுவின் /மன்றத்தின் தீர்மான எண். : 9.வது மண்டல வார்டு குழுவின் ஒப்புதல் தீர்மான எண். 33,34/2014.

முதன்மைச் செயலர்/ஆணையர் அவர்களின் ஒப்புதல் நாள்: நாள்.20.01.2014

03. திட்ட குறியீட்டு எண் :பின்னர் பெறப்படும்

04. ஒப்புதல் பெற்ற மதிப்பீட்டின் தொகை அலுவலக விலைப்பட்டியல் எடுத்துக் கொள்ளப்பட்ட ஆண்டு : 2013 - 14

அ) பணியின் செலவினம் :ரூ. 2,34,73,620.90

ஆ) மேற்பார்வை செலவு :ரூ. --------

இ) சில்லரை மேற்பார்வை செலவு :ரூ. 5,68,840.52

ஈ) தொழிலாளர் நலநிதி :ரூ. 73,095.00

உ) தரக்கட்டுப்பாடு :ரூ. 2,49,443.58

ஊ)மற்றைய எதிர்பாரா செலவினம் :ரூ. -------

மொத்தம் :ரூ. 2,43,65,000.00

05. எந்தெந்த பத்திரிக்கையில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டது : செ.மா. ஒப்பந்தப்புள்ளி, மலர்–20
இதழ் – 1031,நாள்–22.05.2014
மக்கள் குரல் நாளிதழ் நாள் 26.12.2013
இந்தியன் எக்ஸ்பிரஸ், நாள் 26.12.2013

06. ஒப்ப படிவம் பெற குறிக்கப்பட்ட இறுதி நாள் : 06.06.2014

07. ஒப்ப படிவம் ஏற்றுக்கொள்வதற்கான: கடைசி நாள். : 06.06.2014

08. ஒப்பம் செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து ஒப்பம் பெறுவதற்கு குறைந்தது 15 நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதா இல்லை எனில் உரிய அலுவரின் ஒப்புதல் பெற்ற விவரம் குறிப்பிடவும் : ஆம்.

09. எத்தனை ஒப்பங்கள் விற்பனை செய்யப்பட்டன ? : மின்னலையில் இருந்து பெறப்பட்டது.

10. எத்தனை ஒப்பங்கள் பெறப்பட்டன : 3

11. ஒப்பத்தில் பங்கேற்றவர் விவரம்

| வ. எண் | ஒப்பத்தில் பங்கேற்றவர் பெயர் | பணியின் அலுவலக மதிப்பு (ரூ) | ஒப்பந்ததாரரின் ஒப்பத் தொகை (ரூ) | 2013 – 14 ஆண்டு விலை விகிதம் விழுக்காடு அதிகம்/ குறைவு |
|---|---|---|---|---|
| 1 | டி.எம். சுப்ரமணியம் அண்டு கோ | 2,34,73,620.90 | 2,45,67,156.60 | (+)4.65% அதிகம் |
| 2 | ஆர். ராமாராவ் | 2,34,73,620.90 | 2,46,64,024.30 | (+)5.07% அதிகம் |
| 3 | ஆர்.கே. அண்டு சன்ஸ் | 2,34,73,620.90 | 2,92,41,768.20 | (+)24.57% அதிகம் |

12. குறைந்த ஒப்பம் அளித்தவருடன் அளித்தவருடன் பேச்சுவார்த்தை தேவையா? ஆம் ஏனில் நடத்தப்பட்ட நாள் : 17.07.2014 ல் மேலும் விலைகுறைப்பு செய்ய இயலாது என தெரிவித்துள்ளார்.

13. பேச்சுவார்த்தைக்குப்பின் ஒப்பத்தொகை ஒப்ப சதவீதம் : (+) 4.65% அதிகம்.
ரூ. 2,45,67,156.60
2013-14 ம் ஆண்டின் விலை விவரப்படி.

14. குறைந்த ஒப்ப சதவீதம் அளித்த ஒப்பந்ததாரின் பதிவின் நிலை, பதிவு நாள் : கட்டிடம் – ம் வகுப்பு ,
சாலை – 1ம் வகுப்பு , 01.10.2002

15. கூடுதல் பிணை வைப்புத் தொகை செலுத்தப்பட்ட விவரம். : ரூ.

அ) கேட்பு காசோலை எண். நாள் . வங்கியின் பெயர் :

16. பணிக்கான நிதி ஆதாரம் உள்ளதா? : ஆம்

அ) வரவு செலவுத் திட்ட தலைப்பு : மூலதன நிதி பணி

17. ஒப்பந்தப்புள்ளி செல்லத்தக்க காலம் : 03.09.2014.

மேற்கண்ட பணிக்காக ஒப்பங்கள் கோரப்பட்டு, ஒப்ப இறுதி நாளான **06.06.2014** அன்று மூன்று ஒப்பங்கள் பெறப்பட்டது . இனம் வாரியாக விலைப்புள்ளிகள் நிர்ணயம் செய்யப்பட்டது. ஒப்பத்திற்கான BOQ ல் கணிணியில் கூட்டுத் தொகை கணக்கீடு செய்ததில் குறைபாடு காரணத்தினால் கணிணியில் பெறப்பட்ட BOQ விற்கும் நேரடியாக தயார் செய்யப்பட்ட ஒப்பீட்டிற்கும் மாறுபாடு உள்ளது. இனம் வாரியாக விலைப்புள்ளி நிர்ணயம் செய்யப்பட்டதன் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட ஒப்பீட்டுத் தாளின் படி, திருவளர். டி.எம். சுப்ரமணியம் அண்டு கோ, அவர்கள் குறைந்த விலைப்புள்ளி நிர்ணயம் செய்திருந்தார். எனவே, அன்னாரின் ஒப்பத் தொகை ரூ. **2,45,67,156.60** ஆகும். இது **2013–14** ஆம் ஆண்டின் அலுவலக விலைப்பட்டியலின் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகையான ரூ. **2,34,73,620.90** யை விட (+)**4.65%** அதிகம் ஆகும். அதேசமயம் ஒப்பந்ததாரரின் ஒப்பம் ஒப்ப முன் தகுதி நிபந்தனைகள் பூர்த்தி செய்துள்ளமையாலும், அவசரம் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டும் திருவாளர். டி.எம்.சுப்ரமணியம் அண்டு கோ அவர்களின் ஒப்பத்தை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. மேலும், **08.02.2014** மற்றும் **25.05.2014** அன்று வெளியான வெளி சந்தை விலையுடன் ஒப்பிடுகையில் இவரது ஒப்ப விழுக்காடு (–)**0.45%** குறைவு ஆகும். **17.07.2014**ல் நாளிட்ட விலைக்குறைப்பு பேச்சு வார்த்தை கடிதத்தில் இப்பணிக்காக மேலும் விலைகுறைப்பு செய்ய இயலாது என குறிப்பிட்டுள்ளார். அதன்படி, இப்பணிக்காக திருவாளர்.டி.எம்.சுப்ரமணியம் அண்டு கோ, அவர்கள் அளித்த ஒப்பத் தொகை ரூ.**2,45,67,156.60** ஆகும். இது **2013–14** ஆம் ஆண்டின் அலுவலக விலைப்பட்டியலின் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகையான ரூ. **2,34,73,620.90** யை விட (+)**4.65%** அதிகம் ஆகும்.

மன்றத் தீர்மானத்தின் படி, (தீர்மான எண்.512 / 2007 நாள்.25.09.2007),

1. அடிப்படை இனங்கள் தொழிலாளர்களின் ஊதியம் மற்றும் பொருட்களின் சந்தை விலைகள் கொண்டு சந்தை விலைப் விவரப்பட்டியல் தயாரிப்பதற்கும், (source-Builders Association of India –South Centre) இந்து நாளிதழில் வெளியிடப்பட்டது.
2. அவ்வாறு தயாரிக்கப்பட்ட சந்தை விவரப்பட்டியல் கொண்டு, ஒப்பங்கள் பெறப்படும் பொழுது, ஒப்பீடு (Comparison) செய்து அதற்கேற்றவாறு ஒப்பந்தங்களைக் கையாளவும்,
3. மேலும், சந்தை விலைகளில் மாற்றங்கள் நிகழும் பொழுது,அதற்கேற்றவாறு சந்தை விலை விவரப்பட்டியல் மாற்றியமைத்து ஒப்பீடு (Comparison) செய்து ஒப்பந்தங்களைக் கையாளவும்,மன்றம் அனுமதிஅளித்துள்ளது.

எனவே, இப்பணிகளின் தன்மையை (Nature of Work) கருத்தில் கொண்டு, **08.02.2014** மற்றும் **25.05.2014** நாளிட்ட சந்தை விலைப்படி கணக்கிட்டு கீழ்கண்ட ஒப்பந்ததாரருக்கு இறுதியாக ஒப்பீடு செய்யப்பட்டுள்ளது.

| வ.எண் | 2013–14ம் ஆண்டு பணியின் அலுவலக மதிப்பு | ஒப்பந்ததாரர் ஒப்பத் தொகை ரூ. | ஒப்பந்ததாரர் ஒப்ப சதவிகிதம். | சந்தை மதிப்பு ரூ. | வெளிச்சந்தை விலை அதிகம்/குறைவு |
|---|---|---|---|---|---|
| 1 | 2,34,73,620.90 | 2,45,67,156.60 | (+)4.65% அதிகம் | 2,46,80,259.90 | (–)0.45% குறைவு |

ஒப்பீட்டுத்தாள் கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது. மேலும், இந்த ஒப்பந்த தொகை **2013–14**ஆம் ஆண்டின் அலுவலக விலையுடன் ஒப்பிடுகையில் (+)**4.65%** அதிகம் ரூ.**2,45,67,156.60** ஆகும். எனவே, இப்பணிக்கான ஒப்பத்தை திருவாளர். டி.எம். சுப்ரமணியம் அண்டு கோ, அவர்களுக்கு **2013–14** ம் ஆண்டு அலுவலக விலையை விட (+)**4.65%** அதிகம் ரூ.**2,45,67,156.60** மதிப்பிற்கு பணிகள் வழங்க ஒப்பக்குழுமத்தின் பரிந்துரை வேண்டி மண்டல அலுவலர் – **9** அவர்களால் சமர்ப்பிக்கப்பபட்டது.

மேற்கண்ட பொருள் குறித்து ஒப்பக்குழும கூட்டத்தில் விவாதிக்கப்பட்டு இப்பணிக்கான ஒப்பத்தை திருவாளர்.டி.எம்.சுப்ரமணியம் அண்டு கோ அவர்களுக்கு 2013–14ம் ஆண்டின் அலுவலக விலையை விட (+)4.65% அதிகம் ரூ.2,45,67,156.60 மதிப்புள்ள பணியினை மேற்கண்ட ஒப்பந்ததாரருக்கு வழங்க ஒப்பக்குழுமம் பரிந்துரை செய்யப்பட்டது.

எனவே, இப்பணிக்கான ஒப்பந்தத்தை திருவாளர்கள்.டி.எம். சுப்ரமணியம் அண்டு கோ, அவர்களுக்கு 2013–14ம் ஆண்டு அலுவலக விலைக்கு (+)4.65% அதிகத்திற்கு ரூ.2,45,67,156.60 மதிப்பிற்கு வழங்க ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிச் சட்டம் 1998 பிரிவு 7 (1) மற்றும் (2)ன்படி நிலைக்குழு (பணிகள்),நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

" ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 18.07.2014 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 28.07.2014 அன்று தீர்மான எண்.353/2014–ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 18.07.2014 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 28.07.2014 அன்று தீர்மான எண்.360/2014ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலமாக பெருபான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**வ.வ.அ.தி.க.மே.து.ந.க.எண்.அ7/189/2013**
**முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் 25.07.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.411/2014 **பொருள் எண்.45**

**வடக்கு வட்டாரம் – திடகழிவு மேலாண்மை துறை – மண்டலம் – 5 – குப்பை மாற்று வளாகம் – மீத்தேன் வாயு மூலம் மின் உற்பத்தி செய்தல் – பணிக்காலம் நீட்டிப்புக்கு அனுமதி**

சென்னை மாநகராட்சி வட்டார வடக்கு அலுவலகத்துக்கு உட்பட்ட மண்டலம் 5ல் உள்ள குப்பை கொட்டும் வளாகத்தில் குப்பை கழிவுகளிலிருந்து மின்சாரம் தயாரிக்க ஒரு முன்னோடி திட்டம் வகுக்கப்பட்டு, அதன் தொடர்ச்சியாக மதிப்பீடு ரூ. 46,56,900/– தயாரிக்கபட்டு மேற்படி பணி ஒப்பம் மூலம் M/S ஹுபர்ட் என்வரோ கேர் சிஸ்டம் (பி) லிட் என்ற நிறுவனத்திற்கு பணி ஆணை வழங்கபட்டு, பணி 4/10/2013 முதல் நடைபெற்று வருகின்றது. தற்பொழுது மேற்படி பணியானது 75 சதவீதம் முடிவுபெற்றுள்ளன. இப்பணி பாபா அனு ஆராய்ச்சி நிலையம் மூலம் கண்காணிக்கபட்டு அவர்களின் தொழில் நுட்ப உதவியுடன் மேற் கொள்ளபட்டு வருகின்றது.

இப்பணியானது சென்னை மாநகராட்சியால் முன்னோடி திட்டமாக (pilot project) செயல்படுத்த உத்தேசிக்கபட்டதாலும், ஒப்பந்த விதிகளின்படி 50 லட்சத்திற்குள்ள இப்பணியின் கால அளவு 09 மாதங்கள் ஆகும், அதன் அடிப்படையில் இப்பணியானது 03.07.2014க்குள் முடிக்கபட வேண்டும்.

ஒப்பந்ததாரர் தனது 08/07/14 நாளிட்ட கடிதத்தில் கீழ்கண்ட காரணங்களால் பணியை 31/08/14 வரை நீட்டிக்ககோரியுள்ளார்.

1. மெயின் டைஜஸ்டர் தொட்டியின் கட்டுமானத்தின் போது ஏற்பட்ட பாறை மற்றும் தரையின் நீர்கசிவு ஆகிய காரணங்களால் பணியில் தொய்வு ஏற்பட்டது.
2. இக்கட்டுமான பகுதியில் பழைய கட்டுமான பொருட்களை அகற்ற கால தாமதம் ஏற்பட்டது.
3. கட்டுமான பொருட்களின் தட்டுபாடு காரணமாக.
4. பணியாளர்கள் பற்றாக்குறையால் கால தாமதம் ஆகியது.
5. இப்பணிக்கான நுட்பமான கருவிகள் மற்றும் நவீன உபகரணங்கள் தருவிப்பதில் ஏற்பட்ட சிரமம்.

ஒப்பந்தாரரின் 1, 2, 3 மற்றும் 5 வது காரணங்கள் உண்மையானது ஆகும். மேலும் இப்பணியை கீழ்கண்ட காரணங்களால் கால நீட்டிப்பு செய்யலாம் என உத்தேசிக்கப்படுகின்றது.

1. இப்பணி முன்னோடி திட்டம் ஆனதால் ஒவ்வொரு நிலையிலும் பாபா அணு ஆராய்ச்சி விஞ்ஞானிகள் ஆய்வு செய்து அடுத்த கட்ட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியது அவசியம் அவ்வாறு ஆய்வு மேற்கொள்ள வரும் அதிகாரிகள் ஒவ்வொரு முறையும் காலம் ஒதுக்கி ஆய்வு மேற்கொள்வதில் காலதாமாதம் ஏற்படுகின்றது.
2. இப்பணியின் கோப்புகள் 30/03/2014 அன்று தலைமையிடத்திலிருந்து வட்டார அலுவலகத்திற்கு மாற்றபட்டு பணியின் தொடர் நடவடிக்கை வட்டார அலுவலகம் (வடக்கு) மூலம் மேற்கொள்ளபடுகின்றன இடைபட்ட காலத்தில் பணி நடைபெறவில்லை.
3. நாடளுமன்ற தேர்தலின் போது இப்பணியை தொடர்ந்து ஆய்வு செய்ய பாபா அணு ஆராய்ச்சி விஞ்ஞானிகள் வருகை புரியவில்லை .
4. வரும் மழைக் காலத்தையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

இப்பணியின் உட்கட்ட அமைப்பு பணிகள் முடிவுற்றவுடன், பசும்சானியின் உதவியுடன் குறைந்தபட்சம் 20 நாட்கள் ஆரம்ப pre digestion செய்ய வேண்டியிருப்பதாலும். இப்பணியின் காலத்தை மேலும் 3 மாதத்திற்கு நீட்டிப்பு செய்து வரும் 3.10.2014க்குள் முடிக்க கால நீட்டிப்பு வழங்க நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகின்றது.

''ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 18.07.2014 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 28.07.2014 அன்று தீர்மான எண்.355/2014–ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 18.07.2014 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 28.07.2014 அன்று தீர்மானஎண்.363/2014ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலமாக பெருபான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.''

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**ம.நீ.வ.து.ந.க.எண்.பி5/1178/2010**

**முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் 25.07.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.412/2014 **பொருள் எண்.46**

**ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத்திட்டம் – ஓட்டேரி நல்லா நீர்ப்பிடிப்பு பகுதியில் மழைநீர் வடிகால்வாய் கட்டும் பணி – பணி கால நீட்டிப்பு வழங்க அனுமதி**

ஓட்டேரி நல்லா நீர்ப்பிடிப்பு பகுதிக்கு ஒப்பங்கள் பெறப்பட்டு திருவாளர்கள் நீவ் இன்ப்ரா ஸ்ட்ரக்ட்சர்ஸ் பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு பணி ஆணை வழங்கப்பட்டு **02.11.2010** அன்று பணி ஆணை வழங்கப்பட்டு, பணி நடைபெறுகிறது. பணிகள் முடிக்க வேண்டிய காலம் **26** மாதங்கள், அதாவது **23.12.2012**ற்குள் பணி முடிக்கப்பட வேண்டும். மேலும், இயற்கை இடர்பாடுகள், தேர்தல் மற்றும் சில எதிர்பாராத காரணங்களுக்காக, போக்குவரத்து காவல்துறையின்ரின் அனுமதி, கழிவு தொடர்ச்சியாக வருவதினால் காலதாமதம் ஏற்ப்பட்டதற்காக நான்கு முறை உரிய வழிமுறையில் **18** மாத கால ஒப்பந்த காலம் நீட்டிப்பு வழங்கப்பட்டது. இதன்படி, **30.06.2014**ற்குள் பணி முடிவடையும் காலமாகும்.

ஓட்டேரி நல்லா நீர்ப்பிடிப்பு பகுதியில் உள்ள மழைநீர் வடிகால்வாய் பணிகளில் ஒரு பணியினை தவிர முழுவதும் முடிக்கப்பட்டுள்ளது. பொதுமக்களின் கோரியினை ஏற்று மழைநீர் வடிகால் துறை கூடுதல் பணியாக பெரம்பூர் நெடுஞ்சாலையில் **450**மீ மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணியினை மேற்கொள்ள உத்திரவிட்டதின் அடிப்படையில் இப்பணியினையும் முழுமையாக முடிக்க ஆகஸ்ட்' **2014** வரை கால நீட்டிப்பு வழங்க கோரியுள்ளனர்.

ஓட்டேரி நல்லா நீர்ப்பிடிப்பு பகுதியில் உள்ள மழைநீர் வடிகால்வாய் பணிகளில் ஒரு பணியினை தவிர அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டுள்ளது. இப்பணி நாடாளுமன்ற தேர்தல் விதி நடைமுறையில் இருந்ததால் இப்பணியினை அப்போது துவக்க இயலாத நிலையில் தற்சமயம் மழைநீர் தேக்கத்தை கட்டுப்பாடுத்த பொதுமக்களின் கோரிக்கைக்கு இணங்க கூடுதல் பணியாக பெரம்பூர் நெடுஞ்சாலையில் **450**மீ நீளத்திற்கு மழைநீர் வடிகால்வாய் பணியினை முழுமையாக முடிக்க இத்தொகுப்பிற்கு **01.07.2014** முதல் **31.08.2014** வரை இறுதியான கால நீட்டிப்பு வழங்கலாம்.

இதனால் இப்பணிக்கு **30.06.2014** வரை இறுதியான கால நீட்டிப்பு வழங்கியதற்கு விலக்களித்து **01.07.2014** முதல் **31.08.2014** வரை இறுதியாக பணி நீட்டிப்பு வழங்கலாம் என கருத்து தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

1. திருவாளர்கள் நீவ் இன்ப்ரா ஸ்ட்ரக்ட்சர்ஸ் பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு மேற்கூறிப்பிட்ட இனத்திற்கு ஒப்பந்த துணை விதி 7 – F. ஒப்பந்த சிறப்பு விதிகளின் கீழ், ஓட்டேரி நல்லா நீர்ப்பிடிப்புப் பகுதியில் முழுவதுமாக முடிப்பதற்கு **30.06.2014** வரை இறுதியான கால நீட்டிப்பு வழங்கியதற்கு விலக்களித்து **01.07.2014** முதல் **31.08.2014** வரை இறுதியாக பணி நீட்டிப்பு வழங்கவும்,
2. மேற்கண்ட பணிக்கு ஒப்ப விதிகளின் அடிப்படையில் திருத்திய மைல் கல் (Milestone) **01.07.2014** தேதியில் நிர்ணயம் செய்யவும்.

எனவே, மேற்காணும் இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலம் மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> ''ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் **18.07.2014** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **28.07.2014** அன்று தீர்மான எண்.**352/2014**–ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

> ''ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் **18.07.2014** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **28.07.2014** அன்று தீர்மான எண். **359/2014**ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலமாக பெருபான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.''

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**<u>ம.நீ.வ.து.ந.க.எண்.பி5/1896/2009</u>**
**<u>முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் 25.07.2014 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.413/2014 **பொருள் எண்.47**

**<u>ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத்திட்டம் – சிப்பம் 1 – கொளத்தூர் மற்றும் கேப்டன் காட்டன் கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதியில் உள்ள மழைநீர் வடிகால்வாய் தொகுப்பு பணிகளுக்கு மூன்றாம் நபர்தர உறுதி மற்றும் தரக்கட்டுப்பாடு ஒப்பம் – பணி கால நீட்டிப்பு வழங்க அனுமதி</u>**

சென்னை மாநகராட்சிக்கு ஒதுக்கப்பட்ட தொகையான ரூ. 814.88 கோடி தொகைக்கு அரசின் நிர்வாக அனுமதி 06.07.2009 அன்று பெறப்பட்டு 12 நீர்த்தேக்கப் பகுதிகளுக்கு, ரூ.774.60 கோடி தொகைக்கான ஒப்பந்தங்கள் பெற்று பணி ஆணை வழங்கப்பட்டு 12 நீர்ப்பிடிப்புப் பகுதிகளிலும் பணிகள் நடைபெறுகிறது. இப்பணிகளுக்கு மூன்றாம் நபர் தர உறுதி மற்றும் தர கட்டுபாட்டிற்கும் ஒப்பங்கள் பெற்று பணி ஆணை வழங்கப்பட்டு பணிகள் நடைபெறுகிறது.

அதன்படி, சிப்பம் 1 – கொள்த்தூர் மற்றும் கேட்படன் காட்டன் கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதியில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் நீர்வழிக்கால்வாய்கள் அமைக்கும் பணிகளுக்கு மூன்றாம் நபர் தர உறுதி மற்றும் தரக்காட்டுப்பாட்டிற்கு திருவாளர்கள் எஸ்.ஜி.எஸ். இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கு 04.01.2011 அன்று பணி ஒப்புகை ஆணை வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. மேற்கண்ட நிறுவனத்தின் ஒப்பக்காலம் 24 மாதங்கள், அதாவது 03.03.2013ற்குள் வரையாகும். மேலும், பருவமழையின் காரணமாகவும் மற்றும் உள்ளாட்சி தேர்தல் காரணமாகவும் இப்பணிகள் முடிவடையாததாலும் இப்பணிகளுக்கு கால நீட்டிப்பு வழங்கப்பட்டுள்ளதால், இப்பணிக்கு மூன்றாம் தர உறுதி மற்றும் தர கட்டுப்பாடு செய்வதற்கு மேலும் 31.03.2014 வரை வழங்கப்பட்டது.

மன்ற தீர்மனத்தின் எண்.300/2014, நாள்29.05.2014ன்படி கேட்படன் காட்டன் கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதியில் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி மற்றும் நீர்வழிக்கால்வாய் மேம்படுத்தும் பணியிடங்களில் நீர்வழிக்கால்வாய்களில் ஆக்கிரமிப்பு, போக்குவரத்துறையின் அனுமதி சில இடங்களில் மழைநீர் வடிகால்வாயில் கழிவு நீர் தொடர்ச்சியாக செல்வது, மற்றும் மின்சார கம்பிவடங்கள் போன்ற காரணங்களுக்காக பணி முடிவடையாததால் இப்பணியின் மூன்றாம் நபர் தர உறுதி மற்றும் தரக்காட்டுப்பாட்டிற்கு 30.06.2014 வரை காலநீட்டிப்புக்கு மன்றத்தின் அனுமதி பெறப்பட்டது.

கேட்படன் காட்டன் கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதியில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் நீர்வழிக்கால்வாய்கள் அமைக்கும் பணியிடங்களில் நீர்வழிக்கால்வாய்களில் ஆக்கிரமிப்பு, சில இடங்களில் மழைநீர் வடிகால்வாயில் கழிவுநீர் தொடர்ச்சியாக செல்வது, மற்றும் மின்சார கம்பிவடங்கள் இடையூறுகள் போன்ற காரணங்களுக்காக இப்பணிகளை மேற்கொள்ளும் ஒப்பந்ததாரர்களுக்கு கால நீட்டிப்பு வழங்கப்பட்டுள்ளதால், சிப்பம் 1 – கொள்த்தூர் மற்றும் கேப்டன் காட்டன் கால்வாயில் நீர்வழிக்கால்வாய் மேம்படுத்தும் பணிகளுக்கு மூன்றாம் நபர் தர உறுதி மற்றும் தர கட்டுபாட்டிற்கும் டிசம்பர்’ 2014 வரை கால நீட்டிப்பு வழங்க கோரியுள்ளனர்.

கொளத்தூர் மற்றும் கேப்டன் காட்டன் கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதியில் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி மற்றும் நீர்வழிக்கால்வாய் அமைக்கும் பணிகள் முடிவடையாததாலும் இப்பணிகளுக்கு டிசம்பர்’ 2014 வரை மன்ற தீர்மான எண்.365/2014, நாள்.26.06.2014 மூலம் கால நீட்டிப்பு வழங்கப்பட்டுள்ளது. மேலும் இப்பணிகளுக்கு மூன்றாம் நபர் தர உறுதி மற்றும் தரக்காட்டுப்பாடு செய்வதற்கும் மற்றும் இப்பணிகளுக்கான முடிவறிக்கை தயாரிப்பதற்கும் திருவாளர்கள் எஸ்.ஜி.எஸ். இந்தியா பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு 01.07.2014 முதல் 31.12.2014 வரை பணி நீட்டிப்பு வழங்கலாம் என கருதப்படுகிறது.

எனவே, திருவாளர்கள் எஸ்.ஜி.எஸ். இந்தியா பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு மேற்கூறிப்பிட்ட இனத்திற்கு ஒப்ப விதிகளின் கீழ், சிப்பம் 1 – கொளத்தூர் மற்றும் கேப்டன் காட்டன் கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதியில் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி மற்றும் நீர்வழிக்கால்வாய் அமைக்கும் பணிகளுக்கு மூன்றாம் நபர் தர உறுதி மற்றும் தர கட்டுப்பாட்டிற்கு **01.07.2014** முதல் **31.12.2014** வரை பணி கால நீட்டிப்பு வழங்க நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி)யின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் **18.07.2014** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு தீர்மான எண். **351/2014**, நாள். **28.07.2014**–ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் **18.07.2014** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **28.07.2014** அன்று தீர்மான எண். **358/2014**ன் படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலமாக பெருபான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**<u>ம.க.கு.ந.க.எண்.அ8/1710/2014</u>**

**<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 08.07.2014 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.**414/2014** **பொருள் எண்.48**

**<u>சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை–3 ஊதியம் – 5% தனி ஊதியம் – 1.08.1992 முதல் 01.09.1998 வரை – வெளியிடப்பட்ட அரசாணையை சென்னை மாநகராட்சி நடைமுறைப்படுத்த மன்றத்தின் அனுமதி</u>**

அரசாணை எண்.**143** நிதி (ஊதியக்குழு) துறை நாள் **30.06.2014**ன்படி **01.08.1992** முதல் **01.09.1998** வரை பணியில் சேர்ந்து சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை–**3** ஆக பணிபுரிபவர்களுக்கு **5**% தனிஊதியம் வழங்கி அரசாணை வெளியிடப்பட்டது. அதன் விவரம் கீழ்கண்டவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

In the Government Order first read above, orders were issued granting 5% of basic pay computed as on 1—8—92 as Personal Pay to the following categories of staff :--

i) All categories of staff in the pre-revised scales of pay at Rs.475—775 moving over to the revised scale of pay of Rs.775—1030;

ii) All categories of staff in the pre-revised scales of pay at Rs.610—1075 moving over to the revised scale of pay of Rs.950—1500 or Rs.975--1660;

iii) All categories of staff in the pre-revised scales of pay at Rs.705--1230 moving over to the revised scale of pay of Rs.1200--2040;

iv) All categories of staff in the pre-revised scales of pay at Rs.905--1545 moving over to the revised scale of pay of Rs.1600—2660.

The above Personal Pay was granted as an alternative benefit in lieu of any further pay scale revision to the Ministerial categories consequent on the implementation of Fifth Tamil Nadu Pay Commission scales of pay.

2) In the Government Order second read above, orders have been issued extending the above benefit to all those employees who actually moved from the said pre-revised scales of pay to the revised scales viz. to all those who were appointed / promoted prior to 27—6—89 i.e. the date of issue of orders implementing the Fifth Tamil Nadu Pay Commission scales of pay.

3) In the Government Order fifth read above, orders were issued extending the benefit of 5% of basic pay as Personal Pay in the revised scales of pay with effect from 1—9—98 to all categories of employees who have been granted with 5% of basic pay as Personal Pay prior to 1—1—96 in the pre-revised scales of pay with effect from 1—8—92.

4) It is pointed out that the scale of pay of the Steno-typists under "Common Category" was initially fixed at Rs.950—1500 with effect from 1--6—88 as against the pre-revised scale of pay of Rs.610—1075 in the Fifth Pay Commission scales of pay which was further revised to Rs.975—1660. Thereby they were covered under the ambit of the four categories of scales of pay mentioned in Government order first read above. Subsequently, in the Government Order third read above, the Ordinary Grade scale of pay of the Steno-typists has been revised from Rs.975—1660 to Rs.1200—2040 as against the pre-revised scale of pay of Rs.610--1075 with effect from 1—6—88. Consequent on the grant of higher scale of pay, the benefit of Personal Pay has not been allowed to the Stenotypists, Grade--III as their pre-revised and revised scales of pay does not fall under the ambit of the categories of employees mentioned in the Government order dated: 24—8—92.

5) A batch of Writ Petitions were filed by the Steno-typists working in various Government departments seeking direction to grant 5% of basic pay as Personal Pay to the petitioners by extending the benefit of the orders issued in G.O.Ms.No.176, Finance (CMPC) Department, dated: 30—4—2009.

6) The Hon'ble High Court in various judgment orders have disposed of all the writ petitions in favour of the petitioners vide judgment orders passed by the Hon'ble Division Bench of Madras High Court dated: 28—8—2007 in W.P. No. 26991 of 2007 and batch cases. Further, the Hon'ble High Court in its order dated: 26—11—2013 in W.P.No.32087 of 2013 has observed that the pre-revised scale of pay of Stenographers was Rs.610—1075 and the corresponding revised scale of pay was Rs.1200—2040 which falls within the four categories of pay stipulated in G.O.Ms.No.873, Finance (PC) Department, dated: 27--12--93. Further, it has also been pointed out that the issue is already covered by the judgement of this Court in W.P.No.10995 of 2007 dated: 22—12—2008, wherein this Court, taking into consideration the Division Bench Judgment in W.P.No.30168 of 2006 dated:

20—11—2008 directed the extension of the benefit of this Government Order to the petitioners therein. In view of that the writ petition has been ordered with a direction to the respondents to grant 5% of basic pay as personal pay to the petitioners,in the light of the orders issuedin G.O.Ms.No.176, Finance (CMPC) Department, dated: 30—4—2009 within a period of twelve weeks from the date of receipt of a copy of this order.

7) The Director General of Police in the letter nineteenth read above has also furnished the opinion of the Government Pleader, High Court on the orders passed in W.P.No.18095 of 2010, dated: 06—3—2013 and requested early orders in this regard. The Government Pleader, High Court in his opinion dated: 27—2—14 has stated that the Hon'ble High Court in its order dated: 26—6—2008 in W.P.Nos.28505 and 28611 of 2006 allowed the writ petitions, relying on earlier judgement of the Hon'ble High Court Division Bench dated: 10—3—2006 in W.P. Nos. 20156 and 13143 of 2000. Further, he has pointed out that the Government in pursuant to various orders passed by the Hon'ble High Court have granted 5% of basic pay as personal pay to various categories by extending such benefit as granted vide. G.O.Ms.No.664, Finance (PC) Department, dated: 24—8—92 further modified in G.O.Ms.No.873, Finance (PC) Department, dated: 27—12—93 and also as ordered in G.O.Ms.No.176, Finance (CMPC) Department, dated: 30—4—2009. Considering the totality of the circumstances and in view of the fact that the earlier Division Bench order covers the issue involved in this case, he has therefore opined that this is not a fit case for filing appeal.

8) After careful consideration, Government has decided to implement the various judgement orders of the Hon'ble High Court filed by the Steno-typists in various Government departments for sanction of 5% of basic pay as Personal Pay to the Stenotypists Grade—III. Accordingly, Government direct that the benefit of 5% of basic pay as Personal Pay shall be extended to all those Steno-typists Grade—III ( both under Tamil Nadu Ministerial Service / Tamil Nadu Judicial Ministerial Service) who were in position as on 1--8--92 and 1--9--98 respectively on the anology of the orders issued in the Government Order eighth read above.

9) All the Heads of Departments, Heads of Offices concerned are requested to re-fix the pay of the Steno-typists, Grade—III by sanctioning 5% of basic pay as Personal Pay to all those who were in position as on 1--8--92 and 1--9—98. However, the benefit of 5% of basic pay as Personal Pay sanctioned above shall be allowed to the Steno-typists Grade—III as long as they continue in the said post held by them. As and when they are promoted to next higher post for which no personal pay is available, the Personal Pay shall be discontinued and absorbed in the pay fixation on appointment to the next higher post as per the existing orders in force.

எனவே, அரசாணை எண்.**143** நிதி (ஊதியக்குழு) துறை நாள் **30.06.2014**னை சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்த நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மாமன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் **18.07.2014** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **28.07.2014** அன்று தீர்மான எண்.**364/2014**ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலமாக பெருபான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**<u>ம.க.கு.ந.க.எண்.அ8/1280/2014</u>**

**<u>முதன்மை செயலர்/ஆணையர் அவர்களின் 17.07.2014 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.415/2014 **பொருள் எண்.49**

**<u>திருத்தப்பட்ட அலுவலர்கள் ஊதியக்குழு – தேர்வுநிலை மற்றும் சிறப்பு நிலை ஊதியம் மற்றும் படிகள் – திருத்தப்பட்ட ஊதியம் – அமலாக்குதல் – ஆணை வழங்கப்பட்டது –அரசாணையை சென்னை மாநகராட்சி நடைமுறைப்படுத்த மன்றத்தின் அனுமதி வேண்டி</u>**

அரசாணை எண்.114 நிதி (ஊதியக்குழு) துறை நாள் 06.05.2014.திருத்தப்பட்ட அலுவலர்கள் ஊதியக்குழு தேர்வுநிலை மற்றும் சிறப்பு நிலை ஊதியம் மற்றும் படிகள் திருத்தப்பட்ட ஊதியம் அமலாக்குதல் ஆணை வழங்கப்பட்டது. அதன் விவரம் கீழ்க்கண்டவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

In the Government Order read above, orders were issued implementing the recommendations of the Official Committee, 98 constituted to extend the recommendations of the Fifth Central Pay Commission to the State Government employees / teachers. In the said Government Order necessary orders were issued relating to Pay Scales, applicable Dearness Allowance, mode of pay fixation, applicability of Selection Grade / Special Grade scale of pay, House Rent Allowance, City Compensatory Allowance. The applicable list of pay scales and revised Selection Grade / Special Grade scales of pay have been appended in Schedule—I and II of the said Government Order as listed below:--

**SCHEDULE --II**

**REVISED SELECTION GRADE AND SPECIAL GRADE SCALE OF PAY**

| Sl. No. (1) | Ordinary Grade (2) | Selection Grade (3) | Special Grade (4) |
|---|---|---|---|
| | (Rs.) | (Rs.) | (Rs.) |
| 1 | 2550-55-2660-60-3200 | 2650-65-3300-70-4000 | 2750-70-3800-75-4400 |
| 2 | 2610-60-3150-65-3540 | 2750-70-3800-75-4400 | 3050-75-3950-80-4590 |
| 3 | 2650-65-3300-70-4000 | 3050-75-3950-80-4590 | 3200-85-4900 |
| 4 | 2750 70-3800-75-4400 | 3050-75-3950-80-4590 | 3200-85-4900 |
| 5 | 3050-75-3950-80-4590 | 4000-100-6000 | 4300-100-6000 |
| 6 | 3200-85-4900 | 4000-100-6000 | 4300-100-6000 |
| 7 | 3625-85-4900 | 4300-100-6000 | 4500-125-7000 |
| 8 | 4000-100-6000 | 5000-150-8000 | 5500-175-9000 |
| 9 | 4300-100-6000 | 5000-150-8000 | 5500-175-9000 |
| 10 | 4500-125-7000 | 5300-150-8300 | 5900-200-9900 |
| 11 | 5000-150-8000 | 5500-175-9000 | 6500-200-10500 |
| 12 | 5300-150-8300 | 6500-200-10500 | 8000-275-13500 |
| 13 | 5500-175-9000 | 6500-200-10500 | 8000-275-13500 |
| 14 | 5900-200-9900 | 8000-275-13500 | 9100-275-14050 |
| 15 | 6500-200-10500 | 8000-275-13500 | 9100-275-14050 |
| 16 | 6500-200-11100 | 9100-275-14050 | 10000-325-15200 |
| 17 | 8000-275-13500 | 9100-275-14050 | 10000-325-15200 |
| 18 | 9100-275-14050 | 10000-325-15200 | 12000-375-16500 |

**SELECTION GRADE AND SPECIAL GRADE SCALES OF PAY:**

The Selection Grade and Special Grade will be the corresponding revised scales based on the existing pay scales of these grades. The appropriate revised scales of pay for Selection Grade / Special Grade are indicated in Schedule--II to the Tamil Nadu Revised Scales of Pay Rules, 1998. Provided further, Selection Grade and Special Grade scales shall be regulated as below :--

(i) For posts, having no promotional avenue, the Selection Grade and Special Grade shall be allowed as indicated in Schedule--II.

(ii) For posts having promotional posts, if the Selection Grade scale of pay indicated in the said Schedule is higher than the pay scale of promotional post, the Selection Grade scale should be limited to the pay scale of the first level promotion post. Similarly, if the Special Grade scale is higher than the pay scale of second level promotion post, the Special Grade scale shall be limited to the pay scale of second level promotion post only.

The existing procedure for movement to Selection Grade / Special Grade and fixation of pay in these grades shall continue to be adopted in future in the revised scales also.

2) Subsequently, instances were brought to notice of Government that in certain Taluk Offices, the Selection Grade / Special Grade scale of pay of Drivers was erroneously fixed as Rs.5000—8000 and Rs.5500—9000 considering the Ordinary Grade scale of pay of Drivers as Rs.4000—6000 instead of Rs.3200—4900. Consequent on the representation made by other departmental Drivers to revise their Selection Grade / Special Grade scales of pay as was done in certain Taluk Offices. Accordingly, the Government issued necessary clarification in the letter second read above that the applicable Ordinary Grade, Selection Grade and Special Grade scales of pay of Drivers are Rs.3200—4900, Rs.4000—6000 and Rs.4300—6000 respectively as against the pre-revised scale of pay of Rs.975—1660, Rs.1200—2040 and Rs.1320—2040. It was also instructed to review such wrong fixations and effect recoveries wherever excess payments were made.

3) The Drivers in various department have filed Writ Petition seeking unintended higher Selection Grade / Special Grade scales of pay of Rs.5000—8000 and Rs.5500—9000 respectively. In the judgement order third read above, the Hon'ble High Court has quashed the Government letter second read above stating that a clarificatory letter cannot override a Government order and thereby directed to consider the request of the petitioners in the light of the orders issued in the Government Order first read above.

4) Subsequently, the Hon'ble High Court in various judgements have allowed the prayer of the writ petitioners (Drivers) of various department to grant the Selection Grade / Special Grade scales of pay of Rs.5000—8000 and Rs.5500—9000 to the Drivers as per Schedule—II of the G.O. first read above on the basis that the Ordinary Grade scale of pay of the Driver is Rs.4000—6000 instead of Rs.3200—4900 with effect from 1—1—96. Even no order has been issued in Government fixing the Ordinary Grade scale of pay of the Driver as Rs.4000—6000 with effect from 1—1—96. Therefore, such writ petitions have been contested by various department on appeal and in cases where the Writ Appeals have also been dismissed affirming the orders passed in the writ petitions. In such cases, the departments have been instructed to file Special Leave Petition in the Supreme Court of India. Accordingly, the issue stands to lie at various stages.

5) In the meantime the Learned Single Judge of High Court of Madras on 18—11—2013 has dismissed the W.P.Nos.1418, 10946 to 10948 of 2013 and batch cases filed by the Drivers in various departments of the Tamil Nadu Government seeking higher Selection Grade / Special Grade scales of pay of Rs.5000—8000 and Rs.5500—9000. The above judgement is extracted below:--

xx xx xx

"51) Therefore, if it is taken that the learned single Judge in the order dated: 30—9—2008 in W.P.No.4288 of 2008 and the Division Bench affirming the said order in the Judgement dated: 1—9—2009 in W.A.No.383 of 2009 have given direction to implement Selection Grade / Special Grade pay as per G.O.Ms.No.162, Finance (PC ) Department, dated: 13—4—98, the petitioners are entitled to get 4000—6000 and 4300—6000 as Selection / Special Grade since admittedly their Ordinary Grade Pay is Rs.3200—4900, as per G.O.Ms.No.162, dated: 13—4—98 and the G.O.Ms.No.162 nowhere granted the benefit of Selection Grade and Special Grade pay to the petitioners, who are Drivers, at Rs.5000—8000 and Rs.5500—9000, since the same is applicable to the Ordinary Grade Pay of Rs.4000—6000.

52) The claim for grant of Selection Grade and Special Grade at Rs.5000—8000 and Rs.5500—9000 is based on erroneous fixation at some places in some depts. and the petitioners are not able to point out as to how they are entitled to the Ordinary Grade scale of pay at Rs.4000—6000 as on 1-1-96 as per G.O.Ms.No.162, Finance (Pay Cell ) Department, dated: 13—4—98, and unless the petitioners establish that they are entitled to the O.G. pay of Rs.4000—6000 they are not entitled to the corresponding Selection / Special Grades pay of Rs.5000—8000 and Rs.5500—9000. On the other hand, as per G.O. dated: 13—4—98 the Ordinary Grade scale of pay of the Drivers is Rs.3200—4900 as on 1—1—96 and the persons, who were in receipt of Rs.1200—2040 prior to 1—1—96, were only given Rs.4000—6000 revised scale of pay, but the Drivers were not given Rs.1200—2040 (as Ordinary Grade scale of pay) before 1—1—96 and they were given only Rs.975—1660 for which Rs.3200—4900 is the corresponding Ordinary Grade pay."

6) In the light of the above facts and circumstances, the Government after careful consideration have decided to issue necessary revised orders to para—4 of the G.O. first read above. Accordingly the following revised orders are issued:-

**SELECTION GRADE AND SPECIAL GRADE SCALES OF PAY:**

4. The Selection Grade and Special Grade scales of pay will be applicable based on the Ordinary Grade scale of pay of the respective posts. The appropriate revised Selection Grade / Special Grade scales of pay based on the Ordinary Grade scale of pay are indicated in Schedule –II of the above said G.O. Provided further, Selection Grade and Special Grade scales of pay based on the Ordinary Grade scales of pay of the respective posts shall be regulated as below:--

(i) For posts, having no promotional avenue, the Selection Grade and Special Grade scales of pay based on the Ordinary Grade scale of pay shall be allowed as indicated in Schedule--II.

(ii) For posts having promotional posts, if the Selection Grade / Special Grade scales of pay indicated in the said Schedule--II is higher than the pay scale of the first level / second level promotional posts then in such cases, the Selection Grade / Special Grade scales of pay should be limited to the pay scales of the first level / second level promotional posts respectively.

The existing procedure for movement to Selection Grade / Special Grade and fixation of pay in these grades shall continue without any change.

7) In the light of the above revised orders, the applicable Ordinary Grade, Selection Grade and Special Grade scales of pay of Drivers shall be regulated as follows:--

i) The Ordinary Grade scale of pay of Drivers with effect from 1—6—88 under Common Category is Rs.950—1500 as against the pre-revised scale of pay of Rs.610—1075 (vide—G.O.Ms.No.666, Finance (PC) Department, dated: 27—6—89). Subsequently, the Ordinary Grade scale of pay of Driver was revised from Rs.950—1500 to Rs.975--1660 with effect from 1—6—88 (vide—G.O.Ms.No.818, Finance (PC) Department, dated: 09—8—89).

ii) As per Schedule—I of G.O.Ms.No.162, Finance (PC) Department, dated: 13—4—98 the corresponding revised scale of pay of Driver with effect from 1—1—96 is Rs.3200—4900 as against the pre-revised scale of pay of Rs.975—1660 as mentioned in Group—XX therein.

iii) As per Schedule—II of G.O. Ms. No.162, Finance (PC) Department, dated: 13—4—98 the Ordinary Grade, Selection Grade and Special Grade scales of pay is as follows:--

| Sl. No. | Ordinary Grade Rs. | Selection Grade Rs. | Special Grade Rs. |
|---|---|---|---|
| **6.** | 3200—85—4900 | 4000—100—6000 | 4300—100—6000 |

8) All the Heads of Department / Heads of offices are instructed to adhere the above instructions scrupulously and any failure to follow the same will be viewed seriously and necessary disciplinary action will be initiated as per rules against the person who are responsible for the said lapses. Likewise, all the Heads of Department are directed to ensure that the above instructions are followed without fail in the departments under their control and any lapses if any found responsibility will be fixed against them.

9) This Government order shall not be applicable to cases where orders have been issued in pursuant to Court directions where the verdict reached finality.

எனவே, அரசாணை எண்.114 நிதி (ஊதியக்குழு) துறை நாள் 06.05.2014னை சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்த நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) வாயிலாக மாமன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 18.07.2014 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 28.07.2014 அன்று தீர்மான எண். 365/2014ன் படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலமாக பெருபான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**<u>ப.து./த.க.து.ந.க.எண்.த.க.1/2303(A) /2014</u>**

**<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 28.07.2014 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.416/2014 **பொருள் எண்.50**

**<u>பணிகள், தரக்கட்டுபொட்டு, சிறப்புத்திட்டம் துறை – தார் சாலைகளுக்கான தரக்கட்டுப்பாடு கையேடு (Quality Control manual) தயாரிக்கப்பட்டு அதிலுள்ள அம்சங்களை சென்னை மாநகராட்சியில் அமுல்படுத்த அனுமதி</u>**

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ஆணைக்கிணங்க சென்னை மாநகராட்சியால் அமைக்கப்படும் அனைத்து சாலைகளும் உலகத்தரத்திற்கு இணையாக அமைக்கப்பட வேண்டும் என்ற உன்னத நோக்கத்துடன் ஒரு முழு அளவிலான தரக்கட்டுப்பாடு அமைப்பு சென்னை மாநகராட்சி வரலாற்றிலேயே முதன்முறையாக உருவாக்கப்பட்டு சென்னை மாநகராட்சியின் அனைத்து பொறியாளர்களும் பின்பற்றும் வகையில் ஒரு முன்மாதிரியான தரக்கட்டுப்பாடு கையேடு தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தபட உள்ளது.

சென்னை மாநகராட்சியில் சுமார் 471 பேருந்து தார் சாலைகளும் மற்றும் சுமார் 30000 உட்புற சாலைகளும் உள்ளது. இந்த சாலைகள் பழுதடையும்போதோ அல்லது புதியதாக அமைக்கும்போதோ தார் சாலைகளாகவோ அல்லது சிமெண்ட் கான்கிரீட் சாலைகளாகவோ அமைக்கப்பட்டு வருகிறது. இதற்காக, கோடிக்கணக்கில் மாநகராட்சியின் மூலம் ஆண்டுதோறும் செலவு செய்யப்படுகிறது. தற்பொழுது இவ்வாறு சாலைகள் புதுப்பித்ததை அல்லது சீரமைப்பதை தரக்கட்டுப்பாடு செய்வதற்கென்று ஒரு தனிப்பிரிவு சென்னை மாநகராட்சியில் ஒரு மேற்பார்வை பொறியாளர், 3 செயற்பொறியாளர்கள் மற்றும் 15 உதவிப் பொறியாளர்களை கொண்டு துவங்கப்பட்டுள்ளது. இந்த தரக்கட்டுப்பாட்டுத் துறையில் மற்றும் 15 மண்டலங்களில் உள்ள பொறியாளர்களும் ஒரே மாதிரியான தரக்கட்டுப்பாடு பரிசோதனைகளை ஒரே விதமான செய்முறையில் செய்வதற்கும் ஒரு தரக்கட்டுப்பாடு கையேடு வணக்கத்திற்குரிய மேயர், முதன்மைச் செயலர் / ஆணையர், இணை ஆணையர் (பணிகள்) தலைமைப் பொறியாளர் (பொது) அவர்களின் உத்தரவின்படியும், வழிகாட்டுதலின்படியும் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த தரக்கட்டுப்பாடு கையேட்டின் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு:

1. பணிநடக்கும் காலங்களில் அந்தந்த ஒப்பந்ததாரர்களின் தார்கலவை நிலையத்தில் (Contractors hot mix plant) சென்னை மாநகராட்சியின் மூலம் நியமிக்கப்படும் 2 தொழில் நுட்ப உதவியாளர்கள் சென்னை மாநகராட்சிக்காக தார்கலவை உற்பத்திச் செய்யும் நேரம் முழுமைக்கும். (இரவு அல்லது பகல் முழுவதும்) பணி செய்ய நியமிக்கப்பட உள்ளார்கள்.
2. இவர்கள் அந்த ஒப்பந்ததாரர் கலவையை தயார் செய்த உடனேயே அதிலுள்ள தார் அளவு, வெப்பம், கற்களின் அளவுகள் மற்றும் விகிதங்கள் (Binder content, Temperature, sieve analysis) ஆகியவற்றை பரிசோதனை செய்து அதில் அந்த கலவை தேர்ச்சி பெற்றால் மட்டுமே மாநகராட்சி பணி நடைபெறும் இடத்திற்கு லாரியில் அனுப்ப அனுமதித்து லாரியின் டெலிவரி சலானில் (DC) பதிவு செய்து கையெழுத்திடுவார்கள். தார் கலவை தேர்ச்சி பெறவில்லை என்றால் அந்த தார் கலவை நிலையத்தில் உள்ள கருவிகளின் அளவுகளை செம்மைப்படுத்தி சரியான அளவு கலவையை கொண்டு வர செய்வார்கள். இவ்வாறு 12 மணிநேர பணி நேரத்தில் மூன்று பரிசோதனைகளை நடத்துவார்கள்.
3. அவ்வாறு தேர்வு / தகுதி பெற்ற கலவையை ஒப்பந்ததாரரின் நிலையத்திலிருந்து வெளியில் அனுப்பும்போதும் அவர்களுக்கு வழங்கப்பட உள்ள ஸ்மார்ட் கைப்பேசி மூலம் இதற்கென்று உருவாக்கப்பட உள்ள கணிணி மென்பொருள் மூலம் லாரியின் எண். ஒப்பந்ததாரரின் பெயர், தார்கலவை அளவு, ஏற்றும் பொழுது உள்ள தார்கலவையின் வெப்பம், லாரி புறப்படும் நேரம், சென்று அடையவேண்டிய சென்னை மாநகராட்சியின் பணியிடம், அந்த பகுதியின் பொறுப்பாளர் ஆகிய விவரங்களை அதில் பதிவு செய்வார்கள்.
4. இவ்வாறு பதிவு செய்யப்படும் விவரங்கள் கணிணி மென்பொருள் வாயிலாக தலைமையிடத்து தரக்கட்டுப்பாடு பொறியாளர்களுக்கும், அந்தந்த மண்டல / வார்டு பொறியாளர்களுக்கும் அவர்களிடம் கொடுக்கப்பட இருக்கும் ஸ்மார்ட் கைப்பேசியில் குறுந்தகவலாக வந்து சேரும்.

5. அடுத்து, எல்லா வார்டு உதவிபொறியாளர்களுக்கும் இது போன்று ஒரு ஸ்மார்ட் கைப்பேசி இதற்கென்று உருவாக்கப்பட்ட கணிணி மென்பொருளுடன் கொடுக்கப்படும். அவர்கள் தாங்கள் செய்யும் தார்சாலை பணி நேரத்தில் குறைந்தது ஒரு நாளுக்கு இருமுறை தார்கலவை பரிசோதனை செய்து அந்த சாலையில் போடப்பட்ட தாரின் அளவு விகிதம், சாலையின் தடிமன், அடர்த்தி, போடப்படும் பொழுது உள்ள வெப்பம், சாலையின் கேம்பர் ஆகிய அளவுகளை அவ்வப்பொழுது அந்த கைப்பேசியில் உள்ள மின் படிவத்தில் பதிவு செய்யவேண்டும். இது உடனடியாக தலைமையிடத்து தரக்கட்டுப்பாடு பொறியாளர்களுக்கும், சம்மந்தப்பட்ட மண்டல பொறியாளருக்கும் குறுந்தகவல்களாக வந்து சேரும்.
6. இதனால் சாலை அமைக்கும் பொழுதே ஏதேனும் குறைப்பாடுகள் ஏற்படின் உடனே அதை நிவர்த்தி செய்யவும், தரக்கட்டுப்பாடு செய்வதற்கும் பெரிதும் உதவிகரமாக இருக்கும்.
7. மேலும் தலைமையிடத்து தரக்கட்டுப்பாடு பிரிவின் மூலமாக 3 நடமாடும் தரக்கட்டுப்பாடு வாகனங்கள் கொள்முதல் செய்யப்பட்டு ஒவ்வொரு வட்டாரத்திற்கும் ஒன்று வீதம் தினந்தோறும் வேலை நடக்கும் இடங்களுக்கு அனுப்பப்படும். இந்த நடமாடும் தரக்கட்டுப்பாடு வாகனத்தில் செல்லும் ஒவ்வொரு உதவிப் பொறியாளருக்கும் ஒரு ஸ்மார்ட் கைப்பேசி கொடுக்கப்பட்டு தங்களுக்கு அளிக்கப்படும் பணிவிவரங்களைப் பொறுத்து அங்கு சென்று ஆய்வு செய்து அதன் முடிவுகளை அப்போதைக்கப்போது இந்த ஸ்மார்ட் கைப்பேசியில் இதற்கென்று உருவாக்கப்பட்டுள்ள கணிணி படிவங்களில் பதிவு செய்ய வேண்டும். இவ்வாறு பதிவு செய்யும் தகவல்கள் சம்மந்தப்பட்ட அனைத்துப் பொறியாளர்களுக்கும் குறுந்தகவல்களாக வரும்.
8. இந்த மேற்கூறிய நடைமுறைகள் யாவும் பணி நடைபெறும் போதே தார் சாலையின் தரத்தை உறுதி செய்வதற்கும் அப்போதைக்கப்போதே தவறுகளை சீர் செய்வதற்கும் கொண்டு வரப்படும் நடைமுறையாகும்.
9. செய்து முடித்தப் பணிகள் தரமாக உள்ளதா என்பதை கண்டறிவதற்கு தலைமையிடத்து தரக்கட்டுப்பாடு பொறியாளர்கள் ஒவ்வொரு வாரமும் திங்கள் மற்றும் செவ்வாய் கிழமைகளில் சென்று பரிசோதிப்பார்கள்.
   (a) ஒவ்வொரு மண்டலமும் தாங்கள் செய்து முடித்த தார் சாலைகளின் வேலைகளின் பட்டியலை அந்தந்த வாரத்தின் சனிக்கிழமை 3 மணிக்குள் தலைமையிடத்து தரக்கட்டுப்பாடு பிரிவிற்கு அனுப்பவேண்டும். இவ்வாறு பெறப்படும் பணிகளின் பட்டியல் சுமார் 25 சதவீதம் கணிணி மென்பொருள் மூலமாக தேர்ந்தெடுக்கப்பட்டு அந்தந்த தலைமையிடத்து வட்டார தரக்கட்டுப்பாடு பொறியாளர்களுக்கு சனிக்கிழமை மாலை 5.00 மணிக்கு அனுப்பப்படும்.
10. இதன்படி தரக்கட்டுப்பாடு பொறியாளர்கள் அந்த சாலையின் தார் அளவு, சாலையின் தடிமன், சாலையின் அடர்த்தி ஆகியவற்றை அந்தந்த சாலையிலும் மற்றும் தலைமையிடத்தில் அமைந்துள்ள பரிசோதனை கூடத்திலும் ஆய்வு செய்து அதன் முடிவை புதன்கிழமை மாலை 3 மணிக்குள் கணிணி மென் பொருள் மூலம் பதிவு செய்து அந்த சாலை தகுதி பெறும் பட்சத்தில் ஒரு சான்றிதழை மென்பொருள் மூலமாக சம்மந்தப்பட்ட மண்டலத்திற்கு அனுப்புவார்கள். இந்த சான்றிதழ் கிடைத்தவுடன் அந்தந்த மண்டலத்திலுள்ள கணக்கு குழுமம் அந்தந்த சாலைப் பணிக்கான பணத்தை ஒப்பந்தகாரர்களுக்கு பட்டுவாடா செய்ய முடியும், இவ்வாறு தேர்ச்சி பெறாத சாலைகள் அந்தந்த தகுதி அடிப்படையில் முழுமையாக நிராகரிக்கப்படும் அல்லது ஆணையின் உத்தரவுப்படி அபராதம் விதிக்கப்படும்.
11. மேலும் ஒரு ஒப்பந்தாரர் சில தவறுகளை (குறைந்த தடிமன் சாலை போடுவது, அடர்த்தி குறைவாக இருக்கும் வகையில் சாலை உருளைகளை குறைவாக பயன்படுத்துவது, குறைந்த தார் அளவுடன் லாரி லோடுகளை அனுப்புவது சரியான கேம்பர் அமைக்காமல் இருப்பது) அடிக்கடி செய்து வந்தால் தண்டணை புள்ளிகள் (Negative points) வழங்கப்படும். இது கணிணி மென்பொருள் மூலம் கணக்கிடப்படும். அவ்வாறு ஒரு ஒப்பந்ததாரர் 500 தண்டனை புள்ளிகள் பெற்றால் அடுத்து வரும் 6 மாதம் காலத்திற்கு அவர் எந்த சென்னை மாநகராட்சியின் ஒப்பந்தத்திலும் பங்கு பெற முடியாது. இது கணிணி மூலமாக தடை செய்யப்படும். இவை அனைத்தும் இந்திய ஆணை Code IRC மற்றும் MORTH படி தரக்கட்டுப்பாடு கையேட்டில் தெளிவாக வரையறுக்கப்பட்டு எல்லோருக்கும் வழங்கப்படும்.

மேலும் மாமன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்டப்பின் இந்த நிபந்தனைகள் யாவும் டெண்டர் புத்தகத்தில் IRC மற்றும் MORTH Specification தான் பின்பற்றப்படும் என அச்சிடப்பட்டு வரும்.

12. இந்தக் கையேட்டில் பின்பு வரும் காலங்களில் ஏதேனும் மாற்றங்கள் செய்யப்பட வேண்டியிருந்தால் அதனையும் சேர்த்து நிரந்தர கையேடு புத்தகம் சுமார் **3** மாத காலத்திற்குள் அச்சிடப்பட்டு கொடுக்கவேண்டும். இதற்கு முன்பாக நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் / ஐ.ஐ.டி. / அண்ணா பல்கலைக்கழகம் ஆகிய ஏதாவது ஒன்றின் ஒப்புதல் பெறப்படும்.

13. தார் சாலைகளின் தரம் மட்டுமின்றி கான்கிரீட் சாலைகள், கட்டிடங்கள் பாலங்கள், மழைநீர் வடிகால்கள் ஆகியவற்றின் தரப் பரிசோதனைகளை மேற்கொள்ள அனைத்து உபகரணங்களுடன் மற்றும் தொழில்நுட்பங்களுடன் கூடிய ஒரு தரக்கட்டுப்பாடு பரிசோதனை நிலையத்தை தற்போது காலியாக உள்ள மத்திய தார் கலவை நிலையத்தில் உருவாக்கி அதனை தரக்கட்டுப்பாடு பொறியாளரின் நேரடிக் கட்டுப்பாட்டில் வைக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

எனவே, மேற்கண்ட நிபந்தனைகளுடன் கூடிய தார் சாலைகளுக்கான தரக்கட்டுப்பாடு கையேட்டினை சென்னை மாநகராட்சியில் அமுல்படுத்த நிலைக்குழுக்கள் (பணிகள்) மற்றும் (வரிவிதிப்பு (ம) நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் **18.07.2014** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **28.07.2014** அன்று தீர்மான எண். **357/2014**—ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் **18.07.2014** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **28.07.2014** அன்று தீர்மான எண். **366/2014**—ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலமாக பெருபான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.''

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**பொ.து.ந.க.எண்.ஈ1/ 20625/2014**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 23.07.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.417/2014 **பொருள் எண்.51**

**உதவி செயற்பொறியாளர் பதவிக்கான தெரிவு பட்டியலுக்கு அனுமதி**

**வட்டார அலுவலகம் (தெற்கு) – தெற்கு வட்டார அலுவகத்திற்கு உட்பட்ட பூங்காத்துறை மாடம்பாக்கத்தில் சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் 1 இலட்சம் மரக்கன்றுகளை உற்பத்தி செய்யும் பணிகள் மற்றும் காப்பற்ற காவலர்கள் அறை, ஆழ்துளை கிணறு, மேல்நிலைத்தொட்டியுடன் கூடிய பம்பு அறை மற்றும் இதர பணிகள் அமைக்கும் பணிக்காக – திருவாளர்கள்.செமி பிரீ வெஜிடபிள் பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு ஒப்பம் வழங்க அனுமதி**

1. பணியின் பெயர் : தெற்கு வட்டார அலுவகத்திற்கு உட்பட்ட பூங்கத்துறை மாடம்பாக்கத்தில் சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் ஒரு இலட்சம் மரக்கன்றுகளை உற்பத்தி செய்யும் பணிகள் மற்றும் காப்பற்ற காவலர்கள் அறை, ஆழ்துளை கிணறு, மேல்நிலைத்தொட்டியுடன் கூடிய பம்பு அறை மற்றும் இதர பணிகள் அமைக்கும் பணி
2. மதிப்பீட்டின் எண் குழுவின் மன்றத்தின் தீர்மான எண்/நாள் : மன்றத் தீர்மான எண்.03/2014 நாள்.24.01.2014
3. திட்ட குறியீட்டு எண் :
4. kjpg;gPl;od; bjhif **ரூ. 1,06,00,000.00**

| | | | |
|---|---|---|---|
| அ) புதர்கள் மற்றும் ஏனையவைகளை சுத்தம் செய்ய | : | **ரூ.** | **5,00,000.00** |
| ஆ) மேல்நிலைத்தொட்டியுடன் கூடிய பம்ப் அறை மற்றும் பண்டக அறை அமைத்தல் | : | **ரூ.** | **10,00,000.00** |
| இ) உடைந்து போன சுற்றுச்சுவரை மீண்டும் கட்டுவதற்கு | : | **ரூ.** | **16,00,000.00** |
| ஈ) ஒரு இலட்சம் மரக்கன்றுகள் உற்பத்தி செய்தல் | | **ரூ.** | **75,00,000.00** |
| **bkhj;jk;** | : | ரூ. | **1,06,00,000.00** |

5. எந்தெந்த பத்திரிக்கையில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டது / நாள் : 1. சென்னை மாநகராட்சி செய்தி மலர்
   2. தினமணி தமிழ் நாளிதழ் நாள். இந்தியன் எக்ஸ்பிரஸ் ஆங்கில நாளிதழ் நாள்.
6. ஒப்பப்படிவம் பெற குறிக்கப்பட்ட இறுதி நாள் : 18.07.2014.
7. ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்வதற்கான கடைசி நாள் : 18.07.2014.
8. ஒப்பம் செய்தித்தாள்களில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து ஒப்பம் பெறுவதற்கு குறைந்தது 15 நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதா? இல்லை எனில் உரிய அலுவலரின் ஒப்புதல் பெற்ற விவரம் குறிப்பிடவும். : (e-Tender) குறுகிய கால ஒப்பம்.
9. எத்தனை ஒப்பங்கள் பெறப்பட்டன? : பத்து (e-Tender) மூலம் ஒப்பப்படிவம் பெறப்பட்டுள்ளது)
10. ஒப்பத்தில் பங்கேற்றவர் விவரம்

| வ. | ஒப்பத்தில் பங்கேற்றவர் | பணியின் | ஒப்பந்ததாரரின் | 2013-2014 ஆம் |
|---|---|---|---|---|

| எண். | பெயர்கள் திரு / திருவாளர்கள் | அலுவலக மதிப்பு (ரூ.) | ஒப்பத்தொகை (ரூ.) | ஆண்டின் விலைவிகிதம் விழுக்காடு அதிகம்/குறைவு |
|---|---|---|---|---|
| 1 | ராஜ் டெவலப்பர்ஸ் | 90,87,064.48 | 1,18,13,183.82 | (+) 30.00 % அதிகம் |
| 2 | கே.பாஸ்கரன் | 90,87,064.48 | 1,03,59,253.57 | (+) 14.00 % அதிகம் |
| 3 | கே.வடிவேலு | 90,87,064.48 | 1,02,22,947.54 | (+) 12.50 % அதிகம் |
| 4 | ஸ்ரீ வெங்கடேஸ்வரா என்டர்பிரைசஸ் | 90,87,064.48 | 97,14,071.93 | (+) 6.90 % அதிகம் |
| 5 | ஏ.வி. பச்சையப்பா எண்டர்பிரைசஸ் | 90,87,064.48 | 1,27,21,890.27 | (+) 40.00 % அதிகம் |
| 6 | ஆர். ஜோதிராம் | 90,87,064.48 | 1,13,58,830.60 | (+) 25.00 % அதிகம் |
| 7 | சி.எஸ்.கன்ஷ்ட்ரக்ஷன்ஸ் | 90,87,064.48 | 93,25,1450.57 | (+) 2.62 % அதிகம் |
| 8 | எஸ். ஜெயராமன் | 90,87,064.48 | 1,18,12,275.12 | (+) 29.99 % அதிகம் |
| 9 | செமி பிரீ வெஜிடபிள் பிரைவேட் லிமிடெட் | 90,87,064.48 | 72,69,651.16 | (-) 20.00 % குறைவு |
| 10 | ஸ்டான்லி ஐடெக் கன்ஷ்ட்ரக்ஷன்ஸ் கம்பெனி பிரைவேட் லிட் | 90,87,064.48 | 1,07,22,736.09 | (+) 18.00 % அதிகம் |

12. குறைந்த ஒப்பம் அளித்தவருடன் சூபச்சுவார்த்தை தேவையா? ஆம் எனில் நடத்தப்பட்ட நாள் : இல்லை.

13. பேச்சு வார்த்தைக்குப்பின் /ஒப்பத் தொகை/ ஒப்ப சதவீதம் . : ரூ. 72,69,651.76 (-) 20.00 % குறைவு 2014-2015 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி

14. குறைந்த ஒப்ப சதவீதம் அளித்த ஒப்பந்ததாரரின் பதவியின் பதிவு நாள் . :

15. கூடுதல் பிணை வைப்புத்தொகை செலுத்தப்பட்ட விவரம் : இல்லை

16. பணிக்கான நிதி ஆதாரம் : மூலதன நிதி
அ) வரவு செலவு திட்ட தலைப்பு 2014-2015

17. ஒப்பந்தப்புள்ளி செல்லத்தக்க காலம் . : 17.10.2014

மேற்கண்ட பணிக்காக ஒப்பங்கள் கோரப்பட்டு ஒப்ப இறுதி நாளான 18.07.2014 அன்று பத்து ஒப்பங்கள் பெறப்பட்டன. இவற்றில் குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள்.செமி பிரீ வெஜிடபிள் பிரைவேட் லிமிடெட் அவர்கள் அளித்துள்ள ஒப்பத் தொகை 2014-2015ஆம் ஆண்டின் இவ்வலுவலக பணி மதிப்பீட்டுத் தொகையான ரூ.90,87,064.48 யைவிட (-) 20.00% கூறைவாகும். இதன்படி ஒப்பந்ததாரர் அளித்துள்ள இறுதி ஒப்பத்தொகை ரூ.72,69,651.16 ஆகும்.

| | |
|---|---|
| ஒப்பந்தாரரின் இறுதி ஒப்பத்தொகை | ரூ.72,69,651.76 |
| ஒப்பந்ததாரரின் இறுதி ஒப்ப சதவீதம் 2014-2015 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி | (-) 20.00% குறைவு |

மேலும், மேலே குறிப்பிட்டுள்ளவாறு .07.2014 அன்று ஒப்ப கூர்ந்தாய்வுக் குழுவில் (TENDER SCRUTINY COMMITTEE) மேற்கண்ட பணிக்காக ரூ.84,80,000.00 க்கான ஒப்பத்தை ஏற்று இவ்வொப்பப் பணியை திருவாளர்கள்.செமி பிரீ வெஜிடபிள் பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு அவர்களுக்கு வழங்கலாம் என பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

எனவே, குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள்.செமி பிரீ வெஜிடபிள் பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு அவர்களின் ரூ.72,69,651.76 (ரூபாய் என்பது நான்கு இலட்சத்து என்பதாயிரம் மட்டும்)க்கான ஒப்பத்தை ஏற்று இவ்வொப்பப்பணியை திருவாளர்கள்.செமி பிரீ வெஜிடபிள் பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு அவர்களுக்கு அளிக்க சென்னை மாநகர முனிசிபல் சட்டம் விதி 1919 ல் விதி 80(2) ன்படி நிலைக்குழுக்கள் (பணிகள்) மற்றும் (வரிவிதிப்பு (ம) நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“ ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் **18.07.2014** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **28.07.2014** அன்று தீர்மான எண். **359/2014**ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் **18.07.2014** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **28.07.2014** அன்று தீர்மான எண்.**367/2014**ன் படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலமாக பெருபான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**இ.பொ.து.ந.க.எண்.எம்1/5572/14**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 30.07.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.422/2014 **பொருள் எண்.56**

**இயந்திரப் பொறியியல் துறை –சென்னை மாநகராட்சி எல்லைகள் விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதிகளுக்கு வாகனங்கள் மற்றும் இயந்திரங்கள் கொள்முதல் செய்ய அரசாணை பிறப்பிக்கப்பட்டது – இதன் அடிப்படையில் 2 எண்ணிக்கையில் புல்டோசர் இயந்திரங்கள் கொள்முதல் செய்ய ஒப்பம் கோரப்பட்டது – குறைந்த விலைப்புள்ளி அளித்த திருவாளர்கள். BEML நிறுவனத்திடம் கொள்முதல் செய்ய அனுமதி**

சென்னை மாநகராட்சியின் எல்லைகள் விரிவாக்கம் செய்யப்பட்டதை தொடர்ந்து விரிவாக்கப்பட்ட பகுதிகளில் தரமான துப்புரவு பணியை மேற்கொள்ள வாகனங்கள் மற்றும் புல்டோசர் கொள்முதல் செய்ய அரசாணை பிறப்பிக்கப்பட்டதின் அடிப்படையில் 2 எண்ணிக்கையில் புல்டோசர் இயந்திரங்கள் பெருங்குடி மற்றும் கொடுங்கையூர் குப்பை கொட்டும் வாளகத்தின் பயன்பாட்டிற்கென கொள்முதல் செய்ய ஒப்பம் கோர அறிவிப்பு அறிவிக்கப்பட்டது.

மேலும் ஒப்ப படிவங்கள் இலவச இறக்கம் செய்து கொள்ளும்பொருட்டு கணினியில் ஏற்றம் செய்யப்பட்டன. இவ்வொப்பம் 24.01.2014 அன்று திறக்கப்பட்டது. ஒப்பத்தில் மத்திய அரசு சார்ந்த நிறுவனமான திருவாளர்கள் BEML நிறுவனத்தார் மட்டுமே கலந்து கொண்டனர். இந்நிறுவனத்தார் ஒப்ப வைப்பு தொகையை வங்கி உத்தரவாதம் செலுத்தி தகுதி சான்றிதழ்கள் இணைத்து ஒப்பத்தில் தகுதி பெற்றனர். இந்நிறுவனத்தின் ஒப்பம் சீராய்வு குழுவினரால் தகுதியானவர் என சான்று அளிக்கப்பட்டபின் ஒப்ப விலைப்புள்ளி 20.06.2014 அன்று திறக்கப்பட்டது. இந்நிறுவனம் அளித்துள்ள விலைப்புள்ளி விவரம் பின்வருமாறு:

| S.No. | Name of the Company | Description | Quantity | Rate / Unit | Total cost |
|---|---|---|---|---|---|
| 01. | திருவாளர்கள். BEML நிறுவனம் | Basic price of Bulldozer (BD80Model)equipment with built in cabin as per specification. | 2 Nos. | 84,80,500/- | 1,69,61,000/- |
| | | Excise duty @ 12.36% | | 10,48,189.80 | 20,96,379.60 |
| | | TN Vat @ 14.5% | | 1,13,81,660.02 | 27,63,320.04 |
| | | Total for cost @ ChennaiCorporation. | | 1,09,10,349.82 | 2,18,20,699.64 |

திருவாளர்கள். BEML நிறுவனத்தாரை மேலும் விலைகுறைப்பு அளிக்க கோரப்பட்டது. திருவாளர்கள். BEML நிறுவனத்தார் தங்களது 20.06.2014 கடிதத்தில் புல்டோசர் இயந்திரங்களுக்கான 2014–2015ம் ஆண்டிற்கான விலைப்புள்ளி ஏற்றம் உள்ளதாகவும், இதற்கு தேவையான தளவாடங்களுக்கான விலைகளில் ஏற்றம் உள்ளதாகவும், எனினும் சென்னை மாநகராட்சியுடனான நீண்ட கால வியாபார தொடர்பின் காரணமாக சிறப்பு நிகழ்வாக கருதி தாங்கள் விலையில் எந்த மாற்றம் செய்யவில்லை எனவும், எனவே மேற்கண்ட காரணத்தின் காரணமான தங்களால் மேலும் விலைகுறைப்பு செய்ய இயலவில்லை எனவும், எனினும் விற்பனைவரி மற்றும் சேவைவரி இயந்திரங்கள் கொள்முதல் செய்யும் காலத்தில் உள்ள தொகைக்கே வழங்கப்படும் என தெரிவித்துள்ளனர்.

சென்னை மாநகராட்சியில் 2001 ஆம் ஆண்டு இதே நிறுவனத்தை சேர்ந்த இரண்டு (BD80 Model) புல்டோசர்கள் ரூ.1,45,78,486/–(ஒரு புல்டோசர் விலை ரூ.72,89,243/–) கொள்முதல் செய்யப்பட்டது. ஒரு வருடத்திற்கு சுமார் 5% விலையேற்றம் என்றாலும், சுமார் 13 ஆண்டுகளுக்கு 65% விலையேற்றம் இருக்கும். ஆனால் திருவாளர்கள் BEML நிறுவனத்தார் வழங்கியுள்ள விலைப்புள்ளியானது. ஏற்கனவே உள்ள விலைப்புள்ளியோடு ஒப்புடுகையில் 50% மட்டுமே அதிகரித்துள்ளது. மேலும், சென்னை மாநகராட்யின் வசம் இதே வகை புல்டோசர்கள் பயன்பாட்டில் உள்ள நிலையில் இதனை பராமரிப்பது மிகவும் எளிதாகும். மேலும் திருவாளர்கள் BEML நிறுவனத்தாரின் பிராந்திய அலுவலகம் சென்னையில் உள்ளதால் கொள்முதலுக்கு பிந்தைய பராமரிப்பு மிகவும் சிறப்பாக உள்ளது. மேலும், இந்நிறுவனம் மத்திய அரசு சார்ந்த நிறுவனம் என்பதை கருத்தில் கொண்டு இக்கொள்முதலை பரிந்துரைக்கலாம் என கருத்து தெரிவிக்கப்படுகிறது. இவ்வியந்திரம் கொள்முதல் செய்ய மெகா சிட்டி 2013–14 நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

மேலும் திருவாளர்கள் BEML நிறுவனத்தாரிடம் புல்டோசர் இயந்திரம் ஒன்றின் விலை ரூ.**1,09,10,349.82/–** வீதம் இரண்டு எண்ணிக்கைகள் ரூ.**2,18,20,699.64/–** (ரூபாய் இரண்டு கோடியே பதினெட்டு இலட்சத்து இருபதாயிரத்து அறுநூற்று தொண்ணூற்று ஒன்பது பைசா அறுபத்து நான்கு மட்டும்) விலையில் கொள்முதல் செய்ய ஒப்பக்குழுமத்தின் **26.06.2014** நாளிட்ட பரிந்துரை பெறப்பட்டுள்ளது.

மேற்கண்ட இச்செலவீனத்தொகையை சென்னை பெருநகர வளர்ச்சி திட்ட நிதியிலிருந்து பெறப்படவுள்ள தொகையிலிருந்து மேற்க்கொள்ளலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

1. மத்திய அரசு நிறுவனமான திருவாளர்கள். BEML நிறுவனத்தார் வழங்கியுள்ள விலைப்புள்ளியை ஏற்று ஒரு புல்டோசர் (BD80Model) இயந்திரத்திற்கு ரூ.1,09,10,349.82 வீதம் 2 புல்டோசர் இயந்திரங்கள் ரூ. 2,18,20,699.64 (ரூபாய் இரண்டு கோடியே பதினெட்டு இலட்சத்து இருபதாயிரத்து அறுநூற்று தொன்னூற்று ஒன்பது ரூபாய் பைசா அறுபத்தி நான்கு மட்டும்) விலையில் கொள்முதல் செய்யவும்,
2. மேற்கண்ட இனம் ஏற்கப்படின், திருவாளர்கள். BEML நிறுவனம் (இந்திய அரசின் நிறுவனம் ) அவர்களுக்கு பணியாணை வழங்கவும்
3. திருவாளர்கள். BEML நிறுவனத்தார் நிறுவனத்திடமிருந்து ஒப்ப மொத்த தொகையில் 2 சதவிகிதம் பாதுகாப்பு தொகையாக வங்கி உத்திரவாதம் பெற்றுக்கொண்டு உடன்படிக்கை செய்து கொள்ளவும்,
4. சென்னை மாநகராட்சிக்க இயந்திரங்களை ஒப்படைப்பு செய்யப்பட்டப்பின் ஆணையர் அவர்களின் பெயரில் பணப்பட்டி பெற்றவுடன் மொத்த ஒப்ப தொகையில் **90** சதவிகித தொகையினை இயந்திரங்கள் ஒப்படைக்கப்பட்ட நாளிலிருந்து **30** நாட்களுக்குள் வழங்கவும்,
5. மீதமுள்ள உபகரண **10** சதவிகித தொகையை இயந்திரங்கள் இயக்கப்பட்ட நாளிலிருந்து **30** நாட்களுக்குப் பிறகு இயந்திரத்தின் செயல்திறன் திருப்திகர சான்றிதழ் உரிய அதிகாரிகளிடமிருந்து பெறப்பட்டப்பின் வழங்கவும்,
6. இக்கொள்முதலுக்கான செலவீனத்தொகையை ரூ.1,09,10,349.82 வீதம் 2 புல்டோசர் இயந்திரங்கள் ரூ.2,18,20,699.64 (ரூபாய் இரண்டு கோடியே பதினெட்டு இலட்சத்து இருபதாயிரத்து அறுநூற்று தொன்னூற்று ஒன்பது ரூபாய் பைசா அறுபத்தி நான்கு மட்டும்) சென்னை பெருநகர் வளர்ச்சி திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளவும்,

மேற்காணும் இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் **18.07.2014** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **30.07.2014** அன்று தீர்மான எண். **360/2014–**ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் **18.07.2014** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **30.07.2014** அன்று தீர்மான எண்.**368/2014**ன் படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலமாக பெருபான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**க.து.ந.க.எண்.க.அ./14729/2014**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 30.07.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.423/2014 **பொருள் எண்.57**

**கல்வித்துறை – சென்னைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் நலனுக்காக கற்றல், கற்பித்தல், அலுவலகம், நிர்வாகம் போன்ற பள்ளி சார் பணிகளில் ஏற்படும் தேவைகளை பூர்த்தி செய்திட மேலும் மேம்படுத்திட அந்தந்தப் பள்ளி தலைமையாசிரியரே மேற்கொள்ள தலைமையாசிரியர்களுக்குத் தேவைப்படும் நிதியை கல்வி அலுவலர் மூலம் நேரடியாக வழங்க அனுமதி.**

சென்னை மாநகராட்சியின் கீழ் 32 மேல்நிலைப் பள்ளிகளும், 38 உயர்நிலைப் பள்ளிகளும் செயல்பட்டு வருகின்றன. இப்பள்ளிகளில் கடந்த ஆண்டு பொதுத் தேர்வில் 12–ஆம் வகுப்பில் 89% தேர்ச்சியும், 10–ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் 91% தேர்ச்சியும் கண்டிருந்தன. இப்பள்ளிகளில் கற்றல், கற்பித்தல் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும் நிர்வாகப் பணிகள் மற்றும் அலுவலகப் பணிகளும் நடந்து வருகின்றன. இப்பணிகளில் ஏற்படும் தேவைகள் உடனடியாக சந்திக்கப்பட வேண்டும்.

2013–2014ஆம் கல்வி ஆண்டில் தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் 10 பள்ளிகளில் மழலையர் வகுப்புகள் தொடங்கப்பட்டன. அதுபோல் இவ்வாண்டும் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் 2014–2015ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையிலும் மேலும் 25 தொடக்க/நடுநிலைப் பள்ளிகளில் மழலையர் வகுப்புகள் தொடங்கப்பட்டு பொது மக்களின் அமோக வரவேற்பினையும் பெற்றுள்ளன. மழலையர்ப் பள்ளிகளின் தேவைகள் பூர்த்தி செய்ய வேண்டி உள்ளன.

10 மைய மண்டலப் பள்ளிகளில் கற்றல், கற்பித்தல் பணி மேற்கொள்ளப்படுவதுடன் அம்மையத்திலுள்ள அனைத்து தொடக்க/நடுநிலைப் பள்ளிகளில் பணியாற்றும் தலைமையாசிரியர், ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்களுக்கு மாதந்தோறும் ஊதியம் மற்றும் இதரப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும் உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளுக்குத் தேவையான சில பணிகளையும் இம்மண்டலப் பள்ளிகள் செய்து வருகின்றன.

கற்றல், கற்பித்தல் பணிகளுடன் அலுவலகப்பணி மற்றும் நிர்வாகப் பணிகளைச் செய்து வரும் இப்பள்ளிகளில் சில தேவைகளும், குறைவுகளும், தொய்வுகளும் ஏற்படுவதுடன் அவை கற்றல், கற்பித்தல் பணிகளைப் பாதிக்கின்றன. அதனால் மாணவ/மாணவிகள் நேரடியாக பாதிக்கப்பட்டு அவர்களின் எதிர்காலமும் கேள்விக் குறியாகி விடும்.

ஆகவே, மாணவர்களின் நலனுக்காக கற்றல், கற்பித்தல், அலுவலகம், நிர்வாகம் போன்ற பள்ளிசார் பணிகளில் ஏற்படும் தேவைகள், குறைவுகள், தொய்வுகள் ஆகியவற்றை சந்தித்திட மேலும் மேம்படுத்திட அந்தந்தப் பள்ளி தலைமையாசிரியரே மேற்கொள்ள அவர்களுக்கு நேரடியாக தேவைப்படும் நிதியை அளிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஆகவே,

1. பள்ளிகளில் நடைபெறும் கற்றல் பணி, கற்பித்தல் பணி, அலுவலகப்பணி மற்றும் நிர்வாகப் பணிகளில் ஏற்படும் பள்ளிசார் தேவைகளை சந்தித்திட மேலும் மேம்படுத்திட மாணவ/மாணவர்களின் நலனுக்காக பள்ளியின் தலைமையாசிரியரே நேரடியாக மேற்கொள்ள அனுமதியும்,
2. இப்பணியை மேற்கொள்ளுவதற்காக பள்ளியின் தலைமையாசிரியர்களுக்குத் தேவைப்படும் நிதியை அந்தந்த பள்ளிதலைமை ஆசிரியர்களுக்கு கல்வி அலுவலர் மூலம் நேரடியாக வழங்க அனுமதியும்,
3. இச்செலவினங்களுக்காக ரூ.3,10,69,000/– (ரூபாய் மூன்று கோடியே பத்து இலட்சத்து அறுபத்தொன்பதாயிரம் மட்டும்) வழங்க அனுமதியும்,
4. இத்தொகையை தொடக்க/நடுநிலைப் பள்ளிகளுக்கு கணக்கு குறியீட்டு எண். 80–80–82–08, 80–82–07 230–11–02–02 கல்விச் செலவீனங்கள் என்ற தலைப்பிலும் மற்றும் உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளுக்கு கணக்கு குறியீடு எண்.80–82–01, 230–11–02–02 கல்விச் செலவீனங்கள் என்ற தலைப்பில் பெற அனுமதியும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (கல்வி) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''ஏற்கனவே நிலைக்குழு (கல்வி) கூட்டம் 13.07.2014 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 30.07.2014 அன்று தீர்மானஎண்.19/2014–ன்படி நிலைக்குழு(கல்வி) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று, நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 18.07.2014 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 30.07.2014 அன்று தீர்மான எண்.371/2014ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலமாக பெருபான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.''

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**ம.நீ.வ.து.ந.க.எண்.பி5/4756/2013**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் 28.07.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.424/2014 **பொருள் எண்.58**

**மன்ற தீர்மானத்தில் திருத்தம் வேண்டி**

மழைநீர் வடிகால் துறையின் மூலம் விரிவாக்கம் செய்யப்பட்ட மண்டலங்களில் ஆர்.சி.சி. பெட்டக மழைநீர் வடிகால்வாய் புதியதாக கட்டும் பணிகளுக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு ஒப்பங்கள் கோரப்பட்டன. மேற்படி ஒன்பது பணிக்கான ஒப்பங்களில் தகுதி வாய்ந்த குறைந்த விலைப்புள்ளியில் ஒப்பந்ததாரர்கள் அளித்த ஒப்பங்கள் சீராய்வு குழு முன் சமர்ப்பிக்கப்பட்டது. ஒப்பங்கள் சீராய்வு குழுவினால், சமர்ப்பிக்கப்பட்ட ஒப்பங்கள், சீராய்வு செய்து, அனுமதி பெறப்பட்டு அதன்படி மன்ற தீர்மானம் மூலம் அனுமதி வழங்கப்பட்டது. அதன் நிறுவனங்களுக்கு பணி ஆணை வழங்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது.

மேற்படி மன்றதீர்மானத்தில் வரிசை எண்.2ல் குறிப்பிட்ட பணிக்கு ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ள ஒப்பத்தொகை (+) 4.50%அதிகம் என்பதற்கான தொகை ரூ.6,41,91,978.00 என குறிப்பிடப்பட்டு மன்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. ஆனால் துறை மூலம் அனுப்பப்பட்ட கோப்பில் ஒப்ப சதவீதம் (+) 4.50% அதிகம் என குறிப்பிடப்படுவதற்கு பதிலாக (–) 4.50% குறைவு என்று தவறுதலாக குறிப்பிடப்பட்டிருந்தது.

சென்னை மாநகராட்சி 25.02.2014 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் தீர்மான எண்.221/2014ல் பக்கம் 1ல் வரிசை எண்.2ல் கீழ்காணும் திருத்தம் வேண்டப்படுகிறது.

| வரிசை எண் | முன்னர் துறையின் மூலம் அனுப்பப்பட்ட குறிப்பு ஒப்ப சதவீதம் | தற்பொது திருத்தப்ட வேண்டிய ஒப்ப சதவீதம் |
|---|---|---|
| | **பிரசுரிக்கப்பட்டது** | **திருத்தப்பட வேண்டியது** |
| **2** | (–) 4.50% குறைவு | (+) 4.50% அதிகம் |

எனவே, மேற்கண்ட திருத்தத்தினை மன்ற தீர்மான எண்.221/2014ல் மேற்கொள்ள நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

'' ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 18.07.2014 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 30.07.2014 அன்று தீர்மான எண்.361/2014ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 18.07.2014 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 30.07.2014 அன்று தீர்மான எண்.370/2014ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலமாக பெருபான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.''

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**பொ.சு.கா.ம.பி.ந.க.எண்.அ1/241/2014**

**முதன்மை செயலர்/ஆணையர் அவர்களின் 30/7/2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.425/2014 **பொருள் எண்.59**

**சென்னை மாநகராட்சி – பொது சுகாதாரத்துறை – கால்நடை மருத்துவப் பிரிவு – தெருநாய்கள் இனக்கட்டுப்பாடு அறுவை சிகிச்சை திட்டத்தினை தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் மூலம் செயல்படுத்துவதற்கு சென்னை மாநகராட்சி நிதியிலிருந்து நிதியுதவி வழங்க மன்றத்தின் அனுமதி**

சென்னை மாநகராட்சியில், நாய் இனக்கட்டுப்பாடு விதிகள் 2001–ன் படி சென்னை நகரத்தெருக்களில் சுற்றித்திரியும் தெருநாய்களை பிடித்தல், அதற்கு இனக்கட்டுப்பாடு செய்தல், வெறி நோய் தடுப்பூசி போடுதல், மீண்டும் பிடித்த இடத்திலேயே விடுதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஏப்ரல் 2013 முதல் மார்ச் 2014 வரை சென்னை மாநகராட்சி ஊழியர்களால் பிடிக்கப்பட்டு தன்னார்வ தொண்டு நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்பட்ட தெருநாய்களின் விவரம் வருமாறு.

| | | | |
|---|---|---|---|
| பீப்புள் ஃபார் அனிமேல் | – | 13247 | |
| புளூ க்ராஸ் ஆப் இந்தியா | – | 12848 | |
| எஸ்.பி.சி.ஏ | – | 410 | |
| | | 26505 | தெரு நாள்கள் |

பீப்புள் ஃபார் அனிமேல்ஸ் (சென்னை) சாரிட்டபுள் டிரஸ்ட் என்னும் தன்னார்வ தொண்டு நிறுவனத்தின் நிறுவனரால், சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களிடம் சமர்ப்பிக்கப்பட்ட கடிதத்தில், கடந்த 2013–2014 ஆம் ஆண்டில், தனது தன்னார்வ தொண்டு நிறுவனத்தின் மூலம் 13,247 தெருநாய்களுக்கு இனக்கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்தல், வெறி நோய் தடுப்பூசி போடுதல், மீண்டும் பிடித்த இடத்திலேயே விடுதல் போன்ற பணிகளை செய்துள்ளதாக தெரிவித்துள்ளார். இதில் 3500 நாய்களுக்கு மட்டுமே நாய் ஒன்றிற்கு தலா ரூ.445/– வீதம் இந்திய விலங்குகள் நல வாரியத்திடம் நிதியுதவி பெற்று விட்டதாகவும் மீதமுள்ள 9747 நாய்களுக்கு உண்டான நிதியினை இந்திய விலங்குகள் நல வாரியம் வழங்க மறுத்து விட்டதாகவும் தெரிவித்துள்ளார். இந்நிலையில் இரண்டு மாதங்களுக்கு மேல் நிதி பற்றாக்குறையினால் இப்பணியினை தொடர்ந்து செய்ய இயலாது என தெரிவித்துள்ளார்.

ஆகவே இந்திய விலங்குகள் நல வாரியத்தால் மறுக்கப்பட்ட நிதியான 9747x ரூ.445 = ரூ.43,37,415/–ஐ சென்னை மாநகராட்சி நிதியிலிருந்து வழங்கும் படியும், இனிவரும் காலங்களில் தெற்கு டெல்லி மாநகராட்சியினால் திருத்தி மேம்படுத்தப்பட்டு வழங்கப்படும் நிதியான நாய் ஒன்றிற்கு ரூ.700/– வீதம் வழங்கும் படியும் சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களிடம் கடிதம் சமர்பித்துள்ளார்.

ஆனால் சென்னை மாநகராட்சி ஊழியர்களே தெருநாய்களை பிடிக்கும் பணியினை செய்ததால், நாய் ஒன்றிற்கு தலா ரூ.25/– வீதம் பிடித்தம் செய்து மீதித் தொகையான ரூ.420/– வீதம் கணக்கிட்டால் 9747x ரூ. 420 = ரூ. 40,93,740/–ஐ சென்னை மாநகராட்சி நிதியிலிருந்து வழங்கப்பட வேண்டியுள்ளது.

இதற்கு தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், நாய்களை அறுவை சிகிச்சை செய்த போது நீக்கப்பட்ட விரைகள் (Testes) மற்றும் அண்டகங்கள் (Ovaries) ஆகியவற்றை பார்மலின் திரவத்தில் பதப்படுத்தி சேகரித்து வைத்திருக்க வேண்டும். இந்திய விலங்குகள் நல வாரியத்தின் விதியின் படி, ஒரு ஜோடி விரைகள் (Pair of testes) என்பது ஒரு ஆண் நாய்க்கானது எனவும்,ஒரு ஜோடி அண்டகங்கள் (Pair of ovaries) என்பது ஒரு பெண் நாய்க்கானது எனவும் கணக்கிட்டு, அதற்குண்டான நிதியினை வழங்க வேண்டும்.

நாய் இனக்கட்டுபாட்டிற்கு அதிகபட்சமாக நிர்ணயம் செய்யப்பட்ட நாய் ஒன்றிற்கான செலவுத் தொகையின் விவரம்:

| வ.எண் | பொருள் | செலவு / ரூ. |
|---|---|---|
| 1. | நாய் பிடிக்கும் ஊழியர்களுக்கான தொகை | 25/– |
| 2. | கால்நடை மருத்துவர்களுக்கான ஊதியம் (இனக்கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்தல் மற்றும் அதற்கு பிந்தைய நலம் பேணுதல்) | 60/– |
| 3. | பிராணிகளின் நலம் பேணும் ஊழியர்கள் ( ஏழு நாட்களுக்கு) | 50/– |
| 4. | மருந்துகள் மற்றும் தடுப்பூசி | 170/– |

| | | |
|---|---|---|
| 5. | நாய் ஒன்றிற்கு ஏழு நாட்களுக்கான உணவு | 70/– |
| 6. | எரிபொருள், அவசரசிகிச்சை ஊர்தி, ஓட்டுநர் ஊதியம் (பிடித்தல் & பிடித்த இடத்திலேயே மீண்டும் விடுதல்) | 50/– |
| 7. | இதர செலவுகள் (தண்ணீர், கிருமி நாசினிகள், மற்றும் பல) | 20/– |
| | மொத்தம் | 445/– |

உள்ளாட்சி அமைப்புகளுக்கு இந்திய விலங்குகள் நல வாரியத்தால் (AWBI) அனுப்பப்பட்டுள்ள கடிதத்தின் படி சென்னை மாதிரியான பெருநகரங்களில் இத்திட்டத்தினை தொடர்ந்து 5 வருடங்களுக்கு மேல் செயல்படுத்தி வரும் பட்சத்தில் இந்திய விலங்குகள் நல வாரியம் நிதி வழங்க இயலாது என்றும், பொருளாதார ரீதியில் தன்னிறைவு கொண்ட மாநகராட்சிகள் தனது நிதியிலேயே இத்திட்டத்தினை செயல்படுத்த வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய பிராணிகள் நல வாரியத்தின் உதவி செயலாளர் திரு. வினோத் குமார் அவர்களை தொலை பேசியில் தொடர்பு கொண்டு மேற்படி தகவல் குறித்து கேட்கப்பட்டது. அவர், சுற்றுச்சூழல் மற்றும் வனங்கள் அமைச்சகத்தில் இருந்து AWBI க்கு அனுப்பட்ட கடிதத்தில், 5 வருடங்களுக்கு மேலாக இத்திட்டங்கள் செயல்படுத்தும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு விலங்கு நல வாரியம் (AWBI) வழங்கும் நிதியினை நிறுத்தும் படி குறிப்பிடப்பட்டிருந்தது எனவும், இத்தகவல்கள் கடிதங்கள் மூலமாக அனைத்து உள்ளாட்சி அமைப்புகளுக்கும் முறைப்படி ஏற்கனவே தெரிவிக்கப் பட்டுள்ளதாகவும் கூறினார். மேலும் இது குறித்து AWBI வாரியக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டு இத்திட்டத்திற்கு நிதி வழங்குவது குறித்து எடுக்கப்படும் முடிவுகள் கடிதம் மூலம் தங்களுக்கு தெரிவிக்கப்படும் என்றும் கூறினார்.

இத்திட்டத்திற்கு சென்னை மாநகராட்சி தனது நிதியிலிருந்து தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கு நிதி வழங்குவது என முடிவெடுக்கும் பட்சத்தில், நாய் ஒன்றிற்கு ரூ.445/– வீதம் கணக்கிட்டால், 2013–2014 – ஆம் நிதியாண்டில் 26,505 தெருநாய்கள் பிடிக்கப்பட்டு தன்னார்வ தொண்டு நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதற்கு சென்னை மாநகராட்சி நிதியிலிருந்து ரூ.11,794,725 /– வழங்க வேண்டி உள்ளது.

தொண்டு நிறுவனங்களின் (NGO) கோரிக்கையின் படி தெற்கு டெல்லி மாநகராட்சியால் திருத்தி மேம்படுத்தப்பட்ட நிதியான நாய் ஒன்றிற்கு ரூ.700/– வீதம் வழங்கினால், இனி வரும் காலங்களில் ஒரு நிதியாண்டிற்கு சராசரியாக 30000 நாய்கள் என கணக்கிட்டால் சுமார் ரூ.21 000 000/– தேவைப்படும்.

<u>மேற்கூறிய பணிக்கு தெற்கு டெல்லி மாநகராட்சியானது இரண்டு வகையான திட்டங்கள் செயல்படுத்தி வருகிறது.</u>

| பணிகள் குறித்த விளக்கம் | தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கு வழங்கப்படும் நிதியுதவி | 24.05.2014 தேதியிட்ட தெற்கு டெல்லி மாநகராட்சி மன்ற தீர்மான எண்: 340–ன்படி, இத்திட்டத்தில் தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கு திருத்தி மேம்படுத்தப்பட்ட நிதியுதவி |
|---|---|---|
| தெற்கு டெல்லி மாநகராட்சி ஊழியர்களால் தெருநாய் பிடிக்கப்பட்டு, தன்னார்வ தொண்டு நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்பட்டு, மேற்படி ஒப்படைக்கப்பட்ட நாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை செய்தல், வெறிநோய் தடுப்பூசி போடுதல், மீண்டும் பிடித்த இடத்திலேயே விடுதல் ஆகிய பணிகளை தன்னார்வ தொண்டு நிறுவனங்களே செய்ய வேண்டும். | நாய் ஒன்றிற்கு (ஆண்/பெண்) ரூ.408/– | நாய் ஒன்றிற்கு ரூ.700/– |

| | | |
|---|---|---|
| தெருநாய் பிடித்தல், கருத்தடை அறுவை செய்தல், வெறிநோய் தடுப்பூசி போடுதல் மீண்டுமூ பிடித்த இடத்திலேயே விடுதல் ஆகிய பணிகளை தன்னார்வ தொண்டு நிறுவனங்களே செய்ய வேண்டும் | நாய் ஒன்றிற்கு ரூ.445/– | நாய் ஒன்றிற்கு ரூ.770/– |

2013–14 ம் ஆண்டு தன்னார்வ தொண்டு நிறுவனம், பீப்பில் பார் அனிமல்ஸ் (PEOPLE FOR ANIMALS CHENNAI) இனக்கட்டுப்பாடு செய்யப்பட்டு 13247 மொத்த நாய்களில் 3500 நாய்களுக்கு மட்டுமே விலங்குகள் நல வாரியம் (AWBI) மட்டுமே பணம் வழங்கியுள்ளது. மீதமுள்ள 9747 நாய்களுக்கு ஏற்கெனவே கொடுக்கப்பட்டது போல் ரூ.445/ வீதம் ரூ.43,37,415/ ஐ சென்னை மாநகராட்சி நிதியிலிருந்து வழங்கவும்,

1. இதே போல் மற்ற தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் 2013–14 ம் ஆண்டிற்கு நாய்கள் இனக்கட்டுப்பாட்டிற்கு செய்த செலவினை கேட்குமேயானால், இத்திட்டம் தொடர்ந்து தடைபடாமல் நடைபெற ஏதுவாக, அவர்களுக்கும் ஒரு நாய்க்கு கருத்தடை அறுவை சிகிச்சை செய்ததற்கு ரூ.445/ வீதத்தில் வழங்கவும்,
2. இனிவரும் 2014–15 ம் ஆண்டிலிருந்து, நாய் ஒன்றிற்கு இனக்கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்ய தொகை ரூ.445/– வீதம் தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கு வழங்கவும்,
3. ஒரு நாய் இனக்கட்டுப்பாடு செய்ய ரூ.445/– வீதம் , சராசரியாக ஒரு வருடத்திற்கு 30000 நாய்கள் இனக்கட்டுப்பாடு செய்வதற்கு தேவைப்படும் சுமார் ரூ.1,33,50,000/ (ரூபாய் ஒரு கோடியே மூப்பத்தி மூன்று லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) செலவினம் மாநகராட்சி நிதியிலிருந்து மேற்கொள்ளவும்,
4. சென்னை மாநகர நல அலுவலர், கால்நடை மருத்துவ அலுவலர் மற்றும் கால்நடை உதவி மருத்துவர்கள் கண்காணிப்பில் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் இந்த பணியினை மேற்கொள்வதற்கும்,

மேற்கண்ட 1 முதல் 5 வரையிலான இனங்களுக்கு நிலைக்குழு (சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''ஏற்கனவே நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் கூட்டம் 16.07.2014 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 30.07.2014 அன்று தீர்மான எண்.30/2014–ன்படி நிலைக்குழு (பொது சுகாதாரம்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 18.07.2014 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 30.07.2014 அன்று தீர்மான எண்.372/2014ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலமாக பெருபான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.''

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**பொ.து.ந.க.எண்.ஈ4/5669/2014**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 23.07.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.426/2014 **பொருள் எண்.60**

**உதவிபொறியாளர்கள் (சிவில்/இயந்திரம்/மின்சாரம்) ஆகிய பதவிகளுக்கு நேரடி நியமனம் மூலம் நியமனமுறை ஏற்படுத்த வகுப்பு–3ல் சார்நிலை பொறியியல் பணிவிதி 2009ல் சில திருத்தங்கள் மேற்கொள்ள அனுமதி**

சென்னை மாநகராட்சி, உதவி பொறியாளர்( சிவில் / இயந்திரம் / மின்சாரம் ) பதவியில் ஏற்படும் காலிப்பணியிடங்களை நேரடி நியமனம் / பதவி உயர்வின் மூலம் நிரப்ப சென்னை மாநகராட்சி, வகுப்பு–3 சார்நிலை பொறியியல் பணிவிதி 2009ல் பின்வருமாறு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

| வ.எண் | பதவியின் பெயர் | பணி நியமன வழிமுறை | தகுதி | குறிப்பு |
|---|---|---|---|---|
| 1. | உதவி பொறியாளர் (சிவில்) | 1. நேரடி நியமனம்.<br>2. நேரடி நியமனத்திற்கான தகுதிகளைப் பெறும் இளநிலைப் பொறியாளர்களுக்கு (சிவில்) பணி மாற்றம்.<br>3. நேரடி நியமனத்திற்கான தகுதிகளைப் பெற்ற தகுதிகாண் பருவம் முடித்த கீழ்நிலைப் பணி வகைகளைச் சேர்ந்தவர்களுக்கு பதவி உயர்வு மூலமாக.<br>உதவி செயற்பொறியாளர் பதவியிடத்திற்கு பதவி உயர்த்தப்படும்பொழுது தனியருக்கு நலம் பயக்கும் வகையில் உதவிப் பொறியாளர் அல்லது இளநிலைப் பொறியாளர் பதவியில் பணிமூப்பு அறுதி செய்யப்படும் | அரசால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்திலிருந்து பெறப்பட்ட சிவில் பொறியியல் இளநிலைப் பட்டம்.<br>(அல்லது)<br>தமிழ்நாடு அரசு / இந்திய அரசால் மேற்படி கல்வித்தகுதிக்கு இணையாக அங்கீகரிக்கப்பட்ட பிரிதொரு கல்வித்தகுதி.<br>பொதுப்பணித்துறை அலுவலர்கள் மற்றும் சார்நிலைப் பணியாளர்களுக்கான கணக்குத் தேர்வு பாகம் 1 மற்றும் பாகம் 2ல் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். <u>(இரண்டு ஆண்டுகளுக்குள் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்)</u> | <u>மைய நாள்</u><br>ஒவ்வோராண்டும் ஜனவரி முதல் நாள்.<br><u>தற்போதைய சம்பள முறை</u><br>ரூ.9300–34,800 + <u>தர ஊதியம்</u> ரூ.5100<br><br>ஒரு குறிப்பிட்ட ஆண்டில் காலிப் பணியிடங்களில் தகுதியான நபர்களைப் பதவி உயர்வு செய்த பின்னர், எஞ்சியுள்ள காலிப் பணியிடங்கள் நேரடி நியமனம் மூலம் நிரப்பப்பட வேண்டும். |
| 2 | உதவி பொறியாளர் (இயந்திரம்) | 1. நேரடி நியமனம்.<br>2. நேரடி நியமனத்திற்கான தகுதிகளைப் பெறும் இளநிலைப் பொறியாளர்கள் (இயந்திரம்) பணி மாற்றம் மூலமாக<br>3. நேரடி நியமனத்திற்கான தகுதிகளைப் பெற்ற தகுதிகாண் பருவம் முடித்த கீழ்நிலைப் பணி வகைகளைச் சேர்ந்தவர்களுக்கு பதவி உயர்வு | அரசால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்திலிருந்து பெறப்பட்ட இயந்திரப் பொறியியல் இளநிலைப் பட்டம்.<br>(அல்லது)<br>தமிழ்நாடு அரசு / இந்திய அரசால் மேற்படி கல்வித்தகுதிக்கு இணையாக அங்கீகரிக்கப்பட்ட பிரிதொரு கல்வித்தகுதி. | <u>மைய நாள்</u><br>ஒவ்வோராண்டும் ஜனவரி முதல் நாள்.<br><u>தற்போதைய சம்பள முறை</u><br>ரூ.9300–34,800 + <u>தர ஊதியம்</u> ரூ.5100<br><br>ஒரு குறிப்பிட்ட ஆண்டில் காலிப் பணியிடங்களில் தகுதியான நபர்களைப் பதவி உயர்வு செய்த |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மூலமாக.<br>உதவிசெயற்பொறியாளர் பதவியிடத்திற்கு பதவி உயர்த்தப்படும்பொழுது தனியருக்கு நலம் பயக்கும் வகையில் உதவிப் பொறியாளர் அல்லது இளநிலைப் பொறியாளர் பதவியில் பணிமூப்பு அறுதி செய்யப்படும் | பொதுப்பணித்துறை அலுவலர்கள் மற்றும் சார்நிலைப் பணியாளர்களுக்கான கணக்குத் தேர்வு பாகம் 1 மற்றும் பாகம் 2ல் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.(இரண்டு ஆண்டுகளுக்குள் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்) | பின்னர், எஞ்சியுள்ள காலிப் பணியிடங்கள் நேரடி நியமனம் மூலம் நிரப்பப்பட வேண்டும். |
| **3** | உதவி பொறியாளர் (மின்சாரம்) | 1. நேரடி நியமனம்.<br>2. நேரடி நியமனத்திற்கான தகுதிகளைப் பெறும் இளநிலைப் பொறியாளர்களுக்கு (மின்சாரம்) பணி மாற்றம்.<br>3. நேரடி நியமனத்திற்கான தகுதிகளைப் பெற்ற தகுதிகாண் பருவம் முடித்த கீழ்நிலைப் பணி வகைகளைச் சேர்ந்தவர்களுக்கு பதவி உயர்வு மூலமாக.<br>உதவி செயற்பொறியாளர் பதவியிடத்திற்கு பதவி உயர்த்தப்படும்பொழுது தனியருக்கு நலம் பயக்கும் வகையில் உதவிப் பொறியாளர் அல்லது இளநிலைப் பொறியாளர் பதவியில் பணிமூப்பு அறுதி செய்யப்படும் | அரசால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்திலிருந்து பெறப்பட்ட மின்சாரப் பொறியியல் இளநிலைப் பட்டம்.<br>(அல்லது)<br>தமிழ்நாடு அரசு / இந்திய அரசால் மேற்படி கல்வித்தகுதிக்கு இணையாக அங்கீகரிக்கப்பட்ட பிரிதொரு கல்வித்தகுதி.<br>பொதுப்பணித்துறை அலுவலர்கள் மற்றும் சார்நிலைப் பணியாளர்களுக்கான கணக்குத் தேர்வு பாகம் 1 மற்றும் பாகம் 2ல் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.(இரண்டு ஆண்டுகளுக்குள் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்) | மைய நாள்<br>ஒவ்வோராண்டும் ஜூலை முதல் நாள்.<br>தற்போதைய சம்பள முறை<br>ரூ.9300–34,800 + தர ஊதியம்<br>ரூ.5100<br><br>ஒரு குறிப்பிட்ட ஆண்டில் காலிப் பணியிடங்களில் தகுதியான நபர்களைப் பதவி உயர்வு செய்த பின்னர், எஞ்சியுள்ள காலிப் பணியிடங்கள் நேரடி நியமனம் மூலம் நிரப்பப்பட வேண்டும். |

இதுவரையில் உதவி பொறியாளர் நேரடி நியமனம் மன்றத் தீர்மான எண். 2498/1993, நாள் 01.06.1993ன்படி, பொறியியல் பட்டம் தேர்ச்சி பெற்றவர்களுக்கு அதிகபட்சம் 35 மதிப்பெண்களும், முதுநிலைப்பட்டம் பெற்றவர்களுக்கு 10 மதிப்பெண்களும், முன் அனுபவத்திற்கு 5 மதிப்பெண்களும், நேர்காணலுக்கு 10 மதிப்பெண்களுமாக மொத்தம் 60 மதிப்பெண்கள் வழங்கப்பட்டு மதிப்பெண் அடிப்படையிலும் இனச்சுழற்சியின்படியும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

எனவே, உதவி பொறியாளர் நேரடி நியமனம் நேர்வில் திறமையான, தொழில் திறன் மிக்க நபர்களை தேர்வு செய்யும் பொருட்டு சென்னை மாநகர குடிநீர் மற்றும் கழிவுநீர் வாரியம் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையரகம், சேப்பாக்கம், சென்னை – 5 ஆகியவற்றில் கடைபிடிக்கப்படுவது போன்று அண்ணா பல்கலைக்கழகத்தில் எழுத்து தேர்வு நடத்தியும், நேர்காணல் நடத்துவதற்கும், பின்வரும் நியமன முறையினை பின்பற்றி சென்னை மாநகராட்சியில் இனிவரும் காலங்களில் உதவி பொறியாளர் நேரடி நியமனம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

1. ஒவ்வொரு ஆண்டும் உதவி பொறியாளர் (சிவில் / இயந்திரம் / மின்சாரம்) பதவிகளில் ஏற்படும் காலிப்பணியிடங்களை பதவி உயர்வு மூலம் நிரப்பிய பின்னர் எஞ்சியுள்ள காலிப்பணியிடங்களுக்கு தகுதியான நபர் பட்டியல் 1 : 5 என்ற விகிதாச்சாரத்தில் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திலிருந்து பெறவும்,
2. தேர்வுமுறையினை கீழ்கண்டவாறு அமைப்பதற்கு :

அ) மேற்படி நிர்ணயிக்கப்பட்ட பொறியியல் பட்டப்படிப்பில் பெற்ற மதிப்பெண்களுக்கு – 30% மதிப்பு

ஆ) தேர்வுக்குழுவால் நடத்தப்படும் எழுத்து தேர்வு (objective type ) – 60% மதிப்பு

இ) நேர்காணல் – 10% மதிப்பு

3. வேலைவாய்ப்பு அலுவலகத்திலிருந்து பெறப்படும் (சிவில் / இயந்திரம் / மின்சாரம்) பதவிக்கான தகுதியான நபர் பட்டியலை முதல்வர், அண்ணா பல்கலைக்கழகம், சென்னை – 32 அவர்களுக்கு அனுப்பி 60 மதிப்பெண்களுக்கு எழுத்து தேர்வு நடத்திதர கோரவும்,
4. 60 மதிப்பெண்களுக்கு எழுத்து தேர்வு நடத்தவும், வினாத்தாள் தயாரித்தல் மற்றும் விடைத்தாள் திருத்தும் பணி ஆகியவை சென்னை அண்ணா பல்கலைக்கழகம் மேற்கொள்ள கேட்டுக்கொள்ளவும்,
5. இணை ஆணையர் (பணிகள்) தலைமையில் ஒரு தலைமை பொறியாளர் மற்றும் ஒரு கண்காணிப்பு பொறியாளர் ஆகியோர்களை உறுப்பினர்களாக கொண்ட நேர்காணல் குழு அமைப்பதற்கும்,
6. நடத்தப்பட்ட எழுத்து தேர்வில் பெறப்படும் மதிப்பெண் அடிப்படையில் தகுதியான நபர்களை தேர்வு செய்ய நேர்காணல்குழு 10 மதிப்பெண்களுக்கு நேர்காணல் நடத்துவதற்கும்,
7. எழுத்து தேர்வு மற்றும் நேர்காணலில் கலந்து கொள்ளும் நபர்கள் பெறும் மதிப்பெண் அடிப்படையில் அரசாணைகளில் குறிப்பிட்டுள்ள 200 புள்ளிகள் இனச்சுழற்சியின்படி தேர்வு செய்யப்படும் தகுதியான நபர்களுக்கு நியமனக்குழுவின் அனுமதி பெற்று பணிநியமனம் வழங்கவும்,

'' இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது''

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**ப.து.ந.க.எண்./திட்டம்/2360/2014**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 30.07.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.427/2014 **பொருள் எண்.61**

**கணினி மையத்தில் பல்வேறு பதவிகளுக்கான நேரடி நியமனத்திற்கு அனுமதி**

சென்னை மாநகராட்சி – முதுநிலை முறை மேலாளர் (Senior System Manager) / முறைப்பகுப்பாய்நர்(System Analyst) / நிகழ்ச்சி நிரலர்(Programmer) / உதவி நிகழ்ச்சி நிரலர் (Asst.Programmer) / டேட்டா என்ட்ரி ஆப்ரேட்டர் – பதவியில் ஏற்படும் காலி பணியிடங்களை நேரடி நியமனம் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகம் மூலமாக தகுந்த நபர்களை கீழ்காணும் 4 பதவிகளுக்கு அதற்கான கல்வித்தகுதி அட்டவணைப்படி சென்னை மாநகராட்சியில் பின்வருமாறு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

| வ. எண். | பதவியின் பெயர் / வகுப்பு | பணி நியமன வழிமுறை | தகுதி | ஊதிய விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | முதுநிலை முறை மேலாளர் (Senior System Manager – Class 1B) | நேரடி நியமனம் | அரசால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைகழகத்திலிருந்து பெறப்பட்ட இளநிலை பட்டம் B.E., கணினி அறிவியல் (Computer Science) / தகவல் தொழில்நுட்பம் (Information Technology) மற்றும் அதனுடன் மென்பொருளில் 3 வருட அனுபவம் உள்ளவர்கள் (அல்லது) M.C.A., / M.Sc., (Computer Science) (கணினி அறிவியல் / தகவல் தொழில்நுட்பம் (I.T.) உடன் 5 வருடம் மென்பொருள் அனுபவம் உள்ளவர்கள் | ரூ.15600–39100+6600 (து.ஊ) |
| | | பதவி உயர்வு மூலம் | சென்னை மாநகராட்சி, முறைபகுப்பாய்நராக (System Analyst) குறைந்தது 5 வருடம் பணிபுரிந்திருக்கவேண்டும். மேலும், நேரடி நியமனத்திற்குண்டான கல்வி மற்றும் தொழில் நுட்ப தகுதி பெற்றிருக்கவேண்டும். | |
| | | அயற்பணி | முதுநிலை முறை மேலாளராக மாநில அரசு (அ) அரசு சார்ந்த பொதுத்துறையில் மூன்று ஆண்டுக்கு குறையாமல் அனுபவம் உள்ளவர்கள் | |
| 2 | முறைப்பகுப்பாய்நர் (System Analyst – Class II) | நேரடி நியமனம் | அரசால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைகழகத்திலிருந்து பெறப்பட்ட இளநிலை பட்டம் B.E., கணினி அறிவியல் (Computer Science) / தகவல் தொழில்நுட்பம் (Information Technology) (அல்லது) M.C.A., / M.Sc., (Computer Science) (கணினி அறிவியல் / தகவல் தொழில்நுட்பம் (I.T.) உடன் 2 வருடம் மென்பொருள் அனுபவம் உள்ளவர்கள் | ரூ.15600–39100+5400 (து.ஊ) |
| | | பதவி உயர்வு மூலம் | சென்னை மாநகராட்சியில் நிகழ்ச்சி நிரலராக (Programmer) குறைந்தது 5 வருடம் பணிபுரிந்திருக்கவேண்டும் மேலும், நேரடி நியமனத்திற்குண்டான கல்வி மற்றும் தொழில் நுட்ப தகுதி பெற்றிருக்கவேண்டும். | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அயற்பணி | முறைப்பகுப்பாய்நர் ஆக மாநில அரசு (அ) அரசு சார்ந்த பொதுத்துறையில் மூன்று ஆண்டுக்கு குறையாமல் அனுபவம் உள்ளவர்கள் | |
| 3 | நிகழ்ச்சி நிரலர் (Programmer– Class III) | நேரடி நியமனம்<br><br>பதவிஉயர்வு மூலம் | அரசால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைகழகத்திலிருந்து பெறப்பட்ட முதுநிலை பட்டம் கணினி M.C.A. (Computer of Application) / M.Sc., தகவல் தொழில்நுட்பம் (Information Technology/ Computer Science)<br><br>சென்னை மாநகராட்சியில் உதவி நிகழ்ச்சி நிரலராக (Assistant programmer) குறைந்தது 5 வருடம் பணிபுரிந்திருக்கவேண்டும் மேலும், நேரடி நியமனத்திற்குண்டான கல்வி மற்றும் தொழில் நுட்ப தகுதி பெற்றிருக்கவேண்டும். | ரூ.9300–34800+4600 (த.ஊ) |
| 4 | உதவி நிகழ்ச்சி நிரலர் (Asst.Programmer – Class III) | நேரடி நியமனம்<br><br>பதவி உயர்வு மூலம் | அரசால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைகழகத்திலிருந்து பெறப்பட்ட இளநிலை பட்டம் அறிவியல் (Science) / புள்ளியியல் (Statistics)/ பொருளியல் (Economics) / வணிகவியல் (Commerce) உடன் முதுநிலை பட்டயியல் கணினி (PGDCA)<br><br>சென்னை மாநகராட்சியில் கீழ்நிலை பதவியில் தகுதிகாண் பருவம் முடித்தவராகவும் மேலும், நேரடி நியமனத்திற்குண்டான கல்வி மற்றும் தொழில் நுட்ப தகுதி பெற்றிருக்கவேண்டும். | ரூ.9300–34800+4400 (த.ஊ) |

நேரடி நியமனம் தேர்வில் தொழில் திறன்மிக்க நபர்களை தேர்வு செய்யும் பொருட்டு அண்ணா பல்கலை கழகத்தில் எழுத்து தேர்வு நடத்தியும், நேர்காணல் நடத்துவதற்கும் பின்வரும் நியமன முறையினை பின்பற்றி சென்னை மாநகராட்சியில் இனிவரும் காலங்களில் மேற்குறிப்பிட்ட 1 முதல் 4 வரை உள்ள பதவிகளுக்கு நேரடி நியமனம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

1) மேற்குறிப்பிட்ட 1 முதல் 4 வரை உள்ள பதவிகளுக்கு ஏற்படும் காலிப்பணியிடங்களை மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகம் மூலமாக தகுதியான நபர் பட்டியல் 1 : 5 என்ற விகிதாச்சாரத்தில் பெறவும்,
2) தேர்வுமுறையினை கீழ்கண்டவாறு அமைப்பதற்கு :
   அ) தேர்வுக்குழுவால் நடத்தப்படும் எழுத்துத் தேர்வு (Objective type) 90% மதிப்பு
   ஆ) நேர்காணல் 10% மதிப்பு
3) வேலை வாய்ப்பு அலுவலகத்திலிருந்து பெறப்படும் மேற்காணும் பதவிக்கான தகுதியான நபர் பட்டியலை முதல்வர், அண்ணா பல்கலைக்கழகம், சென்னை–32 அவர்களுக்கு அனுப்பி 90% மதிப்பெண்களுக்கு எழுத்து தேர்வு நடத்திதர அனுமதிக்கவும்,
4) 90% மதிப்பெண்களுக்கு எழுத்து தேர்வு நடத்தவும், வினாத்தாள் தயாரித்தல் மற்றும் விடைத்தாள் திருத்தும் பணி ஆகியவை அண்ணா பல்கலைக்கழகம், சென்னை மேற்கொள்ளவும்,
5) இணை ஆணையர் (பணிகள்) தலைமையில் ஒரு தலைமைப் பொறியாளர் மற்றும் ஒரு கண்காணிப்பு பொறியாளர், தேசிய தகவியல் மையத்தை ( National Informatics Centre, NIC ) சார்ந்த மூத்த தொழில்நுட்ப இயக்குநர் மற்றும் அண்ணா பல்கலை கழகத்தில் கணினி துறையை சார்ந்த பேராசிரியர் ஆகியோரை உறுப்பினர்களாக கொண்டு நேர்காணல் குழு அமைப்பதற்கும்,

6) நடத்தப்பட்ட எழுத்து தேர்வில் பெறப்படும் மதிப்பெண் அடிப்படையில் தகுதியான நபர்களை தேர்வு செய்ய நேர்காணல் குழு 10 மதிப்பெண்களுக்கு நேர்காணல் நடத்துவதற்கும்,
7) எழுத்து தேர்வு மற்றும் நேர்காணலில் கலந்து கொள்ளும் நபர்கள் பெறும் மதிப்பெண்கள் அடிப்படையில் அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ள 200 புள்ளிகள் இனச்சுழற்சியின்படி தேர்வு செய்யப்படும் தகுதியான நபர்களுக்கு நியமனக்குழுவின் அனுமதி பெற்று பணிநியமனம் வழங்கவும்,

மேற்காணும் 1 முதல் 7 இனங்களுக்கு நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

“இம்மாத நியமனக்குழு கூட்டம் முடிவுற்ற நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டு இதனை நியமனக்குழு சுற்றின் மூலம் பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**பொ.து.ந.க.எண்.ஈ4/19425/2014**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 30.07.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.428/2014 **பொருள் எண்.62**

**நகராட்சி நிர்வாக ஆணையரகதிலிருந்து ஒரு வழி பணி மாறுதல் மூலம் சென்னை மாநகராட்சி பணியில் சேர அனுமதி**

திருமதி. எஸ். அன்னலக்ஷ்மி, உதவி பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை–5 அவர்கள் 10.06.2014 நாளிட்டு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பத்தில் தனது பிள்ளைகள் சென்னையில் கல்வி பயின்று வருவதாகவும், குடும்ப சூழ்நிலை காரணமாகவும் தனக்கு நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகத்திலிருந்து சென்னை மாநகராட்சிக்கு ஒருவழி பணியிட மாறுதல் செய்யுமாறு கோரியுள்ளார். இதனை கூடுதல் இயக்குநர், நகராட்சி நிர்வாகம் அவர்கள் சென்னை மாநகராட்சிக்கு பரிந்துரை செய்துள்ளார்.

சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டம் 1919, விதி 97(d)ல் ஒருவழி பணிமாறுதல் செய்ய வழிவகை உள்ளது மேலும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கடிதம் எண்.27274/மா.ந.5/96–1, நாள் 08.07.1996ன்படி பிற மாநகராட்சி மற்றும் நகராட்சியிலிருந்து சென்னை மாநகராட்சிக்கு மாறுதல் செய்வது குறித்து தெளிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது.

தற்போது சென்னை மாநகரட்சியில் உதவி / இளநிலை பொறியாளர் பதவியில் ஏற்கனவே உள்ள 30 காலிப்பணியிடங்களை வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் நேரடி நியமனம் செய்ய இக்காலிப்பணியிடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. இது தவிர உதவி செயற் பொறியாளர் பதவி உயர்வு வழங்குவதால் 26 காலிப்பணியிடங்கள் எழ உள்ளன என சமர்ப்பிக்கப்படுகிறது.

எனவே, திருமதி எஸ். அன்னலக்ஷ்மி, உதவி பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம் அவர்களை ஒருவழி பணியிடமாறுதல் மூலம் சென்னை மாநகராட்சி பணியில் அமர்த்த கீழ்கண்ட நிபந்தனைகளுடன் அரசிற்கு செயற்குறிப்பு அனுப்ப மன்றத்தின் ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

1. இப்பணியாளர் பணியிட மாறுதலுக்கு பிறகு சென்னை மாநகராட்சியில் தனது பதவிக்கான பணியில் இளையவராகவே கருதப்படுவார்.
2. தனியர் நகராட்சி நிர்வாக ஆணையரகத்தில் கடைசியாக பெற்று வரும் ஊதியத்துடன் நடைமுறையில் உள்ள அவ்வப்பொழுது வழங்கப்படும் அரசாணைகளின்படி, படிகளையும் பெற அனுமதிக்கப்படுவார்.
3. தனியர் தனது ஊதியத்தினை சென்னை மாநகராட்சி பணியாளர்களுடன் ஒப்பிட்டு ஊதிய முரண்பாடு கோர இயலாது.
4. இப்பணியாளரின் பொது வைப்புநிதி, சிறப்பு சேமநலநிதி மற்றும் ஆயுள் காப்பீட்டு திட்டம் ஆகிய கணக்குகளை நகராட்சி நிர்வாக ஆணையரகத்தில் முடிக்கப்பட்டு சென்னை மாநகராட்சிக்கு மாற்றப்பட வேண்டும்.
5. தனியர் நகராட்சித்துறையில் பணிபுரிந்த நாட்களுக்கான ஓய்வூதியம் மற்றும் விடுப்புக்கால சந்தா தொகை (Leave Salary Contribution and Pensionary Contribution) ஆகியவைகளை கணக்கிட்டு சென்னை மாநகராட்சிக்கு செலுத்தப்பட வேண்டும்.
6. தனியர் தனது வேண்டுகோளின்படி ஒரு வழி மாறுதலில் செல்வதால் பயணப்படி மற்றும் பணியில் சேருவதற்கான பணியேற்பிடை காலம் எதுவும் வழங்கப்படமாட்டாது.

“இம்மாத நியமனக்குழு கூட்டம் முடிவுற்ற நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டு இதனை நியமனக்குழு சுற்றின் மூலம் பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

********